# எண்ணத்தூறல்

கிழக்கு மாகாண மாணவரின் ஆக்கங்கள்.



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்
திருகோணமலை

இதழ் – 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

T/Vipulananda College ★ TRINCOMALEE
SCHOOL LIBRARY

T/Vipulananda College ★ TRINCOM...
SCHOOL L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின்



## ஆசிச் செய்தி

மாணவர் மனங்களில் மலர்ந்த எண்ணங்களின் வண்ணங்கள் எழுத்துருவில் தூறல்களாய் துலாவியிருக்கும் "எண்ணத்தூறல்" இற்கு வாழ்த்து வழங்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

அச்சுக்கலை தோன்றுவதற்குமுன் எழுத்துருவ ஊடகங்களின் பிரசவம் எவ்வாறு இருந்தது என்பதை நினைவுபடுத்தும் முயற்சி மட்டுமன்றி, பிரபல்யமான பத்திரிகைகளில் சந்தர்ப்பங்கள் வழங்கப்படாத மாணவர்களின் ஆக்கங்களை அரங்கேற்றும் முயற்சியாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

கடந்த காலங்களில் மாணவர்களின் ஆக்கங்கள் கணணிமயப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. எனினும் கையெழுத்துச் சஞ்சிகைகளின் மரபினை மாற்றாமல், மாணவர்களின் அசல் ஆக்கங்கள் அவ்வாறே பிரதிசெய்யப்பட்டு இம்முறை வெளியிடப்படுகின்றது. இதனைப் பார்வையிடும் மாணவர்கள் புளகாங்கிதம் அடைவார்கள் என்பதில் நம்பிக்கையுண்டு.

நவீன தொழில்நுட்பம் வானளாவ வளர்ந்திருக்கும் நாடுகளில் கூட இன்னும் வாசிப்பு கைவிடப்படவில்லை. எனவே, எழுத்தும் வாசிப்பும் வளர வளர பேசும் மொழி விருத்தியுறும். கிழக்கு மாகாணத்தில் மொழி தொடர்பிலான அடைவுமட்டம் வீழ்ச்சி அடைந்து செல்வதற்கு வாசிப்பும், எழுத்தும் கைவிடப்பட்டு நவீன சாதனங்களின் பாவனையால் உருவான "குறும் மொழி"க் காய்ச்சல் காரணமாக அமைகின்றது.

எனவே இத்தகைய முயற்சிகள் மாணவர்கள் மத்தியில் இழந்ததை மீண்டும் பெறுவதற்கான தூண்டுதலாக அமையும். அதனால், தொடர்புடைய அனைத்து உள்ளங்களையும் வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

எம். ரி. ஏ. நிஸாம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரின்

## ஆசிச் செய்தி



எமது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்படுகின்ற "எண்ணத்தூறல்" என்னும் இச்சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாகாணமட்ட பாடசாலைகளை உள்ளடக்கியதாக போட்டி ரீதியில் நடாத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகளில் தரமானவற்றை தொகுத்து எண்ணத்தூறல்களாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் இச்செயல் தொடர்ந்து பேணப்பட வேண்டும். சில பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இச்செயற்பாட்டில் சிறிதும் அக்கறை அற்றவர்களாக காணப்படுவது வேதனைக்குரியதாகும். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மொழிஆற்றல் மிக அவசியமாகும்.

மாணவர்களின் எண்ணத்துக்கு உருவம் கொடுக்கும் இச்செயலுக்கு ஆசிரிய சமூகம் உரமூட்ட வேண்டும். போட்டி ரீதியாக இச்செயல் முன்னெடுக்கப்படுவதன் மூலம் மாணவர்கள் ஆர்வமுடன் செயற்படவழிவகுக்கும்.

இச்சஞ்சிகையில் இடம் பெறும் ஆக்கங்கள் தகுதி வாய்ந்தவை, தரமானவை. இவை என்றும் அழியாத ஆவணமாக பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாக்கங்களுக்குரிய அனைத்து மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். பலத்த சிரமத்தின் மத்தியிலும் தளராத உள்ளத்துடன் எண்ணத்தூறலை வெளிக்கொணர்ந்த திருமதி.ஜெ.அருளானந்தம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கு எனது விசேட பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.எஸ்.மனோகரன்**
**மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பாசிரியர் உரை



தொடர்பாடலில் தொழிநுட்பவிருத்தி காரணமாக எழுத்து, வாசிப்புச் செயற்பாடுகளும், அதற்கான நுட்பங்களும், இன்றைய இளம் சந்ததியினரிடையே குறைவடைந்து செல்கின்றது. இந்நிலையைப் போக்க கிழக்கு மாகாணப் பாடசாலைகளிடையே முன்னெடுக்கப்படுகின்ற கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியானது, கலை, மொழித்திறன், இலக்கியம், ஆக்கத்திறன், கூட்டுமுயற்சி, தொடர்பாடல், தலைமைத்துவம், ஆளுமை ஆகிய திறன்களை மாணவர்களிடையே விருத்தி செய்கின்றது.

இவ்விருத்தியை மேலும் அதிகரிக்க வலயமட்டத்திலிருந்து மாகாணத் தெரிவிற்காக அனுப்பப்படும் அனைத்துச் சஞ்சிகைகளிலும் இருந்து, நடுவர்களால் இனம் காணப்பட்ட மாணவர்களின் தரமான ஆக்கங்களைத் தொகுத்து "எண்ணத்தூறல்" எனும் சஞ்சிகை வெளிவருகின்றது. இச்செயற்பாடானது, பாடசாலை அதிபர் ஆசிரியர் மாணவர்களிடையே மட்டுமல்லாது பெற்றோர்களிடத்திலேயும் புதிய வேகத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் 'எண்ணத்தூறல்' சஞ்சிகையின் 'இதழ் 2' வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மற்றும் ஆசிச்செய்தியினைத் தந்த கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். ரி. ஏ. நிஸாம் அவர்களுக்கும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். மனோகரன் அவர்களுக்கும், சிறந்தஆக்கங்களைத் தெரிவு செய்த நடுவர்களுக்கும், எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஜெ. அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி
மாகாணக்கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எங்கள் பள்ளிக் கூடம்



அறிவும் அறனும் மட்டுமல்ல
அன்பும் பண்பும் கூட
கற்றுத் தரும் - சின்ன
நல்ல கூடம் - அது
எங்கள் பள்ளிக் கூடம்!

பாடம் மட்டும் இல்லாமல்
பாட்டும் ஆட்டம் ஓட்டம் கூட
பக்குவமாய் சொல்லித் தர
பண்பான ஆசான்கள்
சேவை செய்யும் நல்ல கூடம்!

ஒரு அன்னை விட்டு வந்து
மறு அன்னை வகுப்பில் கண்டோம்
அப்பா போல பாசம் காட்டும்
அதிபர் உள்ள கூடம் - அது
எங்கள் பள்ளிக் கூடம்!



சொக்கா, மிட்டாய் மட்டுமின்றி
பாசம் கூட பகிர்ந்து கொள்ளும்
ஆசை நண்பர் வகுப்பில் கொண்ட
அந்த பள்ளி கூடம் - அது
எங்கள் பள்ளி கூடம்!

இளங்கோ - கபிலாஷ்
தரம் - 3S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு.

ஔவையார் கூறிய 'இளமையில் கல்'. அதாவது இளம் பிராயத்தில் கல்வி கற்பது சிறப்பாகும். அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அதிகம் படிக்க வேண்டும். கைவசம் இருக்கும் செல்வத்தை விட கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே".

கல்வி பயில்வது என்றும் நன்மையே கிடைக்கும். பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் கல்வி கற்பது நன்மை தரும். கல்வி இல்லாத ஒருவன் தன் குடும்பப் பெருமையை பேசுவது நெல்லில் 'பதர்' போல ஆகும். அறிவுடைய ஒருவனை அகிலம் விரும்பும், மதிக்கும்.

திருவள்ளுவர் கல்வி பற்றி கூறுவதைப் பார்ப்போம். கற்க வேண்டியதை குற்றமற கற்று பின் அதன்படி வாழ வேண்டும். எண்ணும் எழுத்தும் ஆகிய இரு கலைகளுமே வாழும் உயிர்க்குக் 'கண்' என்பார்கள். கற்றவர் கண் பெற்றவராவார். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவார். பணிந்து நின்று கற்பவன் உயர்ந்தவனே ஆவான். கல்லாதவன் இழிந்தவனாவான்.

கிணறு தோண்டிய அளவுக்கு தண்ணீர் ஊறும். கற்ற அளவுக்கு அறிவு உண்டாகும். ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழுபிறப்பிலும் தொடரும் என்கிறார். ஆகவே காலத்தை கடத்தாது, நேரம் பொன்னானது என்பதை உணர்ந்து கற்க வேண்டும். வாழ்க்கை இன்பமாக அமைய கற்பதே மேல்.

க. சஜித்
தரம் - 4C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் சூழலும்

நாம் உயிர் வாழ உணவு, வளி, நீர் ஆகியன மிகவும் முக்கிய மானவை ஆகும். வளி, நீர், உணவு ஆகியவற்றுடன் அவற்றைப் பெறவும் அவற்றை தூய்மையாக வைத்திருக்க உதவும். நிலம், நீர் நிலைகள், தாவரங்கள், பிராணிகளுடன் மனிதரும் எமது சூழலில் அடங்கும். இவற்றிற்கு பாதிப்பை நாம் ஏற்படுத்தும் நிகழ்வானது அது எமது உடம்புக்கு தானே தீங்கு விளைவிப்பதற்கு ஒப்பானதாகும்.

நிலத்தில் தாவரங்கள் வளருகின்றன. அவற்றிலிருந்து நாம் உணவைப் பெறுகின்றோம். தாவரங்கள் எமது சுவாசத்திற்கு அவசியமான ஒட்சிசனை வளி மண்டலத்தில் சேர்க்கின்றன. சுவாசத்திற்கு கேடான காபனீரொட்சைட்டை வளியிலிருந்து அகற்றி தாங்கள் எடுத்துக் கொள்கின்றன.

தாவரங்கள் மழை பெய்ய உதவுகின்றன. மண்ணரிப்பைத் தடுப்பதற்கு உதவுகின்றன. நிலத்தடி நீரைப் பேணுகின்றன. நீர் நிலையிலிருந்து நீரையும் நீர் வாழ் உயிர்களையும் உணவுகளாக நாம் பெறுகின்றோம். ஆகவே காடுகளைப் பெருமளவில் அழிப்பதனால் வளிமண்டலம் பாதிக்கப்படுகின்றது. மழைவீழ்ச்சி குறைகின்றது. நாம் நிலத்தையும் நீரையும் பல்வேறு வகையான கழிவுகளைச் சேர்த்து அவற்றை அசுத்தமடையச் செய்கின்றோம். அத்துடன் இயந்திரங்களில் வாகனங்களில் எரிபொருள் தகனமடைவதால் பல வித நச்சு வாயுக்கள், நிலம், நீர், வளி ஆகியவற்றில் சேருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் கொடுக்கப்படும் மாற்று வழிகளையும் ஆலோசனைகளையும் ஏற்று நடந்து எமது சூழலைக் காப்போமாக.

ஆக்கம் – H.M. அஸ்மிப்.

12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கின் விநோதங்கள்.



நீந்தத் தெரியாத விலங்கு – ஒட்டகம்

மிக வேகமாகச் செல்லும் பாம்பினம் – பிளாக்மாம்பா.

மூளை இல்லாத மீன் இனம் – நட்சத்திர மீன்.

குறைய நித்திரை மிருகம் – யானை

நாக்கை அசைக்க முடியாத உயிரினம் – முதலை

மதப்பை உள்ள ஒரே மான் இனம். – கஸ்தூரிமான்

வாழ்நாள் முழுவதும் நீர் அருந்தாத விலங்கு – எலிக்கங்காரு

வெள்ளை நிறத்தைக் கண்டு பயப்படும் விலங்கு – புலி

உலகில் மிக மெதுவாக நடக்கும் பாலூட்டி – கடல் ஆமை

ஓய்வே இல்லாத உயிரினம் – பக்டீரியா.

முட்டை இடாமல் குஞ்சு பொரிக்கும் உயிரினம். – திமிங்கிலம்.

மிகச் சிறிய இதயம் கொண்ட மிருகம் – சிங்கம்.

அதிக நீர் அருந்தும் பறவை – புறா.

மிகச் சிறிய முட்டையிடும் பறவை – தேன்சிட்டு.

பால் இல்லாத முலையூட்டி – தேவாங்கு.

இனிப்பின் சுவையை அறியமுடியாத விலங்கு – பூனை

நின்றபடி தூங்கும் மிருகங்கள் – குதிரை, யானை, ஒட்டகச் சிவிங்கி.

தனது வாலால் உணவையும், நீரையும் – சேகரித்து வைக்கும் உயிரினம் – பல்லி.

ஆக்கம்.
M.N.F. [illegible]

25 கமி/சுது | அல் அமீர் வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள்



தமிழில் வெளிவந்த நூல்களில் அதிகமாக பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே நூல் திருக்குறளாகும். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் ஜி.யூ. போப் என்பவராவார். திருக்குறள் மொத்தம் 1330 குறள்கள் மற்றும் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இக்குறள்கள் அறம், பொருள், காமம் என முப்பால்களாக வகுக்கப்பட்டுள்ளன.

குறள்கள் இரண்டு அடியில் தெளிவான, நிறைவான கருத்துக்களை உறுதியாக வலியுறுத்துவது சிறப்பிற்குரியது. 'அ' என்ற எழுத்தில் தொடங்கும் திருக்குறள் 'ன்' என்ற எழுத்தில் நிறைவடைகின்றது.

திருக்குறளின் மறுபெயர்கள்: முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை என்பனவாகும்.

திருவள்ளுவரின் மறுபெயர்கள்: முதற்பாவலர், பெருநாவலர், தேவர், செந்நாப் போதார், மாதானுபங்கி, தெய்வப் புலவர் நாயனார், நான்முகனார்.



ம. பவித்ரா
தரம் -4

கொ/ஸ்ரீ பாமாங்க வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றிடுவோம்

சின்னஞ் சிறு சிறுவர்கள் நாம்
சிரித்துப் பேசி மகிழ்ந்திடுவோம்.
சிறந்துப் பாரில் உயர்ந்திடுவோம்.
சினத்தைக் கொஞ்சம் அடக்கிடுவோம்

பள்ளி சென்று படித்திடுவோம்
படிக்கும் நண்பனைப் புரிந்திடுவோம்
படித்துப் பட்டம் பெற்றிடுவோம்
பசித்தவர்க்கு உணவு அளித்திடுவோம்

மாதா பிதாவைப் போற்றிடுவோம்
மானம் காத்து வாழ்ந்திடுவோம்
மாணவச் செல்வம் நாங்கள்
மாமேதைகளை மதித்து நடந்திடுவோம்

அனைத்து மதங்களும் மனிதன் பிறரிடமும், பிற உயிர்களிடமும் அன்பு செலுத்தி வாழ வேண்டும் என்பதையே கூறுகின்றன.

S. விதியா
தரம் -4
கமு/ஸ்ரீ மாமாங்க வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடா முயற்சி வெற்றி தரும்

அன்று பாடசாலைப் பரிசளிப்பு விழா. கலாவின் பெயரே எல்லோர் வாயிலும் முணு முணுக்கப்படுகிறது. பரிசளிப்பு விழாவின் கதாநாயகியே கலாதான். கலாவின் மனதில் எண்ணம் முன்னோக்கி ஓடுகிறது.

கலா என்றால் ஒன்றுமே தெரியாதவள். அவளை அறியாது பிறர் சொல்லும் பெயர் மக்கு. அவள் தன் விதியை நொந்து மனதுள் அழுவாள். ஒரு நாள் பாடசாலைக்கு ஆலோசனை வழிகாட்ட அதிகாரி ஒருவர் வந்தார். அன்று அவரது ஆலோசனை வழிகாட்டலில் அவளாலும் படிக்க முடியும் என்னும் தன்னம்பிக்கை அவளுக்கு வந்தது.

" ஏன் கடவுள் எனக்கும் புத்தியைத் தந்துதானே உள்ளார்? நானும் முயற்சித்தால் எல்லோரும் என்னைப் பாராட்டுவார்கள் தானே. நான் பட்ட அவமானம் மறைய, நானும் படிப்பேன் பாராட்டுப் பெறுவேன்" எனத் திட சங்கற்பம் பூண்டாள்.

பின்னர் பாடசாலையில் நடத்தப்படும் அனைத்துப் போட்டிகளிலும் பங்கு கொண்டாள். சக மாணவர் அவளை மறைமுகமாகக் கேலி செய்வதை கண்டும் காணாது தன் முயற்சியைத் தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியைக் கைவிடாது கண்விழித்து படித்தாள். மனனம் செய்தாள் நம்பிக்கையுடன் பங்கு கொண்ட போட்டிகளில் முதலிடத்தை வென்றாள். திருக்குறள் மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி எல்லாமே அவளுக்குக் கைதர சுற்றியோர் போற்ற புகழின் உச்சிக்கே சென்றாள்.

அவளது பெயர் ஒலிபெருக்கியில் அழைக்க மீண்டும் அவள் நினைவு பெற்றாள். முதன்மை மாணவி என பல சான்றிதழ்கள், பதக்கம், பரிசுப் பொருட்கள் கைநிறையக் கிடைக்க கண் நிறையக் கண்ணீருடன் நின்றாள். பலத்த கரகோஷம். ஒரு மூலையில் அவள் தாயின் கண்ணிலும் கண்ணீர். இருவருக்கும் ஆனந்தக் கண்ணீர் முயன்றால் முடியாததும் உண்டோ?



க. யதுஜன்
தரம் - 4

பட / வந்தாறுமூலை கண்ணகிவி

7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடை

பள்ளி செல்லும் பிள்ளைக் கென்று
புள்ளிக் குடையுமுண்டு
ஊண்டி நடக்க தாத்தாவுக்கு
கறுப்புக் குடையுமுண்டு

காட்டில் வேலை செய்வோருக்கு
தொப்பிக் குடையுமுண்டு
யானை மேலே சுவாமிக்காக
முத்துக் குடையுமுண்டு

வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப் பல
வண்ணக் குடைகளுண்டு
மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும்
எமைக் காத்திடுமே எம்குடைகள்.

க.யதுஜன்
தரம் - 4

மட் / வந்தாறுமூலை கண்ணகி வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்

நூலகம் என்பது தேன்கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன் துளிகள்!

நூலகம் என்பது பூங்காடு
நூறாயிரமாம் நன்மலர்கள்!

நூலகம் என்பது பழத்தோப்பு
நூல் ஒவ்வொன்றும் தீங்கனிகள்!

நூலகம் என்பது தனி உலகம்
நுழைந்தால் புதுப்புது அனுபவங்கள்!

க.டர்சனா
தரம்-3
மட் / நெடியாவெளி கலைமகள் வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதரின் கர்வம்

ஓர் ஊரில் ஒரு பண்டிதர் இருந்தார். அவர் மிகுந்த கர்வம் உடையவர். ஒரு நாள் அவர் எல்லோரும் தன்னைப் பணிந்து வணங்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தார். ஒரு முறை அவர் காட்டு வழியே சென்று கொண்டிருந்த போது எதிரே கொழுத்த ஆட்டுக்கடா ஒன்று வந்தது. அருகே வந்ததும் அந்த ஆடு தனது தலையைத் தாழ்த்திக் கொண்டது. ஒவ்வொரு அடியாகப் பின்னால் வைத்து சிறிது தூரம் சென்றது. ஆட்டின் இயல்பை அறியாத பண்டிதர் அது தன்னை வணங்குவதாக நினைத்தார். அவருக்குப் பெருமை தாங்கவில்லை. ஐந்தறிவுள்ள ஆடே தன்னைப் பணிந்து வணங்கி வழிவிட்டு பின்னால் செல்கிறது. இதற்கு என் மீதுள்ள மரியாதை தான் காரணம் என்று எண்ணினார். அவர், பின்னால் சென்று தலையை ஆட்டிக் கொண்டிருந்த ஆட்டுக்கு கையை உயர்த்தி ஆசி வழங்கி நின்றார். வேகமாக ஓடி வந்த ஆடு அவர் மீது மோதியது. பல குட்டிக்கரணங்கள் போட்ட அவர் படுகாயம் அடைந்தார். அங்கு வந்த சிலர் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். நினைவு திரும்பிய அவரைப் பார்த்து, "பண்டிதரே ஆடு தலையைத் தாழ்த்தி பின்னால் சென்றால் அது முட்டப் போகிறது என்று எல்லோருக்கும் தெரியுமே. பின்னர் ஏன் அங்கு நின்றீர்கள்?" என்று கேட்டார்கள். பண்டிதர் அவமானத்தால் தலை குனிந்து நின்றார்.





F. பாத்திமா நப்ஷனா தரம் - 4B

10 மட் / மம / அல் - அஸ்ஹர் பெ.உ.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] கண்களாலும், உள்ளத்தாலும் பார்க்கிறான்.
முட்டாளோ கண்ணால் மட்டும் பார்க்கிறான்.

அறிவாளியின் கரங்களிலுள்ள எழுதுகோலானது போர் வீரனின் வீரவாளை விட மிகப்புனிதமானது.

கால் இடறினால் காயம் ஏற்படும். வார்த்தை தவறினால் வாழ்வே தவறிவிடும்.

இதயம் பூவாக இருந்தால் பேச்சில் அதன் வாசனை தெரியும்.

சிலரை ஒருநாள் ஏமாற்றலாம். ஆனால் பலரையும் பல நாட்கள் உன்னால் ஏமாற்ற முடியாது.

நல்லவனாய் பிறப்பது சந்தர்ப்பத்தினால்; நல்லவனாய் வாழ்வது முயற்சியினால்.

வெற்றியில் இறைவனாகவும், தோல்வியில் அதிகமாகவும் [illegible]டைகிறான் மனிதன்.

"பருவத்தில் பயிர் செய்" என்பதைப்போல அந்தந்த வயதில் [illegible]யதிற்கேற்ற செயல்களைச் செய்வோம்.

நாம் எதையும் அகங்காரத்தால் சாதிக்காமல் [illegible] சாதிப்போமானால் நமக்கும் நன்மைகள் கிடைக்கும்.

நாம் மற்றவர்களுக்கு எவ்வாறான நன்மை செய்கின்றோமோ அதேபோலவே நமக்கும் நன்மை கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையில் [illegible]

★. கரம் உள்ள நாடு - இலங்கை

★. அன்னை உள்ள நாடு - தாய்லாந்து

★. சோர்வு உள்ள நாடு - அயர்லாந்து

★. குளிர் உள்ள நாடு - ஐஸ்லாந்து

★. கல் உள்ள நாடு - போர்த்துக்கல்

★. உடல் உள்ள நாடு - ருமேனியா

★. சக்கரம் உள்ள நாடு - பிரேசில்

★. தாரிகை உள்ள நாடு - சைப்பிரஸ்

★. அரண்மனை உள்ள நாடு - பங்களாதேஷ்

★. பாய் உள்ள நாடு - துபாய்

★. பல் உள்ள நாடு - பல்கேரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள்

▲1ஆவது ஆண்டு நிறைவு விழா- கடதாசிவிழா

▲5ஆவது ஆண்டு நிறைவு விழா- மரவிழா

▲10ஆவது ஆண்டு நிறைவு விழா - தகரவிழா

▲15 ஆவது ஆண்டு நிறைவு விழா - படிகவிழா

▲20 ஆவது ஆண்டு நிறைவு விழா - பீங்கான்விழா

▲30 ஆவது ஆண்டு நிறைவு விழா - முத்துவிழா

▲40 ஆவது ஆண்டு நிறைவு விழா - மாணிக்கவிழா

▲45ஆவது ஆண்டு நிறைவு விழா - நீலக்கல்/இரத்தினக்கல்

▲55ஆவது ஆண்டு நிறைவு விழா- மரகதவிழா

▲25ம் ஆண்டு நிறைவு விழா – வெள்ளிவிழா

▲50ம் ஆண்டு நிறைவு விழா- தங்க,பொன்விழா

▲60ம் ஆண்டு நிறைவு விழா- மணி,வைரவிழா

▲75ம் ஆண்டு நிறைவு விழா – பவளவிழா

▲80ம் ஆண்டு நிறைவு விழா - அமுதவிழா

▲100ம் ஆண்டு நிறைவு விழா - நூற்றாண்டுவிழா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / வெள்ளாவெளி கலைமகள்


# திறமையின் சிறப்பு

கல்லைச் சிற்பி கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்



மண்ணைக் குயவன் கண்டனன்
மக்கள் தாகம் தீர்த்திடும்
தண்ணீர் வைக்கும் பானையாய்
மண்ணை நொடியில் மாற்றினன்

கரம்பு நிலத்தை உழவனும்
கண்டு நன்றாய் உழைத்தனன்
கரும்பும் நெல்லும் விளைந்திடும்
கழனியாக் மாற்றினன்



பேதையாக ஒருவனைப்
பெரிய அறிஞன் கண்டனன்
ஓதி உணரச் செய்தனன்
மேதை யாக மாற்றினன்

திறமை உள்ள மனிதரைச்
சேர்ந்த பொருள்கள் யாவுமே
சிறந்த நிலையை உற்றிடும்
சிறப்பும் புகழும் பெற்றிடும்.

த. தனுசாந்
தரம் - 5
மட் / வெள்ளாவெளி கலைமகள் வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.. வாசிப்போம்

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' 'வாசிக்கத் தெரியாதவன் நற்காற்றை சுவாசிக்கத் தெரியாதவன் என்பது நம் முன்னோர் அனுபவ மொழிகளாகும்.

'ஒரு துளி மை ஓராயிரம் பேரை சிந்திக்கச் செய்யப் போதுமானது. ஒரு தியாகியின் குருதியிலும் அறிவாளியின் பேனா மை மிகப் புனிதமானது' என்பது அறிஞர்கள் கருத்தாம்.

'புத்தகத்திற்கு எலும்போ, இதயமோ இல்லை! ஆனால் மூளையுண்டு!' என்கிறார் ஆங்கிலக் கவி மில்ரன். இத்தகைய பெரும் பொக்கிஷமான வாசிப்பை நாம் புத்தகங்கள் மூலம் அன்றோ பெற்றுக் கொள்ளலாம்?

இன்றைய உலகின் இலத்திரனியல், ஊடக வளர்ச்சி, இளம் சந்ததியினரிடையே வாசிப்புப் பழக்கத்தைக் குறைத்து வருகிறது' என்பதே உண்மை.

எனவேதான் **உலக புத்தக** தினமாக ஏப்ரல் 23 ஐக் கொண்டாட யுனெஸ்கோ தீர்மானித்தது. இத்தினம் ஆங்கில இலக்கிய மேதை வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த தினமாகும்.

நூல்கள் வாசிப்பதானது எமது அறிவுக் கண்கள் திறந்து, பரந்த உலகைப் பல்வேறு கோணங்களில் பார்க்க உதவுகிறது. வாசிப்பே மாணவர் கல்வி வளர்ச்சியில் பிரதான பங்களிப்பை நல்குகிறது.

எமது முன்னோர் வாழ்வை நம் பாரம்பரியம், கலாச்சாரம் என்பவற்றை எமக்கு உரு கடத்தும் பாலங்கள் நூல்களே. அதேபோல் இன்றைய எம் வாழ்வை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்பவையும் நூல்களே. வாசிக்கும்போது விடயங்கள் எம் மனதில் ஆழமாகப் பதிகின்றன. கற்பனை வளம் பெருகுகிறது. புதியவை தேடும் ஆவலைத் தூண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த வாசிப்பை நாம் எம் பள்ளிப் பருவத்திலேயே வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய விளம்பர உலகமானது சிறுவர் எமைக் கவர்வதற்காக கற்பனைக் கதாபாத்திரங்களையும், அவர்களின் அந்த செயற்பாடுகளையும் புத்தகமாக்கி விடுகின்றன. எனவே நாம் வாசிப்பதற்கான நூல்களைத் தெரியும் போது மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும். எமது பெற்றோர், ஆசிரியர் மூத்தோர் துணையுடன் நல்ல நூல்களைத் தெரிவு செய்வோம் ஒவ்வொரு வீட்டிலும் சிறு நூலகம் அமைப்போம். எமது பொழுதுபோக்கின் ஓர் அம்சமாக நூலகம் சென்று வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

உலக புத்தக தினம் எமது செயற்பாட்டையும் வாழ்வையும் வளமாக்கும் ஓர் அற்புத ஆரம்பம் எனக் கொள்வோம்!



நகைச் சுவை

பரீட்சை மண்டபத்தில

ஆசிரியர்: மாணவர்களே! இங்கே உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் என்னைக் கேளுங்கள்

மாணவர்:- நன்றி சேர்! இந்தக் கேள்விக்கு விடை எழுத உதவுவீர்களா?

ஆசிரியர்: - - -!?

தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பொ. ஜதுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளை பார்க்கும் போதெல்லாம் முயலுக்கு பொறாமை வந்தது. ஏன் என்றால் அதன் வளை அருகிலேயே இருந்த மரத்தின் மேல் அமர்ந்து இருக்கும் காகம். எப்போது பார்த்தாலும் சந்தோசமாக மரத்தில் அமர்ந்து கொண்டும், விண்ணில் பறந்து கொண்டும் இருக்கிறதே. தன்னுடைய வாழ்க்கையை நினைத்து நொந்து கொண்டது. முயல் வளைக்குள் முடங்கிக் கிடப்பதும், பயந்து பயந்து வெளி வருவதும், பிறகு வளைக்குள் ஒளிவதும் வெறுப்பாயிருந்தது

# முயலின் சந்தோசம்

மட்/ [illegible] [illegible]

காகத்திடம் கேட்டது. நீ மிகவும் கொடுத்து வைத்த ஆள். எவ்வளவு சந்தோசமாக, உல்லாசமாக, அமர்ந்து இருக்கிறாய் எப்படி உன்னால் முடிகிறது? அதெல்லாம் ஒன்றுமில்லை. நினைச்சா நீ கூட அப்படி இருக்கலாம் என்றது காகம். அப்படியா?

ஆமாம் வளைக்குள் ஒளிந்து கொள்வதே உனக்குப் பழக்கமாகி விட்டது. அப்படி இல்லாமல் சும்மா புல் தரையில் உட்கார்ந்து பார் சுகமாயிருக்கும்.

காகம் சொன்னபடி மறுநாள் புல் தரையில் அமர்ந்து பார்த்தது முயல். சுகமாகவும் சந்தோசமாகவும் இருந்தது இப்படி ஒரு வாழ்க்கையை இத்தனை நாள் இழந்து விட்டோமே என்று வருந்திக் கொண்டது. அப்படியே அமர்ந்து கனவுலகில் மூழ்கியது. அரை மணி நேரம் கூட கழிந்திருக்காது. எங்கிருந்தோ வந்த நரி ஒன்று சட்டென்று முயலைத் தூக்கிச் சென்றது. நாம் நாமாக இருக்க வேண்டும்.

ம. யுதர்சனா
5J



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு பட்ட மரம். என் கதையை கேளுங்கள்..

நான் இப்போது யாருக்கும் உதவ முடியாத ஒரு பட்ட மரமாகி விட்டேன். என் கதை பரிதாபகரமானது. தயவு செய்து யாராவது என் கதையை கேட்பீர்களா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறிலேயே பெரும் செல்வந்தர்
வீட்டில் மிகவும் செல்லமாக வளர்ந்தேன்
"ம்"... அது ஒரு காலம். காலம் தான்
எவ்வளவோ போய்விட்டது. என்ன
அழகு, கம்பீரம்தான் என்ன. எனது பச்
-சை நிறம்தான் என்ன. ஒரு உலுக்கலே
நான் நிழல் [illegible] கொடுத்து வந்தேன். "ஆ
[illegible] பயணிகள். எனது காற்று
[illegible] நோய் தீரும் என்
[illegible] பெயரை கூற
[illegible] ஆறின் முன்
[illegible] பெயர் [illegible]
[illegible] என் [illegible] ல்லமே
[illegible] கிளைகளும்
அழகிய [illegible], மந்தர்
வண்ண [illegible] நின்
-றால் இதமாக இருக்கும். [illegible] எமது
-மாணவர் [illegible] நிழலின்
கீழ் விளையாடுவார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

இரவில் தூங்கும் போது எனக்கு
கீழ் வந்து உறங்கிக் கிடப்பார்கள்
நானும் [illegible] ஆனந்தம்
கொள்வேன் [illegible] க்குறைக்கும்
என்னை [illegible] கள்.



ஒரு நாள் எதிர்பாராத விதமாக ராஜ-மானின் மூத்த பிள்ளை என் மீது ஆணி ஒன்றை அடித்து விட்டான். என் உடம்பு வலியால் துடித்தது. அழுதேன்.

பின் சில நாட்கள் கழித்ததும் எனது அழகு கொஞ்சம் கொஞ்சமாக உதிரத் தொடங்கியது. இப்போது அழகற்று போய்விட்டேன்.

இப்போது யாருக்கும் பயன் இல்லாது அழகற்று காட்சியளிப்-பதால் என்னை எல்லோரும் வெறுக்-கின்றனர். அழகற்றவனாக போனதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சம். எனக்கு வயதும் போய்விட்
-டது. என்னை கொஞ்சம், கொஞ்சமாக
வெட்டி எரிக்கின்றனர். இப்போது
தீயில் எரிந்து கொண்டிருக்கின்றேன்.
இதுதான் என் நிலைமை. இந் நிலைமை
யாருக்கும் வரக்கூடாது என இறை
-வனை மன்றாடுகின்றேன்.

கி. சுஜந்தன்
தரம் - 5
மட்/ வந்தாறுமூலை கண்ணகி வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோய்களை ஒழிப்போம்

எமது நாட்டிலே பல வகையான தொற்று காணப்படுகின்றன. தொற்று அனேகமாக மக்களின் கவனயீனத்தாலேயே பெருகின்றன. தொற்று நோய்களினால் சிறுவர்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். அனேகமான மரணச் சம்பவங்களும் நிகழ்கின்றன.

எமது நாட்டிலே மலேரியா, யானைக்கால், டெங்கு, வாந்திபேதி, வயிற்றோட்டம், போன்ற பாரிய நோய்கள் வேகமாகப் பரவி உயிர்களைக் காவு கொள்வதும் பலரை அங்கவீனர்களாகவும் ஆக்குகின்றது. இக் கொடிய நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் சுத்தத்தை கடைப்பிடிப்பதே காலச் சிறந்தது.

தினமும் குளித்து சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் நகங்களை வளரவிடாமல் வெட்டிச் சுத்தம் பேணவேண்டும், வீட்டையும் சுற்றாடலையும் நித்தமும் சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும். நீர் தேங்கக் கூடிய பொருட்களாவன சிரட்டைகள், இளநீர் கோம்பை, டயர்கள், பொலித்தீன், தயிர் சட்டிகள், வெற்றுப் பெட்டிகள் என்பன சூழலில் சேராவண்ணம் அடிக்கடி அவற்றை அகற்றி சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்போம். இதன் மூலம் டெங்கு போன்ற உயிர் கொல்லி நோயிலிருந்து விடுதலை பெறலாம்.

தெருக்களிலே விற்கின்ற இனிப்புப் பண்டங்கள் போன்றவற்றை வாங்கி உண்ணாமல் தவிர்த்தல் வேண்டும். ஈ.க்கள் மொய்த்த உணவை தவிர்ப்பதன் மூலம் கழிச்சல், மஞ்சட் காய்ச்சல் போன்ற நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம். தினமும் கொதித்தாறிய பருகி ஆரோக்கியம் பெறுவோம். இவ்வாறான நோய்களை எம் நாட்டில் இருந்து விரட்டி வீட்டில் மரங்களை நட்டு இயற்கையான தூய காற்றை சுவாசிப்போம். சிறுவர்களாகிய நாம் அணிதிரண்டு எமது சுற்றாடலை சுத்தம் செய்து ஊனத்தைப் போக்குவோம், உயிர்களைக் காப்போம்.

F.M. பாஹிர் 5C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கத் தவறின் நிந்திக்க நேரும்

ஒரு ஏழை வேலன் தனது மாட்டுவண்டியில் வாழைக்குலைகளை ஏற்றி விற்று வந்தான். ஒரு நாள் அவன் வாழைக்குலைகளை ஏற்றிக் கொண்டு காட்டு வழியால் வந்தான். அவனுக்கு தாகம் எடுத்தது. அருகே இருந்த நீரோடையில் நீர் அருந்தினான். அப்போது வேலா! வேலா! என்ற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். யாரையும் காணவில்லை. மீண்டும் நீர் அருந்துவதற்காக கைகளில் நீரை அள்ளினான். மீண்டும் வேலா! வேலா! என்ற சத்தம் கேட்டது. அப்போது ஓடையிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது. வேலன் சிறிது நேரம் திகைத்து நின்றான். அவ்வுருவம் வேலனைப் பார்த்து பேசத் தொடங்கியது.

நான் இறைவன். நீ என்னிடம் இரண்டு வரங்களைக் கேட்கலாம் என்றது. வேலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதற்கும் ஒரு வரத்தைக் கேட்போம் என்று யோசித்தவாறு இறைவா! என்னுடைய வாழைக்குலைகள் எல்லாம் தங்கமாக மாற வேண்டும். அப்படியே ஆகட்டும் என்றான் இறைவன். வண்டியிலுள்ள வாழைக்குலைகள் எல்லாம் தங்கமாக மாறின. இதனால் வேலனுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை.

இந்நேரத்தில் வேலனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தங்க வாழைக்குலைகளைக் கொண்டு சென்றால் திருடர்கள் கொள்ளையடித்து விடுவார்களோ என எண்ணி இறைவனிடம் மற்றைய வரத்தைக் கேட்போம் என்று நீரோடைக்கு மீண்டும் சென்றான். இறைவா! என் தங்க வாழைக்குலைகளை திருடர்கள் கொள்ளையடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுவார்கள். அதனால் தங்க வாத்துகள் எனது கண்களுக்கு மட்டுமே தெரியும் வண்ணம் செய்யுமாறு வரத்தைக் கேட்டான்.

பின்னர் தங்க வாத்துகளைக் கொண்ட வண்டியுடன் வீட்டை அடைந்தான். மனைவியிடம் வண்டியிலுள்ள தங்க வாத்துக்கட்டைகளை உள்ளே எடுத்து வந்து வைக்குமாறு வேலன் சொன்னான். மனைவியும் மிகவும் சந்தோசப்பட்டு வண்டியின் அருகில் சென்றாள். வண்டியில் வாத்துகள் மட்டுமே இருந்தது. கணவனை அழைத்து வண்டியில் வாத்துகள் மட்டும்தானே இருக்கிறது. தங்கத்தைக் காண வில்லையே என்றாள். வேலன் வெளியே வந்து பார்த்த போது வண்டி நிறைய தங்க வாத்துகள்தான் இருந்தன.

பின்புதான் வேலனுக்கு தான் இறைவனிடம் கேட்ட இரண்டாவது வரம் பற்றி ஞாபகம் வந்தது. சிந்தனையின்றி கேட்டதால் நான் திண்டாட்டத்துக்கு உள்ளாக்கப்பட்டேன் என்று வேலன் மிகவும் வேதனை அடைந்தான்.

3813
3813

[illegible]

ACM [illegible] -5C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

1) அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
3) ஆனைக்கும் அடி சறுக்கும்
4) இளமையிற் கல்வி சிலையெழுத்து
5) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
6) ஆடையில்லாதவன் அரை மனிதன்
7) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
8) இளமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
9) இளங்கன்று பயம் அறியாது
10) இட்டுக் கெட்டார் யாருமில்லை
11) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
12) ஆழமறியாது காலை விடாதே
13) ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
14) ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
15) எறும்பூரக் கற்குழியும்
16) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
17) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
18) பேராசை பெரும் நட்டம்
19) பொறுத்தார் பூமியாள்வார்
20) கோபம் பாவத்தைச் சேர்க்கும்


மட் / மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி | உவெஸ்லி உயர்தரப் பாடசாலை
பாலர் மேற்பிரிவு.

# நாம் இலங்கையர்



1. எமது தாய் நாடு இலங்கை ஆகும்.
2. நாம் எமது நாட்டை நேசித்து வாழ்கின்றோம்.
3. எமது நாடு இயற்கை வளங்களைக் கொண்டதால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.
4. நாம் எமது நாட்டை இலங்கைத் தீவு என்றும் அழைக்கின்றோம்.
5. நாங்கள் இலங்கை நாட்டை மேம்படுத்துவதற்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.
6. எம் நாட்டில் உள்ள அனைவரையும் மதித்து வாழவேண்டும்.
7. ஒற்றுமையுடனும். சமாதானத்துடனும் வாழ்ந்து வருகின்றோம்.
8. நமது நாடு இந்து சமுத்திரத்தின் "நித்திலம்" என வருணிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்

### ஆசை.

வண்ணக் கிளி போல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னித் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

மலர்களைப் போல் மணம் தர ஆசை!
மலைமேல் மலை ஏறிட ஆசை
தளர்வோர்க் கென்றும் உதவிட ஆசை!
தாய் போல் அன்பை வழங்கிட ஆசை

கடமையை உணர்ந்து செயற்பட ஆசை!
கடின உழைப்பால் வென்றிட ஆசை
மடமையைக் கொழுத்த மனதினில் ஆசை!
மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை
ஆசை ஆசை எல்லாம் நடந்திட ஆசை!

கஜி/ உ வெல்லி உயர்தரப் பாடசாலை /
பாலர் ஷேம்பரிய.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்க கசடற

எல்லாச் செல்வங்களையும் விட மேலான செல்வம் கல்விச் செல்வமாகும். இக் கல்வியானது என்றும் நிலையானது, காலத்தால் அழியாதது. கள்வர்களால் கவர முடியாதது. அக்கினியால் அழியாதது வெள்ளத்தால் அள்ளிக் கொண்டோட முடியாதது, கொடுக்கக் கொடுக்க குறையாதது.

பேதையை ஞானியாக்கும் மூடனை வல்லவனாக்கும். கோழையைக் கொடியவராய் மாற்றும். ஏழையை செல்வனாக்கும், கையாலனை புரவலனாக்கும். வறியவனை வாழ வைக்கும், அறிவிலியை சான்றோனாக்கும், அறியாமையைப் போக்கி அடிமை உணர்வை நீக்கும், இத்தகைய மாண்பு தரும் அரு மருந்தான கல்வியை "கசடற கற்க" வேண்டும் என்று வள்ளுவர் வாக்கு. எதைப் படித்தாலும் அதை முறையாக உண்மைப் பொருளை அறிந்து படிக்க வேண்டும்.

நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள் என்று கூறுவார்கள் அத்தகைய நல்ல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். அன்னப் பறவை யானது பாலையும், நீரையும் சேர்த்து வைத்தால் பாலை மாத்திரம் குடித்து விட்டு நீரை விட்டு விடும். அதே போல் ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் நல்லவற்றை குற்றமற கற்க வேண்டும். வாசிப்பின் மேன்மையை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். மாணவர் பொழுதுபோக்கிற்கு குப்பைகள் போன்ற அநேக நூல்கள் புத்தகக் கடைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்நாட்களில் வழி தவறிப் போய் விடாமல் பல நூல்களும் வந்து கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை வாசித்து அறிவை விருத்தி செய்து எம் மனங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கசடற கற்றவர்களால்தான் மொழியை சரியாக பரிமாற முடியும். சரியாக எழுத முடியும் சரியாக உச்சரிக்க முடியும். பேச முடியும். ஆங்கில மொழியை கசடற கற்க வேண்டும் என்பதற்காகவே குழந்தைப் பருவத்திலிருந்து ஒலியியல் (போனடிக்ஸ்) வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அவ்வாறான வகுப்புக்கள் தமிழ் மொழிக்கும் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்பட்டால் செம்மொழியாம் தமிழ் மொழி செம்மைப்படுத்தப்பட்டதாகும் எனக் கூறிக் கொள்கிறேன்.

ஆரம்பகால திரைப்படப் பாடல்களை அவற்றின் வசன நடைகளை சீர்தூக்கிப் பார்த்தால் அவை கசடறக் கற்கக் கூடிய பாணியில் அமைந்திருந்தன. இன்றைய காலத்து திரைப்பட பாடல்களோ, வசனங்களோ அவ்வாறு இல்லாமல் அமைந்துள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

ஆரம்ப காலத்தில் நமது முன்னோர்கள். கலைகளைக் கற்க முன்னரே நிகண்டிடம் கற்றார்கள் அதனை மனனம் செய்தார்கள் கசடற கற்றார்கள் மாசற்ற மொழியைப் பேச எழுத கற்றுக் கொண்டார்கள் தற்போதைய தமிழில் அவ்வாறான நடைமுறைகள் எதுவும் இல்லை. எனவே மொழியை சரியாக கையாள்வதற்கு கசடற கற்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்தது. வானொலியை எடுத்து நோக்கினால் அங்கேயும் வர்த்தக சேவையின் ஒலிபரப்பு பகுதி கேட்கக் கூடிய பாணியில் அமைந்திருந்தன. அதற்கான ஒலிபரப்பாளர்கள் கருமையாக உழைத்தார்கள். அவ்வாறான நிலைமைகள் உருவாக வேண்டும். மாணவர்களாகிய நாமும் பாட நூல்களைக் கற்கும் போது கேட்டுக் கற்க வேண்டும். இலக்கணத்திலே உள்ள ல, ழ, ள, ர, ற கர வேறுபாடுகள் 'ண' கர, 'ன' கர வேறுபாடுகள் என்பனவற்றை பொருள் அறிந்து உணர்ந்து கற்க வேண்டும். அதற்கு தமிழ் ஆசிரியர்களும் வழிகாட்டிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் கேட்கக் கூடிய மொழியாக, செம்மைப் படுத்தப்பட்ட மொழியாக இலக்கண வரம்பு கட்டப்பட்ட மொழியாக விருத்தி செய்யப்படும்.

×××××××××××××

கி. நிருஷ்கா
தரம் -05
கமு/ ஸ்ரீ மாமாங்க வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலுக்குத் திருமணம்

அக்பர் வேட்டையாடுவதில் மோகம் கொண்டவர். சில படை வீரர்களுடன் செல்வார். காடே அலை மோதும். பயங்கர மிருகங்களும் பயந்து ஓடி ஒளிந்து கொள்ளும்.

அன்று அவர் வேட்டைக்குப் படை பட்டாளங்களோடு புறப்பட்டார். இந்தப் பயங்கர வேட்டை பீர்பாலுக்குப் பிடிப்பதில்லை. தேவைக்கதிகமான மிருகங்களைக் கொல்வது பற்றி வருந்துவார். சமயம் கிடைக்கும் போதெல்லாம் அரசருக்கு எடுத்துரைப்பார். ஆனாலும் பலன் கிட்டவில்லை.

இப்படியே வேட்டை தொடர்ந்து கொண்டிருந்தால் காடுகளில் மிருகங்களே இல்லாமல் போய்விடும். தேவையற்ற மிருகவதை, மனித தர்மத்திற்குச் செய்யும் அநீதி என்ற கொள்கையுடையவர்.

அரசர் வேட்டைக்குச் செல்லும் போது பீர்பாலையும் அழைத்தார். அவரும் அழைப்பை ஏற்று அரசருடன் சென்றார்.

அரசரும் பீர்பாலும் பேசிக் கொண்டே சென்றார்கள்.

அப்போது பீர்பால், "அரசே! நேற்று ஒரு பழங்காலச் சுவடி ஒன்று கிடைத்தது. அதைப் படித்தேன். பல்வேறு விஷயங்கள் அதில் உள்ளன. பறவைகள், மிருகங்கள் போன்றவற்றின் பரிபாஷைகள் பற்றி அதில் விளக்கம் தரப்பட்டிருந்தது" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அரசர் "அப்படியானால் உமக்கு பறவைகள் மிருகங்களின் மொழிகள் தெரியுமில்லையா?" என்றார்.

"ஓரளவு தெரியும் அரசே!" என்று பீர்பால் தன்னடக்கத் தோடு கூறினார்.

வேட்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான மிருகங்களும் பறவைகளும் கொல்லப்பட்டுக் கிடந்தன.

அப்போது அரசரும் பீர்பாலும் ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தனர். அந்த மரத்தின் மீது இரண்டு குயில்கள் இருந்து கூவிக் கொண்டிருந்தன.

"அந்தக் குயில்கள் என்ன பேசிக் கொள்கின்றன என்பதைக் கூற முடியுமா?" பீர்பாலிடம் கேட்டார் அரசர்.

"அரசே, அதில் ஒரு குயில் பெண் குயிலின் தந்தை. மற்றது ஆண் குயிலின் தந்தை. அவை தங்கள் வீட்டுத் திருமணத்தைப் பற்றி பேசிக் கொள்கின்றன" என்றார் பீர்பால்

"எங்கே! அவற்றின் திருமணத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஆசையாக இருக்கிறது. மேலும் சொல்லும்." என்றார் அரசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் பிள்ளைக்கு உன் மகளை மண முடிப்பதாக இருந்தால் மிருகங்களே இல்லாத அறுபது காடுகளைச் சீதனம் தர வேண்டும்" என்றது ஆண் குயிலின் தந்தை.

அதற்கு பெண் குயிலின் தந்தை "அவசரமானால் இப்போதே திருமணத்தை முடித்துக் கொள்ளலாம். மிருகங்கள் இல்லாத காடுகள் முப்பதுதான் என்வசம் கைவசமுள்ளது. அதை முதலில் கொடுத்து விடுகிறேன். மீதி முப்பது காடுகளை இன்னும் ஆறுமாதங்களில் தருகிறேன் அதுவரை பொறுத்துக்கொள்" என்றது.

அதற்கு அரசர் "என்ன கொடுமை! மனிதர்களைவிட பறவைகளின் சிந்தனைதான் அதிகம் போகிறது. வேட்டையைக் கொடுமை முறைகளையும் தொடங்கிக் கொண்டு போகும். சரி மேலும் சொல்லு" என்றார் அக்பர்.

பெண் குயிலின் தந்தை "மீதி முப்பது காடுகளில் உள்ள மிருகங்களை அரசர் இன்னும் அழிக்கவில்லை. தற்போது தான் வேட்டையால் இறங்கியுள்ளார். இன்னும் ஆறு மாதகாலம் ஆகும். அதுவரை பொறுத்துக் கொள். நிச்சயம் முப்பது காட்டையும் ஆறு மாதங்களில் அழித்து விடுவார்" என்று உறுதி கூறுகிறது" என்றார்.

அக்பருக்கு அப்போதுதான் உரைத்தது "அட்டா... கதை பிரமாதம்! எனக்கா கதைதானே பீர்பால்? ... இனி அடிக்கடி வேட்டைக்கு வரமாட்டேன். வந்தாலும் தேவை-யில்லாமல் மிருகங்களைக் கொல்வதில்லை என்று முடிவு. சரிதானே பீர்பால்?" என்று கேட்டார் அரசர்.

பீர்பால் அதைக் கேட்டு மிகுந்த சந்தோஷப்பட்டார்.

++++ ~~~++++ ~~ ++++ ~~++++

7 கபி | ஸ்ரீ மாமாங்க வித்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] | இராமகிருஷ்ண மிஷன்

# பழங்களின் பயன்கள்

* பழங்களில் பல உயிர்ச்சத்துக்கள் காணப்படுகின்றன.
* சிலபழங்கள் தாகத்தையும் தணிக்கின்றன.
* உணவுகளை இலகுவாக சமிபாடடையவும் செய்கின்றன.
* பழங்களில் பல தாதுப் பொருட்களும் காணப்படுகின்றன.
* சில பழங்கள் கொண்டாட்ட நிகழ்வுகள், கலாச்சார நிகழ்வுகளுக்கும் பயன்படுகின்றன.
* கண்பார்வையைச் சீர்செய்வேன்.
* பசியையும் போக்கக் கூடியது.
* பழங்களை உண்பதால் முகமலர்ச்சியும், உற்சாகமும் ஏற்படும்.
* பழங்களை உண்பதால் நோய்கள் ஏற்படாது. தலைமுடி வளர்தல், தோலை அழகுப்பாக வைத்திருக்கின்றன.
* பழரசங்கள், பழப்பாகு, பழச்சாறு போன்றவை தயாரிக்கவும் பயன்படுகின்றன.
* ஆலயங்களில் அபிசேகங்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன.




ம. கீர்த்தனன்
தரம்: 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# புரியாத கணக்கு

ஒருசமயம் மன்னர் அக்பர் அரசசபையில் அமைச்சர், புலவர்களுடன் பேசிக்கொண்டு இருந்தார். அப்பொழுது மன்னருக்கு விசித்திர எண்ணம் தோன்றியது.

"அமைச்சர்களே, நம் நாட்டில் எல்லாவகை உயிரினங்களைப் பற்றியும் கணக்கெடுக்க விரும்புகிறேன். எனவே, இதற்கென ஒரு பிரிவு அமைக்கலாம் என்றும் நினைக்கிறேன்."

"அப்படியே செய்யலாம் மன்னா" என்றார் தலைமை அமைச்சர். பீர்பால் மட்டும் இன்று மன்னர் ஏதோ புதிய பிரச்சனையை அனுகப் போகிறார் என நினைத்துக் கொண்டார். பீர்பாலின் பார்வையையும் மன்னர் புரிந்து கொண்டார்.

மன்னர், "நீண்ட காலமாக எனக்கு ஒரு ஆசை உள்ளது. நம் நகரத்துக்குள் மட்டும் எத்தனைப் பறவைகள் வந்து போகின்றன என கணக்குப் பார்த்துக் கூறவேண்டும்." என்று கூறிச் சபையினரைப் பார்த்தார்.

ஒருவரும் ஒன்றும் கூறாமல் இருந்தனர். "என்ன ஒருவரும் பேசாமல் இருக்கிறீர்களே, உங்களால் முடியாதா என்ன?"

"மிகுந்த கஷ்டமான வேலைதான் என்றாலும் எங்களுக்கு கால அவகாசம் தந்தீர்கள் என்றால் விரைவில் கணக்கெடுத்து சொல்வோம் மன்னா." என்றனர் அமைச்சர்கள்.

மன்னர் சிரித்துக்கொண்டே, "எவ்வளவு காலம் ஆகும்."

"ஆறு மாதம் அல்லது அதற்கு மேலும் ஆகலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது மிகவும் அதிகம் தான். ஆகவே, நமது பீர்ப்பாலிடம் இந்த வேலையை ஒப்படைக்கப் போகிறேன்."

"ஆகா வந்துட்டார்யா" எனப் பீர்பால் தனக்குள் பேசிக் கொண்டார்.

மன்னர், "என்ன பீர்ப்பால் எவ்வாறு காக்கைகளை கணக்கு எடுத்து முடிப்பீர்கள்" என்றார்.

பீர்ப்பால் சற்றும் யோசிக்காமல் "ஒரு வாரத்தில் முடித்துவிடலாம் மன்னா" என்றார்.

அனைவரும் பீர்பாலையே பார்த்தனர்.

"அப்படியே ஆகட்டும்" மன்னா என்றார்

ஒருவாரம் முடிந்து பீர்ப்பால் அரசசபைக்கு வந்திருந்தார். பீர்ப்பாலிடம் அனைவரும் ஏதேயோ எதிர்பார்த்தபடி இருந்தனர். மன்னரும் வந்துவிட்டார்.

"என்ன பீர்ப்பால் நான் சொன்ன வேலையை முடித்து விட்டு வந்தீர் அல்லவா" என எதிர்பார்ப்புடன் மன்னர் கேட்டார்.

"ஆமாம் வேந்தே! பறவைகளைச் சரியாக கணக்கெடுத்து வந்துவிட்டேன்" என்று பீர்ப்பால் கூறினார்.

"ம்... விபரத்தைக் கூறுங்கள்."

தொண்டையைக் கனைத்துக் கொண்டார் பீர்பால்

"மன்னா நம் நகரத்துக்குள் தங்கியிருந்த பறவைகள் மட்டும் மொத்தம் ஆயிரத்து நூறு ஆகும். இதில் இரவில் வெளியே சென்று தங்கிவிடும் பறவைகள் ஆயிரம் ஆகும். காக்கைகள் - 650, குயில்கள் - 225, குருவி - 450, கழுகு-20 இப்படி பலவாறாகப் பிரித்து கணக்கிட்டுள்ளேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

"பீர்பால் உம்மை பாராட்டுகிறேன்."

"நன்றி மன்னா!" என்று பீர்பால் மன்னரை வணங்கினார்.

தலைமை அமைச்சர் எழுந்தார், "பீர்பால் அவர்களே உங்களின் கணக்கெடுப்பு சரியானது தான் என நிரூபிக்க முடியுமா?"

"அய்யா தலைமை அமைச்சரே மன்னருக்கே புரிந்து விட்டது. தங்களுக்கு மட்டும் புரியவில்லை என்கிறீர்!

"பீர்பால் இதை நிரூபிக்க வேண்டும்."

"சரி, மீண்டும் கணக்கெடுப்போம். ஆனால் கணக்கெடுக்கும் பொழுது, புதிய புறாக்கள் ஏதும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களால் முடியுமா?" என்ன?

"தலைமை அமைச்சரால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. பீர்பாலின் கெட்டிக்காரத்தனத்தை, மன்னர் பாராட்டி பரிசுகள் வழங்கினார்.

*—*

ஆக்கம்!

நிரஞ்சன்குமார் சஜீவ்

தரம் - 05

கமு / இராமகிருஷ்ண ம.வி

## டெங்கு நோயை ஒழிப்போம்

* டெங்கு நோய் மிகவும் ஆபத்தான ஒரு நோய் ஆகும்.

* இன்று நாம் அவைகளை நோயைப் பரப்ப விடாமல் தடுப்பதாகும் எமது கடமை.

* நாம் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களைக் கண்டறிந்து அழிக்க வேண்டும்.

* வெற்றுத்தகரடப்பாக்கள், சட்டி பானைகள், வெற்றுக்கயிற்ச்சுட்டி-கள், யோகட் கோப்பைகள் ஆகியவற்றை உடைத்து துண்டுகளாக எறிய வேண்டும்.

* வீட்டில் பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகளை இரண்டு அல்லது மூன்று நாட்களுக் கொருதடவை மாற்ற வேண்டும்.

* இவ்வாறு மாற்றும் சட்டியினுள் உப்புக்கட்டி யொன்றை இடுவதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைத்தடுக்க முடியும்.

* குப்பை கூழங்களை எரிக்கவேண்டும் அல்லது புதைக்க வேண்டும்.

* இவ்வாறு பல முறைகளைப் பின்பற்றுவதால் டெங்கு நோயை ஒழிக்க முடியும்.

சி. யதுர்சனா
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

ஒரு கிராமத்தில் உள்ள வீட்டில் ஒர் சேவல் வாழ்ந்து
வந்தது அது மிகவும் அழகானது அதன் கொண்டை சிவப்பு நிற
மாகவும் சிறகுகள் பொன் நிறமாகவும் காணப்பட்டது.
அதிகாலையிலே எழுந்து கூவி அனைவரையும் துயில் எழுப்பும்
அது கூவும் கொக்கரக் கோ ஒலி நாற் திசையிலும் ஒலிஎழுப்பும்
அது ஒருநாள் தோட்டத்தில் இரை தேடி உண்ணும் வேளையி
ல் ஒரு வெண் புறா அவ்விடத்திற்கு இரை தேடி வந்தது.
"சேவலாரே நான் உங்களை கண்டுகொள்ள இவ்விடத்திற்கு
வந்தேன்" என்றது வெண்புறா. சேவல் வெண் புறாவிடம் "
என்னைப் போல் நீங்களும் தனியாகவா இருக்கிறீர்கள்"
என்றது. அதற்கு வெண் புறா "இல்லை எனக்கு
இரண்டு சேய்கள் இருக்கிறார்கள்" என்றது. அவர்
களுக்கு இரை தேட வந்தேன் என்றது வெண்புறா.
சேவல் வெண்புறாவிடம் காலையும் மாலையும் இந்த வீட்டில்
தான் உணவு கிடைக்கிறது என்று கூறியது. என்றாலும்
எனக்கு உணவைத் தேடி உண்பதில் தான் விருப்பமென்றது
சேவல். புறா சேவலிடம் உனக்கென்றால் உணவு தர
ஒருவரும் இல்லை என்று கூறியது. புறா கூறிய போது
கவலைப்பட வேண்டாம் என்றது சேவல். எனக்கு
இந்த வீட்டில் கிடைக்கும் உணவுகளை தருகிறேன்
என சேவலார் கூறியது. சேவலாரின் நல்ல எண்ணத்தை
எண்ணிய புறா மகிழ்ந்தது. புறா சேவலிடம் நன்றிகூறிச்
சென்றது.

பு. பிரசாந்
தரம் 5B
தி/கோ மெதடிஸ்த மிஷன் த.க.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பிள்ளை.

காலையில் இருந்தே ராஜா காட்டிய தயக்கமும் பணிவும் அவன் எதையோ என்னிடம் கேட்கப் போகிறான் என்பதை உணர்த்தின. அவனாக வாய்திறந்து கேட்கட்டுமென்று கண்டும் காணாதவனாய் இருந்தேன். நான் கந்தோருக்கு புறப்படும் நேரத்தில் இதைவிட்டால் இனியும் தருணம் வாய்க்காது என்பதைப்போல அவன் வாய்திறந்து கேட்டேவிட்டான்.

"அப்பா எனக்கொரு சைக்கிள் வேணும்!" நான் அவனை உற்றுப் பார்த்தேன்;
"அதுதான் இப்ப முக்கியமா? அது சரி இந்தத்தவணை பரீட்சையில் 'புறோக்றஸ்' றிப்போட் தந்திட்டதோ?"

"அது.... அது நாளைக்குத்தானப்பா தருவாங்க"
"இந்த முறை வகுப்பில் நீ எத்தனையாம் ஆளாய் வருவாய்?"
"சரி அதைவிடு, போன முதலாம் தவணைச் சோதனையில் நீ எத்தனையாம் பிள்ளை?"
"ரெண்டு".
"முந்தின வருசம், அதுக்கு முந்தின வருசமெல்லாம் வகுப்பில முதலாம்பிள்ளையா வந்த நீ, இப்ப இந்த வகுப்பில மட்டுமேன் ரெண்டாம் பிள்ளையாய் வாறாய்?"
ராஜா நெளிந்தான் "அது... அது வந்தப்பா....!
"என்ன வந்தும் போயும்... சொல்லுடா?"
அவன் மௌனம் சாதித்தான். கண்களில் அழப்போகிற பார்வை இருந்தது. ஏன்டா இவரிடம் போய் சைக்கிள் கேட்டோம் என்று தன்னையே நொந்து கொள்கிற பாவனை இருந்தது

"என்ன நடந்தது உனக்கு? சொல்லுடா, ஏன் முதலாம் ஆளாய் வரல?"
"அப்பா.. இந்த வருசம் எங்கட வகுப்பில் கஜன் எண்டொரு பொடியன் புதுசாச் சேர்ந்திருக்கானப்பா... பிறின்சிப்பாற்ற மகனாம். வகுப்பில எப்பவும் அவன்தானப்பா முதலாம் பிள்ளையாய் வாறானப்பா.."

"அப்பிடியா? இப்பிடி அவனைச் சொல்லி உன்னைத் தாழ்த்திக் கொள்ள உனக்கு வெட்கமில்லையா? அவனை வென்றுபோட்டு வந்து வந்து கேள். அப்புறம் சைக்கிள் வாங்கித்தாறன்!"

ராஜாவின் முகத்தில் சந்தோசம் மின்னியது "மெய்யாகவா அப்பா?" என்றான்

"மெய்யாகத்தான் சொல்றன். போய்க் கவனமெடுத்துப் படி, முதலாம் பிள்ளையாய் வா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு அவன் விளையாடுவதைக் குறைத்துக் கொண்டு புத்தகமும் கையுமாக இருப்பதையும், பின்னேரம் பள்ளி விட்ட கையோடு ரியூசன் வகுப்புகளுக்கு விரைவதையும் பார்க்க முடிந்தது.

"இவனை நம்பேலாது, எல்லாம் தந்திரம்! சைக்கிள் கையில கிடைக்கும் மட்டும் தான் படிப்பான். கிடைச்சிட்டுதோ, படிப்பும் மண்ணாங்கட்டியும் என்டு போட்டு கூட்டாளிமாரோட ஊர் சுத்தப் போயிடுவான்!" என்று மனைவி எச்சரித்தாள்.

"பாப்பம் பாப்பம், என்னெண்டாலும் முதலில அவன் முதலாம் பிள்ளையாக வரட்டும்! சைக்கிளைப் பிறகு பார்க்கலாம்" என்றேன்.

இரண்டாம் தவணை ஆவணிப் பரீட்சை சமயம் ராஜா புத்தகங்களுடன் ஓர் இராணுவப் - புலிகள் யுத்தமே இரவும் பகலும் நடத்தியதை கவனித்தேன். பரீட்சை முடிய, தேர்ச்சி அறிக்கைப் புத்தகத்துடன் ஓடி என்னை அணுகினான்.

"என்னடா, இந்த முறை முதலாம் ஆளாய் வந்திட்டியா?" என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

"சீச்சி ... இல்லேப்பா" என்றான் சலித்துப் போய். "இந்த முறை கஜன் இங்கிலீசில என்னைவிட பத்து மாக்ஸ் கூட எடுத்து முதலாம் பிள்ளையாய் வந்திட்டானப்பா! பரவாயில்லை. வரப்போறச் சோதினை இருக்குத்தானே? அப்ப ஒரு கை பாத்திடலாம்!" என்று சூளுரைத்தான். நான் சிரித்தபடி அறிக்கையில் கையொப்பமிட்டுக் கொடுத்தேன்.

மார்கழிப் பரீட்சை நெருங்க நெருங்க ராஜா இரவு வெகுநேரம் கண்விழித்துப் படிப்பது தெரிந்தது. தூக்கம் வராமலிருக்க தண்ணீர் பேசினுக்குள் கால்களை புதைத்துக் கொண்டு கொட்டாவிக்கு மேல் கொட்டாவி விட்டுக் கொண்டே தூக்கக்கிறக்கத்துடன் படிப்பதை பார்க்க பாவமாய் இருந்தது.

இடையில் வரும் மாதப் பரீட்சையிலும் அவன் கஜனிடம் தோற்றுவிட்டான் என்பதை வாடிச்சிறுத்த அவன் முகமே சொல்லியது. அதைப் பார்க்க மனசு சங்கடப்பட்டது. ஒரு சைக்கிளுக்காக என் மகனை இவ்விதம் வருத்த வேண்டுமா? பேசாமல் சைக்கிள் வாங்கிக் கொடுத்து விடலாமா என்று கூட தோன்றியது. ஒருவாறு அடக்கிக்கொண்டேன்.

"டேய் ராஜா! இப்பவெல்லாம் ராத்திரியில சாப்பாடு வேண்டாம் என்று சொல்லுறியாமே? ஏன்டா?"

"சாப்பிட்டா நித்திரை வருகுதப்பா.. படிக்க ஏலுதில்ல அதனால தான்" என்றான். பார்ப்பதற்கு கண்கள் உள்ளடங்கிப் போய் உடம்பு மெலிந்த மாதிரி நோயில் அடிபட்ட தோற்றம் அவனில் இருந்தது. என் மனம் நெகிழ்ந்தது. அவனை அணைத்துக் கொண்டு அன்புடன் தலையைக் கோதினேன். அடம்பிடித்த அவனை இழுத்துக்கொண்டு போய் உட்கார வைத்துத் தான் சாப்பிட வைக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு முழு இரவுமே தூக்கத்தை துறந்து நெஞ்சமும் அயர்ச்சியில்லாமல் அவன் படிப்பதை பார்த்தேன். நடுச்சாமத்தில் தண்ணீர் குடிக்க, வெளிக்குப் போக எழுந்தால் முன் மண்டபத்தில் விளக்கு வெளிச்சத்தில் கண் கொட்டாமல் விழித்திருந்து அவன் படிப்பதைப் பார்த்து அதிசயித்தேன்.

வகுப்பேற்றச் சோதனை முடிந்தது. இம்முறை ரிப்போட் என்னிடம் காட்ட ராஜா வரவில்லை. அவன் அம்மாவே கொண்டு வந்தார்.

"எங்க ராஜா? என்ன, இந்த முறையும் ரெண்டாம் ஆள் தானா? அது தான் தான் வராமல் உன்னை அனுப்பியிருக்கிறானா?" என்று கிண்டலடித்தேன்.

"கதையைப்பாரு? என்ர பிள்ளைய என்னெண்டு நினைச்சிருக்கிறீங்க? ராஜா இந்த முறை வகுப்பில முதலாம் பிள்ளை! தெரிஞ்சுக்கங்க!" என்றார் அவர் எகத்தாளமாக.

"என்னது?" நான் பிரமித்தேன். "கொண்டு வா ரிப்போட்டைப் பார்க்கிறதுக்கு?"

பிரித்துப் பார்த்தேன். உண்மைதான். தன் முயற்சியில் என்றும் தளராத விக்கிரமாதித்தனைப் போல முயன்று ராஜா இம்முறை முதலாம் பிள்ளையாய் வந்திருந்தான்!

எனக்கென்றால் சந்தோசம் தாங்க முடியவில்லை. உடம்பில் புதுரத்தம் பாய்ந்தமாதிரி இருந்தது.

"எங்கே அவன்?" என்று தேடிப்பார்த்தேன். வீட்டில் இல்லை. வெளியிறங்கி தேடியதில் பக்கத்திலுள்ள மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். கைதட்டி கூப்பிட்டேன். ஓடி வந்தான்.

"ராஜா... இந்த முறை முதலாம் பிள்ளையாய் வந்திட்டியாமே.. கொங்கிராஜுலேசன்ஸ்!" என்று கைகுலுக்க கையை நீட்டினேன்.

"சேச்சே! அது இருக்கட்டும்பா!" என்று சலித்து போய் சொல்லி, நீட்டிய கையைத் தட்டிவிட்டான் அவன். "ஏன்டாப்பா, சந்தோசப்பட வேண்டிய விசயத்துக்கு போய் சலித்துக் கொள்றாய்?"

"சரிசரி எப்படியோ பாஸ் பண்ணிற்றாய்! வா, சொன்னமாதிரி உனக்கொரு சைக்கிள் வாங்கித் தாறன்!" என்று அவன் கைபற்றி அழைத்தேன்.

"வேணாம் இருக்கட்டும்பா!" என்று கையை உதறினான். எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. சைக்கிளுக்காகவே கஷ்டப்பட்டுப் படித்தவன், அதற்காகவே வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வந்தவன், இப்போது சைக்கிளே வேண்டாம் என்று சொன்னால்?

"ஏன்டா மகனே? என்ன சங்கதி? ஏன் வேணாம் என்றாய்?"

"அப்பா.. நான் முதலாம் பிள்ளையாய் வந்தனே தவிர, அதைப் பெரிசா எடுக்கல்லப்பா! கஜனுக்கு காய்ச்சல். அவன் சோதனைக்கு வரல்ல. அதனால தான் நான் முதலாம் பிள்ளையாய் வந்தனான். அவனும் சோதனை எழுதி, நான் முதலாம் பிள்ளையா வந்தாதானப்பா எனக்கு வெற்றி!" என்று சொன்னவனை அப்படியே பிரமித்துப் பார்த்தேன்.

நான் மெய்சிலிர்த்துப் போய் அப்படியே ராஜாவை கட்டிக் கொண்டேன்.

- நன்றி -

சி. சஞ்ஜித்
தரம் - 5
தி/கோ மெதடிஸ்த மிஷன் த.க.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள் வளர்ப்போம்.

நம்மை சூழவுள்ள பிரதேசங்களை அவதானிக்கும் போது பல்வேறு வகையான பச்சை நிற தாவரங்களை அவதானிக்கலாம். இத்தாவரங்களே ஏனைய எல்லா உயிரினங்களும் உயிர்வாழ்வதற்கு தேவையான உணவைக் கொடுக்கின்றன. ஒரு நாட்டின் மழைவீழ்ச்சி சிறப்பாக இடம் பெறுவதற்கு தாவரங்களே முக்கிய காரணமாக அமைகின்றன. அதாவது தாவரங்களினால் ஏற்படுத்தப்படும் குளிர்ச்சியே மழை உருவாகக் காரணமாக அமைகின்றது. எனவே நாம் காடுகளையும் ஏனைய தாவரங்களையும் பாதுகாப்பதுடன், புதிய தாவரங்களையும் உருவாக்கல் வேண்டும். எமது உணவு தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறு பழ வகைகள், காய்கறி வகைகள், தானியங்கள். உட்பட மனிதனின் பல்வேறு தேவைகள் தாவரங்களால் நிறைவேற்றப்படுகின்றன எமது உணவு தேவையின் ஒரு பகுதியை நிறைவேற்றிக் கொள்வதற்காக வீட்டுத் தோட்டங்களையும் அமைத்து எமக்குத் தேவையான காய்கறிகளையும், பழவகைகளையும் உற்பத்தி செய்து கொள்ளலாம். இதன் மூலம் மேலதிகமானவற்றை விற்பதுடன், மேலதிக வருமானத்தையும் பெறமுடியும்.

யோ. அகவியா
தரம் - 05
திருகோ/ விவேகானந்தா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிய வேண்டிய தகவல்கள்

- எமது தேசிய மரம் → நாகமரம்
- எமது தேசிய மலர் → நீலோற்பலம்
- தேசிய பறவை → காட்டுக்கோழி
- தேசிய விளையாட்டு → வொலிபோல்
- அருகிலுள்ள நாடு → இந்தியா
- இலங்கையின் நீளமான நதி → மகாவலி கங்கை
- நிர்வாகத் தலைநகரம் → ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
- தேசிய கீதத்தை இயற்றியவர் → ஆனந்த சமரக்கோன்.
- தமிழில் மொழிபெயர்த்தவர் → மு. நல்லதம்பி.

ஆக்கம்
என். எம். பஹ்ரான்
தரம் - 5
ஹ்/ தாருஸ் ஸலாம் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசணையும் குறைபாட்டு நோய்களும்

விட்டமின் A குறைபாடு → மாலைக் கண் நோய்

விட்டமின் B குறைபாடு → பெரிபெரி

விட்டமின் C குறைபாடு → ஸ்கேவி

விட்டமின் D குறைபாடு → என்புருக்கி

விட்டமின் E குறைபாடு → மலட்டுத்தன்மை

விட்டமின் K. குறைபாடு → குருதி நாமதித்து உறைதல்

விட்டமின் B + இரும்பு குறைபாடு → குருதிச் சோகை

நார்ப்பொருள் குறைபாடு → மலச்சிக்கல்

அயடீன் குறைபாடு → தொண்டைக் கழலை

காபோவைதரேற்று மட்டும் உட்கொள்வதால் → குவாசியக்கோர்

புரதம் + காபோவைதரேற்று குறைபாடு → மரசுமசு

ஆக்கம்

எம். ஆர். பாத்திமா ஸிமாஷ் றாஷி
தரம் :- 5
சது / நூறுல் உதாய் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப்பூக்கள்

* மாணவ உள்ளங்களில்
மனமுவந்து இடம் பிடிக்கும்
மாண்பான ஆசான்களே
பகர்கின்றோம் நன்றிதனை

* கல்விக்கு கலங்கரையாய்
காட்டி நின்றீர் அறிவுதனை
காண வேண்டும் வெற்றி என
கனிவுடனே துணிந்து நின்றீர்

* உங்கள் வழிகாட்டல் தனை
உவகையுடன் ஏற்று நின்றோம்
உறுதியான வெற்றிதனை
ஊருடனே வேண்டி நின்றோம்

* புலமைப் பரிசில் பரீட்சைதனில்
புதுமைகள் பெற்று விட்டோம்
புலமைப் பரிசில் தனை
புனிதமாக ஏற்று விட்டோம்

* இனிமேலும் உம் சேவை
இடைவிடாது தொடர்ந்திட
இறைஞ்சுகின்றோம் இறைவன் தனில்
இனிமையான வேண்டுதலை.

M.R.F. ஸீமா றாஜி
தரம் - 05
சிம்/ தாருல் உலூம் வித்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இன்றைய உலகில் சிறுவர்

சிறுவர் பற்றிய அக்கறை அதிகரித்துவரும் இன்றைய நிலையில் அனைவரும் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கின்றோம். நாம் இன்று எந்தப் பருவத்திலும் இருக்கலாம். ஆனால் அனைவரும் பல பருவங்களையும் தாண்டித்தான் வந்துள்ளோம்.

சிறுவர் பருவத்தைத் தாண்டி வந்தவர்களுக்கு அந்தப்பருவத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் மனதில் பசுமையாக நிலைத்திருக்கும். பொருளாதாரத்தில் நல்ல வசதியான நிலையிலுள்ள குடும்பத்திலும், உணவுக்கே கஷ்டப்படும் ஏழைக்குடும்பத்திலும் அன்பு, பாசம் எல்லோரையும் இணைத்திருந்தது. பெரும் பான்மையான குடும்பங்களின் நிலை இதுதான்.

நாகரிகம் வளர்ந்து வசதிகள் பெருக கல்வியின் பொருட்டும், பெற்றோர்களின் பணி இடமாற்றம் காரணமாகவும், பெற்றோரைவிட்டு பிள்ளைகள் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகத் தொடங்கியது. இப்படியாக சிறுவர்களுடைய நேரடிப் பாதுகாப்பு அக்கறை குறையக்குறைய சிறுவர்களுடைய மனப்பாங்கும் மெல்ல மெல்ல வயது கூடியவர்களுடைய மனப்பாங்கை நோக்கி மாறத் தொடங்குகின்றது. அத்துடன் மனிதனுடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரிக்க குடும்ப வருமானம் போதாமல் சிறுவர்களையும் ஏதாவது தொழிலொன்றில் ஈடுபடுத்தக் குடும்பம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இவ்வாறாகச் சிறுவர்கள் தாங்கள் பருவத்துக்குரிய பாதுகாப்பு, சுதந்திரம், உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட நிலையில் வாழ வேண்டியுள்ளது.

சிறுவயதில் வறுமை, வேலைப் பளு, தண்டனைகளால் ஏற்படும் உடல் பாதிப்புக்கள் ஒருபுறம்; அலட்சியம், பாதுகாப்பின்மை, கேலி ஆகியவற்றினால் ஏற்படும் மனத் தாக்கங்கள் போன்றவற்றால் சிறுவர்களின் எதிர்காலமே சிதைந்து போகின்றது.

சிறுவர்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டபோது 1924 இல் ஐக்கிய நாடுகள் சங்கத்தால் சிறுவர் உரிமைகள் தொடர்பான முதலாவது பிரகடனம் ஏற்படுத்தப் பட்டது. 1948 இல் ஐக்கிய நாடுகள் சபையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் உரிமை தொடர்பான பொதுவான கொள்கையை அங்கீகரித்தது. இக்கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாலும் அதனை அமுலாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. 1989 கார்த்திகை 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்கள் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்றியது இதை இருபது நாடுகள் உறுதிப்படுத்தின.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்கள் உரிமைகள் பற்றிய சமவாயம் என அழைக்கப்படும் இச்சட்ட மூலத்திலே உள்ள 54 உறுப்புரைகள் யாவும் நான்கு முக்கிய தலைப்புகளில் அடங்கும். முதலாவது வாழும் உரிமை, அடுத்து அபிவிருத்தி, அடுத்து பாதுகாப்பு உரிமை, அடுத்து பங்கேற்கும் உரிமை.

முதலாவது சிறுவர்கள் அனைவருக்கும் சுத்தமான உணவு, நீர், வாழுமிடம், சுகாதார வசதிகள் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் உரிமை, ஒவ்வொரு பிள்ளையும் தனது ஆற்றல்களை வளர்க்கக் கூடிய கல்வி வாய்ப்பினைப் பெறும் உரிமை அத்துடன் உடல், உளரீதியான பாதுகாப்பு அதில் அனாதைகள், பெற்றோரைப் பிரிந்தவர்கள் போன்றவர்களுக்கான பாதுகாப்பு உரிமை, அடுத்து பங்கேற்கும் உரிமை, சுயமாகச் சிந்தித்தல் மனச் சாட்சிப்படி நடத்தல், விரும்பிய மதத்தைப் பின்பற்றல் கருத்துக்களை வெளியிடல், சமூகத்திலே விரும்பிய பொறுப்புக்களை வகித்தல் ஆகியன முக்கிய நான்கு தலைப்புக்களில் அடங்குவனவாகும்.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான பல பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தாலும், நடைமுறையில் இவை எவ்வளவு சிறுவர்களுக்கு பயன்படுகின்றது? என்பது சிந்திக்கக் கூடிய இடமாக உள்ளது. இத்தகைய பாதுகாப்புகளும் சரியான வகையில் நடைமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருக்கின்றதா? அன்று செல்வியும் அழுகின்றது.

பல பின்தங்கிய சமூகங்களிலே சிறுவர்களுக்கெதிரான குற்றங்கள் வெளியே தெரிவதில்லை. பல குற்றவாளிகள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கண்டனைகளிலிருந்து தப்பி விடுகின்றார்கள். ஆகவே சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெற்றோர், ஆசிரியர்கள் மத்தியில் முக்கியமாக ஏற்பட வேண்டும். குறிப்பாக பதினெட்டு வயதுக்குக் கீழுள்ள பிள்ளைகளே சிறுவர்களாகக் கணிக்கப்படுகின்றார்கள். இக்காலப் பகுதியில் இவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோரின் மேற்பார்வையில் வாழுகின்றார்கள். இக்காலப் பகுதியில் இவர்களை சரியாக வழிநடத்துவதற்கு பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் சிறுவர் உரிமைகள் பற்றிய அறிவு அவசியம். மேலும் சமூகத்திலே தேவையான மேற்பார்வை உள்ளோர்களல்ல தகவல் தொடர்பு ஊடகங்கள் சிறுவர் பற்றிய நல்ல மனப்பாங்கைச் சமூகத்திலே வார்க்கக்கூடிய வகையில் செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் எம் நாட்டை வளப்படுத்தும் செல்வங்களை உரிய முறையில் பாதுகாத்துப் பராமரிப்பது எல்லோரினதும் கடமையாகும்.

12 A.M. மபாஹிஸ் தரம் 5
கமு/ அல் - அஸ்மான் வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞாபக மறதியான விஞ்ஞானி....

விஞ்ஞான மேதையான எடிசன் ஒரு தடவை நகரத்துப் பெண்கள் பள்ளிக்கூடத்தில் சொற்பொழிவாற்ற ஒப்புக் கொண்டிருந்தார். குறித்த நேரத்தில் அவர் வந்து சேராததைக் கண்ட பள்ளி நிர்வாகிகள் அவரைத் தேடிக் கொண்டு புறப்பட்டனர்.

அவர் எங்கெங்கோ தேடிய பிறகு ஒரு நண்பர் வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

அவரைத் தேடிச் சென்றவர்கள் அவரைச் சந்தித்து பொஸ்டன் நகரத்துப் பெண்கள் பள்ளியில் சொற்பொழிவாற்ற ஒப்புக் கொண்டிருந்ததை நினைவுபடுத்தினார்

"ஆ மறந்தே போய் விட்டேனே! இப்போதே உங்களுடன் வருகிறேன்" என்று எடிசன் புறப்பட்டு விட்டார். பொஸ்டன் பெண்கள் பள்ளியை அடைந்து மின்சக்தி பற்றி மிகவும் அற்புதமாகச் சொற்பொழிவாற்றி ஆசிரியர்களையும் மாணவிகளையும் பிறரையும் மகிழ்வித்தார்.

எடிசன் அப்போது கசங்கிப் போன அழுக்கான உடையை அணிந்திருந்தார். "ஒரு நல்ல ஆடையை அணிந்து வந்திருக்கக் கூடாதா?" என ஒருவர் வினவினார்.

"அது என் தவறல்ல. என்னைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் இந்த விஷயத்தை எனக்கு நினைவுபடுத்தத் தவறிவிட்டனர்" என்று எடிசன் சிரித்துக் கொண்டே கூறினார்.

M.R.M. அஷ்னப்.

12 A.M. மப்ரூஸ் தரம் 5

கமு / அல் - அஸ்மான் வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ந்திரனைக் காப்பாற்றிய மனிதன்.


ரு கருணையுள்ளங்கொண்ட மனிதன் ஒரு நாள் வழியில்
பாய்க்கொண்டிருந்தபோது, அங்கிருந்த கிணற்றைத் தற்செயலாக
ப்பார்த்தான். அப்போது அதனுள்ளே சந்திரனின் நிழல் தெரிந்தது. "ஐயையோ!
ன் கிணற்றில் விழுந்துவிட்டது!" என்று கவலையோடு கூறிய அந்த மனிதன்
ங்கும் தேடி ஒரு நீண்ட கயிற்றை எடுத்து அதன் நுனியில் ஒரு
ருக்கியைக் கட்டினான். கயிற்றின் மறு நுனியை பலமாகப் பிடித்துக்
ண்டு, கொளுக்கி இருக்கும், பக்கத்தை மெதுவாக கிணற்றினுள் போட்டான்.
வாக இறங்கிய கொழுக்கி கிணற்றின் உள்ளே இருந்த ஒரு கல்லில்
றியது. "சந்திரனைப் பிடித்துவிட்டேன்" என்று மகிழ்ச்சியடைந்த அந்த
னிதன் கயிற்றை வேகமாக இழுக்கத் தொடங்கினான். அவன் ஆர்வத்தில்
வு வேகமாக கயிற்றை இழுத்தான். ஆனால், கயிறு இடையில்
ந்துவிட்டது. அந்த மனிதன் பின்னோக்கி எறியப்பட்டான். நிலத்தில்
ந்த வேகத்தில் முதுகுப்புறம் நிலத்தில் மோதி மயக்கமடைந்தான்.

து நேரத்தின் பின் மயக்கம் தெளிந்தான். படுத்திருந்தவாறே
ண்ணாந்து பார்த்தான். அங்கே தங்கத்தட்டாக மின்னும் சந்திரனைக் கண்டு-
டான். முதுகில் அடிபட்ட வேதனையால் முனகிக் கொண்டிருந்தாலும்
தல் பெருமூச்சு விட்டான். அதன் வெளிப்பாடாக "எனது முதுகெலும்பு
றிந்துவிட்டாலும் பரவாயில்லை ஆண்டவனுக்கே நன்றிகள். சந்திரனைக்
ப்பாற்றிவிட்டேன். அதுவே போதும்" என்று எண்ணி மகிழ்ந்தான்.

N. அகிலா ரூப்.
5 A
கமு/சது/றோயல் கனிஷ்ட
கல்லூரி இறக்காமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிவியல் விஞ்ஞானி

பூகம்பத்தை முன் கூட்டியே அறியும் தேரைகள்.

பூகம்பம் வரப் போவதை முன் கூட்டியே அறியும் சக்தி தேரைகளுக்கு உள்ளது என அறிவியல் ஆதாரங்கள் குறிப்புணர்த்துவதாக பிரிட்டனில் உள்ள விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தாலியில் ஓர் ஏரியில் இனவிருத்தி செய்வதற்காக கூடிய தேரைகளிடையே ஆராய்ச்சி நடத்திய பிரிட்டன் திறந்த வெளி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவினர், அருகிலே ஒரு பூகம்பம் ஏற்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாகவே, அந்த ஏரியில் இருந்த தேரைகள் எல்லாம் அங்கிருந்து வெளியேறி விட்டதாகக் கூறுகின்றனர்.

பூகம்பம் ஏற்படுவதற்கு முன் நிலத்திலிருந்து வெளியாகும் வாயுக்களை அடையாளம் கண்டு அத்தேரைகள் வேறு இடங்களுக்கு அவசர அவசரமாக இடமாறியிருக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை பேரழிவு வர இருப்பதை சில விலங்கினங்கள் முன் கூட்டியே அறிந்து விடுகின்றனர்

இந்த விடயத்தை முதன் முதலாக ஆவணப் படுத்திய ஆராய்ச்சிகளில் இதுவும் ஒன்று என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆக்கம்
பு. டிவ்யாயினி
மட்/ செங்கலடி ம.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

* விளக்கு எரிந்து கொண்டே இருக்க வேண்டுமென்றால் தொடர்ந்து எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும்

* எல்லோரும் ஆலோசனை கேட்பார்கள், ஆனால் அறிவாளிகள் மட்டுமே செயல்படுத்துவார்கள்

* கோபத்தை விட்டுவிட்டால் பணிவு தானாகவே வரும்

* தவறு செய்வது மனித இயல்பு. அதை மன்னிப்பதென்பது தெய்வ குணம்

* நம்முடைய எண்ணங்களே வெற்றியின் படிக்கட்டுகளாக அமைகின்றன

* போரை இலகுவில் தொடங்கி விடலாம். அதற்குத் தீர்வு காண்பது கடினம்

பாலர் மேற்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்வம்

ஒரு ஓலைக் குடிசை. அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு வாளியில் தண்ணீர் இருந்தது.

"என்னைப் பார்... என் அழகைப்பார்..." என்று கர்வத்தோடு சிரித்துக் கொண்டு சொன்னது நெருப்பு.

"பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் நண்பா" என்றது தண்ணீர்.





"நான் இல்லாமல் இந்த மனிதனால் ஒன்றும் செய்ய முடியாது. நான் இல்லையேல் அவனில்லை" என்றது நெருப்பு.

"ருசியான உணவைச் சமைக்கவும், சூடான தேநீரைப் பருகவும் நான் அவனுக்குத் தேவை."

"உண்மை தான்" என்றது தண்ணீர்.

"உலோகங்களை வளைக்கவும், நகைகளைச் செய்யவும் நான் அவனுக்குத் தேவை. குளிரில் புகை பிடிப்பதற்குக் கூட நான் அவனுக்குத் தேவை!" என்று சிரித்துக் கொண்டே சொன்னது நெருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மை தான்" என்று மறுபடியும் ஆமோதித்தது தண்ணீர்.

"ரயிலை ஓட்டுவதற்குக் கூட நான் தேவை. என் உதவி இல்லாமல் நீராவி எஞ்சின் எப்படி ஓடும்?" என்று கேள்வி கேட்டது நெருப்பு.

"அதுவும் உண்மை தான்" என்று பதில் சொன்னது தண்ணீர்.

"நான் இல்லாவிட்டால் அவனால் உயிர் வாழ முடியாது நான் தான் அவனுக்கு எல்லாம்" என்று நெருப்பு தன்னைப்பற்றி அடுக்கிக் கொண்டே போனது...

அப்போது –

பலமான காற்று வீசியது காற்றினால் சிறு தீப்பொறி ஒன்று பறந்து ஓலைக் குடிசையின் மீது பட்டது. உடனே குடிசையில் தீப்பற்றியது.

தரையில் அமர்ந்து வலை பின்னிக் கொண்டிருந்த அக் குடிசையின் சொந்தக்காரன் குடிசை தீப்பற்றி எரிவதைக் கண்டான்.

மறுகணம் -

திடீரென இருந்த இடத்தை விட்டு எழுந்து பக்கத்தில் இருந்த வாளியிலுள்ள தண்ணீரை எடுத்தான். எரிந்து கொண்டிருந்த குடிசையின் மேல் தண்ணீரை ஊற்றினான்.

நெருப்பு மெல்ல மெல்ல அணைந்தது. "ம்" என்ற முனகல் ஒலி மெல்ல எழுந்து வந்து கொண்டிருந்தது நெருப்பிடமிருந்து...

"நண்பா" என்று மெதுவாக அழைத்தது தண்ணீர்.

"ம்" என்றது நெருப்பு "மனிதனுக்கு எல்லாமே நான் தான் என்றாய் அல்லவா? இப்போது பார்" என்று சொன்ன தண்ணீர்... "இந்த மனிதன் என்னால் உன்னை அழித்து விட்டான் பார்த்தாயா?" என்றது.

"ம்" என்று முனகியது நெருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பறவையானால்

அன்றொரு நாள் மாலைப் பொழுது வீட்டுக்குள் ஒரே புழுக்கமாக இருந்தது. சிறிது உலாவ நினைத்து வீட்டுத் தோட்டப் பக்கமாகச் சென்றேன். ஒரு மாமரத்தின் கீழே அமர்ந்தேன். அங்கே கீச் கீச் என்ற பறவைகளின் சத்தம் நாலா பக்கமும் கேட்டது. உற்றுப் பார்த்தேன். அவை மாம்பழத்தைக் கொத்திச் சாப்பிட்டது. சந்தோஷமாக இங்கும் அங்கும் பறப்பதைக் கண்டேன். அப்பொழுது எனக்கு "நானும் ஒரு பறவையானால்" என்ற எண்ணம் தோன்றியது. கற்பனை வளர்ந்தது.

நான் ஒரு பறவையானால் வானவெளியில் வட்டமிட்டுப் பறப்பேன். சுவைமிக்க பழங்கள் எங்கும் இருக்கின்றனவா ? என்று மணந்து அறிவேன். இனிய இனத்தவர் எல்லோரையும் அழைத்து விருந்து வைப்பேன். பணம், பொருள், வீடு என்ற எந்தக் கவலையும் இன்றி ஆனந்தமாக ஓடி ஆடி மகிழ்வேன். எங்கு செல்வதனாலும் எவ்வித செலவுமின்றி வண்டி வாகனத்தை எதிர்பார்க்காமல் பறந்தே செல்வேன். எனக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்காது. நினைத்த இடமெல்லாம் சென்று வருவேன்.

உயர்ந்த மலைகள், செழித்து வளர்ந்த வயல்வெளிகளின் அழகிய நீரோடைகள் என்று பல்பல காட்சிகளையும் கண்டு மகிழ்வேன். மாலையானதும் என் சகோதரர்களுடன் மரப் பொந்துகளில் உறங்குவேன். அதிகாலையில் எழும்புவேன். பறந்து செல்ல ஆயத்தமாகின்றேன்.

அம்மாவின் குரல் என் கற்பனையைக் கலைக்கின்றது. வீடு நோக்கி ஓடுகிறேன். எனக்குத்தான் சிறகுகள் இல்லையே.

தி/இ.கி.மி. கோணேஸ்வரா இந்து கல்லூரி

சி. கிகர்சன்
6'C'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

## இழப்பு

பிறப்பின் போது கருவறை இழந்தோம்....

இளமையில் எங்கள்
சிசு நிலையை இழந்தோம்.

முதுமையில் எங்கள்
இளமையை இழந்தோம்.

முதிர்ச்சியில் எங்கள்
முதுமையை இழந்தோம்.

இறுதியில்
இறப்பினில் எங்கள்
பிறப்பினையே இழந்து விடுகிறோம்.

வையத்தில் இழந்தவன்
வறுமையானவன் என்றால்.

இங்கு.
இழப்பின்றி வாழ்ந்தவன் ....... ?

பெயர் - நா. செந்தூரன்

தரம் - 7 D

தி/ இ.கி.மி. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

## சிங்கத்தின் கேள்வி

காட்டு வழியே ஒரு வழிப்போக்கனும் சிங்கமும் சென்று கொண்டிருந்தார்கள். போகும் வழியில் "சிங்கமே! இந்த உலகத்திலேயே வலிமையானவர்கள் மனிதர்கள் தான்" என்றான் வழிப்போக்கன்.

அப்போது "மனிதர்களே! உங்களில் யார் வீரத்துடன் திகழ்ந்தாலும் அவனை சிங்கம் என்றுதானே புகழ்கிறீர்கள். இதிலிருந்தே நாங்கள் தான் வீரமிக்கவர் என்பது விளங்கவில்லையா?" என்று கேட்டது சிங்கம்.

பதில் எதுவும் பேசாமல் அமைதியாக நடந்தான் அவன். இருவரும் சிறிது தூரம் சென்றார்கள். அங்கே மனிதன் ஒருவரின் காலடியில் சிங்கம் ஒன்று பணிந்து கிடப்பதைப் போல சிலை இருந்தது. "சிங்கமே! இந்த சிலையைப் பார். உன்னைப் போன்ற ஒரு சிங்கத்தை மனிதன் ஒருவன் அடக்கி ஆள்கிறான். மனிதர்கள் தான் வலிமையானவர்கள். இப்போதாவது உண்மையை உணர்ந்து கொள்." என்று பெருமையுடன் சொன்னான் அவன்.

"இந்த சிலையை செய்தது யார்? உன்னைப் போன்ற மனிதன்தான். இந்த சிலை செய்யும் கலை சிங்கங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சிங்கத்தின் முன் மனிதன் மண்டியிட்டுப் பணிவாக வணங்குவது போலச் செய்திருப்போம்" என்று பதில் கூறியது.

அவன் கூறவார்த்தையில்லாமல் தலை குனிந்தபடி நடந்தான்.

சி. பிரம்மவக்ஷனா
தி/இ.கி.மி கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, 7E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரும்பொன்று தூணாகின்றது

அருணால் தாங்க முடியவில்லை. வீட்டில் எவ்வளவோ பயிற்சி எடுத்தும் கூட என்னவொரு அவமானம் மேடையில் ஏறிய உடனே வார்த்தைகள் எல்லாம் எங்கோ தொலைந்து விட்டன. உடம்பு முழுவதும் எவ்வளவு படபடப்பு. இந்தா வெளியில் வந்து விடுகின்றேன். பார் என்கின்ற மாதிரி இதயம். நெஞ்சை இழுத்துக் கொண்டு புடைக்கின்றது. வாயைத் திறந்தால் ஊமையை விட மோசமாக நாக்கு "பே-பே" என திக்குகின்றது. ஏன் எனக்கு இப்படியாகின்றது. மேடையில் கால் வைத்தவுடனேயே கால்கள் பரதநாட்டியம் ஆடத் தொடங்குகின்றன. மேடையில் முன் இருப்பவர்களை நிமிர்ந்து பார்த்த கணத்தில் ஏதோ இனந்தெரியாத பய உணர்வுகள் என் கட்டுப்பாட்டையும் மீறி என் மனத்தை சூழ்ந்து கொள்கின்றன. உண்மையிலேயே அருண் மிக மிக குழம்பிப் போனான். அவனுக்குள் வாயால் சொல்லிவிட முடியாத சோகம் வாட்டி வதைத்தது.

எத்தனை பேர்கள் பல் முழுக்கத் தெரிய வாய்விட்டுச் சிரித்தார்கள். எத்தனை பேர் கூச்சலிட்டார்கள், அருணுக்கு உடம்பு முழுவதும் கொதித்தது. என்னை அந்த அளவிற்கு கேவலமானவனை நினைத்து விட்டார்கள். சிரித்தவர்களில் ஒருவரை மேடைக்கு வந்து பேசச் சொன்னால் நான் அவர்களின் விசித்திரங்கள் தெரியும். அப்படியிருக்க என்ன தகுதியுடன் என்னை ஏளனமாக கேவலப் படுத்துகின்றார்கள்.

அருணுக்கு நரம்புகள் எல்லாம் புடைத்தன. தோல்விகள் வரும்போது அந்தத் தோல்வியைக் கண்டு துவழ்ந்து விடக்கூடாமல் எவ்வாறு தோல்வி உண்டாகியது? எந்தப் பிழையினால் உண்டாகியது? எனத் தீர நிதானமாக ஆராய வேண்டும், இதை நடைமுறைப் படுத்தினால் அடுத்த போட்டியில் வெற்றி நிச்சயம். அருணுக்கு எங்கோ ஒரு புத்தகத்தில் படித்தது நினைவிற்கு வந்தது.

"என் பேச்சைப் பார்த்து சிரித்தவர்களின் வாயை என் சிறந்த வார்த்தைகளால் அடைத்து விடுகின்றேன் பார்" மனதுக்குள்ளே சபதம் இட்டுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கூடம் போகவே பயமாக இருந்தது. வகுப்பறைக்குள்ளே சென்றால் மாணவர்கள் எல்லோரும் கேலிக் கணைகளைத் தொடுத்தார்கள். "டேய் மக்கான் அருண் இனி உன்ர அடுத்த பேச்சு எப்படா? நாங்கள் நீ எப்ப பேசுவ அப்ப பேசுவே என்டு நினைத்து நினைத்து தவிச்சுக் கொண்டிருக்கிறோமடா என்று ஒருவன் சொன்னான்.

"சொல்"

வகுப்பறை முழுதும் சிரிப்பொலிகள் நிறைந்து கொண்டன. அருண் தலையைக் குனிந்து கொண்டான். அன்று மாலை அருண் ஒரு முடிவோடு வீட்டிற்கு சற்று தொலைவில் அமைந்துள்ள கடற்கரைக்குப் போனான்.

ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் அந்த அலைகளையே சபையோர்கள் என நினைத்தான். கடற்கரை மணல் மேட்டினை மேடையாகக் கருதினான். கம்பீரமான அந்த மணல் மேட்டில் நின்று அலைகளிற்கு தனது வார்த்தைகளால் நிமிர்ந்து வணக்கம் கூறினான். தயக்கம், உதறல் அந்த பயமும், நடுக்கமும் இன்றி, தடுமாற்றம் இல்லாமல் பேசத் தொடங்கினான்.

தான் பட்ட அவமானங்கள் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வர இன்னும் வேகமாக பேசிக் கொண்டிருந்தான். பேசினான். தன் நாக்கு தோறும்வரை பேசினான். இரண்டு வாரமொ தொடர்ந்து புதிது புதிதாக தமிழில் உள்ள வார்த்தைகளையெல்லாம் தேடித் தேடிப் பேசினான். அவனது ஒவ்வொரு வார்த்தைக்கும் அலைகள் துள்ளிக் குதித்து பாராட்டுவது போல உணர்ந்தான். அவனுக்கு அது மிகுந்த சந்தோசமாயிருந்தது.

அவனை அறியாமல் அவன் பேச்சில் புதுப்புது மாற்றங்கள் புதுப்புது தெளிவுகள். புதுப்புது உயர்ந்த கருத்துக்கள் தெறித்துக் கிளம்பின. அன்றைய கால் உதறல், கையுதறல், நாக்குழறல், பயஉணர்வுகள் எல்லாம் எங்கு தொலைந்தனவோ? தெரியாது.

அருண் இப்போது புதுமனிதனாகிவிட்டான். அவன் மாணவர் மன்றத்தில் பேசும் முறையும் வந்துவிட்டது. அருண் மேடைக்கு வந்தான். எல்லா மாணவர்களும் கூச்சலிட்டு சிரிக்கத் தொடங்கினார்கள். ஆனால் ...... அருண் பேசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

தொடங்கினான், திடீரென்று அந்த மண்டபம் முழுவதும் நிசப்தம், அருணது கணீரென்ற குரலைத் தவிர வேறொரு சத்தமுமில்லை எல்லோரும் வாயைப் பிளந்து கொண்டார்கள்.

அருண் தனக்கு வழங்கப்பட்ட தலைப்பிற்கு பொருத்தமாகப் புயலெனப் ~~பேசினான்~~ பேசிக்கொண்டிருந்தான். அவனது உடலிலே குரலிலோ எந்தப் படபடப்பும் இல்லை. நாக்கு தெளிவுடனே செயற்பட்டுக் கொண்டிருந்தது. எத்தனையோ புதிய உயர்ந்த கருத்துக்கள். அவற்றை உரைக்கின்ற சிறந்த நுணுக்கம் ஆசிரியர்கள் கூட வியக்கக் கூடிய வகையில் பேச்சு அமைந்திருந்தது.

அருண் கிட்டத்தட்ட இருபது நிமிடம் வரை பேசியிருப்பான். அது அவனுக்கு கொடுக்கப்பட்ட நேரத்தினை விட அதிகம். ஆனால் மண்டபத்தில் எந்தவொரு சத்தமும் இல்லை அனைவரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அருண் அது வரை எவருமே நிகழ்த்தாத சாதனை ஒன்றை நிகழ்த்தி பணிவுடனே மேடையில் இருந்து இறங்கினான். உடனே அந்த மண்டபம் என்றும் காணாத கரகோஷ ஒலி -யால் நிறையத் தொடங்கியது.

——— x ———

ஆக்கம்
தரம் -06 B
பி. நிருத்திகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியா ?

வஞ்சியே
வாட்டமேன்
வாலிபர் வாங்கும் வரதட்சணையால்
வந்ததிந்த வாட்டமோ ?
வரதட்சணை உனைமட்டும்
வரதட்சணை வாட்டுதோ ?
வரதட்சணை இன்றி வாழ்வு தர
உன் சோதரன் நீ என்றால்
வாக்குறுதி நான் தாறேன்.

பேசு பெண்ணே
உனக்கொரு நியதி
ஊருக்கொரு நியதியா ?
நீதியின் முன் சகலரும்
சமன் தானே

ஆக்கம்:-
சி. நிஷாந்தினி
தரம் - 07

" வாழ், வாழவிடு முறையில், வாழ்க்கையின் நியதி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பண்பும் சகிப்புத் தன்மையுமே "

- மகாத்மா காந்தி -

தி/ சாம்பல்தீவு த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விரும்பும் கவிஞர் – பாரதிதாசன்

உலகச் செம்மொழிகளில் உயர்தனிச் சிறப்புடையது நம் தமிழ்மொழி. அமிழ்தந்தனை தமிழ் மொழியில் சுவைத்தால் அழியாத கவிதைமழை பொழிந்த கவிஞர் பலர் உள்ளனர். அவர்களுள் புதுவை தந்த புரட்சிக்குயில் பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவர். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று முழக்கமிட்டவரும் இவரே. அவரே நான் விரும்பும் நற்றமிழ்க் கவிஞராவார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டை பெருமைப்படுத்திய பாரதியின் எண்ணங்களைத் தம் இதயத்தில் ஏற்றியவர். அதன் பயனாக கனகசுப்புரத்தினம் என்பதை விடுத்து பாரதிதாசனாக மாறியவர். பாரதி மீது கொண்ட பாசமே அவர் பாரதிதாசன் எனப் பெயர் சூடிக் கொள்ளக் காரணமாகும்.

பாரதிதாசன் தமிழே வடிவானவர். தமிழின் உயர்வுக்குப் பாடியவர். துறைதோறும் தமிழ் வளம்பெற நலம்பெற வழிகாட்டியவர். தமிழை உயிராய் உணர்வாய் உழைப்பின் வினையாய்க் கலந்துணர்ந்து கவிதை பாடியவர். பாரதியின் தமிழும் எளிய தமிழ். கவிதைகளில் படைத்ததன் மூலம் சாதாரண மக்களும் கவிதையின் சுவையறிய வழி செய்தவர். மக்கள் தமிழில் மாண்புறு கவிதைகள் பாடினார்.

தமிழ்ச்சொல்லின் உயர்வினை அவனியில் தொண்டாற்றினார். தமிழ் வழிபாடு செய்தார். வழியற்ற தமிழ் அடியார் நிலைமையும் நோக்கினார். வாழையடி வாழையாகத் தமிழ் கவிஞர் ஆனார். இன்று பெருமையென்றால் அப்பெருமை பாவேந்தர் பாரதிதாசனுக்கே உரியதாகும்.

பாவேந்தரின் சொல்லும், சொல்லாட்சியும், நடையும் உத்திகளும் உவமைகளும், உருவகங்களும், அவருக்குப் பின் தோன்றிய கவிஞர்கள் அனைவரையும் பாதித்துள்ளன என்றால் அது மிகையல்ல. பாவேந்தரின் கவிதை பயணம் நெடியது. பெரியது. அவருடைய தமிழ்ப் பணிக்கு ஈடில்லை. பாரதிதாசன் தமிழுக்குப் புதிய வழி காட்டினார். ஒளி கூட்டினார். அவர் காட்டிய வழியில் புத்தொழில் புரியும் புத்துணர்வும் பெற்றுப் புதியன படைத்து வளர்கிறது தமிழுலகம். பாரதி நாட்டு விடுதலைக்கு உரமூட்டினார். பாரதிதாசனோ சமூகவிடுதலை பொருளாதார விடுதலை தொழிலாளர் விடுதலை அனைத்தும் தொகுத்து பாடினார். அவர் படைத்த கவிதைகள் அழியா அழகுடையன. அழகின் சிரிப்பு, குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், இளைஞர் இலக்கியம், பிசிராந்தையார், தேனருவி, எதிர்பாராத முத்தம், பாரதிதாசன் கவிதைகள் ஆகிய நூல்கள் அவர் தம் புகழ் பாடும் படைப்புகள். பாவேந்தர் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கியுள்ளது தமிழக அரசு. இதன் மூலம் பட்டிதொட்டி எங்கும் பாவேந்தர் கவிதைகள் பாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்களிலும் அவரது பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. கவிதை உலகில் மட்டுமன்றி திரையுலகிலும் அவர் பெயர் பொறித்துள்ளார். பாவேந்தர் தமிழ் வளர்ச்சியை கருத்தாகக் கொண்டவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டிய பணிகளைக் கூறும் போது தமிழில் நூல்கள் பல தோன்றிட வேண்டும். எளிய நடையில் அவை அமைதல் வேண்டும். இவையே கவிஞரின் இலட்சிய வேட்கையாகவும் மிளிர்கின்றது.

"எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்"

இவ்வும் கவிதை நமது கடமையினை நன்கு வலியுறுத்துகிறது. ஒரு தமிழனுக்கு புகட்டப்படாமல் போகுமானால் அதற்கு அனைத்து தமிழர்களும் வெட்கி தலை குனிய வேண்டும். என நமக்கு இடித்துரைக்கும் கவிஞரின் கருத்து சிந்திக்கத்தக்கது. சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த பாவேந்தர் பாடிய உணர்ச்சிகரமான பாடல்கள் பலபேர் உள்ளங்களை உணர்ச்சி வசப்படுத்தும் சிறப்புடைத்தன.

பாவேந்தரின் பெயர் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நின்று நிலைக்கும் என்பது திண்ணம். கவிஞரின் வழி நின்று கன்னித்தமிழ் வளர தமிழினம் தலைநிமிர உழைத்திடல் நமது தலையாய கடமையாகும்.

பாவேந்தர் நாமம் வாழ்க! தமிழ் வாழ்க!

ஆக்கம்
P. பிரியந்தர்சன்
தரம் → 07

தி| சாம்பவி தீவு 5.10.21.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கு

கொக்கு பாரு கரையிலே
காத்திருக்கு வெயிலிலே
வெதிக்கிருக்க கரையிலே
மீனுக்காக புரியல

நீரை விட்டு வெளியிலே
மீனும் துள்ளி அருகிலே
கொத்திச்சி லபக்கென
மீனை கொக்கு வாயில

மக்கு மீனு கொக்குடன்
மல்லு கட்ட முடியல
ஏமாந்து மீனுதான்
இரையாகிப் போனதாம்

காத்திருந்து கடமையை
கச்சிதமா முடிக்கணும்
நேரம் பார்த்து
நெனைச்சதெல்லாம் முடிக்கணும்

[illegible]

H. நஸீகா
ஆண்டு -6B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் எமது கடமை, ஏனென்றால் எமக்கு மட்டும் மல்லாது. எமது எதிர் கால சந்ததினர்களுக்கும் பயன்படும். எனக் கருதி நாம் பாது காக்க வேண்டும். எமது இயற்கை வளங்களை நாம் தான் பாது காக்க வேண்டும் அண்மைக் காலங்களில் டெங்கு, மலேரியா போன்ற பல நோய்கள் ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம் மரங்களை வெட்டி இயற்கை வளங்களை அழிப்பதனால் தான் ஏற்படுகிறது.

எமது நாட்டில் எவ்வளவு இயற்கை வளங்கள் காணப்படுகின்றது. அதைத் தான் பாது காக்க வேண்டும். உதாரணமாக காடுகளை எடுத்து கொண்டால் காடுகளை அழிப்பதனால் மண்சரிவு, விலங்குகளுக்கு உறைவிடம் அற்றுப் போகிறது. மழைவீழ்ச்சி இழக்கப்படுகின்றது இவை காடுகளை அழிப்பதனால் ஏற்படும் விளைவுகளாகும்.

இப்படி ஒவ்வொரு வளங்களையும் எடுத்துக் கொண்டால் இதனை அழிப்பதனால் பிரச்சினைகள் ஏற்படுகிறது. அடுத்து உதாரணமாக நீரை எடுத்துக் கொள்வோம். நீர் நமக்கு எவ்வளவு பயன் தெரியுமா? இப்பொழுது வெயில் அதிகமாக இருப்பதனால் குளம், ஆறுகள், ஆகியவை வற்றி விடுகின்றது. நீரைப் பெறுவது மிகவும் கஸ்டமாக உள்ளது ஆதலால் குடிக்கவும் நீர் இல்லாமல் கூட போகிறது. ஆகையால் நாம் நீர் வளங்களை வீண் விரயமாக்காமல் பயன் படுத்த வேண்டும்.

ஆகையால் இயற்கை வளங்களை பாது காக்க வேண்டும். இயற்கை வளம் நமக்கு இறைவன் தந்த அருட் கொடை இனிமேலாவது இயற்கை வளங்களை பாதுகாத்து பயன் பெறுவோமாக.

கிண்/குறிஞ்சாக்கேணி மகளிர் ம.வி.

சு. பாத்திமா லீனா
தரம் – 7A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள் ஓநாய் T/K1/TB Jaya U

ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டி ஒன்றை சமர்த்தியமாகத் திருடிக் கொண்டு சென்றது. ஆட்டுக்குட்டி எவ்வளவு முயன்றாலும் அதனால் தப்பித்துச் செல்ல முடியவில்லை. ஓநாயோ ஆட்டுக் குட்டியை விடுவதாக இல்லை அப்போது ஆட்டுக் குட்டிக்கு திடீர் யோசனை ஒன்று தோன்றியது. உடனே அது ஓநாயிடம்.

"ஓநாயாரே. எப்படியும் என்னை நீங்கள் கொல்லத்தான் போகிறீர்கள். சாவதற்கு முன்னால் எனக்கு ஆசை ஒன்று இருக்கிறது. அதை நிறைவேற்றி வைப்பீர்களா" என்று பரிதாபமாக கேட்டது. ஓநாயும். "சொல் முடிந்தால் கட்டாயம் செய்கிறேன் என்றது.

A.W. நிஸ்மானா 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் நன்றாகக் குழல் ஊதுவீர்களா-மே! நான் உங்கள் குழல் ஓசையைக் கேட்டுக் கொண்டேசாக விரும்புகின்-றேன் என்றது ஆட்டுக் குட்டி.

"இதோ ஊதுகிறேன் என்று கூறிய ஓநாய் அருகில் வைத்திருந்த குழலை எடுத்து ஊதத் தொடங்கியது. ஓநாய் ஊதுவதை நிறுத்தும் போதெல்லாம் இன்-னும் கொஞ்சம் ஊதுங்கள். உங்களது இன்ப கானத்தில் நான் நனைகிறேன். என்று ஆட்டுக் குட்டி கூற ஓநாயும் ஊதிக் கொண்டே இருந்தது.

இதற்கிடையே ஆட்டுக்குட்டியைக் காணாத மேய்ப்பவன் வேட்டை நாய்களுடன் குழல் சத்தம் கேட்கும் திசை நோக்கி வந்து சேர்ந்தான். அவனை-க் கண்ட ஓநாய் ஆட்டுக்குட்டியை விட்டு விட்டு தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடியது.

A.W. றில்வானா 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனைகளை போக்கி விடு.

என்னையே நான் தொலைத்து. என்னை எங்கென்றோ
தேடுகின்றேன். எங்கில் நான் அலைந்து - இதே இடத்தில் உழலுகின்றேன்.

பாரினிலே பாவியானேன் - நான் பார்ப்போர்க் கெல்லாம்
கேலியானேன். உடலெட்டு ஆவியொடு - என் குருதியிலே
குளிக்கக் கண்டேன்.

என்னை நானிழந்தேன் - உன்னை எங்கென்றோ தேடுகின்றேன்.
உன்னிடத்தில் கையேந்தி - உயர் விண்ணப்பம் நான் செய்தேன்.

அத்தனையும் நிராகரித்தாயே - எனை அனாதைபோல் தனியே விட்டாய்
கேள்விகள் நீ கேட்டாய் - அதில் கேவலமாய் நானிருந்தேன்.

நானோ ஏன் தொலைந்தேன் - எந்த ஒரு திசையில் நான்
தொலைந்தேன்? பட்டப் பகலில் நான் தொலைந்தால்
பல பாவிகளாக மாறிப் போனேனா?

மாலைப் பொழுதென்றில்லை - நிற மாற்றத்து எஃதென் மலோ?
வெண்ணிலா பருகிய - வாழ் வெட்டை வெளியிலா?

எங்கு நான் தொலைந்தேன் - என்று என்னை நான் வெறுத்து
உன்னிடத்தில் ஓடி வந்தேன்.. என்னை உன்னிடத்தில் வேண்டி
நின்றேன்.

இரக்கங்கள் புரிந்தவா - நான் எங்கிருந்து எங்கு சென்றேன்.
இரு விழியும் இருட்டியா? அதி கடமாறி நான் வீழ்ந்து
விட்டேன்.

என்னை நாசனரும் ஏகாந்தம் நீயானாய் - தீதால்
எரியுண்ட மனம் ஓதும் வேதாந்தம் நீயானாய்.
அல்லும் பகலும் என் அர்ச்சனையும் நீயானாய்
அருமை நான் கேட்கிறேன்.

T/ TB Jaya vid
A. [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ | அலி இர்பான் 6-21. இமாம் தாவி

# பெற்றோரை பேணுதல்

உலகத்தில் எவரும் தாய் தந்தை இன்றி பிறப்பதில்லை. ஒரு குழந்தை பிறந்தாலும் அதனை பெற்றோர்கள் எவ்வாறு பேணி வளர்கிறார்களோ! அதே போன்று தான் நாமும் அவர்களை முதியவர்கள் ஆன போது பேண வேண்டும்.

பிள்ளை ஒன்று பிறந்து விட்டால் பெற்றோர் அடையும் சந்தோசத்திற்கு அளவே இல்லை மேலும் அந்தக் குழந்தையை சிறப்பாக வளர்த்து. சமூகத்தில் சிறந்த பிரஜையாக ஒழுக்க முள்ளவனாக வளர்கிறார்கள்.

தனக்கு வாழ்வளித்த பெற்றோருக்கு நன்றி கடன் செலுத்த வேண்டிய கடமை. ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு. ஆனால் அநேக பிள்ளைகள் தமது பெற்றோரை வயது போன காலத்தில். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதுமில்லை. அவர்களையும் மதிப்பதுமில்லை.

இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு மதமும், சமயமும் தனது பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும் படி கூறுகின்றது. எமது மார்க்கமான இஸ்லாம் பெற்றோர்கள் பற்றி அதிகமான கருத்துக்களை கூறியுள்ளது. அதாவது படைத்த இறைவனுக்கு அடுத்த படியாக தமது பெற்றோர்களுக்கே கட்டுப்படும்படி இஸ்லாம் கூறுகின்றது.

மேலும் பிள்ளைகள் தமது பெற்றோர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என்றும் அவர்கள் வயோதிபத்தை அடைந்தால் அவர்களுடன் எவ்வாறான முறையில் நடந்து கொள்ள வேண்டும். என்றும் அல் குர்ஆனும் - அல் ஹதீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் கூறுகின்றனர், எனவே ஒவ்வொரு பிள்ளையும் தமது பெற்றோர்கள், முதியவர்கள் ஆனா போதும் அவர்கள் மனம் நோகாமல் அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்காக இவ்வுலகத்தில் வாழும் போதும் மரணமான பின்பும் அவர்களுக்காக பிரார்த்திக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எவ்வாறு அன்பாக பராமரித்தார்களோ நாமும் அவர்களை [illegible] அவ்வாறு சிறு குழந்தைகள் பேணி பராமரிக்க வேண்டும். அவ்வாறு பராமரிப்பது ஒவ்வொருவர் மீதும் உள்ள கடமை

" மனிதனே நீ எனக்கும் உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்து

ஆக்கம்:- m. றிப்னா வாஞு
தரம்:- 7B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாய் நீயும் கற்று விடு.....!

ஆண்டின் இறுதி தேர்வப்பா
அண்மையில் வந்து நிற்குதப்பா
வேண்டிய பாடம் அனைத்தையுமே
விரைந்து படித்து முடியப்பா

சோம்பல் இன்றி உழையப்பா
சொத்து போன்றது படிப்பப்பா
தேம்பல் இன்றிச் சிரிப்பதற்கு
தேர்வில் வெற்றி வேண்டுமப்பா

கண்ணும் கருத்தும் பாடத்தில்
கனிவாய் நிறுத்தி படியப்பா
பின்னால் வருவது வெற்றியப்பா
பெறுவது புகழின் முடிவப்பா

காலம் பொன்னில் சிறந்த தெனக்
கண்டார் நமது பெரியோர்கள்
காலம் கடந்து போவதன் முன்
கருத்தாய்ப் பாடம் படியப்பா

ஆக்கம்:- M. சமீஹாபானு
தரம்:- 7B

தி | அலி இர்பான் 6.27.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந். நஜீலா மகளிர் ம.வி.

# கலங்காதே மனமே ...!

ஆரார் உன்னை தூற்றினார்கள் - என்றெண்ணி
தூங்கி விடாதே தோழியே !
வீழ்ந்து விடுவோம் என்றெண்ணியே - இவ்
உலகிற்கு நீ வாழ்ந்து காட்டு - வெற்றி நிச்சயம்

சோதனையெல்லாம் வேதனை என்றெண்ணினால் - நீ
சாதனை படைப்பது எப்போது
வேதனைகளை உதிரித்தள்ளு - உன்
சாம்பல் கூட நாளை சாதனை படைக்கும்.

நம்பிக்கை வாழ்வின் அச்சாணி. போட்டி மிக்க
உலகம் இது போராடி வெற்றி பெறு
நாளைய நிலையை எண்ணி இன்றைய - உன்
சந்தோஷத்தை அழித்து விடாதே!

சிந்தித்து செயல்படு நாளை நமதாகும்
வாழ்வு வளமாகும்
நாளைய எதிர்காலம் உன் கையில்
நாளிலும் உன்னைப் போற்றி வாழ்த்திடட்டும்

N.றோசி 07B

*"குட்டித் திமிங்கலம் ஒரே வருடத்தில் தன் தாயின் உருவத்திற்குச் சமமாக வளர்ந்து விடும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கத்தில் நரி.

நரி ஒன்று தாகத்தால் தவித்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்வது?

தண்ணீரைத் தேடி அலைந்தது. தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்து, கிணற்றின் அருகே சென்றது. கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி வாளியில் தாவி ஏறி அமர்ந்தது.
உடனே வாளி விரைவாக
கிணற்றின் உள்ளே சென்றது.
நரி வயிறு நிறையத் தண்ணீரைக்
குடித்தது.

தாகம் தணிந்த பின் மேலே பார்த்தது.
எப்படி வெளியேறுவது என்று
யோசிக்கத் தொடங்கியது.

மேலே இருந்து கயிற்றை
இழுத்தால் தானே நாம் மேலே செல்ல முடியும்.
என்ன செய்வது?
நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம்
தோன்றியது. அந்த நேரம் பார்த்து கிணற்றின்
அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிணற்றின்
உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக்
கண்டது. "அடடா! நரியா! உள்ளே என்ன
செய்கிறாய்?" எனக் கேட்டது.

நான் இப்போ சொர்க்கத்தில் இருக்கிறேன்
என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, அது
எல்லாம் நடக்கிறார்கள் என்றது நரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறு முனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி சரசர வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போ நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது.

நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்து நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்கு போகிறேன். என்று சாடைக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மீது தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய்!

"ஒரு செயலை செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும் அல்லவா"

ஆக்கம். ஜே. டிலக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலம் போற்ற வாழ்க

சின்னஞ் சிறிய சிட்டுகளோ
சிரிக்கும் மழலை மொட்டுக்களோ
கன்னித் தமிழ் இசை மெட்டுக்களோ
கரும்புகள் சேர்ந்த கட்டுகளோ

அம்மா தருவாள் அன்பைத்தான்
அப்பா தருவார் அறிவைத்தான்
ஆசான் கொடுப்பார் ஆற்றல் தான்
அகிலம் உன்னைப் போற்றும் பார்

வானில் மேக மழைபோல
தேனின் இனிய சுவைபோல
தென்றல் வழங்கும் குளிர்போல
என்றும் வாழ்க மகிழ்வுடனே

ஆக்கம்

த. புவனேசன்

மூ/ கடற்கரைச் சேனை அ.த.க.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபி பாலைவனம்

ஆசியாவின் மிகப் பெரிய பாலைவனமான 'கோபி' உலகில் உள்ள பாலைவனங்களில் ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது. இது தென் மொங்கோலியாவாலும், (வடக்கு) வட சீனாவின் பகுதியாலும் சூழப்பட்டுள்ளது. மொங்கோலியப் பேரரசின் வரலாற்றுக்கு உட்பட்ட பகுதியாக இப்பகுதி இருப்பதுடன் முக்கிய நகரங்களையும் தன்னகம் கொண்டுள்ளது. தென் மேற்கிலிருந்து தென்கிழக்காக 1610 கிலோ மீற்றர் வரை பரந்துள்ள இப்பாலைவனம் வடக்கிலிருந்து தெற்காக 800 கிலோமீற்றர் நீளத்தையும் கொண்டுள்ளது. கோள வடிவைப் பெறும் இந்தப் பாலைவனம் 12,95,000 சதுர கிலோ மீற்றர் அளவிலான மரதேசத்தையும் தன்னகம் கொண்டுள்ளது. கோபி பாலைவனம் மழை மேகங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும், இங்கு மழைப் பொழிவு கிடைப்பதில்லை.


சாதாரண குளிர் பாலை நிலமாக இருப்பதுடன், குளிர் காலத்தில் வெப்பம் செல்சியஸ் 40 இற்கும் 0 இற்கும் இடைப்பட்டதாக இருக்கும் வெப்ப காலங்களில் வெப்பம் 40 அளவில் காணப்படும் இந்த பாலை வனத்தில் பனி படர்வது ஒரு சாதாரணமான விடயமாகவே உள்ளது. சில சமயங்களில் மணல் மேடுகளை மூடி பனி படிவதும் உண்டு. இங்கு சற்று வடக்குத் திசையில் கடல் மட்டத்திலிருந்து 910 – 1520 மீற்றர் உயரமான பீட பூமியும் காணப்படுகின்றது. இங்கு வருடாந்த மழை வீழ்ச்சி 7 அங்குலம் மட்டுமேயாகும். சிறிய கூம்பு வாலினைக் கொண்ட மான்கள், மரைகள், ஒட்டகங்கள், மொங்கோலியக் காட்டுக் கழுதைகள் என்பன காணப்படுகின்றன. அத்துடன், பற்றைத் தாவரங்களும், ஆங்காங்கு புல் வெளிகளும் காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி பாலைவனம் மணலால் மாத்திரம் நிறைந்த பாலைவனமாக இல்லாமல் மலை மேடுகளையும் பீட பூமிகளையும் குன்றுகளையும் கொண்டதாக அமைந்துள்ளது .

அ. அஸ்கா
தி/ மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி
07A









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயானவள்

ஐயிரு மாதங்கள் என்னைச் சுமந்து
கருத்துடன் என்னைக் காத்து
பாரினுள் எனை ஈன்றாள்
என் தாயவளே!



மேதினியில் பாசமுடன் எனை
வளர்த் தரவணைத்து
ஊட்டச் சத்து தாலாட்டி
உவகையுடன் எனை வளர்த்தாய்!

தத்தி நடை போடுகையில்
திடமாய் மழலை மொழி மொழிகையிலே
கொஞ்சிக் கொஞ்சி வலுவளித்தாய்
என் தாயவளே!

கல்விக் கூடம் நான் சென்று
என்றும் கல்வி பயின்றிடவே
துணையாய் அவளும்
கண் விழித்திருப்பாள்!

உலகில் நானும் உத்தமனாய்
வாழ்ந்திட உயர் வழிகாட்டி
ஞான ஒளியாய் நானும் வாழ்ந்திடவே
என்றும் நல்வழி காட்டி நிற்பாள்!



வே. வேணுகா
7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன்?

2. தலையை சீவினால் தாளிலே நடப்பான்?

3. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக்கொண்டிருப்பான்?

4. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல்?

5. உரசினால் உயிரை விடுவான்?

6. கழற்றிய சட்டையை திரும்ப போடமாட்டான்?

7. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும் வாசனையை தருவது?

8. நீ செய்வதை நான் அப்படியே செய்வேன் நீ சொல்வது எதையும் நான் செய்யமாட்டேன் நான் யார்?

9. அகத்து உரோமம் புறத்து தசை அது என்ன?

10. வயத்திலே விளையாப்பூ அகத்திலே விளையும் பூ நயத்திலே விளையும் பூ நாட்டோர்கள் நம்பும் பூ கெத்திலே பூக்கும் பூ கிட்டார் கொண்டாடும் பூ காயிலே பூக்காப்பூ அது என்ன பூ?


11. அண்ணன் தம்பி இரண்டு பேர் தம்பி ஒரு சுற்று சுற்றும் போது அண்ணன் பன்னிரண்டு சுற்று சுற்றுவான்?

1. காற்று
2. பென்சில்
3. பூமி
4. முட்டை
5. தீக்குச்சி
6. வாழைப்பழம்
7. சாம்பிராணி
8. நிழல்
9. மூக்கு
10. அன்பு
11. கடிகாரமுட்கள்


தி.நிலோஜினி 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வு



வழமைபோல் அன்றும் ரவி கண்ணனுக்கு அரசாங்க வைத்தியசாலையின் கட்டிலில் யன்னலருகே இருக்கின்ற தனது கட்டிலில் படுத்திருந்தபடியே யன்னலினூடாகத் தெரிகின்ற காட்சிகளை கண்மாற்றுச்சிகிச்சைக்காக வந்திருக்கின்ற கண்ணனுக்கு கூறிக் கொண்டு இருந்தான். ரவி வைத்தியசாலைக்கு வந்து இன்றுடன் எட்டு நாட்கள் ஆகின்றன, கண்ணன் இரு நாட்களுக்கு முன்னர்தான் இங்கு வந்தான். நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ரவி விபத்து ஒன்றிலே தன் இரு கால்களையும் இழந்துவிட்டான். இருவருக்கும் குடும்பம் என்று சொல்ல யாருமே இல்லையாதலால் தனித்திருக்கின்ற இருவரும் கதைத்துக் கொண்டிருப்பதனால் அவர்களின் பொழுது வைத்தியசாலையில் கழிகின்றது.



கதைப்பதற்கு தனிப்பட்ட இடங்கள் ஏதும் இல்லை என்பதால் ரவி யன்னலினூடாகத் தெரிகின்ற அந்த சிறிய ஒழுங்கையிலுள்ள மூன்று வீடுகளின் அங்கத்தவர்கள் என்ன செய்கின்றார் எனக் கிஷோனுக்கு கூறுவதும். கண்தெரியாத கிஷோன் இதனைக் கேட்பதுமே வழமையாகி விட்டது. அவர்கள் கதைப்பது அவர்கள் யாருக்கும் கேட்க வாய்ப்பில்லை. ஏனென்றால் இவர்கள் இருப்பது வைத்தியசாலையின் 2ம் மாடியில்.

அன்று காலையில் "வாசுப் பையனுக்கு அவனின் அப்பா அடிக்கின்றார். அவன் பாடசாலைக்கு போக மாட்டேன் என்று அடம்பிடிக்கின்றான்," என்று ரவி கூறுகின்றான். அதற்கு கிஷோன் "இன்றும் அடிவாங்கியே படிப்பதான் இவன் போகப்போகின்றான்." என்று சொல்ல அதன் படியே அப்பாவின் அடிதாங்காமல் பையன் பாடசாலைக்கு புறப்படுகின்றான். என்பதாக ரவி கூறினான். பக்கத்து வீட்டு மொட்டை மாமா [இவர்களுக்கு பெயர் தெரியாததினால் ஆட்களின் உருவத்திற்கு ஏற்ப பெயர் வைத்துக் கதைக்கின்றார்கள்] தனது மரக்கறி விற்கும் தள்ளு வண்டிலை காலை 11 மணித்தியாலமாக புதுப்பார்ப்பதும் துடைப்பதுமாக இருக்கின்றார் என ரவி கூறினான்.

பின்னர் இவர்களின் வீட்டுக்கு முன்னாலுள்ள பரிமளமும் அவரின் மனைவியும் காலைத் தேனீரினை தமக்குள்ளே ஏதோ கதைத்தபடி குடிக்கின்றார்கள். எனக் கூறுகின்றான். இதற்கு கிஷோன் "மொட்டை மாமாவின் பையனும் பெண்ணும் ஏன் இன்றைக்கு பாடசாலைக்குப் போகவில்லையா?" எனக் கேட்க "இன்னும் அவர்கள் வெளியே வரவில்லை" எனக் கூறினான் ரவி. 10 நிமிடத்திற்கு பிறகு மரக்கறி மாமா தன்வீட்டுக்குள்ளே செல்லவும் பிள்ளைகள் இருவரும் பாடசாலைக்கு ஆயத்தமான படியே வெளியே வரவும் சரியாக இருந்தது. மாமா பிள்ளைகளைத் தூக்கி முத்தமிட்டு அனுப்புகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன ரவி சரியா? ஆப்பரேசனுக்கு நீங்க ரெடியா?” என்று கேட்டபடியே வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் வரவே “ஓம் நான் ஆயத்தமாகியே இருக்கிறேன். போவோம்” என்று கூறியபடியே கணேசனிடம் விடைபெற்று தள்ளுவண்டியில் ரவி ஊழியர்கள் உதவியுடன். செல்கின்றான்.

மதியம் ஒரு மணியளவில் தாதி கணேசனுக்கு இன்று உங்களுக்கு இரவு 8.00 மணிக்கு கண்மாற்றுச்சிகிச்சை நடைபெறும். டொக்டர் கூறியுள்ளார் அதற்கு தயாராக இருங்கள் எனக் கூறிச் சென்றாள்.
ஆப்ரேசன் முடிந்து 5ம் நாள் கண்ணிற்குக் கட்டை வைத்திய நிபுணர் அவிழ்க்கவே கணேசன் மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தான். தற்போது கண் தனக்கு நன்கு தெரிகின்றது. எனக் கூறினான் கணேசன். “சரியா அப்படியா! நன்று நீங்கள் இன்று இங்கிருந்து வெளியேறலாம்.” எனக் கூறியபடியே நிபுணர் செல்கிறார். கணேசன் மெதுவாக எழுந்து ரவி படுத்திருந்த கட்டிலருகே சென்று உட்கார்ந்து யன்னலின் ஊடாக தனது இறந்துபோன நண்பன் கண்ணால் கண்ட காட்சிகளை தானும் பார்க்க வேண்டும் என எண்ணியபடியே யன்னலைத் திறக்கின்றான். அவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை யன்னலின் அருகே சிறிது இடம் விட்டு வைத்தியசாலையின் பெரிய கட்டடம் ஒன்றைக் கண்டான்.


அப்போது தாதி “இந்தாருங்கள். உங்கள் நண்பன் உங்களுக்குத் தந்து விட்டுப் போன கடிதம்” எனக் கூறி கடிதம் ஒன்றைக் கொடுத்தாள். அதனைப்பிரித்துப் படித்தான் “அன்புநண்பன் கணேசனுக்கு நான் தப்பமாட்டேன் என்று எனக்குத் தெரியும். அதனால் நான் இறந்ததும். எனது கண்களை உனக்குப் பொருந்துமாயின் பொருத்திக்கொடுங்கள் எனஎனது சம்மதக்கடிதத்தினை வைத்தியசாலையில் கொடுத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு யாரின் கண்கள் பொருத்தப்பட்டுள்ளன என
நான் அறிவதற்கு வாய்ப்பில்லை என்பது உனக்குத்
தெரியும் எவ்வாறாயினும் எனது கடைசிக்காலத்தில்
உன்னுடன் கதைத்துக் கொண்டிருந்தது எனக்குச்
சுகமளித்திருந்தது. எம்மிடையேயான உரையாடல்
சுவாரஸ்யமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தி
னாலேயே என் மனம் போனபடியே உனக்குக்கதை
கூறினேன். மீண்டும் சந்திக்கலாம் அடுத்த ஜென்மம்
ஒன்று இருந்தால் இப்படிக்கு நண்பன் ரவி" என
எழுதப்பட்டு இருந்தது.

கடிதத்தினை வாசித்த "ரவியின்"
இரு கண்களிலும் இருந்து "கண்ணனுக்கு" நீர்த்துளி
கடிதத்தின் மீது விழுந்தது. கண்ணன் கட்டிலில் இருந்
து எழுந்தபடியே மேற்கொண்டு ஆக வேண்டிய விடய
ங்களை பார்ப்பதற்காக ஈரமான ரவியின் கண்களுட
-டன் அவனின் எண்ணங்களால் நிரம்பப்பட்ட
மனதுடன் தடுமாறியபடியே நடந்தான்.



மட் / கருவாங்கேணி விவேகானந்தா வி
தி. நிரோஜினி
7A







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்றைய உலகில் இணையம்

நம் அன்றாட வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு தகவலாகும். ஒரு தகவலை ஒருவரிடம் இருந்து மற்றவருக்கோ அல்லது ஒருவருடம் இருந்து ஒரு கூட்டத்திற்கோ தெரிவித்தல் தகவல் தொடர்பு என அழைக்கப்படும். அத் தகவல்களை கொண்டு செல்லும் சாதனங்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் எனலாம்.

மனிதன் புதிது புதிதாக தகவல்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையவன். அதிலும் அதிலும் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள விரும்புகின்றான். ஆதலால் மனிதனது இத்தகைய ஆர்வத்தை பூர்த்தி செய்ய விஞ்ஞானிகள் நுட்பமானதும் அதிசயமானதுமான தகவல் தொடர்பு சாதனங்களை கண்டுபிடித்து கொண்டே இருக்கின்றனர்.

தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும் தகவல் தொடர்பும் தற்போது அசுரத் தனமாகியுள்ளது. அந்த வகையில் இணையம் பற்றி நோக்குவோம். அனால் இணைய தளங்களின் வரவால் இன்று உலகில் எந்த பகுதியில் இருப்பவரிடமும் நாம் இருந்த இடத்தில் இருந்தே உரையாடி முடிகிறது. இணைய கெமராக்கள் அதிகளவில் உபயோகப் படுகின்றன. தொலை பேசி இணைப்பின் வழியாக இந்த கெமராக்களை இணைத்து நாம் கணினி வாயிலாக நேரடியாக நம் அறையில் இருந்த வண்ணம் வெளிநாட்டில் இருப்பவரை பார்த்து கொண்டே உரையாட முடியும்.

இந்த இணையம் எனும் சொல் இன்டெர்நெற் என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. இன்றைய உலகில் இன்டெர்நெற் என்றால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தெரியாதவர்கள் இல்லை எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இன்டர்நெற் வரலாற்றை பார்க்கையில்,

1969 ம் ஆண்டு அமெரிக்கா நாட்டின் பாதுகாப்பு துறை மூன்று கணனிகளை முதன் முதலாக இணைத்து இதற்கு ஆர்பநெட் (ARPAET Advanced) என பெயரிட்டது. இது தான் உலகில் முதல் இன்டர்நெற் ஆகும். பின்னர் அதிக கணனிகள் இணைக்கப்பட்டதால் சிக்கல்கள் உருவானது. ஆதலால் இது ஆர்பநெட், மில் நெட் (milNet) என இரண்டாக பிரிக்கப்பட்டது.

இன்று நாம் அனைவரும் சுலபமாய் உபயோகிப்பதை போன்று அன்று இன்டர்நெற்றை சாதாரண மானவர்கள் உபயோகிக்க முடியாத நிலை இருந்தது. 1991 ம் ஆண்டு "டிம் பெர்னர்" WWW முறையை கண்டுபிடித்தார் இவரே இன்டர்நெற்றின் தந்தையாவார். இம் WWW முறையின் பின் இணையத்தில் ஆயிரக்கணக்கான கணனிகள் இணைக்கப்பட்டன. 1998 இல் அமராக 22 ( இருபத்திரண்டு) இலட்சம் கணனிகளும் தற்போது கோடிக்கணக்கான கணனிகளும் இணைக்கப்பட்டுள்ளது.

இன்டர்நெற்றில் இரண்டு முக்கிய வகைகள் உண்டு அவையாவன. இதில் ஒன்று லான் (LAN) இதில் 10 கணனிகள் மட்டுமே. இணைக்கப்பட்டிருக்கும் மற்றயது (WAN) வான் இதில் கணனிகள் டெலிபோன் மூலமாகவோ அல்லது செயற்கை கோள் மூலமாகவோ இணைக்கப்பட்டிருக்கும்.

இனி இன்டர்நெற் இன் பயன்களை நோக்குவோம் ஆனால் அவை எண்ணில் அடங்காதவை. நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு உலகின் எந்த பகுதிக்கும் நாம் இமெயில் எனப்படும் எலெக்ட்ரானிக் மெயில்களை கணனி மூலம் அனுப்ப முடியும். இமெயில்கள் மூலம் கடிதங்கள் மற்றும் புகைப்படங்களை நாம் இணைத்து அனுப்ப முடியும். நம் உறவினர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் நாம் அவர்களோடு இமெயில் மூலம் தொடர்பு கொண்டு நம்முடைய கருத்துக்களை பரிமாறி கொள்ள முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வெப்கேம் எனப்படும் இணைய சாதனத்தை பயன்படுத்தி நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே உரையாடலாம் இதற்கு செலவும் மிக குறைவாக இருக்கும்.

அடுத்து நமக்கு தேவையான தகவல்களை இன்டர்நெற்றில் பெற்று கொள்ளலாம். தகவல்களை தேட சேர்ச் எஞ்சின் எனப்படும் தேடுதல் எஞ்சின் மூலம் தகவல்களின் பெயர்களை கொடுத்தால் உடனடியாக ஆயிர கணக்கான தகவல்களை தரும். அதில் நமக்கு தேவையான தகவலை பெற்று கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களுக்கு தேவையான தகவல்கள் இன்டர்நெற்றில் உடனடியாக கிடைக்கின்றன அதுமட்டுமல்ல ஆராச்சி மாணவர்களுக்கு தேவையான தகவல்களும் உள்ளன. பல விதமான அகராதிகளும் இன்டர்நெற்றில் கிடைக்கின்றன. அவற்றை நாம் எமது கணனியில் இயக்கி பதிவு செய்து உபயோகிக்கலாம். இதைவிட உலகில் பயன்படுத்தப்படும் பலவிதமான மொழிகளும் சொல்லித் தரப்படுகின்றன கற்க விரும்புவோர் இன்டர்நெற் மூலம் கற்று கொள்ளலாம்.

உலக நாடுகளில் புகையிரத்த துறையும் இணையத்தை இயக்குகிறது. இதன்மூலம் பயணச்சீட்டுகளையும் / பயண தொகைகளையும் வீட்டில் இருந்த படியே முன் பதிவு செய்து கொள்ளலாம். அதுமட்டுமன்றி பலவிதமான வியாபாரங்களும் இன்டர்நெற் மூலம் இயங்கி வருகின்றது அத்தோடு எந்த வொரு நாட்டைப் பற்றியும் அனைத்து வகையான செய்தி தாழ்களும் வார இதழ்களும் வெளியிடப்படுகின்றன.

இவ்வாறாக மேற் கூறப்பட்ட விடயங்கள் தவிர எண்ணில் அடங்காத சேவைகளும் தகவல் தொடர்பு துறையில் இணையம் ஆற்றி வருகிறது. என்றால் அது மிகையாகாது.

* * *

சி. சுவேனியா

மட் / களுவன்கேணி விவேகானந்தா வித் 7A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலே வேண்டுகின்றோம் உன்னிடம்!

ஏய் கடலே!
ஆழக் கடலே நீ
அழகாகத் தான் இருக்கின்றாய்
கருவறைக் குழந்தையும்
உன் சோ வென்ற
இரைச்சலைக் கேட்டு
உன்னை தன் பிஞ்சுக் கரங்களால்
தொட்டு விடவே
தாயின் வயிற்றினுள் இருந்து
தலை தூக்குவதை
உணர்வாயோ நீ?

வண்ண வண்ண மீன்களை
வகை வகையாகவும்
கொழுப்பு நண்டையும்
கொடிய சுறாவையும்
கொண்டிருக்கின்றாயே
விடய அறிவைத் தேடியும்
வெளிநாட்டுப் பிரயாணத்தை நாடியும்
அண்மைக் காலங்களில்
அவுஸ்திரேலியா செல்வதற்குமாக
நீயே உதவுகின்றாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான உன்னைப் பார்க்கவும்
உன்னருகேயுள்ள சுத்தக் காற்றை
சுவாசிக்கவும்
பௌர்ணமி நிலவை தரிசிக்கவும்
உதய சூரியனின் வரவை
பார்த்து மகிழவும்
உன்னிடம் வருவோர் பலர்

இது இவ்வாறு இருக்கையில்
அன்று ஏனோ நீ
கோபம் கொண்டு
எங்கள் மீது உன்
அசுர அலைகளை
சுனாமியாக
சுமத்தினாயே கடலே!

பக்குவமாம்
பதில் சொல்வாம் என்று
நாம்
இன்று வரை காத்திருக்கின்றோம்!
இனியும் உன்
அரக்கத்தனங்களை
காட்டாதே
எம்மை வாழவைத்த
கடலே நீ!
இனியும் வாழவிடு
சுகமாக !.....

ப. பவினா
7C
மட்/கறுவாக்கேணி விவேகானந்தா வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண் பாரமாயில்லையே!

முயன்று பார் உன்
முதுகினிலே நீ
விண்ணையும் தூக்கலாம்

நம்பிக்கை என்பது உனக்கு
நண்பனாக இருக்கட்டும்.
தீய ஒழுக்கம் எப்போதுமே
தீயினிலே இடப்படட்டும்
என்பதனை நீ
அறிந்து கொண்டால்
அளப்பரிய ஆனந்தத்தினை
அடைவாய் என்பதில்
நம்பிக்கையாய் இரு

வாழ்வை தொலைத்து
விட்டவனாக
வாழப்பழகாது கிடைத்திருக்கும்
அரிய வாழ்க்கையினிலே
புது வசந்தக் காற்றினை
புகுத்துவதுவே உன் திறமை
வாழ்வை இரசிக்கத் தெரிந்த
கலைஞனாகவும்
முள்ளினிடையே நடக்கும்
சூட்சுமத்தினையறிந்த
வீரனாகவும் இருந்தால்
உன் புயங்கள்
உனக்கு வீழ்ந்த
புகழ் மாலையினால்
துவண்டு போகும் - அதற்காகவேனும்
முயன்று பார் முதுகினிலே நீ விண்ணையும் தூக்கலாம்.



அ.அருள்நாதன் 7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பொழுதும் இப்பொழுதும்......

எப்பொழுதும் உன் நினைவாக
நான் வாடுகின்றேன்
நாம் பிரிந்து
நாளையுடன்
நாலாறு மணித்தியாலங்கள் தான்
ஆகின்றது.
என்னவனே - உனை
நான் பார்த்திட
என் மடியினில் - உனை
வைத்து முத்தமிட
எப்பொழுதும் உன் நினைவாகவே நான்

உன் குரல் கேட்க
எனக்கு
ஏக்கமாக இருப்பினும்
உனை நான் - நீ
உறங்கும் போது
அழகான உன்
சுருள் கேசம் உன்
நெற்றியினில்
நெடு நடனம் இடுவதை
நெடுகவே
கண்டிருக்கின்றேன்.

உணவு உண்ண மாட்டாய் நீ
நான் ஊட்டி விட்டால்
உனக்கென்னை
அவ்வளவு கொள்ளை பிரியம்
என்னவனே முப்பொழுதும் உனை
நான்
பிரியாத வரவேண்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனைக் கண்ட நாள் முதலாய்
எனை
ஈ.ர் ஐந்து மாதம்
சுமந்தெடுத்த என்
அன்புத் தாயை
மறந்தேனே நான்
அநியாயமாய் எனை.
என் தாயிடமிருந்து
பிரிந்து விட்டாயே.
முப்பொழுதும் உன்
நினைவாக .......
நான் ....
இங்கு ....

உன் பிஞ்சுக் கரங்களை
முத்தமிடவும்
உன் மழலை மொழி
கேட்கவுமே.
எனக்கு நேரம் பத்தவில்லை.
என் மகனே வேலை.
நிமித்தம் நான்
வேண்டாத தூரம்
வந்து விட்டேன்
இன்னும்
பதினெட்டு மணித்தியாலங்களில்
உன்னை என் அன்புக்
கரங்களால் தூக்கி தழுவி.
முத்தமிடுவேன்
அதுவரை
முப்பொழுதும்
எப்பொழுதும் - உன்
நினைவாக.
நான்
நீ எங்கே நீ? .....

ர. டிலக்ஸனா
7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல்

இன்னஞ் சிறு பிள்ளையே
நீர் கல்வி பயின்றிடு
உருண்டையான உலகிலே
உனது பேரை பதித்திடு.

அன்னை அவள் ஆசையும்
தந்தையவர் கனவையும்
புரிந்து கொண்டு செயற்படு
புதிய யுகம் படைத்திடு.

இறைவன் தந்த உயிரிது
உனக்கும் எனக்கும் பொதுவிது
சண்டை வேண்டாம் அகற்றிடு
சமரசமாய் வாழ்ந்திடு.

அன்பு கொண்டு வாழ்ந்திட்டால்
அகிலமதை ஆளலாம்
ஆயிரத்தில் ஒருவனாய்
தலை நிமிர்ந்து வாழலாம்.

ச.சதனிஸ்டன்
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்முன்னே நீ வேண்டும்



பத்து மாதம் சுமந்து – என்னை
காத்து வளர்த்தவளே
உன்னை கை கூப்பி தொழுதிடுவேன்
என்றும் கடவுளாய் மதித்திடுவேன்

மூன்றிரண்டு வயது வர – நீயோ
நினைத்திட்டாய் வெளிநாடு செல்ல
அம்மா! இந்த நிலை – என்று
கேட்பதற்கோ வயதில்லை

வெளிநாடு நீ சென்றாய் – என்
தந்தையவர் வெளியூர் சுற்றிவந்தார்
நான் மட்டும் தனி வழியே
நடப்பதற்கு வழியொன்றும் தெரியவில்லை

பணம் உழைக்க சென்றாயே – நான்
இங்கு பரிதவித்து நிற்கின்றேன்
கல்வி கற்க மனமில்லை
ஊண் உறக்கமது எனக்கில்லை

ஆடம்பரம் நமக்கு வேண்டாம்
கோடி பணம் எனக்கு வேண்டாம்
நான் கண்விழித்து பார்க்கையிலே – என்
கண்முன்னே நீ வேண்டும் – அம்மா
என் கண்முன்னே நீ வேண்டும்.

ச. ரெக்ஷனா
தரம் – 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் | வேதநாயகம் விபுலானந்தா வித்

# சூப்பர் திருடன்

ஒரு வீட்டில் இரண்டு பெண்கள் சோளன் மாவை அரைத்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது திடீரென நன்றாக உடையணிந்த ஒரு திருடன் வீட்டினுள் நுழைந்தான். அவனைக்கண்ட பெண்கள் இருவரும் "நீ யார் எனக் கேட்டனர்"? அதற்கு அவன் நான் இந்த வீட்டு உரிமையாளருக்கு உறவினன் என்று தன்னை அறிமுகப்படுத்தியதுடன் "நீங்கள் இவ்வீட்டு வேலைக்காரர்களா ?" என வினவினான்.

இதனைக்கேட்ட பெண்கள் இருவருக்கும் கோபம் வந்துவிட்டது. இதனை அவதானித்த திருடன் "நீங்கள் இவ் வீட்டு உரிமையாளர்கள் என்றால் யாரிடமும் கேட்காமல் இச்சோளமாவை நிறைய உண்ணுவீர்கள்" என்று கூறினான். உடனே, பெண்கள் இருவரும் நிறையச் சோளம் மாவை வாயினுள் திணித்தனர். அவர்கள் இருவராலும் பேச முடியவில்லை. சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த திருடன் அவர்களது விலையுயர்ந்த ஆபரணங்கள், பொருட்கள் அனைத்தையும் திருடிக் கொண்டு சென்றான்.. ஆத்திரத்தால் முன்யோசனையின்றி சோளம் மாவை வாயில் இட்ட இருவரும் வாய்திறந்து கூச்சலிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தனர் ..

"ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டம்"

க. ஜேம்ஸ் பௌசன்.
தரம் - 7c



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

எழுச்சி தருவது கல்வி! - மறு
மலர்ச்சி தருவது கல்வி!
மகிழ்ச்சி தருவது கல்வி! - மன
வளர்ச்சி தருவது கல்வி!

அழகு தருவது கல்வி! - புது
அழகு தருவது கல்வி!
ஒழுகும் முறைசூட்டும் கல்வி! - ஒருவர்
உயர்ந்து விடப்பண்ணுங் கல்வி!

கல்வி யெனப்படுஞ் செல்வம்! - பணத்
தாலை விடப்பெருஞ் செல்வம்!
கொள்ளை இடவொண்ணாச் செல்வம்! - அள்ளிக்
கொடுப்பினுங்! குறையாச் செல்வம்!

கல்விக் கீடாகாது ஏதும்! - வென்றிக்
கற்கையிலே; வரும் ஊறும்
பள்ளிக்குச் சென்று; நாள் தோறும்! - பாடம்
படிக்கும் போதுன்னுயர்வு கூடும்!

ஆட்டிப் படைப்பவன் ஈசன்! - அவன்
அகிலத்திற்கே பெரும்; ராசன்! - கல்வி
ஊட்டிப் படைப்பவன் ஆசான்! - இவன்
உலகை முன்னேற்றும் நேசன்!

விதை நட்டாலே விருட்சம்! - கல்வியாம்
விதை கற்றாலே வெளிச்சம்!; வாழ்வில்
இற்றை நாள்வரும் இருட்டு - கல்வி
அறிவொளி கொண்டதை விரட்டு!

H.F. அத்திக்கா
06 C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவ முத்திரைகள்

1) கஞ்சனுடைய பணப்பெட்டியைத் திறக்கும் சாவி மரணத்தின் கையில் இருக்கிறது.

2) மூடிய கைகளுடன் மனிதன் உலகிற்கு வருகிறான். திறந்த கைகளுடன் அவன் உலகை விட்டு செல்கின்றான்.

3) ஒவ்வொருவரும் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான். ஆனால் இவ் உலகில் முட்டாள்கள் அதிகம்.

4) அறிவைத் தேடுபவனும் பணத்தைத் தேடுபவனும் திருப்தியடைவதில்லை.

5) ஏழைக்கு ஒருபோதும் வாக்குக் கொடுக்காதே!

6) பணக் காரனுக்கு ஒரு போதும் கடன் படாதே!

7) தெரிந்ததையெல்லாம் சொல்லாதே!
கேட்பதையெல்லாம் நம்பாதே!
முடிந்ததையெல்லாம் செய்யாதே!

8) மலிவாக விற்கின்றவன் கடனுக்கு விற்க மாட்டான்.
கடனுக்கு விற்கின்றவன் மலிவாக விற்க மாட்டான்.

9) அழுது கொண்டே பிறக்கின்றோம். குறை கூறிக் கொண்டே வாழ்கின்றோம். ஏமாற்றத்துடனே சாகின்றோம்.

10) பூமியில் ஒரு குடிசை கட்ட சக்தியற்ற சிலர் ஆகாயத்தில் கோட்டை கட்டுகின்றனர்.

11) கடன் காரனாக எழுந்திருப்பதை விட சாப்பிடாமல் படுக்கைக்குச் செல்வது

F.F. ரஸ்கியா
07C.

10L. | ஏறாவூர் அலி அக்பர் பெண்கள் உயர்தரப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க வாத்தும்
## பாதி அப்பமும்

வெகு காலத்துக்கு முன்பு ஸ்கொட்லாந்தில் ஒரு விவசாயி இருந்தான். அவன் பெயர் ஹல்ப்ரெட். வாத்துக்களை வளர்ப்பது அவன் தொழில். வாத்துக்களையும் முட்டைகளையும் விற்பான். ஒரு முறை ஒரு வாத்து அடைகாத்த முட்டை ஒன்று உடைந்து வாத்துக் குஞ்சு வெளியே வந்தது. அதை பார்த்து வியப்படைந்தான் ஹல்ப்ரெட். அந்த வாத்துக் குஞ்சு தகதகக்கும் தங்க நிறத்தில் இருந்தது.

ஆ இந்த வாத்துக் குஞ்சு அதிசயமான பிராணிதான் என்று உறுதியாக நம்பினான் ஹல்ப்ரெட். அதனால் அதை மிகவும் கவனமாக வளர்த்தான். அவனது நம்பிக்கை வீணாகவில்லை வாத்துக் குஞ்சு வளர்ந்தது. பெரிய தங்க வாத்து ஆனது. தங்க முட்டை இட்டது. அப்போது நண்பர் பீட்டர் அங்கே வந்தான். "எல்லாம் உன் அதிஷ்டம்தான் ஹல்ப்ரெட்" என்றான் பீட்டர். "சிறப்பான இத்தகைய அரிய பிராணிகளும் பொருட்களும் ராஜாவுக்கு உரிமையானவை அதனால் நீ இந்த வாத்தை ராஜாவிடம் கொடுத்து விடுவது தான் நல்லது. அவர் உனக்கு பரிசுகள் தருவார்" என்றார்.

பீட்டர் சொல்வது சரிதான் என்று ஹல்ப்ரெட்டுக்குத் தோன்றியது அவன் வாத்தை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டான்.

ஒரு பெரிய காட்டைக் கடந்துதான் அரண்மனைக்கு போக வேண்டும். படைவீரர்களால் தேடப்பட்டு வரும் ஒரு கொள்ளைக்காரன் அந்தக் காட்டில் தான் இருந்தான். பாங்கோ என்று அவன் பெயரைச் சொன்னாலே எல்லோரும் பயந்து நடுங்குவார்கள் எனவே ஹல்ப்ரெட் பயந்து பயந்து காட்டு வழியே சென்றான் அப்போது அவன் முன்னால் பாய்ந்து வந்து நின்றான் பாங்கோ.

"அடேய் உன்னிடம் இருக்கும் பணத்தை எடு" என்று கட்டைக் குழல் துப்பாக்கியை நீட்டினான். "என்னிடம் பணம் இல்லை ஒரே ஒரு வாத்துதான் இருக்கிறது இதை ராஜாவிடம் கொடுப்பதற்காக எடுத்துச் செல்கிறேன். வாத்தை என்னிடம் இருந்து பறித்துக் கொண்டால் ராஜா உன்னை தண்டிப்பார்" என்றான் ஹல்ப்ரெட்.

அதைக் கேட்ட பாங்கோ இவன் சொல்வது சரிதான் இந்த வாத்தை பறிப்பதால் என்ன பயன், தேவை இல்லாமல் ராஜாவின் கோபத்துக்கு ஆளாக வேண்டும் அதற்குப் பதிலாக இவனுக்கு ராஜா கொடுக்கிற பரிசுகளை பறித்துக் கொள்ளலாம் என நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கோ துப்பாக்கியை சுற்றிவிட்டுச் சொன்னான் "உன்னை நான் சும்மா விடுகிறேன் ஆனால் ராஜா தருகிற பரிசில் பாதியை எனக்கு தர வேண்டும்." "நிச்சயம் தருகிறேன்" என ஹல்ப்ரைட் சம்மதித்தான். அந்த வாத்துடன் அரண்மனைக்குச் சென்றான். தங்க வாத்தைக் கண்டு ராஜா பெரிதும் வியந்தார்.

"யாரங்கே இந்த அற்புதமான பரிசைக் கொண்டுவந்த இவருக்கு அருமையான விருந்து கொடுங்கள்" என்று கட்டளை இட்டார்.

விருந்து முடிந்து அந்த ஹல்ப்ரைட்டுக்கு விலையுயர்ந்த பரிசுகள் தரச் சொன்னார் ராஜா. அப்போது ஹல்ப்ரைட் "ராஜாவே எனக்கு ஒரு அப்பம் மட்டும் போதும் அதுவும் ஒரு பகுதியில் மயக்க மருந்து கலந்து செய்த அப்பம்" என்றான்.

ராஜா அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். அவன் கேட்டவாறு அப்பத்தை தயாரித்துக் கொடுத்தார். ஹல்ப்ரைட் நேராக பாங்கோவிடம் வந்து சொன்னான் "ராஜா எனக்கு இந்த அப்பம் மட்டும்தான் கொடுத்தார். இதில் பாதியை நான் எடுத்துக் கொள்கிறேன்"

ஹல்ப்ரைட் அப்பத்தின் நல்ல பகுதியை மட்டும் தின்றான். மிச்சத்தை பாங்கோவிடம் கொடுத்தான். சினம் கொண்ட பாங்கோ ஹல்ப்ரைட்டை சோதனை செய்தான். அவன் எதையும் ஒளித்து வைத்திருக்கவில்லை என்பது உறுதிப்பட்டது. ஏமாற்றம் அடைந்த பாங்கோ ஏற்கனவே பசியால் இருந்ததால் பாதி அப்பத்தையாவது கிடைத்ததே என்று நினைத்தபடி தின்று ஹல்ப்ரைட் நினைத்தபடி பாங்கோ தலை சுற்றி மயங்கி விழுந்தான்.

பாங்கோவை தூக்கிக் கொண்டு விரைவாக அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். நடந்ததையெல்லாம் ராஜாவிடம் தெரிவித்தான். படைவீரர்கள் பாங்கோவை பிடித்து சிறையில் அடைத்தார்கள். அறிவாளியான ஹல்ப்ரைட்டுக்கு ராஜா மதிப்பு உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பினார்.

கொடுத்து வாழ்

கெடுத்து வாழாதே.

H.F. அப்ரா
06C.

மட/ [illegible] அல் அஸ்ஹர் பெ.உ.பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி மீசை மருந்து

கொரியாவின் ஞான மலைத் தொடரில் ஞானி ஒருவர் இருந்தார் மிகச் சிறந்த ஞானி. மந்திர தந்திரங்களிலும் திறமையானவர். ஆயிரமாயிரம் மனிதர்கள் அவரிடம் அறிவுரை பெறுவதற்காக வருவார்கள் ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்காக ஒரு பெண் வந்தாள். 'என் கணவர் என்னை வெறுக்கிறார் அவர் என் மீது அன்பு கொள்ளும் படி செய்ய வேண்டும் என்று வேண்டினாள்

ஞானி அப்படி அவர் உன்னை வெறுப்பதற்கான காரணம் என்ன" என்று கேட்டார் 'என் கணவர் போருக்குச் செல்வதற்கு முன்பு என் மீது மிகவும் அன்பு செலுத்தினார் என் வேலைகளுக்கு உதவி செய்தார் ஆனால் மூன்று வருடங்கள் கழித்துத் திரும்பி வந்திருக்கும் அவர் வெறுப்புடனும் விரக்தியுடனும் இருக்கிறார். என்று விளக்கினாள்.

இது எல்லாம் போருக்குச் சென்றதால் ஏற்பட்ட விளைவு தான். என்றார் ஞானி ' அவர் என் மீது மீண்டும் அன்பு கொள்ளும் படி செய்வதற்கு மருந்து தருவீர்களா என்று கோரிப்பட்டேன். என்றாள்

"அப்படி ஒரு மருந்தை செய்ய என்னால் முடியும் நிறையப் பொருட்களைச் சேர்த்துத் தான் அந்த மருந்தைச் செய்ய வேண்டும். ஆனால் மிக அவசியமானது தேவைப்படும் ஒரு பொருள் மட்டும் இல்லை என்றார்" ஞானி.

"அது என்ன என்று சொல்லுங்கள் நான் கொண்டு வந்து தருகிறேன்". என்றாள் அவள்

புலியின் மீசையில் இருந்து ரோமம் வேண்டும் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எப்பாடு பட்டாவது கொண்டு வருகிறேன் என்று உறுதி அளித்து விட்டு அவர் புறப்பட்டு சென்றார்.

அடுத்த நாளே அவர் புலியை தேடிச் சென்றார். காட்டுக்கு அருகில் உள்ள நதியின் கரையில் ஒரு புலியை கண்டார். அவரைப் பார்த்து புலி உறுமியது. உடனே பயந்து பின்வாங்கினார் அவர்.

முதல் நாள் புலியைக் கண்ட அதே இடத்துக்கு அடுத்த நாளும் சென்றார். அவரைப் பார்த்து புலி மீண்டும் உறுமியது. மறுபடியும் அவர் பின்வாங்கிச் சென்றார். இப்படி தினமும் அவர் அந்த இடத்துக்கு சென்றதால் புலிக்கு அவரது அண்மை பழகி விட்டது. அது உறுமுவதை நிறுத்தியது.

அவர் அந்தப் புலிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தார். நாட்கள் செல்லச் செல்ல புலி அவரிடம் நட்புடன் பழகத் தொடங்கியது. அவரிடம் இருந்தும் உணவுப் பொருளை பெற்றுக் கொள்வதற்காக மிக நெருக்கமாக வந்தது. ஒரு நாள் அவர் அச்சத்துடனே புலியின் தலையை தடவினார். சில நாட்கள் கழித்து புலியின் கன்னப் பகுதிகளில் வருடினார். அப்படி அவர் மிகத் திறமையாக புலியின் மீசை ரோமங்களில் ஒன்றைப் பறித்தார்.

அந்த ரோமத்தை எடுத்துக் கொண்டு குருவிடம் ஓடினார். அவர் குருவைப் பார்த்ததும் "எனக்கு கிடைத்து விட்டது" என்று வெற்றிக் கூச்சலிட்டார்
"நல்லது" என்றார் குரு. அந்த ரோமத்தை எடுத்துச் சென்று அடுப்புத் தீயில் எறிந்தார்.
ஓ நீங்கள் என்ன இப்படி செய்து விட்டீர்கள் என்று பதற்றத்துடன் கேட்டார். அவர் "அந்த மீசை ரோமத்தை கொண்டு அற்புத சக்தியுடைய மருந்து தயாரித்து தருகிறேன். என்று தானே சொன்னீர்கள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு அந்த மருந்து தேவையானால் பெண்ணே புலியின் அன்பை
நீ எப்படி சம்பாதித்தாய்? அன்பான செயல்கள் மூலம் நீ பொறு-
மையாக இருந்ததன் காரணமுமாகவும் தானே? அப்படி என்றால்
ஒரு மனிதன் புலியை விட மோசமாகவா நடந்து கொள்வான்?
புலியின் அன்பை நீ பெற்றது போலவே கணவனின் நேசத்தையும்
பெற முயற்சி செய்! என்று கூறி மென்மையாகச் சொன்னார்

அவரின் வார்த்தைகளில் உள்ள உண்மையை உணர்ந்து நன்றி
சொல்லி விடை பெற்றாள் அவள்.

HH. ஸியா
7B

16 | ஏறாவூர் அல் அஸ்கர் [illegible] உ. பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவகையூட்டும் கடி ஜோக்ஸ்

மட் | மெதனைக்குடா மகா வித்தி

01. கால் கார் இல்லாத ரேஸ் எது?
ரைம் ரேஸ்

02. கடவுளிடம் கேட்க கூடாத வரம் என்ன?
கலவரம்.

03. உயிரோடு பிறந்து அசைவாமல் இருப்பது எது?
முட்டை

04. காசைப் போட முடியாத பேங்க் எது?
பிளட் பேங்க்.

05. கோடை காலத்திலும் நடிகர் ரஜினிகாந்துக்கு வியர்க்காதது ஏன்?
அவருக்கு ஏராளமான விசிறிகள் இருப்பதால்.

06. பெண்களுக்கு இந்த காரம் பிடிக்கும் அது எந்தக் காரம்?
அலங் "காரம்"

07. முகத்துக்கு பூச முடியாத கிரீம் எது?
ஐஸ் கிறீம்

08. பல் இருந்தும் கடிக்காதது எது?
சீப்பு

09. பல் இல்லாமலே கடிப்பது எது?
செருப்பு

10. காசு கொடுத்து வாங்காத பத்திரிகை எது?
கல்யாணப் பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இனிமையான வாரப் பத்திரிகை எது?

கல் கண்டு.

12. அவரோடு சாப்பிட வேண்டிய சாதம் எது?

பிரசாதம்.

13. விவசாயிகளுக்கு எந்த உடை பிடிக்கும்?

அறுவடை

14. உழவன் எந்தப் பை வாங்க விரும்புவான்?

கலப்பை.

15. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை?

அழுகை

16. நீந்த முடியாத தரை எது?

புளியோ தரை

17. காட்டில் பஸ் நிலையத்தில் பஸ் வர யானை ஏறியது பஸ்ஸில் எலி ஏறவில்லை ஏன்?

பூனை கொண்டக்ரர்

18. மழை பெய்தால் யானை என்ன செய்யும்?

நனையும்.

19. தண்ணீரில் இருக்கும் கல் எது?

கலங்கல்

20. எலியின் வால் மிக நீளமாக இருப்பது ஏன்?

செத்தால் தூக்கி எறிய சுலபமாயிருக்கும்.

அ. கிருஜன்

தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162 / 4 தாள் விக்னேஸ்வரன்

## சுவாமி விபுலானந்தர்

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் காரைதீவு என்னும் ஊரிலே விபுலானந்தர் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி தாயார் பெயர் கண்ணம்மையார். இவரது இயற்பெயர் மயில் வாகனன் ஆகும்

விபுலானந்தர் அடிகளார் தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார். அத்துடன் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும், தமிழ் பண்டிதராகவும் விளங்கினார்.

விபுலானந்த அடிகளார் தலைமையாசிரியராக மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் திருகோணமலை ஆங்கில கலாசாலையிலும் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலும், பேராசிரியராக தென் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பணி புரிந்துள்ளார்

அடிகளார் எழுதிய நூல்களுள் யாழ்நூல், நாயச்சியார் நான்மணிக்கோவை என்பன சிறந்தவையாகும். இவர் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். மதுரை தமிழ்ச் சங்கம் இதழான செந்தமிழ் கரந்தைத் தமிழ்ச் சங்க இதழான தமிழ்ப்பொழில் இராம கிருஷ்ண சங்க இதழான ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஆகியவற்றிலும் கலைமகள், செந்தமிழ் செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய சஞ்சிகைகளை அடிகளார் செழுங்கட்டுரைகள் வெளிவந்துள்ளது.

அடிகளார் கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை விவேகானந்த சம்பாசனைகள் என்பன அடிகளார் மொழி பெயர்த்த நூல்களாகும். இவற்றை விட வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் கார்ட்னர் என்னும் நூலிலுள்ள பாடல்களைப் பூஞ்சோலைக் காவலன் என்னும் பெயரில் அழகு தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

சுவாமி விபுலானந்தர் தமது வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றி 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சோந்தி ஏன் தலையை ஆட்டுகிறது?

முன்னொரு காலத்தில், பச்சோந்தியும், நாயும் நண்பர்களாக இருந்தன. ஆனாலும் நாய் சில சமயங்களில் மனிதனுடன் சென்றுவிடும்.

ஒரு நாள் பச்சோந்தி "நீ ஏன் சில சமயங்களில் மனிதனுடன் செல்கிறாய்", என்று நாயை கேட்டது.

"நானும், மனிதனும் நண்பர்கள். அந்த மனிதன் ஒரு வேட்டைக்காரன். நாங்கள் இருவருமாக வேட்டையாடுவோம். வேட்டையின் போது நான் அவனுக்கு உதவுவேன். வேட்டையில் எங்களுக்கு மாமிசம் கிடைக்கும். வேட்டையிலிருந்து திரும்பியதும் நாங்கள் மாமிசத்தை சமைத்துச் சாப்பிடுவோம்." என்று நாய் பதிலளித்தது.

ஒரு சமயம் மனிதனும் நாயும் வேட்டைக்கு சென்றனர். அவர்கள் ஒரு மானைக் கொன்று அதை வேட்டைகாரன் இல்லத்திற்கு எடுத்து வந்தனர். இதை கண்ட பச்சோந்தி, அவர்களைப் பின் தொடர்ந்து சென்றது.

வேட்டைகாரன் மாமிசத்தைச் சமைத்துச் சாப்பிடத் தொடங்கினான். நாயும் மாமிசத்தை சாப்பிட மனிதன் அருகில் சென்றது. அந்த மனிதன் அருகில் கிடந்த தடியை எடுத்து நாயின் தலையில் அடித்தான் பாவம்! நாய் கத்திக் கொண்டே அங்கிருந்து ஓடி விட்டது.

பச்சோந்தி அங்கு நடந்த எல்லாவற்றையும் கண்டு விட்டு, அதுவும் அங்கிருந்து ஓடி விட்டது. அது காட்டிற்கு ஓடி அங்கு தங்கி, 'ஙு' 'ஙு' என்று கத்தியவாறு தலையை ஆட்டத் தொடங்கியது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரொம்ப மோசம்" எனக் கத்தியது.

"மனிதனும் நாய் நண்பனாக இருந்தது. வேட்டையில் உதவி, தீனி கொண்டுவர உதவியது. மனிதன் அந்த நாயை தலையில் அடித்தது. பாவம். மனிதன் நல்லவனே இல்லை. நான் மனிதன் அருகில் வசிக்க மாட்டேன். காட்டில் தான் வசிப்பேன்" என்று எண்ணிய பச்சோந்தி காட்டில் தங்கிவிட்டது.

இதனால் தான் பச்சோந்தி மனிதன் வாழும் வீட்டிலிருந்து தூரத்தில் உள்ள காட்டில் வசிக்கிறது. அது மனிதனையும் அந்த தடியையும் நினைக்கும் போதெல்லாம் 'ங்கு' 'ங்கு'. 'ங்கு' அதாவது மிகவும் மோசம், மிகவும் மோசம், மிகவும் மோசம், என்று தலையை ஆட்டத் தொடங்கிவிட்டது.

எம். எஸ். பா. அப்ரா
தரம் 7B
கமு / அல் / அஸ்ஹர் ம.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில கலைப்படைப்புகளும், மரபுகளும்

01) மகாமெலிக சமாதி புத்தர்
குப்த மரபு.

02) தொலுவில புத்தர் சிலை.
அமராவதி மரபு.

03) அவுக்கன புத்தர் சிலை.
அமராவதி மரபு.

04) சாரணாத் புத்தர் சிலை.
குப்த மரபு.

05) அப்பலோ புத்தர் சிலை.
காந்தார மரபு.

06) அநுராதபுர சந்திர வட்டக்கல்.
குப்த மரபு.

07) இசுருமுனிய குதிரைத் தலையும் போர் வீரனும்
எனும் சிலை.
பல்லவ மரபு.

08) மகா இலுப்பல்லம புத்தர் சிலை.
அமராவதி மரபு.

09) சீகிரிய குகை ஓவியங்கள்.
குப்த மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) இசுருமுனிய காதலர் சிற்பம்.
குப்த மரபு.

11) இசுருமுனிய குளிக்கும் யானைகள் சிற்பம்.
பல்லவ மரபு.

12) இசுருமுனிய அரச குடும்ப சிலை.
பல்லவ மரபு.

எம். எஸ் பாத்திமா அப்றா
தரம் 7 B
கமு/அல் அஷ்ரக் ம.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே வெல்லும்

குணசீலன் மாஸ்டர்! இந்தப் பெயரை சொன்னா-லே பாடசாலை மாணவர்கள் இடத்தில் மதிப்பு கலந்த பயம் ஏற்படும். வருகின்ற மாதத்துடன் இந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து பதினான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றது. அவர் அந்தப் பாடசாலையில் மட்டுமல்ல. அந்த கிராமத்திலேயே மிகவும் மதிக்கப்படுபவராக விளங்கினார்.

நேரம் தவறாமை அவரது நல்ல குணங்களில் முக்கியமானது. இதன் மூலம் பாடசாலை அதிபரின் நன்மதிப்பிற்கும் மாணவர்களின் அன்புக்கும் பாத்திரமானவராக விளங்கினார். இது அங்குள்ள சில ஆசிரியர்களுக்கு மிகவும் எரிச்சலை கொடுத்தது.

ஆசிரியர் கூட்டம் நடக்கும் போதெல்லாம் குணசீலன் போல் மற்றைய ஆசிரியர்களும் இருக்க வேண்டும் என்பதையே நான் விரும்புகிறே-ன் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் அதிபர் கூறுவார். இதனால் பிந்தி வரும் ஆசிரியர்கள் சிலர் அவர் மீது மிகுந்த கோபம் அடைந்-திருந்தனர். இதனால் இவரை எப்படியாவது ஒரு நாள் பிந்திவர செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டனர். ஆனால் இந்தத் திட்டம் எப்போதும் தோல்வியாகவே முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பதின்நான்கு வருட சேவை முடிவும் அவர் ஓய்வு பெறும் நாளும் ஒன்றாக இருப்பதால் அந்த நாளை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து மிகவும் சிறப்பாக கொண்டாடுவதற்கு திட்டம் இட்டனர். இதனால் மிகுந்த சிறப்பாக பிரியாவிடை விழாவை கொண்டாட ஏற்பாடாகி இருந்தது.

மறுபக்கம் சில ஆசிரியர்கள் சேர்ந்து இவரை எப்படியாவது ஒரு நாள் பிரியாவிடைக்கு முன்பு பிந்திவர செய்ய வேண்டும் என்று முயற்சியால் ஈ.டுபட்டு இருந்தனர். கடைசியாக பிரியாவிடை நாளையே அதற்கு தெரிவு செய்தனர். ஏனெனில் பிரியாவிடை நாளன்று பிரதம விருந்தினராக மாவட்ட கல்வி அதிகாரி வருவதாக இருந்தார். அத்துடன் அந்த மாவட்டத்தில் உள்ள முக்கியமான பாடசாலை அதிபர்களும் வருவதற்கு ஏற்பாடாகி இருந்தது. இந்த நேரத்தில் தான் இவர்கள் முன் இவரை அவமானப்படுத்தினால் அவருக்கும் அவரை நேசிப்பவர்களுக்கும் பெரிய அடியாக இருக்கும் என்று எண்ணினார்கள். அன்றைய தினமும் வந்தது. அன்று பாடசாலை நாளாக இருந்தமையால் சரியாக 8.30 மணிக்கு விழாவை ஆரம்பிக்கத் திட்டம் தீட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசீலன் ஆசிரியரின் வீடு பாடசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தமையால் தனது சைக்கிளில் பிரயாணத்தை சரியாக 8 மணிக்கு ஆரம்பிப்பார். அன்றும் அதேபோல் புதிய ஆடை அணிந்து கொண்டு ஆனந்த மனதுடன் தனது பாடசாலைக்கு செல்ல ஆயத்தமானார். அந்த நேரம் பார்த்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவரே தொலைபேசியை எடுத்தார். மறு முனையில் உங்கள் பாடசாலை அதிபர் மாரடைப்பு காரணமாக நகர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இன்றைய விழா ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியருக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. உடனடியாக அவர் குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு சைக்கிளை வேகமாக மிதித்தார். கிட்டத்தட்ட மூன்று கிலோ மீற்றர் இருக்கும் தன்னால் இயன்றவரை வேகமாக சென்றடைந்தார். அங்கு சென்றதும் வரவேற்பாளர்களிடம் விபரத்தை கூறினார். வரவேற்பாளரோ அப்படி இங்கு ஒருவரும் கொண்டுவரப்படவில்லை. 'எதற்கும் நீங்கள் பெயர் பலகையில் போய்ப்பாருங்கள்' என்று கூறினார். அவர் போய்ப் பார்த்தார் ஆனால் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வந்து வரவேற்பாளரிடம் கூறினார். பின்பு அது பொய்யான தகவல் என்று வரவேற்பாளரால் உறுதிப் படுத்தப்பட்டது. தான் தொலைபேசியில் பேசுபவரின் பெயரை கேட்காமல் விட்டது மிகப் பெரிய தவறு என்று தனக்குள் கூறியவாறு இது தனது வேண்டாதவர்களின் சதி என்பதை உணர்ந்த-வராக பாடசாலையை நோக்கி போனார்.

பாடசாலையில் இவரது வரவை எதிர்பார்த்து அதிபரும் மற்றையோரும் காத்திருக்கின்ற-னர். அரைமணி நேரத்துக்கு மேல் ஆகியும் ஆசிரியர் வராதையிட்டு அதிபர் மிகவும் கோபங் கொண்டார். இவ்வாறு நான் நன்றாக இருந்துவிட்டு இப்படி ஏன் செய்தார் என்று தனக்குள்ளேயே அந்தக் கேள்வியை கேட்டுக் கொண்டார்.

பிரதம அதிதியாக வந்த அதிகாரியோ தான் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது என்று சைகையால் அதிபரிடம் கூறினார். 45 நிமிடம் பிந்திவிட்டது. அதிபருக்கும் விழா ஒழுங்கிணைப்பாளர்களுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனால் இந்த சதியை செய்த ஆசிரியர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரம் குணசீலன் ஆசிரியர் பரியாரை
மேடையை அடைந்தார். சகலரிடமும் தான்
பிந்திவந்ததற்கு முதலில் மன்னிப்பு கோரினார்.
பின்பு பேசத் தொடங்கினார். 'இன்று
நான் பிந்தி வந்தது ஒரு காரணத்துடனேயே
ஆனால் இவ்வாறு நானும் இந்த
மாணவர்களின் உள்ளங்களில் குடிகொண்டி
-ருந்த நான் இன்றைய அனைத்து நடவடிக்கை
மூலம் அவர்களுக்கு ஒரு படிப்பினையாகவும்
மாறிவிட்டேன். எதையும் அனுபவித்து உணர்ந்தால்
தான் அதன் பெறுமதி தெரியும்.
இன்று நான் கிட்டத்தட்ட நாற்பத்தி ஐந்து
நிமிடம் பிந்தி வந்தேன். என்றும் என்னை
கண்டதும் புன்முறுவல் பூக்கும் அதிபர்
முகத்தை மறுபுறம் திருப்பி வைத்திருந்தார்.
உங்களது ஒரு பாட நேரம் வீணடிக்கப்
-பட்டது. கல்வி அதிகாரியின் மற்றைய
அலுவல்கள் தடைப்பட்டன. அல்லது பின்
போடப்பட்டது. இவ்வாறு நானும் அன்பாக
இருந்தவர்களின் கோபத்திற்கு ஆளானேன்.
எனவே அன்பான மாணவர்களே
இவ்வாறு நானும் நீங்கள் எப்படி நடக்க
வேண்டும் என்று வாழ்ந்துகாட்டி பார்க்கிறேன்
-ன் இன்று நீங்கள் எப்படி நடக்கக்
கூடாது என்று அனுபவரீதியாக உணர
வைக்க முயற்சித்தேன். ஒரு மனிதனின்
வாழ்க்கையில் நேரம் எவ்வாறு முக்கியம்
என்பதை அறிந்திருப்பீர்கள்தானே? மீண்டும்
ஒருமுறை உங்களிடம் என்னுடைய பிழைக்காக
நான் மன்னிப்புக் கோருகிறேன்' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளும் அதிபர், ஆசிரியர்களும் அவரைப்
பார்த்து பெருமையும், ஆச்சரியமும்
அடைந்தனர். சதி செய்தவர்களோ
வெட்கி தலை குனிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடறிந்த பெரியார் [தங்கம்மா அப்பாக்குட்டி]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழித் தோன்றலாக இன்று வாழ்ந்து தொண்டிசெய்யும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் குரும்பசிட்டி எனும் ஊரில் 1925ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி பிறந்தார்.

சைவத்திலும் தமிழிலும் மிகுந்த பற்றுதல் கொண்டு பண்டிதையானார். இவரது தந்தை அப்பாக்குட்டி. தாயார் தையற்பிள்ளை ஆவர். சிறந்த சொற்பொழிவாளரான இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் 1958ம் ஆண்டு தன் இனிமையான குரல் வளத்தால் சொற்பொழிவாற்றிய போது அவருக்கு அவ்வூர் மக்கள் சார்பில் "சிவத் தமிழ்ச்செல்வி" என்று பட்டம் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

மீண்டும் மலேசியாவில் சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கத்தினரால் 1972ம் ஆண்டு "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டத்தையும் பெற்றார். மதுரை ஆதீனத்தினரால் 1986ம் ஆண்டு "செஞ்சொற் செம்மணி" என்ற பட்டத்தையும், 1974ம் ஆண்டு அகில இலங்கை இந்து மன்றத்தினால் "சிவஞான வித்தகி" என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இலங்கையில் ஆதரவற்ற பிள்ளைகள் தங்கியிருந்து படிப்பதற்கு "துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைத்தார். படித்து வரும் ஏழைகளுக்கும், ஆலயத் தொண்டர்களுக்கும் என "அன்னபூரணி அன்னதான மடம் அமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நெடுங்காலமாக பல சேவைகளைத் தொடர்ந்து புரிந்து வருகின்றார் பாரதியாரின் கனவை நனவாக்கியவர் தங்கம்மா அப்பாக்குட்டியை தமிழக ஆதீனங்கள் பலவும் இவரது தொண்டைப் பாராட்டியுள்ளன. ஒவ்வொரு வருடமும் தனது பிறந்த நாளன்று ஏழை மக்களுக்கு பல வகைகளில் உதவி புரிந்து சிறந்த பணிகளைச் செய்து வருகின்றார்.

இவர் சைவப் பணிகளில் மட்டுமன்றி முஸ்லிம் கிறிஸ்தவப் பாடசாலைகளிலும் கற்பித்த இவருக்கு அவர்களுடைய நிர்வாகத் திறனும், ஆளுமையும் தனக்கு ஏற்பட்டதாகக் கூறும் அம்மையார் ஆலயத்தின் மேலதிக வருமானத்தை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, யாழ் அரச வைத்தியசாலை, சத்திர சிகிச்சைப்பிரிவு, யாழ் பல்கலைக்கழக இந்து சமய பீடம், சிறுவர்வாதெ, கூட்டுறவு வைத்தியசாலை, பாடசாலைகள் அனாதை இல்லங்கள் என்று எல்லாவற்றிற்கும் நிதி வழங்கி உதவி புரிந்து வந்துள்ளார்.


அம்மையாரின் 74 வது பிறந்தநாள் சிறந்த விழா யாழ் மருதனார் மடத்திலுள்ள இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. உடல் தளர்ந்தாலும் கூட தன் உடல் நலத்தைப் பேணாது மகளிர் இல்லப்பிள்ளைகளில் நல் வாழ்வுக்காகவும் துர்க்கை அம்மனின் அருளாட்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழும் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ அம்பாளை "துணையிருப்பாளாக

எஸ். நிரோஷியா 07C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க



# சிந்திக்க

ஒரு அரசன் தன் பரிவாரங்களுடன் சென்று கொண்டிருந்த போது எங்கிருந்தோ வந்த கல் ஒன்று அரசனின் தலையில் பட்டுக் காயமேற்பட்டது. கல்லெறிந்தது யார் என நாலாபுறமும் தேடிய வீரர்கள் கிழவி ஒருவரைப் பிடித்து வந்தார்கள்.

அப்போது கிழவி சொன்னாள், "அரசே என் மகன் சாப்பிட்டு மூன்று நாள் ஆகிறது. அவனுக்காகப் பழம் பறிக்கக் கல்லை விட்டெறிந்தேன். அது தவறி உங்கள் மேல் பட்டு விட்டது." என்றாள்.

இதனைக் கேட்ட அரசர் மந்திரியிடம் உடனே கிழவிக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னார். எல்லோருக்கும் ஆச்சரியம். அரசனிடம் காரணம் கேட்டனர்.

அவர்களை நோக்கி அரசர் கூறியது,

"உணர்ச்சியே இல்லாத மரம் தன் மீது கல்லை விட்டு எறிபவர்கட்கு புசிக்கப் பழங்களைத் தருகின்றது. ஆறறிவு படைத்த, அதுவும் மன்னனான நான் தண்டனையா கொடுப்பது." .....

"கடமையைச் செய்ய துணிவுடன் இரு, அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்".

- K. தவப்பிரியன் -
தரம் - 6

## மனிதனைப் பாதுகாக்கும் ஓசோன் படலம்

நாம் வாழும் பூமியின் மேற்பரப்பிலிருந்து ஆயிரத்து அறுநூறு கிலோமீற்றர் தூரம் வரை காற்று மண்டலம் பரவியுள்ளது. வாயு மண்டலத்தின் அடர்த்தியில் 99 சதவீதம் பூமியிலுள்ள முப்பத்திரண்டு கிலோமீற்றர்களுக்கு உட்பட்ட தூரத்தில் தான் உள்ளது. பூமியின் ஈர்ப்பு சக்தியே இதற்குக் காரணமாகும். இது வளிமண்டலத்தை தன்பால் வசீகரித்துள்ளது.

பூமியிலிருந்து ஐம்பது கிலோமீற்றர் மேலே உள்ள இரண்டாவது படையில் மேகங்கள் இருக்காது. ஓசோன் படை இங்குதான் உள்ளது.

சூரியனின் சில வகையான கதிர்களை நம் கண்களால் பார்க்கமுடியாது. அந்தவகைய கதிர்கள் அகச்சிவப்பு மற்றும் புறஊதாக்கதிர்கள் எனப்படும். அகச்சிவப்புக்கதிர்கள் சூரியனிடமிருந்து வெப்பத்தைப் பெற்று பூமியை வெப்பமடையச் செய்கின்றது.

இயற்கையான வளிமண்டலம் தனக்கு ஒரு திரையினை ஏற்படுத்தி புறஊதாக்கதிர்கள் பூமியை நோக்கி வந்தடையாவண்ணம் பாதுகாக்கின்றன.

ஓசோன்படை என்பது வாயு மண்டலத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். ஓசோன் என்பது மூன்று ஒட்சிசன் அணுக்களாலான ஒரு வாயுவாகும். பூமியைச் சுற்றி மெல்லிய திரை போலப் படிந்துள்ளது. இந்த ஓசோன் படையானது சூரியனிடமிருந்து பூமியை நோக்கி வரும் மிகப்பயங்கர விளைவுகளை உண்டாக்கக் கூடியதும், ஆபத்தானதுமான அல்ராவயலட் எனப்படும் புறஊதாக் கதிர்களை தடுத்து நிறுத்தி நமக்குத்தீங்கு ஏற்படாதவண்ணம் அனுப்பி வைக்கின்றது.


குளோரோபோம், மற்றும் குளோரின் சம்பந்தப்பட்ட பொருட்கள், குளிர்சாதனப் பெட்டி, ஏஸியினாலும் ஓசோன் படலம் குறைவைக்கப்படுகின்றது. ஓசோன் படையைப் பாதிக்கச்செய்யும் முக்கிய காரணி குளோரோ புளோரோ காபனாகும்.

ஆகவே, இவ்வகை வாயுவை வெளிவிடும் பாவனையைக் குறைத்து ஓசோன்படையைப்பாதுகாத்து பூமியைக் காப்போம்.

- A. விஜிந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரிக்கலாம் வாங்க ஹா... ஹா... ஹா...



ஹா...ஹா...ஹா...

- S. சுரேந்திரன் -
- தரம் - 6 -



ருசி - சித்தப்பா இனிசியல் உள்ள நாய் எது?

சித்தப்பா - தெரியலையே!

ருசி - இ நாய்




மகன் - ஒரு ஆங்கில மாதமும் ஒரு தமிழ் மாதத்தையும் இணைந்தால் ஒரு அறிஞர் உருவாகிறார். அவர் யார்!

அப்பா - தெரியலையே!

மகன் - ஆங்கில மாதம் 'மே' யும், தமிழ் மாதம் 'தை' யும் சேர்ந்தால் மேதை.




எஸ். நிரோஷியா 07C




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிப்பு

✡ சிறுகதை ✡

"எங்கவன் ரமேஸ், அவன் நம்மட பாலனின் மகன் ரவியை அடிச்சுப்போட்டானாம்" என்று தன் மனைவியிடம் கூறியவாறு வீட்டினுள் நுழைந்தார் சிவகணேசன்.

தந்தை வந்துவிட்டதை அறிந்த ரமேஸ் அடுத்த அறையிலிருந்து மெதுவாக நழுவிப் பின்பக்கம் செல்லத்தொடங்கினான். ரமேஸ் ஆறாம் ஆண்டு படிக்கும் மாணவன். பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்பதால் செல்லமாக வளர்க்கப்பட்டவன். ரமேஸின் அம்மா அவன்மீது அளவு கடந்த அன்பை வைத்திருந்தாள். அப்பாவும் அப்படித்தான். எனினும் அன்பு காட்டுவதுடன் ரமேஸ் மீது கட்டுப்பாடும், கண்டிப்பும் உடையவராக இருந்தார். இருந்தும் ரமேஸ் சுட்டித்தனம் மிக்கவனாகவே காணப்பட்டான். விளையாடும் போது பக்கத்து வீட்டு ரவியுடன் ஏற்பட்ட சண்டையில் ரமேஸ் பந்துமட்டையால் அடித்து ரவியின் மூக்கைப் பதம்பார்த்துவிட்டான். அதன் பிறகு பாலன் ஐய்யோ முறையோ என உரக்கக் கூட்டி ரமேஸின் அப்பாவிற்கு நாக்கைப் பிடுங்கிற மாதிரி கேள்வி கேட்டுவிட்டுச் சென்று விட்டார். அதன் விளைவு தான் ரமேஸின் அப்பாவின் இந்த நடத்தைக்குக் காரணம்.

ரமேஸைத் தேடிச்சென்ற அப்பா, குளிரில் நடுங்கும் கோழிக்குஞ்சைப்போல் ஒடுங்கி நின்ற அவனைக் கண்டு கொண்டார்.

"ஏன்டா பாலனின் மகனை அடிச்சனி....?" என்று உறுமினார். ரமேஸ் பயத்துடன் "இல்லையப்பா.... அவன் தான்.... எனக்கு.... முதல்ல.... அடிச்சவன்" என விம்மினான். "அப்ப அவன் அடிச்சா அவன்ர மூக்கை உடைக்கிறதா? அவன்ர அப்பாவால என்ர மானம் போச்சு.

தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி....

எனக் கோபத்துடன் கூறியவர் ரமேஸின் முதுகில் பளார்.. பளார் என அடித்துவிட்டார். ரமேஸ் 'ஓ' வென அழத்தொடங்கினான். "அவன் தெரியாம செஞ்சிட்டான், அவனை அடிக்காதேயுங்கோ" என ரமேஸின் அம்மா அப்பாவிடம் சிபாரிசு செய்தாள்.

"சரி...சரி, நான் அடிக்கல, நீதான் உந்தப் பிள்ளையைக் கெடுக்கிறது. என்னமாவது செய்யுங்கோ" என கரைந்து விட்டு வெளியேறினார் சிவகணேசன்.

அப்பா அடித்த அடி வலித்ததால் ஒரு மூலையில் குந்தியிருந்து விம்மி விம்மி அழுதான். அப்பா எதற்காக அடித்தார் என்பதை எண்ணிப்பார்க்காத ரமேஸ், "சே! இவருக்குப் போய் மகனாய்ப் பிறந்தேனே ... எதற்கெடுத்தாலும் குற்றம், எதைச் செய்தாலும் அடிக்கிறது தான் இவருக்கு வழக்கமாகிப் போச்சு என மனதுக்குள் வெதும்பிக்கொண்டான். முகுந்தனின் அப்பா எவ்வளவு நல்லவர். அவனுக்கு அடிப்பதுமில்லை, அவனோட எவ்வளவு அன்பாக இருக்கின்றார். என்ட அப்பா மட்டும் தான் என்னைக் கொடுமைப்படுத்துறாரு' என எண்ணினான்.

சிவகணேசன் ஒரு ஆசிரியர். அவருடைய சிந்தனை, கனவுகளெல்லாம் ரமேஸை நல்ல பிள்ளையாக வளர்க்க வேண்டும். எதிர்காலத்தில் நல்ல ஒரு நிலைக்கு மகனைக் கொண்டுவர வேண்டும் என்பதே. அதற்காக அவர் ஆயிரம் திட்டங்களைத் தீட்டியிருந்தார். அதன் காரணமாகவே அவன்மீது மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார். அவன் செய்யும் தவறுகளைத் திருத்திக்கொள்ள தண்டனை கொடுப்பதும் உண்டு. அதனை அறியாத ரமேஸ் அப்பாவைத் தவறாக எண்ணத் தொடங்கினான்.

நாட்கள் பல உருண்டோடின. ரமேஸின் துடிப்புத் தினம் குறையாது அதிகரித்துக்கொண்டே போனது. அன்றொரு நாள் அடைமழை சோவெனப் பொழிந்தது.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி .....

மின்னல் கண்ணைப் பறிக்க, இடி இடியெனப் பிளந்தது. தாயைக்கண்ட கன்றைப் போல ரமேஷும் அவனது நண்பர்களும் அடைமழையில் துள்ளி விளையாடினர். ஆடிப்பாடி கும்மாளமிட்டனர். அன்றிரவு படுக்கைக்குச் சென்ற ரமேஷ் குளிரினால் நடுங்கினான். சிறிது நேரத்தில் உடல் அனலாகக் கொதிக்க ஆரம்பித்தது. ரமேஷைத் தொட்டுப் பார்த்த தந்தை "பார்த்தாயோ படிச்சுப் படிச்சுச் சொன்னனான். மழையில் நனையாதே என்று, இப்ப பார் காய்ச்சல்ல அவதிப்படுகிறாய்" என்று கூறி வருந்தினார். எவ்வளவு கண்டிப்பாக இருந்தாலும் ரமேஷின் நிலையைக் கண்டு வேதனையின் ஆடிப்போனார்.

மறுநாள் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல் அவனை வாட்டி வதைத்தது.

ரமேஷை வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்ற தந்தை வைத்தியரின் ஆலோசனைப்படி ரமேஷை 'வோட்'டில் சேர்த்தார். ஒரு கிழமை வரை சிகிச்சை செய்ய வேண்டுமென வைத்தியர் கூறியதற்கிணங்க லீவு போட்டு ரமேஷை கண்ணும் கருத்துமாகப் பார்த்து வந்தார்.

ஓடி ஆடித் திரிந்தவன் படுத்த படுக்கையாகக் கிடப்பதைப் பார்த்த வேதனை தன் நெஞ்சில் உதிரம் சொட்டியது. அவன் கண் விழிக்கும் போதெல்லாம் அருகில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டார். தனது நித்திரையைத் தொலைத்து வேளா வேளைக்கு உரிய மருந்துகளை மகனுக்குக் கொடுத்தார்.

ஊண், உறக்கம் இல்லாமல் தனது தந்தை தன்னைப் பார்த்து, தன் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணிவிடைகள் செய்வதைப் பார்த்த ரமேஷ் தனது தவறை உணர்ந்தான். தான் இவ்வளவு நாளும் தன் தந்தையைப் பற்றி எண்ணியிருந்தவை எல்லாம் தவறான கருத்து என்பதைப் புரிந்து கொண்டான். தன் தந்தையும் தன் மீது அளவு கடந்த அன்பு வைத்துள்ளார், ஆனால் தன்னை நல்லவனாக வளர்ப்பதற்கே தன் மீது கண்டிப்புடன் நடந்து கொள்கின்றார் என்பதை உணர்ந்தவனாக "அப்பா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறியவாறு தனது தந்தையை அணைத்துக் கொண்டான்.

-• முற்றும் •-

"அடிக்கிற கை தான் அணைக்கும்"

— க. ஷோபனா —



# வானில் தவழும் நிலா

வட்டநிலா வண்ண நிலா
வானில் தவழும் அழகுநிலா
பஞ்சு மேகம் மீதில் ஏறி
பவனி வரும் பால் நிலா

வெள்ளி நிலா விடியல் நிலா
வளர்ந்து தேயும் பால் நிலா
வெட்டி எடுத்து வெளிச்சம் தர
வீட்டில் வைக்கப் போகிறேன்


பால் நிலா பவள நிலா
பார்க்க நீயும் ஓடுவாய் - உன்
அழகை நாளும் பார்க்கவே
அருகே ஓடி வந்துவிடு

உணவு நானும் தந்திடுவேன்
உடைகள் அழகாய்ப் போட்டிடுவேன்
பாரில் மக்கள் என்னைப் போற்ற
பாசமுடன் வளர்த்திடுவேன்.

ஆக்கம் :
N. நித்தியா

" விழிப்பதற்கே உறக்கம்
வெல்வதற்கே தோல்வி
எழுவதற்கே வீழ்ச்சி "






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ-பொட் ஏன் பிரபல்யமானது?



ஐ-பொட் [I-Pod] அந்தப் பெயருக்குரியவர் ஸ்டீவ் ஜொப்ஸ். அவர் மக்களின் மனதை நன்றாக எடை போட்டவர். மக்களின் மனப்போக்கை நன்கு அறிந்தே இப்பெயரை வைத்தார்.

குடும்பத்தில், சமுதாயத்தில் மக்கள் இன்று சுயநலத்துடன் தன்முனைப்பு மிக்கவர்களாக உள்ளனர். தங்களுக்காக மட்டுமே வாழ விரும்புகின்றார்கள்.

ஆரம்பகாலத்தில் தயாரிக்கப் பட்ட குடைகள் இரண்டுபேர் மழையில் நனையாமல் செல்லக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது சொருசான குடைகள் ஒருவர் மாத்திரமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. அதாவது உன்னோடு பிறரைச் சேர்த்துக்கொள்ளாதே என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றது.

மக்கள் இன்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ "நான்" என்ற வார்த்தையையே அதிகமாகப் பயன்படுத்துவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இன்று உலக மக்கள் அனைவரையும் பீடித்துள்ள "தன்னலம்" என்னும் சொல்லுக்கிணங்க ஐ-பொட் எனப் பெயர் வைத்தார் ஸ்டீவ் ஜொப்ஸ்.

— J. லௌஷன் —

அ.க | அல் இர்பான் மகளிர் கல்

## மனிதனை நேசிப்போம்

உலகில் உள்ள படைப்புக்களில் மிகவும் அபூர்வமான பிராணியாகக் காணப்படுபவன் மனிதனாவான். மனிதன் என்பவன் இறைவனால் கூட மேன்மைப்படுத்தப்பட்ட ஒருவனாக காணப்படுகின்றான். மனிதன் இவ்வாறு மேன்மைப்படக்காரணம் அவனிடம் காணப்படும் சில சிறப்பியல்புகளாகும்.

ஆறறிவுள்ள ஒரு ஜீவனாக மனிதன் காணப்படுகின்றான். இவன் ஏனைய விலங்குகளில் இருந்தும் இக்குணத்தினால் நேசிக்கப்படுகின்றான். பிரித்தறியும் தன்மை, வெட்கம், நாணம் என்பன அவனை உயர்வு படுத்திக் காட்டுகின்றது.

மனிதனுக்கு உதவி செய்யும் மனப்பான்மை காணப்படுகின்றது. அவன் நோயின் போதும், கஷ்டங்களின் போதும், துயரின் போதும் ஏனைய மனிதனுக்கு உதவி செய்கின்றான். இது அவனின் பெருமையை உயர்த்துகின்றது.

கல்வியறிவு என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இது மனிதனின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றது. "கல்வி இல்லாதவன் கண் இல்லாதவன்" எனவே மனிதனின் ஞானக்கண் இந்தக் கல்வி மூலம் திறக்கப்படுகின்றது. இதனால் அவன் நேசிக்கப்படுகின்றான்.

ஏனையவரோடு அன்பாகப் பழகும் தன்மை மனிதனிடம் காணப்படுகின்றது. இந்த அன்பினால் மக்கள் சந்தோசமாக வாழ்கின்றனர். அன்பின் மூலம் மனிதனுக்கிடையே நேசமும், பாசமும் வளர்கின்றது. இதனால் மனிதன் ஏனையவற்றிலிருந்தும் வேறுபடுத்தப்படுகின்றான்.

கருணை கொண்ட உள்ளம் மனிதனிடம் காணப்படுகின்றது. இந்தக் கருணையானது மக்களை நம்பிக்கையுடன் வாழ வைக்கின்றது. ஒவ்வொரு மனிதனுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்ப கருணை அவசியமாகும்.

புன்னகை என்பது மனிதனுக்கு மட்டுமே உள்ள நற்பண்பாகும். இப் பண்பானது மனிதனை கவர்ச்சிமிக்கவனாக காட்டுகிறது. எந்த விலங்குமே புன்னகைப்பதில்லை. ஆனால் மனிதன் புன்னகைக்கின்றான்.

கூட்டு முயற்சியானது மனிதனை ஒற்றுமைப்பட வைக்கின்றது. அந்த ஒற்றுமையானது மனிதனை கூடி வாழ வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வேற்றுமைகள் களையப்படுகின்றது. ஒற்றுமை ஓங்குகிறது.

மனித நேயமானது மனிதனிடம் தான் காணப்படுகின்றது. மற்றவர்களுக்கு உதவுதல், துன்பத்தில் கை கொடுத்தல், மக்களை நல்வழிப்படுத்தல் என்பன மனிதனிடம் தான் காணப்படுகின்றது.

நட்பு என்பது மனிதனுடைமையில் மிகவும் போற்றப்படக் கூடியதாகும். இந்த நட்பின் மூலம் மனிதன் ஒன்று படுத்தப் படுகின்றமையுடன், ஒற்றுமையும் ஏற்படும்.

மேற்கூறப்பட்டது போன்ற இன்னும் பல நற்குணங்களை மனிதன் கொண்டு காணப்படுவதனால் மனிதனை நான் நேசிக்கின்றேன்

மு.ம பாத்திமா பஹ்மிதா
அந்/அல் இர்பான் மகளிர் கல்லூரி

கவிதை :

அம்மா.

நான் கண்ட உயர்ந்த சிகரம்
அம்மா உன் பாசம்
நான் கண்ட பெரிய கடல்
அம்மா உன் நேசம்
நான் கண்ட உயர்ந்த நட்பு
அம்மா உன் அன்பு
நான் கண்ட உயர்ந்த தெய்வம்
அம்மா எனும் தெய்வம்.

மு. அ. பா. அஸ்ரா
தரம் 7 (C)
அந்/அல் இர்பான் மகளிர்
கல்லூரி.
பொத்துவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு....

அன்று பௌர்ணமி
அழகிய ஒரு நாள்
இரவுக்கு ஒரு நிலவாய்
உலகிற்கு ஒரு ஒளியாய்
ஒளிரும் அந்த நாள் – ஏன்
அமாவாசைக்கும் தான்

ஆம் அன்று நிலவு
பழமையை விட மிகவும்
அழகாய் காட்சி தந்தது

பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது.
வெறும் வட்டத்திற்குள்
இப்படியொரு பிரம்மிப்பு. ரசிக்கும் படியானது.
இறைவனின் படைப்பா படைப்பு
என்வீட்டு முற்றத்தில்
நிலவின் ஒளி பட்டுத் தெறிக்கிறது.
அதை ரசித்த படியே அமர்ந்தேன்.
முற்றத்தில் வைத்திருந்த புன்புட்டியில் அந்த காட்சி
தென்னை ஓலைகளுக்கிடையில் எட்டிப் பார்த்தது நிலா
நானும் அதன் அசைவுக் கேற்றவாறு அசைந்தேன்.

சற்று எழுந்து நடந்தேன் – ஆஹா!
என்ன ஆச்சரியம் நிலவும் கூடவே வருகிறதே.

நிலவுக்குள் எத்தனை உருவங்கள் தெரிகிறது.
அனைத்தும் நம் கற்பனைக் கேற்றவாறு
அதைப் பார்க்கும் போது – என்அம்மா
நிலவைக்காட்டி பாட்டியின்
கதைசொல்லி சோறு ஊட்டியதை ஞாபகம் வருகிறது.
நிலவும் கூடவே வரும்
ஆனால் அதன் அருகாமை யாருக்கோ மட்டும் தான்

கு.வை. பார்த்தியா ரவீந்திரா
தரம் – 7A
அக்/அல்-இர்பான் மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்தில் வாழ்க்கை.

உலகில் வாழும் உயிர் மூன்றெழுத்து.
உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து.
சக்தியின் வடிவம் அன்னை மூன்றெழுத்து.
அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து.
அன்பை உயர்த்தும் அறிவு மூன்றெழுத்து.
அறிவை வளர்க்கும் பள்ளி மூன்றெழுத்து.
பள்ளியிற் கற்கும் கல்வி மூன்றெழுத்து.
கல்வியால் உருவாகும் பதவி மூன்றெழுத்து.
பதவியை சிறப்பிக்கும் இளமை மூன்றெழுத்து.
இளமை தரும் மணம் மூன்றெழுத்து.
மணத்தால் இணையும் மனைவி மூன்றெழுத்து.
மனைவியால் உருவாகும் மழலை மூன்றெழுத்து.
மழலைக்குச் செலவாகும் பணம் மூன்றெழுத்து.
பணத்தினைத் தேடும் கைகள் மூன்றெழுத்து.
கைகள் சோரும் முதுமை மூன்றெழுத்து.
முதுமையின் பின் முடிவு மூன்றெழுத்து.
முடிவின் பின் தேவைப்படும் பெட்டி மூன்றெழுத்து.
பெட்டியில் அடங்கும் பிணம் மூன்றெழுத்து.
பிணம் எடுத்துச் செல்லும் ஊர்தி மூன்றெழுத்து.
ஊர்தி செல்லும் சுடலை மூன்றெழுத்து.
சுடலையில் வைக்கும் கொள்ளி மூன்றெழுத்து.
கொள்ளியில் எரிந்த அஸ்தி மூன்றெழுத்து.
அஸ்தி கரையும் கடல் மூன்றெழுத்து.

ஆக்கம் :-
எம்.எப். பாத்திமா அமானி,
தரம் - 07(B).
அக் / அலீ - இர்பான் ம.க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் கைகொடுத்த சமயோசித புத்தி.

சமயத்தில் கைகொடுத்த

சமயோசித புத்தி

சிவன் நீவு மகா வித்தியாலயத்தில் முதலாம் பாடம் தொடங்குவதற்கான மணி அடித்தது. கணித ஆசிரியர் ஏழாம் தர வகுப்பறையினுள் நுழைந்தார். பாடம் தொடங்கியது. பாடத்தை விளங்கப்படுத்திய ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்தார். அவ்வகுப்பில் நகுலனும் பகீரதனும் அவருக்கு அருகே அமர்ந்திருந்தார்கள். நகுலன் கணக்கு செய்வதில் கவனமாக இருந்தான். அருகிலிருந்த பகீரதன் திருட்டுப் பார்வையுடன் ஒருமுறை நோட்டம் விட்டான். எல்லோரும் தத்தம் கருமமே கண்ணாயிருந்தார்கள். ஆசிரியர் ஒரு மாணவனின் அப்பியாசக் கொப்பியில் திருத்தம் செய்து கொண்டிருந்தார்.

நகுலனின் மேசையில் புத்தம் புதிய உபகரணப்பெட்டியொன்று இருந்தது. அதனை அவன் அன்று தான் முதன்முறையாகக் கொண்டு வந்திருந்தான். அதை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்த பகீரதன் தன் இருப்பிலே மறைத்துக்கொண்டான். ஒவ்வொரு பாடமாக நடக்க நகுலன் தான் களவு கொடுத்ததை உணரவேயில்லை. பாடசாலை விடும் நேரம் நகுலன் தான் புத்தகங்களை ஒழுங்கு படுத்தும் போது தன் உபகரணப்பெட்டி காணாமல் போயுள்ளதை அவதானித்தான். பரபரப்பு ஒவ்வொருவராக விசாரித்தான். ஒருவரும் காணவில்லை என்று கூறினார்கள். நகுலன் கவலையோடு வீடு சென்றான்.

அடுத்த நாள் மூன்றாவது பாடவேளை இடம் பெற்றுக் கொண்டிருந்தது. பகீரதன் தனது பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுக்கும் போது அந்த உபகரணப் பெட்டி கீழே விழுந்தது.

அதைக் கண்ட நகுலன் திகைத்தான். 'அது அவனுடைய உபகரணப் பெட்டி போலவே இருந்தது. நிமிர்ந்து பகீரதனைப் பார்த்தான். அவனைப் பார்க்க முடியாத பகீரதன் வேறுபக்கம் பார்வையைத் திருப்பினான். இதுதான் நேற்று காணாமல் போன உபகரணப்பெட்டி இது எப்படி உன்னிடம் வந்தது? என்று நகுலன் பகீரதனிடம் [illegible] கேட்டான். இது.... இது என்னுடையது உன்னுடையது அல்ல என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகீரதன் அந்த உபகரணப் பெட்டியைக் கொண்டு வாருங்கள் என்று ஆசிரியர் அழைக்கவே பகீரதன் அதை எடுத்துக் கொண்டு சென்றான.

பகீரதன் இது என்னுடைய உபகரணப் பெட்டி என்று நகுலன் கூறுகிறான். இது எப்படி உங்களிடம் வந்தது? என்று ஆசிரியர் வினவினார்.

இது நகுலனுடையது இல்லை நேற்று இது என்னுடையது என்று வாங்கித்தந்தது. என்றான் பகீரதன் இது யாருடைய உபகரணப் பெட்டி என்று உங்களுக்குத் தெரியுமா? என்று ஆசிரியர் மற்ற மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். எல்லோரும் தெரியாது என்று பதில் கூறினார் ஆசிரியருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை

உடனே பகீரதா, இந்தப் பெட்டியின் அடியின் மையத்தில் ஓர் எழுத்து எழுதப்பட்டுள்ளது அது என்ன எழுத்தென்று கூறு பார்க்கலாம் என்றான் நகுலன் பகீரதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ம் ம் கூறுங்கள் என்று ஆசிரியர் பகீரதனை பார்த்துக் கடுமையுடன் கூறினார் பகீரதன் பதில் கூற முடியாது திருதிருவென்று விழித்தான். அது என்ன எழுத்தென்று நீங்கள் கூறுங்கள் நகுலன் என்று ஆசிரியர் கூற எழுத்து எழுதப்படவில்லை என்று புன்னகையுடன் பதில் கூறினான் நகுலன் ஆசிரியர் அந்த உபகரணப் பெட்டியின் அடிப்பாகத்தைப் பார்த்தார். அங்கு ஓர் எழுத்தும் எழுதப்பட்டிருக்கவில்லை

கள்ளன் பிடிப்பட்டதைப் போல பகீரதனின் உடல் நடுங்கத் தொடங்கியது அந்த உபகரணப் பெட்டியை நகுலனின் கையில் கொடுத்த ஆசிரியர் மிகவும் சமயோசித புத்தியுள்ள பையன் என்று பாராட்டினார் பகீரதனின் கையில் பிரம்பால் இரண்டு அடி போட்டார்

ஆ. சப்ரினாஸ்
தரம் - 7B
அக். அல்-இர்பான் மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுகிடு

கல்விக் கூடம் நீ செல்
கலைகள் பல கல்
ஆசான் அறிவுரை கேள்.
அக்கறையோடு படித்து வாழ்!

தோழியருடன் இணைந்து நில்.
தோள் கொடுத்துச் செல்
தீமையை விலக்கச் சொல்
தேன் துளியாய் இனிக்க வாழ்!

மாதா பிதாவை மறக்காதே அவர்கள்
மாந்தருள் மாணிக்கம் சினக்காதே
மூத்தோர் சொல்லைத் தட்டாதே
மற்ற உயிர்களை வதைக்காதே!

ஒழுக்கத்தை உயிராய்க் காத்து
ஒவ்வொரு கணமும் அதைக் கடைப்பிடித்து
பண்புள்ள பிள்ளையாய் நடந்து
பார்ப்போற்ற வாழ்ந்து காட்டு!

உயிர்களிடத்தில் அன்பை ஊட்டு
உத்தம் என்ற பெயரை நிலை நாட்டு
உள்ளக் கலக்கத்தை விரட்டு
ஒற்றுமை என்ற கருத்தை மலையாய் சூட்டு!

By:- AFSAR AHAMED
அக் / அப்ஸின் முஸ்லிம் அகங்க வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆசான்

கல்வி என்கிற கடலைக் கடக்க
அறிவு என்கிற துடுப்பைத் தந்து
நம்பிக்கை என்கிற படகைச் செலுத்த
வாழ்க்கையில் வழி காட்டியவனும் ஆசானே.

அன்புக்கு உறைவிடமாய் அமைந்து
அறிவுக்கு அடைக்கலமாய் விளங்கி
வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருந்து
வாழ வைப்பவனும் ஆசானே.

அணைந்த எம் வாழ்க்கைக்கு
அறிவினால் ஒளியை ஏற்றி
அடையாத இன்பத்தை எமக்கு
அடைய வைத்தவனும் ஆசானே.

மடமை என்கிற அறியாமையை நீக்கி
மண்ணுலகை வெற்றி கொள்ள வந்து
எங்கள் மனதில் மறையாத இடத்தைப்
பிடித்தவனும் ஆசானே.

த. அலக்சனா
6 C
திகோ/ கோணைக்காப்பு சக்தி வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 ஔவையார்

ஔவையார் என்னும் இயற்பெயருடைய பெண்பாற் புலவர்கள் பலர் சங்ககாலம் முதல் பல்வேறு வகையான காலங்களில் தமிழகத்தில் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுள் மூவரை முதன்மையானவர்களாகக் குறிப்பிடலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் அதியமான் என்னும் வள்ளலோடு நட்புக் கொண்டிருந்தார். இவர் அதியமானையும் அவர் மகனையும் பாராட்டி பாடியுள்ளார். அதியமான் பொருட்டு தொண்டைமானிடம் தூது சென்றார். நாஞ்சில் வள்ளுவன் என்னும் பெயருடைய செல்வனது கொடையையும் பாராட்டியிருக்கிறார்.

மற்றோர் ஔவையார் கி.பி 12ம் நூற்றாண்டில் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர். இவருக்கும் கம்பருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாகவும் ஒருவரையொருவர் தாக்கிப் பாடிக் கொண்டதாகவும் பல கதைகள் வழங்கி வருகின்றன. இவர் பாடிய முழுநூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் இவர் பாடியனவாக எழுபது செய்யுட்கள் 'தனிப்பாடல் திரட்டு' எனும் நூலில் உள்ளன.

ஔவை எனும் பெயருடைய வேறொரு புலவர் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார். இவர் ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, ஆக்கொண்டாம் என்னும் நான்கு நீதி நூல்களைப் பாடியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையாரைப் பற்றிய பல நாடகங்களும் "ஜெமினி ஸ்ரூடியோ" தயாரிப்பான திரைப்படமும் வெளிவந்துள்ளன. இவற்றிலெல்லாம் இந்த மூன்று ஔவையார் பற்றிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒருவரே நிகழ்த்தியதாகக் கதை புனைந்துள்ளனர். அதியமான் அளித்த அரு நெல்லிக் கனியை உண்டதனால் சங்ககால ஔவையாரே நெடுங்காலம் வாழ்ந்திருந்ததாக அமைதியும் கூறி வருகின்றனர். ஆனால் அறிவுக்கண் கொண்டு நோக்குவார் அவையெல்லாம் புனைந்துரை என்பதை எளிதில் உணர்வர்.

ஔவையாரால் இயற்றப்பட்ட நூல்களே மூதுரை, நல்வழி ஆகியவையாகும். இவைகள் நீதிகளை அறிவுறுத்துவன. வாழ்க்கை உண்மைகளை எடுத்துரைப்பன. நீதிகளையும், உண்மைகளையும் சிறு சிறு சொற்றொடர்களில் ஆழ்ந்த பொருள் உடையனவாகத் தெளிவு பெற எடுத்துக் கூறுவனவாகும்.

ஆக்கம்
வி. தினேஸ்
6 B
தி/கோ/ கோணேசபுரி சித்தி விநா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகள் என்றும் உன் வசம்

துன்பங்கள் உன் நெஞ்சில்
முட்டுகிறதா?
துயரங்கள் உன் கதவை(த்)
தட்டுகிறதா?

இதயமே உடைந்து போனதாய்
சாய்ந்து விடாதே.
எதுவுமே கிடைக்காதது போல்
ஓய்ந்து விடாதே.

இமயம் வந்தால் இமயமும்
உன் காலடியில்...
இறைவன் நாடினால் புரளலாம்
கோடிகளில்!

தோல்விகள் வெறும்
சம்பவம் தான்...
துணிந்திரு தோழா!
வெற்றி சரித்திரம் தான்.

நிலா உனக்கு பனிநீர் தூவ
விண்மீன்கள் வாழ்த்துரைக்கும்.

வாகைப் பூக்கள் உன்னைக் கண்டு
தலையாட்டும்....
விடியல் உனக்கு நலமாகவும் வரும்
தைரியம் கொண்டு நீ இருந்தால்
இன்பக் கனவுகள்
ஓடி வரும்...!

M.S. FATHIMA SASNA
07 B
M.M.V.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லோரிடம் ஆண்டவன் அருள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல கோயில்களை வழிபட்டுக் கொண்ட திருவதிகைக்கு வந்தார். திருவதிகைக்கு வெளிப்புறத்தில் இருந்த சித்தவடம் என்னுமிடத்தில் இருந்த மடத்தில் தங்கினார். இரவு நேரம் மடத்தில் ஒரு புறத்தில் சுந்தரர் உறங்கினார்

நள்ளிரவு, யாரோ ஒருவர் தம்முடிமீது கால் படும்படியாக வைத்து உறங்குவதை உணர்ந்தார் சுந்தரர் விழித்தெழுந்தார் ஒரு முதிய அந்தணர் உறங்குவதை உணர்ந்தார் "ஐயா! இது என்ன செயல்?" என்று அவரைத் தட்டி வினவினார்.

"ஆம் ஐயா! இதுவுதான் வயது முதிர்ச்சியினால் திசையை அறிந்து கொள்ள முடியவில்லை" என்று பதிலளித்தார் அந்த அந்தணக் கிழவன்

சுந்தரர் கிழவனின் வயதுக்கு இரங்கி, அவர் அப்படியே படுத்திருக்கட்டும் என்று நினைத்து அப்பால் சென்றுத் தாம் போய் படுத்து உறங்க ஆரம்பித்தார். சிறிது நேரம் கழிந்தது மீண்டும் யாரோ ஒருவருடைய திருவடிகள் தன் மீது படுவது போன்ற நிலை எழுந்து பார்த்தார். அதே அந்தணக் கிழவனின் திருவிளையாடல் தான்.

சுந்தரருக்கு கோபம் பொங்கி எழுந்தது. அந்தக் கிழவரைப் பார்த்து கோபித்தார் "ஐயா! இங்கு வந்து என்னைப் பல முறையும் மிதிக்கின்ற நீர் யார்?" என்று படபடப்பாக வினவினார்.

புன்முறுவலுடன் முதியவர் அப்பா! என்னை உனக்குத் தெரியவில்லையா? என்று கேட்டுச் சுந்தரரின் சிந்தனையைத் தூண்டி விட்டு மறைந்து போனார்

சுந்தரரைத் தேடி இறைவன் வந்தான் என்னே பக்தியின் எல்லை தான் என்ன! அடியவர்களை இறைவன் தேடி வந்து அருள் செய்வார் என்பது நமக்கும் தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3813

சிறுகதை

## ஆபத்துக்குதவாத நண்பர்களுடன் நட்பு வைக்காதே

இரு நண்பர்கள் பாதை தவறி காட்டு வழியாகப் பயணம் செய்து கொண்டிருந்தனர். இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியாமல் பயத்தினால் நடுங்கியபடி ஒருவருக்கொருவர் உதவியாக ஒற்றுமையாகச் செல்வதென்கிற வாக்குறுதியுடன் சென்று கொண்டிருந்தனர்.

நடுக்காடு வரை சென்றும் சரியான பாதையைக் கண்டுபிடிக்க முடியாமல் சென்று கொண்டிருந்தனர். அப்போது எதிரே திடீரென்று கரடியொன்று வருவதனைக் கண்டனர். இருவரும் பயத்தினால் நடுங்கினார். அப்போது அவர்களில் ஒருவன் தன்னுயிரைக் காத்துக் கொள்ளவென வாக்குறுதியை மறந்து வேகமாக ஒரு மரத்தினில் ஏறி உச்சியை அடைந்தான். தனது நண்பனைப் பற்றி சிந்திக்கவே இல்லை.

அவனுடன் வந்த நண்பனுக்கு மரம் ஏறத் தெரியாது. கரடியை எதிர்க்கவோ, ஓடவோ அவனால் முடியவில்லை. சில விநாடிகள் சிந்தித்தான். உடனே கீழே படுத்து கிடந்தான். கரடி அருகில் வந்ததும் தன் "மூச்சை" அடக்கிச் செத்தவன் போல் கிடந்தான். கரடி அவன் அருகில் வந்து அவனை நுகர்ந்து பார்த்தது. அவன் இறந்து போய் விட்டான் என எண்ணி அப்பால் போய் விட்டது. கரடி சென்ற பின்பு மரத்தில் ஏறி இருந்தவன் இறங்கி வந்தான். படுத்திருந்த நண்பன் எழுந்து இருந்தான். அப்போது அவன் அருகில் வந்து "கரடி உன்னருகில் வந்து என்ன சொல்லிவிட்டுப் போகிறது." என்று கேட்டான். அதற்கு அவன் "ஆபத்துக்குதவாத நண்பர்களுடன் நட்பு வைக்காதே" எனக் கூறி சென்றான்.

த. துஷாந்தன்
7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறளும் வாழ்வியல் அம்சங்களும்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

மேற்படி குறள் எந்த நன்றியை மறந்தவர்களுக்கும் உய்வுண்டு. ஆனால் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்களுக்கு வாழ்வில் மீட்சியே கிடையாது. எனவே மாணவ உள்ளங்கள் எப்போதும் நன்றி கலந்த உணர்வுடன் வாழ்ந்திடவே திருக்குறள் சுட்டிக் காட்டுகின்றது. வேண்டுமென திருக்குறளின்படி வாழ்ந்து இதுமட்டுமல்ல மேற்படி செஞ்சோற்றுக் கடன் மேன்மை பெற்றவராக இராமாயணத்தின் தீர்த்த கர்ண மகாராஜாவையும், திணையாரத்தில் கொள்ளலாம். கும்பகர்ணனையும் ஒழுக்கத்திறன் பற்றி "ஒழுக்கம் உடைமை" எனும் அதிகாரத்தில் நல்ல பல கருத்துக்களை திருக்குறள் செப்பி நிற்கின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

ஒழுக்கம் மேன்மையானைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானதாகக் கருதப்படுகின்றது. இதற்கு தலை சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக மனுச் சோழன் அவன் பின்பற்றிய நீதியில் ஒழுக்கம் காரணமாக அவன் தன மகனையே தேர்க்காலில் வைத்து பலியாக்க நினைத்ததை மாண்ட சமூகம் மறக்கவோ, நினைக்காமல் இருக்கவோ முடியாது. இது மட்டுமல்லாது நடுவர்களோ மேலும் ஒரு இதனிலே வள்ளுவப் பெருந்தகை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"அழுக்காறு உடையான் கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு"

பொறாமை உள்ளவனிடத்தில் செல்வமின்மை போல ஒழுக்கமில்லாதவனிடத்து உயர்வு இல்லை எனவே தான் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மானுட சமூகத்திற்கு தேவையான வாழ்வியல் அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கி இருக்கின்றது. என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்

ஆக்கம் - S. ருக்மணி - Gr-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடிப்போன வேடர்கள்

அது ஒரு சிறிய கிராமம் அந்த கிராமத்தில் சில வீடுகளே இருந்தன. அந்த கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய கோயில் இருந்தது அந்தக் கோயில் கோபுரத்தில் ஏராளமாய் புறாக்கள் வசித்து வந்தன அந்தக் கோயிலுக்கு வெளியே ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அந்த அரச மரத்தில் சில காகங்கள் கூடுகட்டி வசித்து வந்தன

அன்று காலை கோயிலை ஒட்டியிருந்த ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணி காகத்தை கூவி அழைத்து பழைய சாதத்தை தெருவில் கொட்டினாள் இதனை கவனித்த ஒரு காகம் உடனே குரல் கொடுத்தது காகத்தின் குரலை கேட்டதும் நான்கு திசையிலும் காகங்கள் அங்கே வந்தன.

எல்லா காகங்களும் ஒன்றாய் சேர்ந்து கிடைத்த உணவை பங்கு போட்டு சாப்பிட்டன இதை அந்தப் பகுதியில் இருந்த ஒரு புறா கவனித்துக் கொண்டிருந்தது உணவை சாப்பிட்டு மரத்தில் அமர்ந்திருந்த காகத்திடம் அந்தப் புறா சொன்னது

"ஆஹா" எல்லோரும் எப்போதும் தன் ஒற்றுமையோ சாப்பிடுறீங்க யாருக்கு கிடைக்குதோ அவங்க மட்டும் சாப்பிட்டு மீதி இருந்தா பத்திரப் படுத்தி வெச்சிருந்து அப்புறமா சாப்பிடலாமில்லீயா" என்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிற உணவைப் பங்கு போட்டு சாப்பிடறதுதான் எப்பவும் நல்லது அப்பதான் நமக்குள்ளே அன்பும் ஒற்றுமை உணர்ச்சியும் வளரும்" ஆனால் காகம் சொன்ன இந்தக் கருத்தை அந்தப் புறா ஏற்றுக் கொள்ளவில்லை"

"சரி கொஞ்சமா கிடைச்சா என்ன பண்ணுவீங்க?"

"எவ்வளவு கொஞ்சமா கிடைச்சாலும் சரி கிடைச்சதை நாங்க எல்லோரும் சமமா பங்கு போட்டு சாப்பிடுவோம். நிறைய கிடைச்சாலும் அதையும் சமமா பங்கு போட்டு சாப்பிடுவோம்"

சில நாட்கள் சென்றன.

அந்த கிராமத்திற்கு அருகில் உள்ள ஊரிலிருந்து சில வேடர்கள் வந்தார்கள் அவர்கள் கோயில் மதில் சுவரின் பொந்துக்குள் இருந்த புறாக்களை நோக்கி கற்களால் அடிக்க ஆரம்பித்தார்கள். அனுபவம் வாய்ந்த வேடர்களின் குறி தப்பவில்லை கற்கள் புறாக்களைத் தாக்கின அதில் இரண்டு புறாக்கள் அடிபட்டுக் கீழே விழுந்தன அவர்கள் எறிந்த கல் ஒரு காகத்தின் மீது பட்டு அதுவும் கீழே விழுந்தது

இதைக் கவனித்த மற்றொரு காகம் உடனே குரல் கொடுத்தது அதன் குரலைக் கேட்டு அந்த பகுதியில் இருந்த அனைத்துக் காகங்களும் அங்கே உடனே வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டுக் கீழே விழுந்த காகத்தைப் பார்த்து அவை கோபமடைந்தன. அவை ஆக்ரோஷமாக அந்த வேடர்களை சூழ்ந்து கொண்டு அவர்களைக் கொத்த ஆரம்பித்தது காகங்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத அந்த வேடர்கள் வலியால் கத்திக் கொண்டே அந்த இட-த்திலிருந்து ஓடிப் போனார்கள். காகங்களின் இந்தச் செயலால் புறாக்கள் தப்பித்தன. அடிபட்டுக் கீழே விழுந்த புறாக்களை மற்ற புறாக்கள் காப்பாற்றின.

இப்போது கூட்டத்திலிருந்து அந்தப் புறா காகத்திடம் அன்பான குரலில் பேசியது. "ஒற்றுமை வெல்லும் சக்தி வாய்ந்தது என்று நீ சொன்னது சரிதான். இனி நான் மற்ற புறாக்களிடம் ஒற்றுமையைப் பற்றி எடுத்துச் சொல்கிறேன்."

இதைக் கேட்ட காகம் மகிழ்ச்சியடைந்தது.



ஆக்கம்.
தர-7 V. ஜெர்ஷா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாம்

சொந்த மண்ணில் அகதியாய்
துடிக்கும் எங்கள் மக்களை
வந்துபார் வந்துபார்
அகதி முகாம் சென்றுபார்.

வீடிழந்து வாழ்விழந்து
வேதனைத்தீ சுட்டெரித்து
வாடும் எங்கள் மக்களை
வந்துபார் வந்துபார்
அகதிமுகாம் சென்றுபார்.

உறவிழந்து இருப்பிழந்து
உயிர் பிழைக்கும் நிலையால் இன்று
அகதியென்று பெயர்சுமந்து
அல்லலுறும் மக்களை
வந்துபார் வந்துபார்
அகதிமுகாம் சென்றுபார்.

கடல் கடந்து சென்ற பிள்ளை
கைதாகிப் போன தந்தை
உரிமைக்காகச் சென்ற தம்பி
உறவுக்காக ஏங்கும் அன்னை
பெருந் துயரக் கதையினை
வந்துபார் வந்துபார்
அகதிமுகாம் சென்றுபார்

பொ. கிரிதரா
தரம் - 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையின் சிறப்பு

கல்லைச் சிற்பி கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்.

மண்ணைக் குயவன் கண்டனன்
மக்கள் தாகம் தீர்க்கும்
தண்ணீர் வைக்கும் பானையாய்.
மண்ணை நொடியில் மாற்றினான்.

கரம்பு நிலத்தை உழவனும்
கண்டு நன்றாய் உழைத்தனன்
கரும்பும் நெல்லும் விளைந்திடும்
கழனியாக மாற்றினான்.

பேதையாக ஒருவனைப்
பெரிய அறிஞன் கண்டனன்
அறிவு உணரச் செய்தனன்
மேதையாக மாற்றினான்.

திறமை உள்ள மனிதரைச்
சேர்ந்த பொருள்கள் யாவுமே
சிறந்த நிலையை உற்றிடும்
சிறப்பும் புகழும் பெற்றிடும்

பொ. கவித்திரா
தரம் - 08A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்கள்

பள்ளிப் பருவத்தில்
ஞான உணர்வை அள்ளி வழங்கும்
கள்ளம் இல்லா உள்ளம் கொண்ட
ஆசான்களுக்காய் இக் கவிதை

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரக்
கதவுகளாய் சார்ந்திருப்பவராசிரியர்
குழாம் - அது அழகான கலைகாட்டும்.
அந்தி வானப் பூந்தோட்டம்
அறிவு மணம் நிறைந்த கலைக் கோட்டம்.

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டு
தாழ்கீழே. இது என்றோ புதுமை - அந்த
அந்த மேனி நலம், பாராத மேதையரைப்பாடாமல்
மேதினியில் இருக்கின்றதா கவிதை.

அன்னாரின் நெஞ்சினிலே ஆனந்தம்.
நின்றால்தான் அறிவுமதி தேனாக.
ஈரம் - தோய்ந்த கண்ணீரின்
கரையோரம் கதைகேட்டு நின்றாலே
கவிதை மயில் ஆடுமெழுந்தாடும்.

வறுமைக்குத் துணைபோன வாழ்வுக்கு
சுமையாக வருவதா ஆசிரியர் வேலை.
இங்கே சிறுமைக்குக் கவியாகிப் போமே
கருகுவதா நச் சிரிப்பு மணிமுத்துச் சோலை.

பெற்ற மனம் போல் நமது
பேதமையைச் சுட்டெரித்த
பெரியவர்களாய் வாழ்ந்தார்கள்
மென்மை - எல்லாம் கற்றவர்கள்
வறுமையெனும் துக்கங்களை
அகற்றக் கடவுளிடம் நானும்
நன்றி சொல்வ

செ. நிரோஜினி
தரம்-08 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளின் பங்கு - (சிறுகதை)

ஓர் ஊரில் மூன்று கஞ்சர்கள் நண்பர்களாக இருந்தனர். ஒரு நாள் அவர்கள் மூவரும் பூங்கா ஒன்றில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்கள் தரையில் ஒரு ரூபா நாணயத்தைக் கண்டனர். ஒருவன் குனிந்து அதை எடுத்தான். மகிழ்ச்சியடைந்த அவன் முதியவர் ஒருவர் பரிசுச் சீட்டு விற்பதற்காக இங்கு வருவார். இந்த நாணயத்தை அவரிடம் கொடுத்து பரிசுச் சீட்டு வாங்கி விடலாம். என்றான். இந்தச் சீட்டுக்குப் பரிசு விழுந்து விட்டால் என்ன செய்வது? என்று கேட்டான் இரண்டாமவன். நாம் மூவரும் அதை சமமாகப் பிரித்துக் கொள்வோம். நம் நன்றியைத் தெரிவிப்பதற்காக பரிசுத் தொகையில் ஒரு பகுதியை கடவுளுக்கு காணிக்கையாக கொடுத்து விடுவோம். என்றான். மூன்றாமவன். பரிசுச் சீட்டு விற்பவரிடம் அந்த சீட்டுக்கு முதல் பரிசு முப்பதாயிரம் ரூபா கிடைத்தது. மூவரும் ஆளுக்குப் பத்தாயிரம் என்று பிரித்துக் கொண்டார்கள்.

கடவுளுக்கு நம் பங்கைச் செலுத்தி விட்டு நாளை மாலை வழக்கம் போலப் பூங்காவில் சந்திப்போம் என்று கூறி மூவரும் பிரிந்தார்கள். மீண்டும் மூவரும் சந்தித்தார்கள். யார் யார் கடவுளுக்கு எவ்வாறு பங்கு கொடுத்தார்கள் என்பது பற்றிய பேச்சு எழுந்தது.

முதலாமவன் கூறினான், நான் தரையில் சிறு வட்டம் வரைந்தேன். வட்டத்திற்குள் விழும் பணம் கடவுளுக்குரியது என்று முடிவு செய்தேன். பத்தாயிரம் ரூபாயையும் வீசி அதில் கொட்டினேன். வட்டத்தினுள் ஒரு ரூபாய்தான் விழுந்தது. அதைக் கோயில் உண்டியலில் போட்டு விட்டேன். என்றான் அவன்.

அதற்கு இரண்டாமவன் என் முறை வேறு. நான் பெரிய வட்டம் போட்டேன். வட்டத்திற்கு வெளியே விழுவது கடவுளுக்குரியது என தீர்மானித்துக் கொண்டேன். நீ செய்தது போலவே ரூபாய்களை வீசி எறிந்தேன். ஐம்பது ரூபாய்தான் வட்டத்திற்கு வெளியே விழுந்தது. இதுதான் கடவுளின் பங்கு என்று உண்டியலில் போட்டேன்." என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாமவனோ "நான் உங்களைப் போல் எல்லை வகுத்துக் கொண்டு கடவுளுக்குரிய பங்கைக் கண்டு பிடிக்கவில்லை. ஒரு ரூபாய் கூட வேண்டாம் என்று கடவுள் சொல்லி விட்டார். அதனால் எல்லாப் பணத்தையும் நானே எடுத்துக் கொண்டேன். என்றான்.

கடவுள் வேண்டாம் என்று சொல்லி விட்டாரா? அப்படி நீ என்ன செய்தாய்? என்று இருவரும் வியப்புடன் கேட்டனர். "கடவுளே! நான் இந்த ரூபாய்களை அப்படியே வானத்தில் எறிகிறேன். உமது பங்கிற்கு எவ்வளவு தேவை -யோ அவ்வளவையும் நீர் எடுத்துக் கொள். மீதியை என் பங்காக பூமியில் போட்டு விடவும். என்று சொல்லி எறிந்தேன். கடவுள் ஒரு ரூபாய் கூட எடுக்கவில்லை." என்று நடந்ததை விளக்கினான் அவன்.

ஆக்கம்,
கு. உஸ்னிரா
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. புத்தகம் ஒரு நண்பன்.

எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையன்று இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்க்கை அதனை அழகாக நெறிகளை வகுப்பது நூல். உன்னிடம் எதையும் எதிர்பாராது தன்னை முழுமையாக உனக்கு அர்ப்பணிக்கும் நண்பனே உன் புத்தகம் என்கிறார் அமெரிக்க கவிஞர் லாங்ஃபெலோ.

புத்தகம் அது ஒரு பொக்கிஷம் ஆயிரமாயிரம் அறிஞர்களின் அனுபவங்கள் அதில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. புத்தகத்தை திறப்பவன் அறிவுச் சுரங்கத்தின் வாசலைத் திறக்கின்றான். புத்தகத்தின் பக்கங்கள் வெறும் காகிதங்கள் அல்ல, புதிய ஒரு உலகுக்கு பயணப்போகும் எழுத்துச் செல்வங்கள் அதிசயத் திறவுகள். அறிய பல தகவல்களை அள்ளித்தரும் அட்சய சுரபி. வாழ்வை வழிநடத்தும் சிந்தனைகள், அனுபவங்கள், அறிவியல் உண்மைகள் என்பவற்றின் ஊற்றுக்கள்.

நூலகம் என்பது அறிவுச் செல்வத்தின் கோவிலாக இருக்கின்றது. கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும் இணைத்து வைக்கும் பாலம், எதிர் காலத்தை கணித்துச் சொல்லும் உதவும் ஞானி. இதோ ஒரு காலத்தில் வாழ்ந்த அறிஞர்களுடன் நூல்களின் வாயிலாக உரையாடு.

வாசகனின் நெஞ்சத்தை உருக்கி பண்படுத்துவான். நூலை வாசிப்பவர் நூலாசிரியருடன் மானசீகமாக நட்புக் கொள்ளலாம், கோபமும் கொள்ளலாம் ஏன் சண்டைக்கும் பாய்ந்திடலாம்.

வாசிப்பு என்பது ஒரு அற்புதக் கலை. எழுத்துக்களைக் கூட்டி வாசிப்பது மட்டும் வாசிப்பல்ல, நூல்களைப் புரிந்து படிப்பதும் வாசிப்புத்தான். வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தும் திறனையும் சிந்தனைத் திறனை அதிகரிக்கும், அறிவையும் வளர்க்கும். புதிய புதிய அர்த்தங்களைத் தந்து கொண்டேயிருக்கும்.

கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் மெய்ஞ்ஞானியான சாக்ரடீஸ் தனக்கு விஷம் கொடுக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படும் வரை படித்துக் கொண்டிருந்தாராம். விடுதலை நாட்டுப் புரட்சியாளர் பகத்சிங் தூக்குக் கயிற்றை மாட்டும் வரை படித்துக் கொண்டிருந்தாராம். லெனின் நூலகத்தில் 20 ஆண்டுகள் படித்து ஆய்வு செய்த காரணத்தால் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தையாக விளங்கினார். உங்கள் மனதுக்குப் பிடித்த இன்பமயமான ஓர் இடத்தின் பெயரைச் சொல்லுங்கள் என்று [illegible]டம் கேட்ட போது எனது மனதுக்கு அமைதி அமைதி இன்பத்தை வழங்குமிடம் நூலகமே என்றார். நேரு நான் மறைந்தபின் மலர்மாலைகளை வைக்கக் கூடாது புத்தகங்களையே வைக்க வேண்டும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் இரகசியம் பொறுமை

பொறுமையாக அசைபோட்டு வெற்றிப் பொறுமைக்கு மாற்றும் வல்லமை வாசிப்புக்கு உண்டு. பிரச்சினைகளை எதிர் கொள்ளும்போதும், கவலைகளை குறைப்பதற்கும் சிறந்த வாசிப்பு உறு துணையாகிறது.

ஞானமான சிந்தனைகள் வாசிப்பின் ஊடாக காத்துக் கிடக்கின்றன. அவற்றை வாசிக்க வேண்டும். காற்றைச் சுவாசித்தால் உயிர் வாழலாம். வாசிப்பை சுவாசித்தால் மனிதனாக வாழலாம்.

வாசிப்போம் வளம் பெறுவோம்

பிரியங்கா 11 A

சிந்திக்க
ஒரு துளி

எல்லா உயிர்களும் மகிழ்ச்சியை விரும்புகின்றன. எனவே உன் இருதயத்தை அனைவர் மீதும் செலுத்து. பகைமை ஒருபோதும் பகைமையால் ஒழிவதில்லை அன்பினால்தான் அது அழியும் இதுவே உலக நியதி.

— புத்தர் —

Page



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித நேயம்

நேயத்தில் சிறந்த நேயம் - மனித நேயம்
நேசத்தால் பிறரையும்
நேசிப்பது - மனித நேயம்
நேர்த்தியாய் நடப்பது - மனித நேயம்

தன்னைப் போல் பிறரையும் நேசிப்பது - மனித நேயம்
தவறுகளை மன்னிப்பது - மனித நேயம்
தலைப் புதல்வர்களை உருவாக்குவது - மனித நேயம்
தாரணியையும் போற்ற வாழ வைப்பது - மனித நேயம்

ஆபத்தில் உதவுவதே - மனித நேயம்
அண்டிகளையும் காப்பதே - மனித நேயம்
ஏழை, பணம், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என
ஏற்றத் தாழ்வின்றி வாழ வைப்பது - மனித நேயம்

இயற்கை அனர்த்தங்களினின்று
இமை போல் காப்பது - மனித நேயம்
இன்பத்தைப் பெருக்குவது - மனித நேயம்
இனம் பார்க்காது துக்கத்தில் பங்கெடுப்பது - மனித நேயம்

நேயத்தால் பிறரையும் நேசிக்க வைப்பது - மனித நேயம்
நெருக்கமாய் நீடித்து நிற்பது - மனித நேயம்
நெகிழ்ச்சியினால் உயர்ந்தது - மனித நேயம்
நேரத்தைப் பொன்னாக்குவது - மனித நேயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்வுக்கு உகந்தது - மனித நேயம்
நற்சிந்தனையை வளர்ப்பது - மனித நேயம்
பாவங்களை மன்னிப்பது - மனித நேயம்
பாவிகளையும் நேசிப்பது - மனித நேயம்

மாற்றங்களை ஏற்படுத்துவது - மனித நேயம்
மறுவாழ்வினைத் தருவது - மனித நேயம்
மேன்மை பெற்றது - மனித நேயம்
மெய் வாழ்வைத் தருவது - மனித நேயம்

மனிதனை பூரணப்படுத்துவது - மனித நேயம்
மனிதனின் சிறப்பது - மனித நேயம்
மனிதனைச் சிறக்க வைப்பது - மனித நேயம்
மனித நேயத்தைக் கொண்டு மன்னவர் போற்ற வாழ்க.

திருகோ/ மெதடிஸ்த மிசன் தமிழ் ம.வி

ஆக்கம்:-

சி. விதுஷானா

10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

கவிதை

# துன்பம்



உலகமென்றால் என்ன?
நான் வாழும் வாழ்க்கைதானா?
பந்தங்களை இழந்து
பரிதவிக்கும் நிலைதானா?

என் எஜமான் தானா உலகம்
அவர் ஏச்சும் பேச்சு தானா? வாழ்க்கை
எனக்கென்று சுற்றி வளைக்கப்பட்ட
சிறு கரு
அதற்குள்ளே என் சீவியம்.

அதே சாப்பாடு அதே படுக்கை
அதே கனவுகள்
எப்போதும் என் நினைவுகள்
விபத்துக்குள்ளான பிராணி போல்
துடி துடிப்பு.

என் நினைவலைகள், தேடல்கள்
தேய்ந்து போன எண்ணங்கள்
அத்தனையும் அடங்கிப் போன
என் காலங்கள்

எனக்கென்று எதுவுமே இல்லை
என் மூச்சுக் கூட என் கையில்
இல்லாத காலம்
என் வாழ்க்கை கூண்டில் அடைபட்ட
குருவி போல் ஆகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவற்ற பிராணியானேன்
பகலவன் என் வாழ்க்கையில் ஒளி வீச
பவனி வர மாட்டானோ?
பாரினில் நானோ பரிதவிக்கின்றேன்

கைப்பொம்மையாகிக்
காலமெல்லாம் ஆடுவதுதானோ?
காலமகளின் எண்ணம்
கண் கொள்ளாக் காட்சியெல்லாம்
கண்டுகளிக்க மாட்டேனோ?
கண்கள் ஏங்குது.

கருணை யுள்ளம்
யாருமிங்கே இல்லையென்றே எண்ணுகின்றேன்
உலகம் என்றால் - அது
என் எஜமான் காட்டுவதுதான்
உணர்வென்றால் அது
அவர் உணர்வதுதான்.

உலகம் உருண்டோடும்
வேகத்தில்
எனக்கென்று உருவாகும் காலம்
அப்போதே நானும்
உருக் கொண்டு எழுவேன்.
என்பதை அவர் அறியவில்லையே!

ஆக்கம்:- க.நவதர்சன்.
தரம் -10
தி/கோ| மெதடிஸ்த மிஷன் த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவும் போதை வஸ்தும் இன்றைய சந்ததியைப் பாதித்துள்ளமை.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் எனும் கடமையை மறந்து இன்றைய இளைஞர்கள் போதைப் பொருளுக்கும் கீழ்த்தரமான சினிமாவிற்கும் அடிமையாகியுள்ளனர். என்றால் மிகையாகாது. பாடசாலை செல்ல வேண்டிய நேரத்தை பட மாளிகையிலும் சாராயத் தவறணைகளிலுமே கழிக்கின்றனர் என்றால் அது போதை வஸ்தும் சினிமாவும் ஏற்படுத்திய தாக்கமே எனலாம்.

அவ்வாறு நவீன உலகில் இன்று அபின், கஞ்சா, பியர், கெரோயின் எனப் பல்வேறு போதைப் பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கு அடிமையானவன் ஒரு போதும் திருந்தவே மாட்டான். படிக்க வேண்டிய நேரத்தில் படிப்பை மறந்து, உழைக்க வேண்டிய உழைப்பை மறந்து போதைக்கு அடிமையாகி உள்ளான். இன்றைய இளைஞர்கள் மத்தியில் நவீன தரமான விளம்பர உத்திகளும் சினிமாக்களும் கூட போதைப் பொருட் பாவனையை ஊக்குவிக்கின்றது. எனவும் சினிமாக்களில் தனக்குப் பிடித்த கதாநாயகன் மது அருந்துவதைப் போலவும், புகைப்பதைப் போலவும் வரும் காட்சியை பின்பற்றும் இளைஞர்கள் இன்றும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

இன்றைய இளஞ்சந்ததியினரை பாதிக்கும் காரணிகளில் அடுத்த இடம் பிடிப்பது சினிமாவாகும். சினிமா என்பது ஒரு கலை ஊடகமாக இருந்த நிலை மாறி கவர்ச்சிக்கும் ஆபாசத்திற்கும் உரிய ஓர் ஊடகமாக மாறி வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சியினாலும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் மனிதன் இன்று எத்தனையோ நவீன கண்டு பிடிப்புக்களை மேற்கொண்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் வகையில் கணனித் துறையில் வலையமைப்புகளின் மூலம் இன்று இளைஞர்கள் தகாத தகவல்களையும் காண்கின்றார்கள். தடை செய்யப்பட்டவை ஏனும் பாகுபாடின்றி கண்ட கண்ட கீழ்த்தரமான காட்சிகளை காண்பதற்காக தன் பொன்னான நேரத்தை செலவிடுகின்றான். ஆக்க வேலைக்குப் பயன்பட வேண்டிய பொன்னான நேரத்தை மண்ணாக்குகின்றான். இவ்வாறான இளைஞர்கள் தனக்கும் பயன்படாமல் நாட்டிற்கும் வீட்டிற்கும் சுமையாகின்றான்

ஆண்களைப் போலவே மேலை நாடுகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்களும் கூட போதை வஸ்துக்கு அடிமையாகி உள்ளனர். இதனால் அவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் குறைபாடுகளுடனும் நோய்களுடனுமே பிறக்கின்றது. அவ்வாறு பிறக்கின்ற குழந்தைகள் நாட்டுக்கோ வீட்டுக்கோ எதுவித பயனையும் ஏற்படுத்த மாட்டார்கள். போதைப் பொருளைப் பாவிப்பதனால் உடலில் உள்ள நரம்பு மண்டலங்களும் மூளையுமே பாதிப்படைகின்றது.

போதைக்கு அடிமையானவன் தன்னையும் தன் குடும்பத்தையும் சமூகத்தையும் மட்டுமன்றி உலகையும் தொழிலையும். மறக்கின்றான். தான் உழைத்து தன் குடும்பத்தையும் மனைவியையும் பிள்ளைகளையும் காக்க வேண்டியவன் அவர்களைப் பசி பட்டினியில் வாட விட்டுத் தான் உழைக்கும் பணத்தை போதைக்காக செலவு செய்கின்றான். தன் வறுமையைப் போக்க எண்ணி பெண் வேலைக்குச் செல்ல நேர்கின்றது. அவள் மனைவி வருந்தி உழைக்கும் பணத்தைக் கூட பறித்துக் கொண்டு போய் செலவு செய்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் போதையின் கொடுமை எவ்வளவு இருக்கும் என்பதை உணர முடிகின்றது.

"இன்றைய இளைஞர்களிடம் வாழ்க்கை திரும்ப திரும்ப ஒரு கேள்வி கேட்டுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் வாழ மீண்டும் தயாரா?

செல்வி. அ. தனுஜா
தரம் : 10



"நான் சொல்வது எல்லாம் நடக்கும்!"
"எங்கே சொல்லு?"

"ஆடு, மாடு, கழுதை ...."

செல்வன். இ. டிசாந்
தரம் : 10

நன்றி | புதுக் குடியிருப்பு வாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. சிலேடைப்புதிர்கள்

01. நாக்கு இனிப்பதேன்?
நாய் குரைப்பதேன்?
★ கற்கண்டால்

02. குப்பை தேங்குவதேன்?
குழந்தை அழுவதேன்?
★ எடுப்பாரற்று.

03. இரசம் மணப்பதேன்?
இரத்தம் பெருகுவதேன்?
★ பெருங்காயத்தால்

04. சீதையை இராமன் பிரிந்ததேன்?
நரியன் துயரடைந்ததேன்?
★ அம்மானையிட்டு

05. கீரையை நிலத்தில் அறைப்பதேன்?
கிழவர் நெல்லைச் சுற்றுவதேன்?
★ மசுக்கித்தின்ன.

06. பற்கள் தெரிவதேன்?
பொற்கொல்லன் தட்டுவதேன்?
★ நகை செய்ய

07. குதிரை மிகக் கொழுப்பதேன்?
இலந்த செல்வம் அழிவதேன்?
★ கொள்ளையிட்டு

08. காவல்காரர் கோவலனைக் கொன்றதேன்?
கானா கூடு முட்டுவதேன்?
★ இரட்டைக் கொம்பால்

09. கல்லு தேய்வதேன்?
காற்றாடி பறப்பதேன்?
★ நூலின் உதவியால்

10. அடுப்பதல் சோறு குழைவதேன்?
இறைவிக்கு ராதிகள் அழிவதேன்?
★ தீயினால்.

11. அப்பம் வெந்ததேன்?
காந்தி இறந்ததேன்?
★ சுட்டதால்.

12. வீதியில் பேர் புரண்டதேன்?
வீடு கிடைக்காமல் அலைவதேன்?
★ குடிமிகுந்த.

ஆக்கம்:- எம்.வை.எப். பஹானா
தரம் - 11.
மட்/ அதயிரா மகளிர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. # மனதில் சுமக்கும் கனங்கள்

ஒரு மனோதத்துவ வகுப்பில் ஒரு பேராசிரியர் ஒரு டம்ளரில் சிறிது தண்ணீரை ஊற்றிக் கையில் ஏந்தியபடி மாணவர்களிடம் 'இந்த டம்ளர் எவ்வளவு கனம் இருக்கும்?" என்று கேட்டார்.

மாணவர்கள் பக்கத்தில் இருந்து பல உத்தேச பதில்கள் வந்தன. 'ஐம்பது கிராம்... எழுபது கிராம்... நூறு கிராம்... நூற்றி இருபது கிராம்...

பேராசிரியர் சொன்னார். 'இதை எடை போட்டால் தான் உண்மையான எடை நமக்கு தெரியும். ஆனால் இது ஒருவரால் மிக சுலபமாக சுமக்கும் கனம் தான் இல்லையா?

'ஆமாம்' என்று மாணவர்கள் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

பேராசிரியர் கேட்டார். 'இதை நான் சில நிமிடங்கள் கையில் ஏந்திக் கொண்டிருந்தால் என்ன ஆகும்?'

'ஒன்றும் ஆகாது' மறுபடி ஒருமித்த குரலில் பதில் வந்தது.

'இதை நான் ஒரு மணி நேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்?'

'கை வலிக்கும்' என்று ஒரு மாணவர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

'உண்மைதான். சரி நான் ஒரு நாள் முழுவதும் இப்படியே பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்'

தாங்க முடியாத வலி ஏற்படும். 'கை தசைகள் இறுகி கையை நகர்க்க முடியாமல் போய் விடும்', 'வைத்தியசாலைக்கு போக வேண்டி நேரிடும்"

அந்த பிரச்சினை ஏற்படுவது டம்ளரின் கனம் கூடுவதாலா?

"இல்லை நீங்கள் அதை பிடித்துக் கொண்டிருப்பதால் தான்" என்றனர்.

இந்தப் பிரச்சினை ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?'

ஒரு மாணவன் சுலபமாக சொன்னான். 'அந்தத் டம்ளரை கீழே வைத்தால் போதும்'

பேராசிரியர் சொன்னார் 'மிகவும் உண்மை. ஒன்றுமே இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு எடையைக் கூட தொடர்ந்து நிறைய நேரம் கையில் ஏந்திக் கொண்டே இருந்தால் அது உடலில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்த வல்லது. வாழ்க்கையில் எல்லா பிரச்சினைகளும் அப்படித்தான். அவற்றை உங்கள் மனதில் சிறிது நேரம் வைத்திருந்தால் பெரிய பாதிப்பு இல்லை. ஆனால் அவற்றை நிறைய நேரம் சுமக்க ஆரம்பித்தால் சின்னப் பிரச்சினை கூட உங்களுக்கு வலியை ஏற்படுத்தி விடும். அதனால் எந்த சுமையையும் இரவு தூங்கப் போகும் முன் கீழே இறக்கி வைத்து விட்டு உறங்கச் செல்லக் கற்றுக் கொள்ளுங்கள். வாழ்க்கை எளிதாக இருக்கும். மறு நாளைய பிரச்சினைகளை சமாளிப்பது இலகு." என்றார்.

"கரு முகிலுக்குள்ளும்
ஒரு வெள்ளிக் கீறல்
உண்டு"

பாத்திமா றைஷா
தரம்: 11 X
மட் / ஆயிஷா மகளிர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 58. தாய் மொழி சிறந்தது தான் ஆனால்........

காந்திஜிக்கு நாள் தோறும் நூற்றுக் கணக்கான கடிதங்கள் வந்து குவியும். ஒன்றையும் படிக்காமல் விடமாட்டார் காந்தி. சிருமானவரை அவ்வப் பொழுது பதிலும் எழுதி விடுவார்.

ஒரு நாள் திபெத்திலிருந்து லாமா என்ற ஒருவர் காந்திக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆனால் திபெத்திய மொழியில் அல்லவா இருந்தது. ஆசிரமத்தில் இருந்த யார் யாரிடமோ அதைக் காட்டி மொழிபெயர்க்கச் சொன்னார். ஊசும்..... ஒருவராலும் முடியாது. யாருக் கேனும் அந்த மொழி தெரிந்தால் தானே?

சில நாட்கள் கழித்து இது பற்றி என்ன செய்வது என்று ஆழ்ந்து யோசித்து கொண்டிருந்தார் காந்தி. ஒரு நாள் காலை பளபளவென்று விடியும் சமயம் அவருக்கு யோசனை உதித்து விட்டது. வெடுக்கென படுக்கையில் இருந்து எழுந்து அந்த நேரத்திலே காகிதத்தையும், தன் பேனாவையும் கொண்டு வரச் சொன்னார். அவசர அவசரமாக அந்த லாமாவுக்கு குஜராத்தி மொழியில் கடிதம் எழுதினார். அந்த கடிதத்தை தபாலுக்கு அனுப்பும் போது காந்திக்கு சிரிப்பு வந்து விட்டது. "நம்மைப் போல் அந்த லாமாவும் இக் கடிதத்தை படிக்க முடியாமல் திருமாறுவார்." என்று தனக்கு தானே நகைத்துக் கொண்டதில் வியப்பொன்றும் இல்லையல்லவா?

ஆக்கம் - என்.டீ. எப். ரிஸ்னா
க.பொ.த சாதாரண தரம்.
மட் / அல்ஹிறா மகளிர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியறிவே உலகின் ஒளி

உலக மக்கள் மேன்மக்களாக வாழ்வாங்கு வாழ்வதற்கு அறிவே பிரதானமாகும். இருளை வெல்வதற்கு நமக்கு ஒளி எவ்வாறு முக்கியமானதாய் இருக்கிறதோ அவ்வாறே அறியாமையை வெல்வதற்கு அறிவு அவ்வாறு முக்கியமானதாய் இருக்கிறது. எல்லா உயிரினங்களிலும் மேலாக இறைவன் மனிதனுக்கு பகுத்தறிவு என்னும் சிறப்பறிவை படைத்துள்ளான். அந்தப்பகுத்தறிவே மனிதனை இன்றைய உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளது. பகுத்தறிவைத் துணையாக்கியே மனிதன் மொழிகளை உருவாக்கியுள்ளான். அறிவாலால் புதிய உண்மைகளைக் கண்டறிந்தான். அவற்றை ஏடுகளில் எழுதி வைத்தான், பயன்படுத்தி உலகை வளமாக்கினான். இவற்றை மனிதன் சாதிப்பதற்கு கல்வியை தவிர வேறு உகந்த சாதனம் எதுவுமில்லை. எனவே, அறிவைப் பெற உதவுவது கல்வியாகும்.

கல்வியறிவைப் பெறாதோர் வாழ்வு நிறை வாழ்வாகாது. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்றும் "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றும் "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்றும் உலகப்புலவர் வள்ளுவர் கூறுகிறார். இவற்றிலிருந்து கல்வியின் மகத்துவத்தை நாம் அறியமுடிகிறது. கல்வியறிவு எங்கும் என்றும் உயர்ந்து நிற்கிறது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாகும் என்பதையும் நாமறிவோம்.

மனிதன் தான் பெற்ற கல்வியை கொண்டே உலகில் பல துறைகளிலும் பெருஞ்சாதனைகளை நிலை நாட்டினான்; நிலை நாட்டிக் கொண்டிருக்கிறான்; கலை, கலாசாரம், பண்பாடு, நாகரீகம், அரசியல், இலக்கியம், சட்டம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், வைத்தியம் போன்ற அனைத்துத்துறைகளிலும் இன்று மனிதன் பெரு வளர்ச்சி கண்டுள்ளான் என்றால் அதற்கு அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியானதும், உறுதுணையானதும் கல்வியறிவே ஆகும். அத்துடன் காட்டு வாழ்க்கையிலிருந்து மனிதனை மீட்டு உயர் நிலைக்கு கொண்டு வந்ததும் கல்வியறிவே ஆகும் என்பதை நாம் அறிவோம்.

பழக்கத்தினால் பெற்ற அறிவால் உயர்ந்தவர்களும் உண்டு, அனுபவத்தினால் பெற்ற அறிவால் வாழ்ந்தவர்களும் உண்டு. ஆனால் கல்வியினால் பெற்ற அறிவால் நிலைத்தவர்களோ அதிகம். கற்றவருக்கு மட்டுமல்ல கல்லாதவருக்கும் அறிவுண்டு. அறிவென்பது எல்லா மனிதர்களுள்ளும் அடங்கியுள்ளது. அடங்கிக் கிடக்கும் அவ்வறிவை தூண்டிவிடுவதற்கும், அதன் மூலம் உலகை சீர்மையானதாய் ஆக்குவதற்கும் பெருந்துணையாய் இருப்பதே கல்வி. கல்வி கற்கும் ஆவலைப் பொறுத்தே மனிதனின் அறிவு வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்படும் அறிவைப் பயன்படுத்தியே மனிதன் செயலாற்றி ஆய்வுகள் செய்து, சாதனைகள் புரிந்து உயர்ந்து வருகிறான்.

எத்தனையோ சாதனைகளை மனிதன் படைத்துவிட்டான். அத்தனையும் அவன் கற்றதனால் பெற்ற அறிவினால் உண்டானவையாகும். மனிதன் கலைகளில் இசை, நடனம், சிற்பம், ஓவியம் என வளர்ந்தான். கலாசாரங்களில் சமய சம்பிரதாயங்களில் உயர்ந்தான். பண்பாடுகளைப் பேணித் திகழ்ந்தான். நாகரீகங்களின் மேன்மையறிந்து மிளிர்ந்தான், அரசியலில் ஏற்ற கட்டுப்பாடுகளை தேர்ந்தான், இலக்கியத்தில் எழுதியும் பேசியும் ஏற்றம் பெற்றான், சட்டத்தில் உலகுக்கு ஏற்புடைய முறைகளை வகுத்து ஒழுங்குகளை நிலைநாட்டினான். தொழில் நுட்பத்தில் இயந்திரங்களின் மூலம் காலத்தை துரிதமாக்கி வேண்டிய பொருட்களை செய்து குவித்தான். விஞ்ஞானத்தில் விந்தைகள் புரிந்து சந்திர மண்டலத்தில் இறங்கினான். வைத்தியத்தில் சாதனைகள் படைத்து இருதய மாற்றுச் சிகிச்சையால் வெற்றி பெற்றான். இவை மட்டுமல்ல இன்னும் ஏராளமான சாதனைகளை மனிதன் புரிந்துவிட்டான். அவற்றுக்கெல்லாம் துணையானது அவன் கற்ற கல்வி அறிவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவருக்கும் கல்வி.

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லர் அகத்து"

குற்றங்கள் இல்லாமல் சொல்பவற்றைப் புரிந்து கொள்ள வல்லவர்களின் அவையிடத்தே கற்றறிந்தவரின் கல்வியானது விளக்கம் பெற்றுத் தோன்றும் என வள்ளுவர் கல்வி பற்றி ஓரிடத்தில் கூறினார். கல்வியின் முக்கியத்துவம் இன்று நேற்றல்ல எத்தனையோ வருடங்களுக்கு உணரப்பட்டுள்ள போதும் அக்கல்வியை முறைப்படி நாம் பெற்றுள்ளோமா? அல்லது அதனை அவ்வாறு செயற்படுத்தியுள்ளோமா? எனக் கேட்டால் மிகப் பெரிய வினாக்குறி எம் மனக் கண் முன் தோன்றி மறைகின்றது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான நிலைக்கு கல்வி ஒரு காரணமெனப் பரவலாக கூறப்படுகின்றது. முறையற்ற கல்வி இவ்வாறான பிற்போக்கு விளைவுகளை ஏற்படுத்தியிருக்க அதனை விட்டும் புதிய கல்விச் சீர்திருத்தங்களை இன்று கல்வியாளர்கள் முன்வைத்துள்ளனர். அதில் அனைவருக்கும் கல்வி எனும் தொனிப்பொருள் முதன்மைப்படுகிறது;

'அனைவருக்கும் கல்வி' என்ற அறிவியல் சிந்தனை எல்லா சமூக அமைப்பிலும் முக்கியமாகக் கருதப்பட்ட போதிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனமே இதனை மனித சமூகத்தின் அடிப்படைத் தேவையாக சர்வதேச அளவில் உறுதி செய்தது. இது 1990ம் ஆண்டில் தாய்லாந்தில் "ஜொம்ரியன்' மாநாடு இத்தத்துவத்தை நடைமுறைப் படுத்த கூடு முயற்சியில் ஈடுபட்டது. இதில் உலக வங்கி, சர்வதேச கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டு 2000ம் ஆண்டில் சகலருக்கும் கல்வி வழங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் இவையனைத்தும் ஒரு செயற்படுத்தக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானமா? அன்றி கருத்து மாற்றம் செய்யக் கூடிய வையா? எனும் ஐயம் கல்வியியலாளர்களிடம் ஏற்படாமல் இல்லை. அனைவருக்கும் கல்வி எனும் காலக்கெடு காலாவதியான போதும் 2000ம் ஆண்டில் செனிகல் நாட்டில் 'டாக்கா' நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் இக் கால எல்லை 2015 என நீடிக்கப்பட்டது.

மக்களைக் கல்வி மயப்படுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்பது அனைவராலும் நன்கறியப்பட்ட உண்மையாகும். இதனால் தான் ஆரம்பக் கல்வி ஒவ்வொரு நாட்டிலும் முக்கியமாக அமுலில் உள்ளது. ஆரம்பக் கல்வியானது கட்டாயமாகவும் இலவசமாகவும் வழங்கப்பட வேண்டும் என்பதில் கருத்து இருந்த போதிலும் அது முழுமையாக செயற்படுத்த முடியாமை கவலைக்குரியதாகும்.

1980ம் ஆண்டின் 'யுனெஸ்கோ' 100 வளர் முக நாடுகளில் நடாத்திய ஆய்வின் படி 2/3 பங்கு நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் கல்விக் கென ஒதுக்கி வந்துள்ள தொகையை குறைத்துள்ள தெனவும் 50% நாடுகளில் ஆரம்ப வகுப்புகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள தெனவும் தெரிய வந்துள்ளது. வளர் முக நாடுகளில் வயது வந்தவர்களில் நால்வரில் ஒருவருக்குப் படிக்கவோ வாசிக்கவோ தெரியாது எனக் கூறுகிறது.

யுனிசெப் நிறுவனத்தின் 1997ம் ஆண்டின் உலக சிறுவர் நிலை பற்றிய அறிக்கையால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. சுமார் ஒரு மில்லியன் மக்கள் ஒரு புத்தகத்தை வாசிக்கவோ, தம் பெயரை ஒப்பமிடவோ தெரியாதவர்களாக 21ம் நூற்றாண்டை எதிர் கொள்வர். இந்நிலையால் இவர்கள் கணிப் பொறியை இயக்குவது பற்றியோ, இலகுவான ஒரு விண்ணப்பத்தை நிரப்புவது பற்றியோ பேசவேண்டியதில்லை. இவர்கள் மிகவும் வறியவர்களாகவும் நோயாளர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர்.

அனைவருக்கும் கல்வி எனும் எண்ணக் கருவின் மற்றொன்று கட்டாயக் கல்வி. இலங்கையில் ஒவ்வொரு பிள்ளையும் தமது 14 - 21 வயது வரை கட்டாயக் கல்வியைப் பெற வேண்டும் என்பது சட்டம். ஆனால் இதில் துரதிஷ்டம் என்னவென்றால் 'அனைவருக்கும் கல்வி' என்பது இந்த 14 வயது வரையுள்ள கல்வியெனப் பலர் எண்ணிக் கொண்டிருப்பதுதான், அனைவருக்கும் கல்வி என்பது இவர் தான் விரும்பியவாறு கற்கலாம். அதில் தடையில்லை.

எனவே கல்வி எனும் கண்ணாடி முறையாகக் கையாளப்படும் போதுதான் அதில் ஆளுமை மிக்க விழுமியம் மிக்க சமுதாயம் எனும் பிரதான விம்பம் தோன்றும். இன்றேல், பயனற்ற சமுதாயமே உருவாகும் என்பது திண்ணம்.

ஆக்கம் -
M.A. நிஸானா.
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகில் விஞ்ஞானத்தின் பங்களிப்புகள்

இன்றைய யுகத்தில் மனித முன்னேற்றம் அசுர வேகத்தில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்கலாம். மனிதன் தன் வெறுங் கைகளை கொண்டும், கல்லாயுதங்களை கொண்டும் விலங்குகளை வேட்டையாடி பச்சையூண் புசித்த பண்டைய நிலைக்கும், இன்றைய நவீன தொழில் நுட்ப திறன் நிலைக்கும் பல வித்தியாசங்களும், வேறுபாடுகளும் உள்ளதனை நாம் அறிந்துள்ளோம்.

இந்த வித்தியாசங்களும், வேறுபாடுகளும் உண்டாவதற்கு மனித இனத்தின் வலிமையும், ஆற்றலுமே காரணமாகும். கடலிலும், விண்ணிலும் இறைவன் தனது படைப்புக்களை மறைத்து வைத்துள்ளான். "சிந்திப்போருக்கு பல அத்தாட்சிகளும் உள்ளன" என்ற இறை வாக்கியமே மனிதனை சிந்திக்கவும், கண்டுபிடிக்கவும் தூண்டின எனலாம்.

இன்றைய நவீன உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எம் முன்னோர்களின் தொழில் திறமை வளர்ச்சியை பாராட்டாமல் இருக்க முடியாது. காற்றின் வலிமைக்கே கடிவாளம் பூட்டினான் அன்றைய மனிதன். இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் கடலிலும், விண்ணிலும் பவனி வருகின்றான். பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு சந்திரனுக்கே சென்று விட்டான். விண்ணிலே விமானத்தில் குடியிருக்கவும் தயங்கமாட்டான் இன்றைய மனிதன். இவ்வாறு நவீன உலகுக்கு விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பெரியது. இதனால் மனிதன் பெரும் பயன் அடைகின்றான்.

நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதுதான் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சகட்டம் என்று கூறமுடியாது. ஏனெனில் விஞ்ஞானம் வளர்ச்சி அடையக்கூடிய சாத்தியங்கள் இன்றும் காணப்படுகின்றன. மேலும் அன்று பல மணித்தியாலங்களில் குறைவான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இன்று குறைந்த மணித்தியாலங்களில் பல்லாயிரக்கணக்கான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது விஞ்ஞான வளர்ச்சியின் தேர்ச்சியாகும்.
மேலும் தொழில் நுட்ப தேர்ச்சியும், தொழில் நுட்பமும் மிக சிறப்பாக விருத்தியடையலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வீழ்ச்சிகளை மின்சக்தியாக்கி ஒளியூட்டுவதும், சின்னஞ்சிறிய கண்ணாடி குமிழ்களுள்ளே மின்னை அடக்கி ஒளி ஊட்டும் மனிதனின் சாதனை விந்தையாவும் விந்தையாகும். மேலும் இவ்வுலக மக்கள் தமது வாழ்நாளில் நடைபெறும் விசேட வைபவங்களை ஒளிப்படமாக்கி தாம் விரும்பும் நேரங்களில் பார்த்து மகிழ்கின்றனர். அன்று மிக கஸ்டமாக செய்யப்பட்ட வேலைகள் அனைத்தும் இன்று நவீன இயந்திரங்களால் இலகுவான முறையில் செய்யப்படுகின்றன. மேலும் சூரிய ஒளியை பயன்படுத்தி அடுப்பையும் வாகனத்தையும் இயக்கும் முறையை மனிதன் கண்டுபிடித்தான். இதனால் மக்கள் பெரிதும் பயன் அடைகின்றனர்.

மேலும், விஞ்ஞான வளர்ச்சியால் பல கருவிகள் உருவாகியுள்ளன. இவற்றால் பல உலக மற்றும் சர்வதேச விடயங்களை மனிதன் அறிந்து கொள்கிறான். அதுமட்டுமல்லாமல் நிலத்திலே சுரங்கங்களை தோண்டி குடியிருப்புகளை ஏற்படுத்தி கொள்கிறான். பொதுவாக இவ் விஞ்ஞான வளர்ச்சியினால் அனைத்து வேலைகளையும், சேவைகளையும் செய்வது இலகுவாகின்றது. தற்போது தொடர்பு சாதனங்களின் வருகையினால் ஒரு நாட்டிலோ அல்லது வேறு நாடுகளிலோ நடக்கும் சம்பவங்களை அந்த நிமிடமே அறியலாம்.

இவ்வாறு விஞ்ஞான வளர்ச்சி நவீன உலகிற்கு பாரிய பங்களிப்பு செய்கிறது.

எனவே, இந்த நவீன உலகில் இவ்விஞ்ஞான வளர்ச்சியை மேலும் விருத்தி செய்து எமது எதிர்கால வாழ்வை சுபீட்சமான வாழ்வாக மாற்றியமைப்போம்.

MAF. அதீக்கா
11A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருமிகளை கண்டறிந்தவர் றொபர்ட் கொக்.

ஜேர்மனியின் ஹனோவர் நகரில் ஒரு சுரங்கப் பொறியியலாளரின் மகனாக 1843 ஆம் ஆண்டில் பிறந்தவர் "றொபேர்ட் கொக்".

தமது சிறு வயதிலேயே இறந்த விலங்குகளின் உடல்களை அறுத்துப் பரிசோதனை செய்வதில் அவர் தீவிர ஆர்வம் காட்டினார்.

பூச்சிகள், தாவரங்கள் மற்றும் கனிமங்களைச் சேகரித்து வைப்பதில் அவருக்கு பிடித்த பொழுதுபோக்காக இருந்தது.

தமது 23 வது வயதில் மருத்துவப்பட்டம் பெற்றுக் கொண்ட கையுடனேயே எமிமி (Emmy) என்ற பெண்ணை மணந்து கொண்ட றொபர்ட் கொக்கின் ஆராய்ச்சிகளுக்குப் பிற்காலத்தில் அவரது மனைவி "எமிமி" உறுதுணையாக இருந்தார்.

1870 களில் பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையே இடம்பெற்ற போரின் போது "கொக்" இராணுவ மருத்துவராகப் பணி புரிந்தார்

கொக்கின் 29 வது பிறந்ததினத்தில் அவரது மனைவி பரிசளித்த நுண்ணோக்கி (microscope) அவரின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி வைத்தது.

"நச்சு தன்மையுடைய வாயுக்களாலேயே நோய்கள் தோன்றுகின்றன என்பதே அது வரையில் மருத்துவர்களது நம்பிக்கையாக இருந்து வந்தது.

தனது ஆசானான மருத்துவர் "ஜகோபி ஹென்லியன்" கண்ணுக்குத் தெரியாத உயிரிகளால் தான் நோய்கள் பரவுகின்றன என்ற ஊகத்தை எவ்வாதத்திலாவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

நிரூபித்துக் காட்டிவிட வேண்டும் என்ற நோக்குடன் "கொக்" தொடர்ச்சியாக ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

மூன்றாண்டு காலமாகத் தொடர்ந்து கொக் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவில் ஒவ்வொரு குறிப்பிட்ட நோயும் குறிப்பிட்ட கிருமியினால்தான் உண்டாக்கப்படுகின்றது என்பதை அவர் ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டினார்.

அதைத் தொடர்ந்து காயங்களில் கிருமிகள் தோற்றுவது குறித்த ஆராய்ச்சியில் "கொக்" கவனம் செலுத்தினார். அந்த வகையில் ஆறு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர் காயங்களை அழுக வைக்கும் ஆறு வகைக் கிருமிகளை "கொக்" கண்டு பிடித்தார். நீராவியின் உதவியால் கிருமி நீக்கம் செய்யும் முறையை அறிமுகப்படுத்தியவரும் இவரேயாவார்.

தமது 38வது வயதில் காசநோய், கிருமிகளால் ஏற்படுவதென்றும் அது ஒருவரிடமிருந்து இன்னும் ஒருவருக்கு தொற்றும் தன்மை கொண்டது என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

கொலரா நோய் [வாந்திபேதி] ஐரோப்பிய நாடுகளில் பரவி பலரின் உயிரைக் காவுகொண்ட சமயம் அதனைக் கட்டுப் படுத்தும் நோக்கில் "கொக்" தலைமையில் ஜேர்மனிய அரசு மருத்துவக் குழுவொன்றை உருவாக்கியது.

எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்ற கொக் தலைமையிலான அந்த மருத்துவக் குழுவினர், குட்டைகளை ஒட்டி அமைந்திருந்த குடியிருப்புகளிலேயே கொலரா நோய் உருவாகி வேகமாகப் பரவுவதாகக் கண்டறிந்தது.

கொலரா நோய்க் கிருமிகள் தண்ணீர், உணவு, துணி மணிகள் மூலம் பரவுவதாக நிரூபித்தமைக்கான "ரொபேர்ட் கொக்" அவர்களுக்கு 1905 ல் ஆண்டில் மருத்துவத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1910 ல் இருதய நோய் காரணமாக "ராபேட் கொக்" மரணமடைந்தார்

- முற்றும் -

(படித்து ரசித்தது)

MAF. அத்திக்கா
11 A

மடீ/ அல். அஸ்ஹர் வே. உ. பா.

பெற்றோரை மதித்திடு!
ஈடேற்றம் பெறுவாய்.

பெரியோரை மதித்திடு!
கண்ணியம் படுத்தப்படுவாய்

நாணத்தோடு நடந்திடு!
பெரும் புகழை பெற்றிடுவாய்

பணிவுடன் நடந்திடு!
பக்குவம் படுத்தப்படுவாய்

நல்லவற்றை செய்திடு!
பல நன்மைகள் பெற்றிடுவாய்

கல்வியை கற்றிடு!
உயர்வை பெற்றிடுவாய்.

ARF. பௌஸ்ரா
11 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அன்னையே!

பத்து மாதம் என்னைக்
கருவறையில் சுமந்து
பெற்றெடுத்த என் அன்னையே - நீ
பாசமுடன் அள்ளி அணைத்தாயே

இரவு பகல் பாராது
எறும்பு தீண்டாது
கண்ணை இமை காப்பது போல
காத்து வந்தாயே

கைக்குட்டையாக வேண்டும் நான்
உன் துன்பங்களை துடைக்க
பாதணியாக வேண்டும் நான்
உன் பொற்பாதங்களைச் சுமக்க..

இன்னும் ஏழு ஜென்மங்கள் - வேண்டும்.
நானே அதிலும் உன் மகனாக - வேண்டும்.

உனக்கு ஆயிரம் கோடி நன்றிகள்
நீ என்னை மகனாய் பெற்றதற்கு.

AKF. முபாஸிரா
11A
மம/ அல்- அஸ்ஹர் பெ.உ.பா

அறிஞர் கூற்று....

எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்க முடியாத
வயது இளம் வயது ஆனால் சிந்தித்தே தீர
வேண்டிய வயதும் அதுதான்

- கண்ணதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு வாசிகளுக்கு
## சோறு போட்ட
## சுனாமி

* * * *

பிறவூர் மரமுகரும்......
தொழிலாளரும்
ஊனமுற்ற-

தெருப்பிச்சை காரரும்.....
சுனாமியின் காயங்களுக்கு
நிவாரணமாய்......

சேர்த்தனுப்பிய பொருள்கள்
சுரண்டல் பேர் வழிகளின்
சுராங்களில்.....

பதுங்கி கொண்ட
வரலாசக ளெல்லாம்

எண்ணூ கையிலே......

வேதனைகள் கனத்து
வெந்து கருகுதே! மனசு!

தரங்கெட்டவர் வாழும் ஊரிலே.....
மானமிழந்தவர் உலவும்
மண்ணிலே இன்னும்
உயிர் வாழ்வதோ.....

தன்மானமுள்ளோரார்.... ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்மாவும் மீன்டின்னும்
மினரல் வோட்டரும்
ஆடை வகையும்
அரிசி பருப்பும்

சீனி தேயிலையும்
பிஸ்கட்டும் பல - சரக்கும்....
சமையல் பாத்திரங்களும்
பாய் - படுக்கை விரிப்போடு
நுளம்பு வலைகளும்......

இவர்களுக்கு அள்ளித் தந்த
நல்ல உள்ளங்களுக்கு
நன்றி சொல்ல
நா வரவில்லையே!

இறந்தவர்களின் நினைவும்
மறந்து.....
இரந்து உண்ண வழி
தேடுகிறாரோ!

ஓலமிட்டுத் திரிகிறார்;
கவலையால் அல்ல!
நிவாரணம் போதாதென்று.....
நீலிக் கண்ணீர் வடிக்கிறார்
இந்த ஆண்டுக்கு
உழைக்க தேவையில்லை;
சும்மா இருந்து கொண்டே
சுகமாய் சோறு உண்ணலாம் - என

மீண்டும் ஒரு சுனாமி வந்து
போகாதோ!

என்று கேட்கிறான் நிவாரணம்
பெற!....

ஆக்கம்
M.N.M. பெரோஸ்
அக் | அந் - நூர் ம.வி.
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலந்தி

சிக்கல் இல்லாத் திரவ நூலால்
சிலந்தி வலை பின்னுது!
சின்னச் சின்னப் பூச்சி அதில்
சிக்கிக் கொள்ளப் பண்ணுது!

சிக்கிக் கொண்ட பூச்சி தன்னைச்
சிறுகச் சிறுக உண்ணுது!
சினந்த பசி தணிந்த பின்பு
சிகரம் ஏற எண்ணுது!

தக்க துணை தேடும் துணிந்து
தானாய் ஏறிச் செல்லுது!
தவறிப் பல முறை வீழ்ந்தும்
தன்னம்பிக்கை கொள்ளுது!

சக்தி எல்லாம் திரட்டி ஏறிச்
சாதனையால் வெல்லுது!
சலிப்பு இன்றி முயற்சி செய்தால்
வெற்றி என்று சொல்லுது!

கி | கலைமகள் ம.வி

By:- த. சிதுஷ்விகா 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைக் காலங்கள்!..

பச்சைத் தலைமுடியை
பரப்பி விட்டு
மிச்ச மேனியை மறைப்பதற்கு -
உடை தேடிக் கொண்டிருந்த
அந்த வேப்ப மரத்து நிழலில்
மணல் வீடு கட்டி,
விளையாடி
சக தோழியர்களுடன் - களைப்படச்
சமையல் செய்து - பொய்யாகச்
சாப்பிட்டு -

தூரத்தே பறக்கும்
வானம்பாடி - போல்
நேரம் மறந்தே
கிராமத்துப் புத்தகத்தில்
எங்கள் இளமைக் கால
அத்தியாயங்கள் -
இனிமையாகக் கழிந்தன....

வீட்டுக் குருவியின்
சின்ன மகளுக்கு
செண்பகத்தின்
செல்ல மகனை - மணம் முடித்து
வைக்க
குரல் வளம் கொஞ்சும்
குயில் பாடகி,
கல்யாணப் பாட்டுப் பாட
என் கை வளையல்கள்
இன்னிசை முழங்கியிருக்கின்றன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தில்
காகிதக் கப்பல் செய்து,
வெள்ளோட்டம் பார்த்து
விண் வெளியில்
விதம் விதமாய்ப் பட்டம் விட்டு....
வயல் வெளிப் பரப்பிலும்...
வகிடெடுத்துக் கூந்தலை
விரித்து விட்ட
வாழை மரத்தின் கீழும்
எங்கள் ராஜ்ஜியங்கள் தொடர்ந்தன.!..

இறந்து போன - காக்கைக்கு
இறுதி ஊர்வலம் நடத்தி
இணையஞ்சலி செலுத்தி
புதைத்து -
அழுது... புலம்பினோம் அன்று....
இன்று - உண்மை மரணங்களைக்
கண்டு... அழுகின்றோம்....!

எங்கள் கூடாரங்களான
வேப்பை மரங்களும் -
வாழை மரங்களும் -
இலைச் சோலைகளை
இழந்து, அம்மணமாய்
நின்று கொண்டு,
அழுது, அழுதழுது -
தாத்தாவும் பாட்டியுமாய்
மாறியிருக்கின்றன....

நாங்களும், பாட்டியென்று
பட்டம் பெற்று
நரைபிடிகளாய்
சுருங்கிக் கொண்டிருக்கிறோம்!....

உ. உதயவேணி
தரம் - 11R
கமு/ புறக்கொட்டான் சேனை
- இ.கி.மி. - வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் படைத்தாய்?

கூழுக்கு கையேந்தி வாழவா - அன்றி
வாழ்க்கைக்கு போராடி மாளவா
ஏழையை ஏன் படைத்தாய் இறைவா
ஏழையை ஏன் படைத்தாய் இறைவா?

ஓயாது உழைத்து உடல் மாயவா - அன்றி
ஓடாய்த் துரும்பாகித் தேயவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

வெயிற்கும் மழைக்கும் இரையாகவா - அன்றி
வியர்வையாய்ச் சொரி கரைக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

ஏழையாய் வாடி உழலவா - அன்றி
கோழையாய் ஆவி இழக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

ஆக்கம் - பா. ஜனோனி
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# எறும்பு

சின்னஞ் சிறிய எறும்பே!
சிறப்பு மிக்க உயிரே!
பென்னம் பெரிய உலகிலே
பெருமை உள்ளவன் நீயே!

* *

சுறுசுறுப்புக் கொண்டவனே!
சுற்றி எங்கும் திரிகிறாய்!
உறுதி தன்னை தினம் நீ!
விரைந்து எங்கும் செல்கிறாய்!

* *

ஊர்ந்து செல்லும் உயிரிலே:
உனக்கு சிறப்பு அதிகம்தான்
சேர்ந்து உழைத்து உண்பதில்:
செகத்தில் நீயே முதன்மைதான்

* *

சின்னச் சின்ன உணவினை:
சுமந்து நீயும் செல்கிறாய்!
உன்னில் கால்கள் பட்டாலோ!
உயிரை விட்டுச் சாகிறாய்!

* *

மனிதர் உன்னைப் பார்த்துமே
மண்ணில் வாழ வருகிறாய்!
எனினும் என்னைக் கடித்துமே:
ஏனோ வருத்தம் தருகிறாய்:

* * *

அ. அ. ஜெபாலினா
9 11. B. T/T. Vid



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைந்து போவதில்லை.

நண்பர்களே!
பிரிந்திருப்பதில்
எங்கள்
நட்பு கரைந்து
போவதில்லை......

கரைந்து போக
எங்கள் — நட்பு
உப்பு இல்லை
நண்பா!
எங்கள் நட்பு
வைரம்.......

வருவார் போவார்
ஆயிரம் — மனிதர்
இணைவர் போவரோ?
மனிதன் கொண்ட
நட்பு....?

நட்புக்கே இலக்கணம்
நாங்கள்.
என் நட்பின் கதை
நீ!
இந்தக் கதை படைக்கும்
பேனா நான்....!

பிரிந்திருப்பதால்
நாங்கள்
பிரிந்து போவதில்லை!
நம் நட்பு என்றும்
கரைந்து போவதில்லை....!





ஆக்கம்:
தி. சந்தியா
தரம் - 10B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கமிருந்தால் இதயம் கொடு

இருபது வருடங்கள் இருண்டிருந்தேன் - உன்
இருவிழி வருட வெளிச்சம் கண்டேன்
சுடுகின்ற மழையினில் நனைந்து வந்தேன் - நான்
சுடலையில் வெந்தபின் உயிர்த்து நின்றேன்.

பூக்களில் நிருக்கிரா மடிந்து வந்தேன் - என்
புத்தகம் வேர்விட்டு துளிர்க்கக் கண்டேன்
மார்கழி நிலவினில் வேர்த்து நின்றேன் - ஏன்
சித்திரை வெயிலினில் குளிர் உணர்ந்தேன்.

இதயத்தை பொருந்துனை வைத்துத் தைத்தேன் - என்
விழிகளை பிரிந்துனை வரைந்து வைத்தேன்
பசிக்கையில் பசி என்னும் சொல் மறந்தேன் - விழித்
தவிக்கையில் தூக்கத்தை வழி மறித்தேன்

கடுக்கையில் கொசுவுக்கும் கருணை செய்தேன் - கருங்
காக்கையின் இரவுக்கும் காசு தந்தேன்.
சுள்ளெனத் தருங்சுகம் உன்னாலே - பெரும்
முள்ளெனத் தைப்பது முன்னாலே

நெருஞ்சியில் சுடும் உன் நினைவு - எனை
நிலவுக்கும் அழைக்கும் பெண்ணினைவு
பிரமிடில் புதைக்கும் ஒரு கனவு - சினப்
பெருஞ்சுவர் எழுப்பும் மறுபொழுது

நதியாய் பெருகும் நாளும் உன் நினைவு - எனை
நகை கொண்டு பிடுங்கும் ராப் பொழுது
உயிரைச் செரிக்கும் காதல் உறவு - நீ
'உம்' என்று சொன்னதும் உலகம் எனது .....

ஏ. கௌரிசங்கரன்
தரம் 11 'C'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

அன்புமழை அனைவரும் பெய்ய வேண்டும்
உயிர்களெல்லாம் நிறைவாக ஞானமடையவேண்டும்
தென்றலூடு மலர்களெல்லாம் மலரவேண்டும் - அவை
தெய்வத்தின் பாதமதை சூடவேண்டும்

கல்வியது நிலையாகத் திகழவேண்டும்
கடமைகள் அகமகிழ்ந்து காக்கவேண்டும்
நாளெல்லாம் அகங்காரம் அழியவேண்டும் - என்றும்
நாம் என்றும் கூட்டுறவு வாழவேண்டும்

சாதிமதபேதங்கள் சாகவேண்டும்
சமத்துவமே உள்ளங்களில் பரவவேண்டும்
நாதியற்றுக் கிடப்பவர்க்கும் எங்கள்பெருமிதத்தை - ஒருநாள்
நல்லவன் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்

இதயத்தில் தீமைகொண்ட இன்றுநம்
இதயங்கள் ஒன்றாக உதவவேண்டும்
உதயத்தில் ஒளிவீசும் கதிரவன்போல் - நாம்
உதவுவதில் இணையற்றுத் திகழவேண்டும்

காலத்தே பெண்களெல்லாம் மணமுடிக்க
கரங்கோர்த்து சீதனத்தை புதைக்கவேண்டும்
ஞாலத்தில் பெண்ணடிமை ஓலங்கொடுக்க
சீராய்தினம் வாழ்ந்து காட்டவேண்டும்

(ம. ப. பா.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிக்கோர் பாடசாலை அமைக்கவேண்டும்
எறும்பும் கலையெல்லாம் புகட்டவேண்டும்
ஒழுக்கங்களையதை வாழ்க்கைக்குகந்த - அறங்கள்
ஒவ்வொன்றாய் நாளுக்குநாள் புகுத்தவேண்டும்

காதலுக்கு இருக்கும் புல்லின் உயிரைப்போக்க
கயவாளிகளை நாளும் தொலைப்பதைப்போல்
குறைக்காய் மெய்த்தொண்டு பொய்தான் பேசும் - கயவர்
கருத்துக்கள் நீங்க ஒன்றாய்க் கூடவேண்டும்

திறமையும் பயிற்சியையும் உண்ணவேண்டும்
தித்திக்கும் திராட்சை ரசம் பருகவேண்டும்
பனைவெல்லம் உண்டு தினம் மகிழவேண்டும் - நாம்
பாரம்பட்ட கூடத்தின் கதை கேட்கவேண்டும்

திடமான உறுதிமனம் பூணவேண்டும்
திக்கெல்லாம் வாழுமனம் கூடவேண்டும்
அடிமையையும் கீழ்மையையும் இணையவேண்டும் - நாம்
வாழும்வரை எம்மவர்க்காய் வாழவேண்டும்

ஆக்கம்:-
க. வதுர்சனா
தரம் => 11D, 2012

02 Page



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் பரமசிவம் பிள்ளை

பரமசிவம் பிள்ளை அழகும் இளமையும் உடையவர். அவரை முதன் முதலில் பார்ப்பவர்கள் மன்மதனுடைய மறுபதிப்பு அவர் என்றுதான் கருதுவர். பிள்ளையவர்களுக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. பிறக்கும் போதே செவிப்புலனை இழந்து விட்டார். அவர் பிறவிச் செவிடர். இவர் வளர்ந்து பெரியவராகிவிட்டார். தந்தையார் வைத்துச் சென்ற சொத்துக்கள் நிறைய உண்டு. வங்கியிலே வைப்புப் பணமும் நிறைய உண்டு. வாழ்க்கை தடங்கல் இன்றி ஓடிக்கொண்டிருந்தது.

ஊரார் அவருக்கு பெண் கொடுக்கத் தயங்கி விட்டனர். வெகு தொலைவிலுள்ள ஒருவர் பிள்ளையவர்கள் வசதிபடைத்தவர், அழகானவர், நோய் நொடியற்றவர் என்று கேள்விப்பட்டிருந்தார். பிள்ளையிடமுள்ள இயற்கைக் குறைபாடு அவருக்குத் தெரியாது. தனது தங்கையைப் பிள்ளையவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்க உடன்பட்டிருந்தார்.

பாவம் எதிர்பாராத விதமாக அந்த பிரமுகர் நோய்வாய்ப்பட்டிருந்தார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிள்ளை அவர்களுக்கு செய்தி கிடைத்தது. வரப்போகும் மனைவியின் உடன் பிறந்தானை சென்று பார்க்க வேண்டும் என்று துடியாய் துடித்தார். மருத்துவ மனைக்கு புறப்பட்டும் விட்டார். பிள்ளையவர்கள் எதனையும் திட்டமிட்டு செய்வதில் வல்லவர். தம்முடைய குறைபாட்டை நன்கு உணர்ந்தவர். நோயாளி கூறுவது நம்முடைய காதில் விழாது. அவன் என்ன கூறுவான் தாம் எப்படி பதிலளிக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்தார். தனது சிந்தனையை மனதிலே ஒத்திகை செய்து பார்த்தார்.

முதலில் வணக்கம் கூறுவோம். அடுத்து நோய் எப்படி இருக்கின்றது? என்று கேட்போம். சிறிது குணமாகியிருக்கிறது என்பார். தொடர்ந்து உணவு என்னவென்று கேட்போம். அவர் பால், தேநீர் முதலியன என்பார். வைத்தியர் யார்? என்று கேட்போம். அவர் ஒரு பெயரை கூறுவார் என்றெல்லாம் பேசி முடித்துக் கொண்டார். மருத்துவ மனைக்கு வந்து எப்படியோ நோயாளியின் கட்டிலை அடைந்து விட்டார். உரையாடல் தொடர்கிறது.

நோய் எப்படி? என்று வினவ, அவர் நாளாக நாளாக கூடிக்கொண்டே செல்கிறது. தப்பி பிழைப்பதற்கான அறிகுறியே இல்லை என்றார். அவர் திட்டப்படி நானும் அப்படிதான் நினைத்தேன் என்றார். மறுபடியும் விரைவில் சரியாகிவிடும் என்று கூறிக் கொண்டே "உணவு என்ன உண்கிறீர்கள்" என்று கேட்டார். பிள்ளை கூறிய மறுமொழியை கேட்டு வருந்திய நோயாளி உணவு "மண்" தான் என்று வெறுப்புடன் கூறினார். காது கேட்காத பிள்ளையவர்கள் "சரி அதையே சாப்பிடும்" அதுதான் சிறந்த உணவு என்று தட்டுத்தடுமாறாமல் கூறினார்.

தொடர்ந்து பிள்ளையவர்கள் எந்த வைத்தியர் வந்து பார்க்கிறார்? "எமன் தான் வைத்தியர்" என்று எரிச்சலுடன் கூறினார். அவர் நல்ல வைத்தியர் அவரிடமே காட்டுங்கள் என்று கூசாது கூறிக்கொண்டே மருத்துவர் அடிக்கடி வருகிறாரா? எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று கூறிக் கொண்டே வீடு சென்றார். பாவம்! நோயாளி துயரம் தாளாது வருந்தினார். தன் தங்கையின் திருமணத்தை காணமுடியாதே என்று அழுது புலம்பினார். எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்த அடுத்த கட்டில் காரர் "ஐயா பரமசிவம் பிறவிச் செவிடர் அல்லவா? அவருடைய கதையைக் கேட்டு ஏன் வருந்துகிறீர்கள்" என்று சொல்லிச் சிரித்தார்.

ஆக்கம் :- ம. டிலக்ஷனா

தரம் :- 10E

[illegible] தம்பிலுவில் [illegible]

# கணிதமே கண்!

கணித்துச் சொல்வதே கணிதமாம்
கணிதமே எல்லோருக்கும் கண்ணெனப்படுமே
எண்ணும் எழுத்தும் கண்ணென்று சொன்னதில்
எமக்கது நன்றாய்ப் புரிந்தது தானே!

கோள்கள் நாளும் கோடுகள் மாறாது
நீள்வட்டப் பாதையில் நிதம் சஞ்சரிப்பதை
கணித்தெமக்கு அளிக்கும் கணிதவியலாளர்கள்
கடைப்பிடிப்பதுவும் கணிதமே தானாம்!

ஆதவன் உதயம் அவனியின் மலர்வு
புவனியின் போக்கு புதுப்புது விடயம்
மாற்றத்தின் தன்மை மாறிடும் நேரம்
அனைத்தையும் எமக்கு அறிவிப்பதிதுவே!

கணிதமன்றி கணப்பொழுதேனும்
அவனியில் மக்கள் அவரவர் செயல்களை
நெறி பிறழாது நேர்த்தியாய்ப் புரிதல்
அரிதினும் அரிதே அறிந்திடாய் மானிடா!

விந்தையில் மிகுந்த விஞ்ஞானம் இன்று
முந்திக்கொண்டேகி முழு உலகாண்டு
கற்பனை உலகையும் கடந்துமே சென்றமை
கணிதத்தின் விளைவே கண்டிடாய் மனிதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களுக்கெட்டா கனதூரமென்ன
எண்களுக்கடங்கா எண்ணற்ற செயல்களை
கணிதத்தின் அளவொடு கண்களில் காட்டும்
கருவிகள் இயக்கமும் கணிதத்தின் படியே!

மரத்தின் வளர்ச்சியிலும் மனதை ஈர்க்கும் சங்கீத வளர்ச்சியிலும்
கட்டடக்கலைகளிலும் கவின்மிகு சிற்ப ஓவியக்கலைகளிலும்
அழகை உணர்த்தும் கலை அனுபந்து நான்கிலுமே
இறையோடிக் காணப்படும் இணையற்ற கணிதமே!

மனித வாழ்வின் மாபெரும் வளர்ச்சிக்கு
கணிதமே உறுதுணை கண்டுகொள் மனிதா
இனிவரும் பொழுதெலாம் கணிதத்தில் செலுத்தி
கனியெனச் சுவைப்போம் கணிதத்தை நாளும்

ஆக்கம் :-
க. பிரேனோஜிகா
தரம் :- 11C
திகா/ தம்புதுவில் ம.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய உண்மைகள்

ஆபிரகாம் லிங்கனும் கென்னடியும் அமெரிக்காவின் இரு புகழ் பெற்ற ஜனாதிபதிகள். இவரது வாழ்வும் சாவும் இருந்த ஒற்றுமைகள் பெரும் அதிசயமாகவே கருதப்படுகின்றன.

லிங்கன் 1846 இல் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். கென்னடி 1946 இல் காங்கிரசுக்கு தேர்ந் தெடுக்கப்பட்டார். லிங்கன் 1860 இல் ஜனாதிபதி. கென்னடி 1960 இல் ஜனாதிபதி இருவருடைய மறைவுக்குப் பின் அப்பதவிக்கு வந்தவர்கள் தென்மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். லிங்கனுக்கு பிறகு வந்தவன் அண்ட்ரூ ஜான்சன் அவன் பிறந்தது 1808 இல். கென்னடிக்குப் பிறகு வந்தவன் லின்டன் ஜான்சன் அவன் பிறந்தது 1908 இல்.

லிங்கனைச் சுட்டுக் கொன்ற ஜான் வில்க்ஸ் பூத் 1839 இல் பிறந்தவன். கென்னடியைக் கொன்ற ஹார்வி ஆஸ்வார்ட் 1939 இல் பிறந்தவன் இருவருமே தென் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் பிடிபடுவதற்கு முன்னரே கொல்லப்பட்டவர்கள்.

வில்க்ஸ் பூத், லிங்கனைத் தியேட்டரில் வைத்து சுட்டுவிட்டு ஒரு கிடங்கிற்கு ஓடினான். ஆஸ்வார்ட் கென்னடியை கிடங்கில் இருந்து சுட்டுவிட்டு தியேட்டருக்கு ஓடினான்.

லிங்கன் கொல்லப்பட்ட அன்று தன் பாதுகாவலரிடம் சொன்னார். என்னைக் கொல்ல சிலர் விரும்புகிறார்கள் என்று நம்புகிறேன். அப்படி செய்ய விரும்பினாலும் அதைத் தடுப்பது என்பது முடியாது என்றார்.

கென்னடி தன் மனைவியிடம் கூறினார் அமெரிக்க ஜனாதிபதியை ஒருவன் சுட்டுக்கொல்ல விரும்பினால் அது ஒன்றும் கஷ்டமே இல்லை உயரமான கட்டிடம் ஒன்றில் ஏறிக் கொண்டு டெலஸ்கோப் துப்பாக்கியால் சுட வேண்டியது தான். அதைத் தடுப்பது யாராலும் முடியாது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சொன்ன இரண்டரை மணி நேரத்தில் அவர் சுடப்பட்டார். லிங்கன், கென்னடி ஆகிய இருவருமே மனித உரிமைக்காக போராடியவர்கள். இருவரும் வெள்ளிக்கிழமைதான் இறந்தார்கள். தலையில்தான் சுடப்பட்டார்கள். அப்போது இருவரது மனைவியும் உடன் இருந்தார்கள்.

லிங்கன் போர்ட் தியேட்டரில் வைத்து சுடப்பட்டார். கென்னடி சென்ற கார் போர்ட் கம்பெனி தயாரித்த கார். லிங்கனுக்கு ஒரு காரியதரிசி இருந்தார். அவர் பெயர் கென்னடி. அன்று தியேட்டருக்கு போக வேண்டாம் என்று சொன்னதை அவர் கேட்கவில்லை.

கென்னடியின் காரியதரிசி பெயர் லிங்கன். அவர் டல்லாசுக்குப் போக வேண்டாமென்றதை அவர் கேட்கவில்லை. இப்படி பல ஒற்றுமைகள் இவர் வாழ்விலும் சாவிலும் இருப்பது மாபெரும் அதிசயமாகவே இருக்கிறது.

ந. மு. நிரோன்
தரம் : 10
ஸ்ரீ சுதாகம் வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பத்தின் வளர்ச்சி.

## சட்டகம்

* தொழில்நுட்பம் பற்றிய அறிமுகம்
* தொழில்நுட்ப உபகரணங்களின் உருவாக்கம்
* தொழில்நுட்ப உபகரணங்களினால் ஏற்படும் பிரச்சனை
* இதற்கு தீர்வு காணல்
* தொழில்நுட்பத்தினால் கிடைக்கும் நன்மைகள், தீமைகள்
* நாடுகளில் ஏற்படும் அபிவிருத்தி.

இன்றைய 21ம் நூற்றாண்டைப் பொறுத்தவரையில் தொழில்நுட்பமானது சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இத் தொழில்நுட்பமானது உலகில் இதுவரையும் காணாத மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது பழையன கழிந்து புதியன புகுதல் போலவே இத்தொழில்நுட்பம் உருவாகக் காணப்படுகின்றது. இது மனிதனுக்கு பல வகையிலும் அனுகூலமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு உயர்தரத்தில் காணப்படும் தொழில்நுட்பத்தை பின்வருமாறு நோக்கலாம்.

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பல நவீன உபகரணங்கள் உருவாகியுள்ளன. இவ்வாறு எடுத்து நோக்கும் வேளையில் மின் மற்றும் இலத்திரன் சுற்றைப் பயன்படுத்தி எளிய தொழில்நுட்பம் உருவாகியுள்ளன. இது தற்போது வீடுகளில் பயன்படுத்தும் கருவிகள் மற்றும் உபகரணங்களின் தொழிற்பாட்டிற்கு அவசியமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு தொழில்நுட்பம் மின் உபகரணங்களுக்கு இலத்திரனியல் துணைப்பாகங்களும் அவசியமாகக் காணப்படுகின்றது. அத்துடன் மின் துணைப்பாகங்களும் தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ளவாறு மின் உபகரணங்களின் இலத்திரனியல் துணைப்பாகங்களாகவும் அளி, உலர்மின்கலம், மின்கம்பிகள் போன்ற மின்னியல் துணைப்பாகங்களும் இத்தொழிற்பாட்டிற்கு அவசியமாகக் காணப்படுகின்றது. தடையங்கள், திரான்சிஸ்டர்கள், மாறும் தடையம், கொள்ளளவி போன்ற பல இலத்திரனியல் துணைப்பாகங்களும் உறுதுணையாகக் காணப்படுகின்றது.

இத்துணைப்பாகங்கள் மூலம் பல உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மின்விசிறி, குளிரூட்டி, மின்னடுப்பு, கணினி போன்ற பல உபகரணங்கள் பயன்பாட்டில் காணப்படுகின்றன. இவ் உபகரணங்களின் தொழிற்பாடு அனைத்திற்கும் துணைப்பாகங்கள் பெரிதும் பங்காற்றி மனிதனுடைய தேவைகளை இலகுபடுத்தியுள்ளது.

இவ்வாறு தொழிநுட்பவளர்ச்சியின் மூலம் உருவான உபகரணங்களின் பாகங்கள் பாதிப்படையும் போது அதை நிவர்த்தி செய்வதற்கும் தீர்வுகளை தொழிநுட்பவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். இதன் மூலம் உபகரணங்களின் நம்பகத்தன்மையையும், உறுதியையும் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதற்கென ஒரு செயற்றிட்டம் காணப்படுகின்றது. அதாவது தீர்வுவழிகள், தகவல் பதிவு செய்தல், தகவல் கூற்றுக்களைத் தொகுத்தல், வடிவமைப்புச் சுருக்கத்தை எழுதுதல், வரைக்கூற்று, செயற்பாட்டுத்திட்டப்படத்தை தயாரித்தல், முடிவுப்பொருளை அமைத்தல் போன்ற படிமுறைகள் இதற்குள் உள்ளடங்கப்படுகின்றன.

தொழிநுட்பத்தின் மூலம் நன்மைகள் பலவும், தீமைகள் பலவும் ஏற்படுகின்றன. இதன் நன்மைகளை எடுத்துநோக்குவோமானால் வேலைகளை இலகுவாக்கவும், குறித்த நேரத்துக்குள்ளும் செய்து முடிக்கக்கூடியவாறு இருத்தல், நீண்டகாலப்பாவனை, கவர்ச்சியும் நேர்த்தியும், பொருளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல், கலைத்துவத்தை மேம்படுத்தல் போன்ற பல நன்மைகளைப் பெறக்கூடுகின்றது. இத் தொழிநுட்பத்தின் மூலம் உலகமெங்கும் பரந்துள்ள இலட்சக்கணக்கான தொடர்புகளுக்காக காணப்படும் கணினி வலையமைப்பு தொழிநுட்பவியல் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வளர்ச்சியடைந்து காணப்படும் வகையில் நாம் இணையத்தில் தொடர்பு கொள்ள "மைக்ரோ சொப்ட் இன்ரனெட் எக்ஸ்புளோரர்" எனும் கணினி மென்பொருள் மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும் நோக்குமிடத்து நாம் மின்னுபகரணங்களைக் கொண்டோ அல்லது சாதாரண உபகரணங்களைக் கொண்டோ வேலை செய்யும் போது எமக்கு ஏதேனுமொரு ஆபத்து ஏற்படலாம். அவ்வாறு ஏற்படாமல் தடுக்க பாதுகாப்பிற்காக சில சாதனங்கள் காணப்படுகின்றது. அவையாவன, தலைக்கவசம், காதுக்கவசம், வாய் மூக்குக் கவசம், கண் கவசம், உடல்மேலங்கி போன்ற சிலவற்றைக் கூறலாம்.

இவ்வாறு உயர்ந்த தரநேர்த்தியில் காணப்படும் தொழில்நுட்பமானது நன்மைகள் பல விளைவித்தாலும் தீமைகள் சிலவும் உருவாகின்றது. அவை பின்வருமாறு அதாவது தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மனிதன் பல இயந்திரங்களையும், மின் உபகரணங்களையும் கண்டுபிடித்துள்ளான். இதனால் மக்கள் தமது வேலையை தாமே செய்யாமல் இயந்திரங்களைக் கொண்டு செய்கின்றனர். இவ்வாறு வேலை இலகுபடுத்தப்பட்டாலும் மனிதன் சுறுசுறுப்பின்றி, சோர்வடைந்து, உடல் ஆரோக்கியம் கிடைக்காமல் வலிமை இன்றிக் காணப்படுவார்கள்.

தொழில்நுட்பத்தின் மூலம் அனுகூலம், பிரதிகூலம் கிடைத்தாலும் நாடுகளின் அபிவிருத்தி மேலோங்கிக் காணப்படுகின்றது. உதாரணமாக ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற பல நாடுகள் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக பல உபகரணங்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்கின்றது. இவ்வாறு இந்நாடுகள் செய்வதனால் அரசாங்கம் மற்றும் தனியார் துறையும் பெரும் இலாபங்களைப் பெற்றுக் கொள்கின்றன. இதனால் இந்நாடு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி கண்டு செல்வந்த நாடுகளாகக் காணப்படுகின்றது.

மேலும் இத்தொழிநுட்பமானது தொழிநுட்பவியலாளர்களின் சிறந்த நெறியாய்வின் கீழ் வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனால் தீமைகள் கிடைக்கும் என எண்ணாமல் நன்மைகளையும் மேற்கூறிய விடயங்களையும் கவனத்திற் கொண்டு மேலும் இத்தொழிநுட்பம் வளர்ச்சியை நோக்கிச் செல்ல நாம் அனைவரும் தொழிநுட்பத்தின் பயன்பாட்டை பெருக்கிக் கொண்டு தொழிநுட்பத்தின் வளர்ச்சியைக் காணுதல் வேண்டும்.

N.F. ஜிஹானா
தரம் - 11
தி/சதாம் வித்தியாலயம்
மூதூர் - 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்க்கைக்கு வாசிப்போம்

மட் / மாங்காடு [illegible]
ம.வி

மாணவரது மொழி கற்றல் செயற்பாட்டில் முக்கியமான நான்கு திறன்கள் விருத்தியாக்கப்பட வேண்டியது அவசியம். அவை செவிமடுத்தல் திறன், பேச்சுத்திறன், வாசிப்புத் திறன், எழுத்துத் திறன் என்பனவாகும். இந்த நான்கு திறன்களும் விருத்தியடையும் போது மாணவர் மேன்மை அடைவர். இதில் மாணவரை மேம்படுத்தவும் பல்வேறு விடயங்களை மாணவர் அறிவதற்கும் தூண்டுகோலாக அமைவது வாசிப்புத் திறனாகும். எனவே உரிய காலத்தில் பொருத்தமான நூல்களை தெரிந்தெடுத்து வாசிக்கும் பழக்கத்தை மாணவர் இளம் வயதிலே ஏற்படுத்திக் கொண்டால், அவரது வாழ்க்கை வளமாக அமையும் என்பது அறிஞர்களது கருத்து. இதன் பொருத்தப்பாடு பற்றி நோக்குவோம்.

கல்விக்கு கரையில்லை. ஆனால் படிக்கிறவர்களின் வாழ் நாள் குறைவு. தெளிவாக ஆராய்ந்து பார்த்தால் குறைந்த வாழ் நாளில் வருகின்ற நோய்கள், கவலைகள் பலவாக உள்ளன. எனவே இக்காலத்தில் எல்லா நூல்களையும் கற்க முடியாது. ஆதலால், பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் பருகும் அன்னப்பறவை போல எமக்கு தேவையான முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய புத்தகங்களைத் தெரிந்து எடுத்து உரிய காலத்தில் வாசிப்பதன் மூலம் நாம் எதிர்பார்க்கின்ற பயன்களைப் பெற முடியும். "நூல் பல கல்" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது நம் ஆன்றோர் வாக்கு இது வாசிப்பதன் மகத்துவத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. வாசிப்பதனால் ஒருவருக்கு சொற்களஞ்சிய விருத்தி ஏற்படும். சிறந்த மொழியின் ஊடான வெளிப்பாடு ஏற்படும். எழுத்தாக்க முயற்சிக்கு தூண்டப்படுவார்கள். மொழி விருத்தி ஏற்படும். புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்து விட முடியாது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்ட நாளை ஒக்கும்.

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமைய நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்களை வாசிப்பதில் செலவிட வேண்டும். நூல்களை வாசிக்கும் போது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் அவசியம். எனவே, எவை எவை நல்ல நூல்கள் என்று முடிவு செய்து வாசிப்பதற்கு சிறந்த வழி அனுபவம் மிக்கவர்களின் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வாசிப்பு திறமைகளைச் சீராக்குவதற்கும், நல்ல முறையில வாசிப்பு திகழுவதற்கும் உகந்த வாசிப்புச் சாதனங்கள் ஏராளமாக இருத்தல் வேண்டும். அமைதியான சூழல் இருத்தல் வேண்டும். வாசகரின் மன ஒடுக்கம் கலையாது இருத்தல் வேண்டும். மனதைக் கலைக்கும் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, சிறுபிள்ளைகள் சத்தம் முதலியன இல்லாத ஒரு சூழல் அவசியமாகிறது.

இவையெல்லாம் ஒருங்கே அமைந்தது நூல்நிலையம். அத்தகைய நூல்நிலையங்களை நன்கு பயன்படுத்துவது நமது கடமைகளுள் ஒன்றாகும். வாசிப்போர் சில பண்பியல்புகளைக் கொண்டிருப்பது அவசிய மாகிறது. அவை, வாசிப்பதில் ஆர்வம் இருக்க வேண்டும். வாசிப்பதற்குப் பொறுமை வேண்டும். வாசிப்பதற்குரிய உகந்த புத்தகங்களைச் சரியாகத் தேர்ந்தெடுப்பதற்குத் துணிவு வேண்டும், சுறுசுறுப்பு வேண்டும். வாசித்த விடயங்களை மனதிற் பதித்தல் வேண்டும். என்பனவாகும். நூல்களை வாசிக்க பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றைப் படித்து அதன் வழி ஒழுக நாம் பழகிக் கொள்ள வேண்டும். மனிதன் தன்மையுடையோனாக மாண்புடன் வாழ முடியும். என்பதை உணர்ந்து புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தொகுத்துக் கூறின், நூல்நிலையங்களைப் பயன்படுத்திப் பல்வேறு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்வது இளஞ் சந்ததியினரின் தலையாய கடமை, அவ்வாறு செய்தால் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற முதுமொழிக் கிணங்க. நாம் விரும்பிய அறிஞருடன் தொடர்பு கொண்டு எமக்குத் தேவையான அறிவுப் பசியை தீர்க்கலாம், அதுதான் நாம் வாசிப்பினால் பெறும் பேறு ஆகும். எனவே நாம் வளமான வாழ்க்கைக்கு இளமை முதல் முதுமை வரை வாசிப்போம்.

செ. கோகிலவதனி.
தரம் :- 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கல்வி

காலங்கள் பல கடந்தாலும்
கார் முகில்கள் இடம் மறைந்தாலும்
கரையாத ஒன்று உண்டு
கல்வி எனும் செல்வமதே - - - -

உலகின்னைப் பகைத்தாலும்
உறவு உன்னை வெறுத்தாலும்
உனக்கான துணை என்றால்
உயிர் காக்கும் கல்வியதே - - - -

உன்னாளைப் பொருள் எல்லாம்
உனை விட்டுப் பிரிந்தாலும்
உன்னோடு உறவானதென்றால்
நீ தேடும் கல்வி ஒன்றே - - - -

நிலை மாறும் உலகினிலே
நிலையாக வாழ்வதென்றால்
நிறைவான கல்வியையே
நிரந்தரமாய்ப் பெற்றிடு - - - -



ஆக்கம்
ஜெ. நிரோட்ஸ்
தரம் - 09H

தி/கோ | கண்டியப்பு விக்னேஸ்வரா ம.வி

## ஆசான்.

x —— x

தமிழில் உள்ள அனைத்தையும்
அறிந்து கொண்ட நாள்முதலாய்
அன்புடனே இணைந்து கொண்டேன்
இனிய கல்வி கற்பதற்காய்

அன்பாக இருந்தும் - அருமையாய்
கல்வி கற்று தருபவர்கள் ஆசான்கள்
அனுபவசாலியாகவும் ஆதரவாகவும்
இருப்பவர்களே எங்கள் ஆசான்கள்

கருவறையிலே அன்னையிடம்
கல்வியை கற்றோம்
களங்கமற்ற ஆசானை
கண்டுலகம் காணும் வரை

இமய மலை உயரத்தை
எட்ட வைக்கும் ஆசான்கள்
இயன்றவரை மெழுகாகி
இனிய தீபம் தருபவர்கள்

கற்றுக் கொண்டே அவர்கள்
கற்றுத்தருகிறார்கள் எமக்கு
கற்றுத்தருவதிலும் தவறுவதில்லை
அந்த புனித ஆசான்கள்.

இத்தலமோ அத்தலமோ
எங்கேதான் சென்றாலும்
நற்பேறும் பெற்றுய்ய - நானிங்கு
என் ஆசானை வாழ்த்துகிறேன்.

வி. கீர்த்தாஞ்சலி,
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

சூரியன் உச்சியில் ஏறியிருந்தான். நளீம் மாஸ்டரால் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. வேகமாக எட்டி அடியெடுத்து வைத்தார். பஸ்பிடிக்கும் அவசரத்தை விட நிழலில் ஒதுங்கிக் கொள்ளும் வேகம் அவருக்கு.

"சர்ராஸ்...... முன்னால் சென்ற கார் பிரேக் போட்ட வேகத்தில் ரிவர்ஸ் பண்ணி நளீம் மாஸ்டரை அண்டி நின்றது.

"சேர்..... மாஸ்டர் நின்று திரும்பினார். அடையாளம் கண்டு கொள்ளும் அளவுக்கு ஆள்பிடிபடவில்லை.

"நீங்க........

"சேர் நான் ரத்தம்ப ஒங்களிட்ட படிச்சனான் சேர்" "ஓ அமான் தானே" மாஸ்டருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

எப்படி இருந்தவன் இவன் வளர்ந்து விட்டான் அப்பாடா ரத்தம்ப என்றதுமே கடந்தகால நினைவுகளை அவரது மனம் அசை போட்டது. அவரது முதல் நியமனமே அங்கே தான். இளமை வேகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடுக்குடன் பாடசாலைக்குள் காலடி வைத்தார் நளீம் மாஸ்டர் ஒரேயொரு கட்டிடம் ஒன்பது வகுப்புக்கள் ஒன்பது வகுப்பிலும் நாற்பத்து மூன்று பிள்ளைகள். மூஸம்மில், இல்யாஸ், முஹம்மட் என்று மூன்று வாத்திமார் அவர்களில் ஒருவர்தான் அதிபரும்கூட, சுற்றிவர மரக்கறித்தோட்டம் இயன்றளவு தண்ணீர் ஊற்றி விட்டு எஞ்சிய வேளையில் ஏதாவது படிப்பு நடக்கும்

முதல் நியமனம் பெற்று வந்த நளீம் மாஸ்டருக்கோ உள்ளத்திலே பெரும் போராட்டம் இளமைத்துடிப்புடன் வேலை செய்ய வந்தவருக்கு அங்குள்ள சூழ்நிலையில் எதைச் செய்வதென்ற திண்டாட்டம். இருந்தும் அவரது இதயத்தின் இறுதி முடிவு எமது ஆசிரியத்தின் வெளிப்பாடுகளை மிகச் சரியாகப் பயன்படுத்த இறைவன் அளித்த மிகப் பெரும் சந்தர்ப்பம் இதுவென மனதிலே பதித்தவராக தம் கடமையை ஆரம்பித்தார்.

"சேர் இங்க..... நீங் ------

அமானின் குரல் நளீம் மாஸ்டரின் சிந்தனையைக் கலைத்தது.

"எண்ட பென்சன் ஹஷயமா வந்தனான். நீங்க ------"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சேர் தெஹிவளையில் உள்ள ஒரு பெரிய கம்பனியில் எம்பியாக இருக்கேன். பி.ஏ. பாஸ்பண்ணி சார்டட்டும் முடிச்சிட்டன். அல்லாஹ்ட உதவியால நீங்க மட்டும் இருந்திருக்காட்டி ஊரிலே பேமண்ட வழியே குந்தியிருப்பன் சேர்.


அவனது கண்கள் ஊற்றெடுத்து நா தளதளத்தது. தன் காரில் ஏற்றிக் கொண்டான். கார் சென்று கொண்டிருந்தது. அதே வேகத்தில் மாஸ்டருக்கு கடந்த கால ஒருநாள் நினைவு 'பக்' கென்று படமாக ஓடிக் கொண்டிருந்தது.

என்னடா ஒழுங்கான கொப்பியொன்று கொண்டுவரத் தெரியாதா? ஒருவன். உடும்பார் உடும்ப வந்திட்டார் படிக்க. மற்றொருவன் ஒண்டுமில்லாத ஒனக்கு என்னத்துக்குடா படிப்பு - - - - ? இன்னொரு புறம் கொல்லென்று வந்த சிரிப்பொலி.

வகுப்பறைக்குள் நுழைந்த நஸீம் மாஸ்டரின் காதில் விழுந்த வார்த்தைகள் இவை. அமானின் கண்கள் குளமாக வெட்கத்தால் ஒடுங்கி விம்மிக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தனையும் அவதானித்த மாஸ்டரின் கை, கால்கள் நடுங்கின. பரிதாபப்பட்டவராக வகுப்பறையை அமைதிப் படுத்தினார். என்ன செய்ய ஊருக்கும் பாடசாலைக்கும் புதியவராச்சே. மனிதர்களை மட்டித் தட்டிப் பேசும் பேச்சு மாணவரிடத்திலும் உண்டு என்பதைப் புரிந்து கொண்டார். வயதிலும் சிறியவராச்சே. அமானைத் தனிமையில் அழைத்து ஆறுதல் படுத்தினார்.

அதன் பிறகு ஒரு வார காலமாக அமானைத் பாடசாலைப் பக்கமே காணவில்லை. அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆவை முடித்துக் கொண்ட கையோடு அமானின் வீடு தேடி நடக்கிறார் மாஸ்டர். அமானின் வீட்டைக் கண்டு பிடிக்க சிரமப்பட வேண்டி இருந்தது. ஊருக்குப் புதியவராச்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஓலைக்குடிசைக்குள் இருந்த நோயினால் அவதியுறும் தாயின் அவல நிலையையும் கண்டு கொண்ட மாஸ்டர் அமானின் வாழ்வில் ஒளியேற்ற அவனை வெளிச்சத்துக்குக் கொண்டு வர எண்ணினார். கல்வித் தாகம் இருந்தும் அதைத்தீர்க்க வழியில்லாது திண்டாடும் அமானின் நிலைமையை இனங்கண்டு கொண்டார்.

அடுத்த சில நாட்களில் அமான் புதுக்கொப்பி புத்தகங்களுடன் புது உடை உடுத்தி வந்து நின்ற போது ஆச்சரியப்படாதவர்கள் இல்லை. அன்றிலிருந்து அமான் நளீம் மாஸ்டரின் வழிகாட்டலால் எல்லாப்பாடங் -களையும் கவனமாகப்படித்து வகுப்பில் முதல் மாணவன் ஆனான்.

சேர் இதென்ன சேர்..... ஒன்றும் பேசாம தடுமாற்றத்துடன் கேட்டான். அமான் இல்ல... ஒன்றுமில்ல..... உங்களைப்பார்த்ததும் பழைய நினைவு வந்திச்சி. நளீம் மாஸ்டர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

சேர இரண்டாவது முறையும் நான் ஸ்கூல விட்டு நின்ற போது ஒங்கிட உதவாதான் என்ன இந்த நிலமைக்கி கொண்டு வந்திச்சி.... அமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுணர்வோடு மாஸ்டரைப் பார்த்தான்.

கார் வெள்ளவத்தைப் பகுதியினுள் நுழைந்து அழகிய வீடொன்றின் முன்னால் நின்றது

"வாங்க சேர் உள்ளுக்கு"

வீட்டினுள் நுழைந்த நளீம் மாஸ்டரின் கண்கள் ஓரிடத்தில் குத்திட்டு நின்றன.

இரண்டு தசாப்தங்களுக்கு முன் அப்பாடசாலையை விட்டு மாற்றலாகி வந்த போது அமானும் அவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோவை ஒட்டி அதன் கீழ் அவர அடிக்கடி கூறும்

"உண்மையை பேசி இறைவனைக் காண்பாய்"
"எண்ணமே வாழ்வு அதன் இருப்பிடத்தை உன் இதயமாக்கிக் கொள்"
"அறம் செய விரும்பு அமைவருந்த அடைவாய்"
"ஆயிரம் பதவிகள் வந்தாலும் அத்திவாரத்தை மறந்திடக்கூடாது."
"உயர உயரப் பறக்கும் வானம்பாடி கூட இறுதியில் தான் தன் கூட்டைக் கட்டிக் கொள்ளும்"
"சமூகத் தொண்டே நம்பணி"
"சமயப்பற்றே நம் உயிர்" என்ற வரிகள் பொறிக்கப்பட்டு அதன் கீழ்
"என்னை ஆளாக்கியவரின் நினைவிலிருந்து" என்ற வாசகம் பொறிக்கப்பட்டு இருந்தது.

ஆக்கம்: த. ஷஹீனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக / அவ் ஹாஜ்நாயா மு.வி (மனம் மாறிய நோபல்)

# மனம் மாறிய நோபல்

• ஆல்பர்ட் நோபல், 'டைனமைட்" எனும் வெடிபொருளைக் கண்டு பிடித்து வியாபாரம் செய்தார். இதில் அவருக்குப் பெருமளவு இலாபம் கிடைத்தது. போருக்கு மட்டுமல்ல, பெரிய பெரிய பாறைகளை உடைக்கவும், பள்ளங்கள் உண்டாக்கவும் டைனமைட்டைப் பயன்படுத்து-கிறார்கள். ஆயினும் யுத்தங்களின் போது தான் டைனமைட் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் காலத்தில் நோபல், பத்திரிகையில் ஒரு விளம்பரம் கொடுத்தார். "சற்று வயதான பணக்காரரும் மனைவியை இழந்தவரும்-ான ஒருவருக்கு மனைவியாக, துணிவும் பக்குவமும் உள்ள பெண் தேவைப்படுகிறாள்.

விளம்பரத்தைப் பார்த்து நிறைய பெண்கள் வந்தார்கள். ஆல்பர்ட் நோபல், பிர்த்தா கின்ஸ்கி எனும் பெண்ணை தன் மனைவியாக தேர்ந்தெடுத்தார்.



இருவரும் ஒன்றா வாழ்க்கை தொடங்கிய போதிருந்தே பிர்த்தா, "டைனமைட் விற்பதை நிறுத்துங்கள். இது ஒரு மரண வியாபார இதனால் மக்களுக்கு ஏற்படும் தீமைதான் அதிகம்" என்று நோபலை வலியுறுத்தினாள். இதையே திரும்பத் திரும்ப அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் சொன்னதை நோபல் கேட்கவில்லை. தன் வற்புறுத்தலுக்கு பயனில்லை என்றிருந்த பிர்த்தா, நோபலை விட்டுப் பிரிந்து சென்றாள். ஆயினும் அவரிடமிருந்து வரும் கடிதங்களிலெல்லாம் இந்த அறிவுரை கட்டாயம் இருக்கும்.

ஒரு நாள் நோபலின் சகோதரர் விபத்தொன்றில் இறந்து போனார். பத்திரிகைகள் தவறாக, "ஆல்பர்ட் நோபல் இறந்தார்" என்று எழுதின. இன்னொரு பத்திரிகை "மரணத்தின் வியாபாரி இறந்தார்" என்று தலைப்புக் கொடுத்திருந்தது. டைனமைட் தொழிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலை நிறுத்தும் படி கட்டாயப்படுத்தும் கடிதங்கள் பிரத்தாவிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. மிகவும் மனம் கலங்கினார் நோபல். அவரால் உறங்கவே முடியவில்லை. தீவிரமான யோசனைக்குப் பிறகு ஒரு முடிவிற்கு வந்தார். டைனமைட் வியாபாரத்தை நிறுத்தினார். தன் பெரும் செல்வத்தில் ஆறு சதவிகிதத்தை தவிர மிகுதியையெல்லாம் மருத்துவம், இரசாயனவியல், இயற்பியல், இலக்கியம் ஆகியவற்றில் சாதனை புரிந்தவர்களுக்கு பரிசளிப்பதற்காக ஒதுக்கி வைத்தார்.

1901 - ஆம் ஆண்டு முதல் எல்லா வருடமும், நோபலின் நினைவு நாளான ஒக்டோபர் பத்தாம் திகதி நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நோபல் பரிசு உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பிரத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

# சிட்டுக் குருவி போல...

கூடு கட்டக் குருவிக்கு யார்
சொல்லிக் கொடுத்தது
கூடி வானில் பறக்க யாரோ
கற்றுக் கொடுத்தது.

ஜோடி சேர்ந்து வாழ யாரோ
சொல்லித் தந்தது
தேடி உணவை உண்ண யாரோ
காட்டிக் கொடுத்தது.

கிழக்கு வெளிக்கும் முன்னே குருவி
களித்துப் பாடுது
விளக்கு வைக்கும் முன்னே கூடு
விரைந்து செல்லுது.

முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து
மகிழ்ந்து வாழுது
சிட்டுக் குருவி போல நாமும்
சேர்ந்து வாழுவோம்.

கி. சுகந்திரா
தரம் = 08
மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயில்வோம்

தேன் இருக்கும் இடத்தினை
தேடி வரும் வண்டு போல்

சீனி உள்ள இடத்தினை
தேடி ஊரும் எறும்பு போல்

பழம் நிறைந்த சோலையை
பார்த்துச் செல்லும் கிளியைப் போல்

வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

பள்ளமான இடத்தினை
பார்த்துப் பாயும் வெள்ளம் போல்

நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயில்வோம்.

செ.. கோகுலகிருஷ்ணா
தரம் - 06
மட் / மகிழடித்தீவு சரஸ்வதி வித்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பதற்கு விடுங்கள்

பாலை மட்டும் பிரித்துப் பருகும்
அன்னப்பறவைகள் அல்ல நாங்கள்
ஊற்றுகின்ற அத்தனையும்
ஏற்றுக் கொள்ளும் சின்னச் சின்ன
வெற்றுப் பாத்திரங்கள் – நாங்கள்
நல்லறிவைக் கொண்டு நிரப்புங்கள் !

சிந்தை மகிழ்ந்து சில்லுக்கோடு விளையாடிய
சிறுவர்கள் நாங்கள் - ஷெல் அடி கேட்டு
சிதறிக் கிடக்கின்றோம்
இந்த பொல்லாத போரை விட்டு விட்டு
கொஞ்சம் பொறுமையாயிருங்கள்
வாயடைத்திருக்கும் எங்களைக் கொஞ்சம்
வாய்விட்டு சிரிக்கவாவது விடுங்கள்!

வட்டமடித்த வானில்
வலம் வரத் துடிக்கும் சின்னஞ்சிறு
சிட்டுக் குருவிகள் – [illegible]
சிறகடித்துப்பறக்க [illegible]
இறக்கைகள் [illegible] – சிறிதளவாவது
இரக்கம் [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்புகள் பல செய்யும்
குட்டிச் சுட்டிப் பிள்ளைகள் நாங்கள்
குழறுபடி செய்து விட்டால் - சட்டென்று
திட்டி விடாதீர்கள் - எம்மைத்
தொட்டுத் தடவி மன்னித்து விடுங்கள்.



சின்னஞ் சிறுசுகள் எங்களின்
சிந்தனையில் உதிக்கும்
எண்ணக்கருக்களை
என்னவென்று பாராமல்
தட்டிக் கழிக்காதீர்கள் - கொஞ்சம்
தட்டிக் கொடுங்கள்.

காலை கதிரவன் கதிர்பட்டு
காய்ந்து விடும் பனித்துளிகளல்ல நாங்கள்
காலையில் உதித்து மாலையில் உதிரும் மலர்களல்ல - நாங்கள்
நாமெல்லாம் ஒன்று சேர்ந்து
நாட்டை ஆளப்போகும்
நாளைய தலைவர்கள் - எங்களை
மனதாரப் போற்றுங்கள்.

MF. ஹாதிகா
09A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த குடை.



உருவம் உடைந்தாலும் அதன்
உயிர் உடையவில்லை இன்னும்
உடைந்த கைப்பிடிக்குள்
சிக்கித் துடித்து அதன் உயிர்
பழைய நினைவுகள்
வந்து விழுந்து வாட்டியது.
அதன் இதயத்தை.



வெயிலிலும் மழையிலும்
கைப்பிடித்த தோழன்
வெப்பத்தின் கதிர் வீச்சுக்களை
கேடயம் பிடித்துத் தாங்கி
போரிட்ட மகா சோழன்



கால மாற்றங்களில்
அதன் அழகிய சிலை மேனியின்
வெளிச்சம்
மங்கத் தொடங்கியது
கறைகள் வந்து
அதில் தன் இருப்பிடத்தை
அமைத்துக் கொண்டன.




அதன் கூரை வழியே
சூரியனின் — வெளிச்சத் துளிகள்
வீழ்ந்த தரையால்
ஓ! ஓட்டை விழுந்தது.
இனி இதனைப் பயன்படுத்துவது
தனக்கே இழிவு
என்று நினைத்தான் — அதன்
பயனைப் பெற்றவன்
மறுநாள் குப்பைத் தொட்டியை
தன் இருப்பிடமாக்கிக் கொண்டது.
அந்தக் குடை.

NMF. சிபானா
09C.

# வெண்கட்டி.

சுண்ணாம்பால் உருவாக்கப்பட்ட
சிகரமே!
சுகந்தமான சுக வாழ்வு உனக்கு.
நீ நீடுழி வாழ்க!



உன்னால் கற்பிக்கப்படும்
உயர்வான கல்வியை
உயிர் இருக்கும் வரை மறக்க
மாட்டோம்.

உன்னால் உருவான
மாணவர்கள்
உலகினில் உயர்வாக
வாழ்கிறார்கள்

வையகம் போற்றும்
வைத்தியர்களாகவும்
பொன்னான பொறியியலாளர்களாகவும்..

வெண்கட்டியென புகழ் அடைந்த நீ
உன் மனதாலும் வெண்மையே!
ஏணியில் நீ உருவாக்கியது
பயனுள்ளவர்களை.

ALF. சஸ்னா
09C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

# உலக நாடுகளின் பண அலகுகள்.

01. இலங்கை - ரூபா
02. அமெரிக்கா - டொலர்
03. ஜேர்மன் - மார்க்
04. இங்கிலாந்து - ஸ்ரேலிங் பவுண்.
05. சவூதி அரேபியா - ரியால்.
06. சுவிற்சலாந்து - பிராங்
07. இந்தியா - ரூபா.
08. பிரான்ஸ் - பிராங்.
09. பாகிஸ்தான் - ரூபா.
10. ஈராக் - டினார்.
11. சிங்கப்பூர், கனடா - டொலர்.
12. பிரேசில் - குருசியரோ
13. தென் கொரியா - வொன்
14. ஆர்ஜென்ரீனா - பெசோ
15. லெபனான், எகிப்து - பவுண்.
16. நோர்வே - குரோனர்.
17. இந்தோனேசியா - ருபியா.
18. நேபாளம் - ரூபா.
19. தாய்லாந்து - பாட்
20. துருக்கி - லீரா
21. குவைட் - டினார்.
22. ஓமான் - திர்ஹாம்.
23. மலேசியா - ரிங்கிட்
24. கட்டார், லிபியா - றியால்
25. ஐரோப்பிய ஒன்றியம் - யூரோ.
26. ஜப்பான் - யென்
27. டென்மார்க் - குரோன்.
28. பங்களாதேஷ் - டாகா
29. இத்தாலி - லீரா.


ம.ம | ஹைதாவூர் அல். அஸ்ஹர் ம.வி.
IF. அஸ்லா. 08A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளும் அவற்றுக்கான சிறப்புப் பெயர்களும்

01. தெற்கேயுள்ள பிரித்தானியா - நியுசிலாந்து.
02. பொற்கோயில் நகரம் - இந்தியா.
03. பொன் வாயில் நகரம் - சான் பிரான் சிஸ்கோ.
04. ஏழு குன்றுகளின் நகரம் - ரோம்.
05. இருண்ட கண்டம் - ஆபிரிக்கா.
06. நைலின் கொடை - எகிப்து.
07. இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை
08 மத்திய தரைக்கடலின் திறவுகோல் - ஜிப்ரோல்டா.
09. சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்.
10. நள்ளிரவுச் சூரிய நாடு - நோர்வே.
11. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிற்சர்லாந்து.
12. புனித நாடு - பலஸ்தீன்.
13. உலகத்தின் கூரை - திபெத்.
14. சீனாவின் துயரம் - குவாங்கோ நதி.
15. ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி.
16. சர்க்கரைக் கிண்ணம் - கியூபா.



மரியாதை பிறக்கும்

ம.ம/ ஜனாபுர் அலி - அஸ்கர் பெ.உ.பா

FF. ஜனானி. 08C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுத்தமிழின் சிறப்பு.

ஒருவர் தனது கருத்தின் நிகழ் பொருளை மற்றவர்களுக்கு விளக்கவும் தான் பிறர் கருத்தை விளங்கிக் கொள்ளவும் இலகுவான சிறந்த கருவியாக விளங்குவது மொழியாகும். மொழியானது பேச்சு மொழி எழுத்து மொழி என இரு பிரிவுகளை உடையது. சில மொழி பேச்சு வழக்கில் மட்டும் வாழ்கின்றன. சில மொழிகள் கல்வெட்டில் வாழ்கின்றன. இதில் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் வளர்ச்சி பெற்றது தான் தமிழ் மொழி. நாம் பேசும் பொருளுக்கேற்ப வேறுபாடான குறியீடுகளைக் கொண்டது. பேச்சு மொழி - பேச்சு, எழுத்து இரு மொழிகளுக்குள் தோன்றியதும் அதிகம் பயன்படுவதும் பேச்சுத் தமிழேயாகும்.

தமிழ் மொழிப் பயன்பாடுடையவர்களைப் பொறுத்த வரை இளமை தொடக்கம் முதுமை வரை எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருவது பேச்சுத் தமிழேயாகும். பேசுகின்ற ஒவ்வொருவரும் இவ்வாறுதான் பேச வேண்டும் என இலக்கணம் கற்ற பின்பு பேசுவதில்லை. அன்றாட வாழ்க்கையில் சொந்தமோ உறவாகும் போது தங்களை அறியாமலே பாமரர் முதல் பண்டிதர் வரை பயன்படுத்துவது பேச்சுத் தமிழாகும்.

பேச்சுத்தமிழ் உரையாடும் போது பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபாடு உடையதாக காணப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் என பேச்சு வழக்கு வேறுபடுகிறது. இதன் அடிப்படையில் தான் பேசுவோர் எப்பிரதேசத்தவர் என்பதை பேசும் மொழியினைக் கொண்டு அறியலாம்.

பேச்சு மொழியானது தமிழ் மொழிக்கு உயிர் போன்றதாகவும் எழுத்து வழக்கு உடல் போன்றதாகவும் அமைகிறது. படித்த மக்களின் பேச்சிலுள்ள இலக்கணமும் பாமர மக்களின் பேச்சிலும் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுத் தமிழானது வயதுக்கேற்பவும் சந்தர்ப்பத்திற்கேற்பவும் சூழலுக்கு ஏற்பவும் வேறுபடுகின்றது. படித்தவர்களாக இருந்தாலும் பாமரராக இருந்தாலும் தாங்கள் தொடர்பு கொள்கின்ற சூழலைப் பொறுத்து பேச்சு மொழி வேறுபடுகின்றது. உதாரணமாக கல்லூரி விரிவுரையாளர் விரிவுரை நிகழ்த்துவது போன்று வீட்டிலுள்ளவர்களுடன் உரையாடமாட்டார்.

கொச்சையாக பேசுகின்ற சமூகத்தில் தூய தமிழ்ப் பயன்பாட்டை எதிர்பார்க்க முடியாது. இன்னும் இலக்கிய வழக்கில் கூட பேச்சு வழக்கையே கொண்ட சொற்கள் இடம்பெறுகின்றன. உதாரணமாக சிறுகதை, நாவல் போன்றவற்றில் பேச்சு மொழியே கூடுதலாக இடம்பெறுகின்றன.

செம்மொழியாகிய தமிழ் மொழியின் பேச்சு மொழியின் ஊடாக எமது உள்ளத்து உணர்வை வெளிக்காட்டுவது போல எழுத்து வழக்கில் வெளிக்காட்ட முடியாது. உதாரணமான கோபம், சாந்தம் போன்றவற்றை பேச்சு வழக்கில் அனைவருக்கும் புரியும் வகையில் வெளிப்படுத்த முடியும்.

பு. விஜேவதனி.
தரம் - 9



“அன்பான சொல் மருந்தாகவும் இருக்கிறது. வாழ்த்தவும் செய்கிறது”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தி/மூ/ கடற்கரைச்சேனை அ.த.க.வி

# கவிதை

## வானம்

வானம் ஒன்று தான் பூமி ஒன்று தான்
மனித ஜாதியும் ஒன்று தான்
உள்ளம் ஒன்று தான் உண்மை ஒன்று தான்
உலக நீதியும் ஒன்று தான்
என்று பூமியில் போர்கள் ஓயுமோ
நன்மை காண்பதும் அன்று தான்

எத்தனை அரசுகள் எத்தனை அரசுகள்
எத்தனை எத்தனை அரசுகள்
உலக சரித்திர ஏடு இருந்தால்
எட்டுத் திசைகளும் இரத்தங்கள்
போர்களை ஒழிக்க பூமி படைப்போம்
புராணங்கள் பாவங்கள்
போர்க்களம் எங்கும் பூச்செடி வைத்து
பூப்பறிப் போமே வாருங்கள்




ஆக்கம்
பி.சுகிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளைக் குடிக்கும் ஆயுதம் எல்லாம்
அலை கடலுக்குள் விழ வேண்டும்.
இன்னொரு யுத்தம் இந்த பூமியில்
இல்லை என்பதோர் நிலை வேண்டும்
கொஞ்சும் புறாக்கள் பீரங்கிகளில் வந்து
கூடு கட்டவே இடம் வேண்டும்
கொடி பிடிக்கும் நாடுகள் எல்லாம்
கொள்கையில் நெருங்கி வர வேண்டும்.



ஆக்கம்
வி. சுஜித்ரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

## என்று தணியும் எனது தாகம்

சோலை மர நிழலெல்லாம்
　　சோகமின்றி வாழ்ந்த நாம்
ஓயாத செல்லடியால்
　　ஓலமிட்டு ஓடி வந்து
உள்ள உறவும் ஏதுமின்றி
　　தவித்து நின்றோம்!

சீரோடு இருந்த எம்
　　தாய் தமிழ் பூமியிலே
செழித்து நிமிர்ந்தவுடன்
　　சிதறியது எம் வாழ்வு!
அகதியென்ற பெயர் சூட்டி
　　அமர்த்தி வைத்தீர் அல்லலில்!

நலம் கேட்டில்
　　நண்பர்களின் பந்தம்?
நினைத்துப் பார்த்திருந்தால்
　　நிலையற்ற இவ்வாழ்வை!
செவ்வானில் காத்திருந்து
　　உயிர் மீண்டும் கலைகளோடு
　　தெரிந்து விட்டு வரும் வாழ்வு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பார்வைகளை இணைத்தால்

இந்தப் பாதை மாற்றத்தில்

படிக்க மனம் வருமா?

வென்றெடுத்து கூட்டமைக்கும்

எம் உயிர் இன்னும் எம்

சொல்வதென்று சொல்லியில்லை!

இப்படியிருக்க போடு

எப்போது முடியுமோ?

எம் உடை பார்க்க

இன்னொரு நாளையோ என்று

பல வருடம்

எங்களின் பசங்கள்

ஓர் ஏம் நமிந்து நிற்கும்

இந்தியின் புரட்சி!

ஆக்கம் - ஸ்ரீ நிருஜா

தி/ மே/ கடற்கரைச் சேனை அ.த.க.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/மே/ தென்னாயூர் ம. கஸ்தூரி

கவிதை

## வேண்டாம் இந்த யுத்தம்.

உடைந்த மனதுடன் ஒழுகிய கொட்டிலில்
ஓ. எங்கள் வாழ்க்கை ஓர் அவலமா!

உடைந்த வீடுகள் அழிந்த உறவுகள்
எங்கே அது கிடைக்குமா

அடிப்படை உடைமை இழந்த அகதி வாழ்வு
இன்னும் இன்னும் நிலைக்குமா.

அன்பாய்ப் பேசி அழகாய் வாழ
ஓர் அமைதி வாழ்வு கிடைக்குமா

சிட்டாய்ச் சிறகடித்த பட்டாய்ப் பறந்திருந்தோம்
அது இன்று எட்டாய்க் கனியானதே.

வயலோரம் நெற்கதிரோசை மனையோரம் கோயில் மணியோசை
காட்டோரம் அகவும் மயிலோசை காதோரம் கேட்கும் குயிலோசை

பக்கத்து வீட்டில் பாட்டோசை இவை அனைத்தும் மீண்டும் வருமா
வேண்டாம் இந்த யுத்தம் வெறுத்துப் போன எம் வாழ்வில்

நன்றி.

ஆக்கம்:-
செ. பிரியங்கா
09B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் பூக்காத பூக்கள்

* மனிதன் முகத்தில் பூ - சிறப்பு
* மகிழ்ச்சியில் வரும் பூ - சிரிப்பு
* காலையில் வரும் பூ - விழிப்பு
* சமையலறையில் உள்ள பூ - அடுப்பு
* ஒளி தரும் பூ - லாம்பு
* சுவை தரும் பூ - உப்பு
* கோபத்தில் வரும் பூ - வெறுப்பு
* குற்றம் புரிந்தால் வரும் பூ - நிராகரிப்பு
* சந்தோஷத்தில் வரும் பூ - திளைப்பு
* மற்றவரை திருத்த வரும் பூ - கண்டிப்பு
* காயங்களினால் வரும் பூ - வலிப்பு
* காரமான பூ - உறைப்பு
* மனதைக் கவரும் பூ - வனப்பு
* சோதிடர் எழுதும் பூ - குறிப்பு
* சிறுவர் செய்யும் பூ - குறும்பு
* மனிதன் பேண வேண்டிய பூ - மதிப்பு
* மானம் காக்கும் பூ - உடுப்பு
* வயலில் உள்ள பூ - வரம்பு
* மனிதனிடம் காண வேண்டிய பூ - பண்பு
* எல்லோருக்கும் தேவையான பூ - அன்பு
* எமனிடம் உள்ள பூ - அழிப்பு
* இதயத்தில் உள்ள பூ - துடிப்பு
* இனிப்பான பூ - கரும்பு
* அடிக்க உதவும் பூ - கம்பு
* இலங்கையின் பூ - கொழும்பு

ஏ. கிருபாலினி
தரம் - 8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையின் சிறப்பு

உலக வாழ்வில் அனைத்துக் கருமங்களும் பிரதிபலன் கருதியே நடைபெறுகின்றன. மனித வாழ்வில் இதனை நாம் பெரிதுங் காணலாம். ஆனால், வாழையோ எவ்வித பிரதிபலனும் கருதாது மனித வர்க்கத்திற்கு பயன் தருகின்றது. இதனால்தான் வாழைமரம் மங்களப் பொருளாகவும் வாழ்த்துதலுக்கும் உள்ளாகிறது "வாழையடி வாழை என வாழ்க" என வாழ்த்துதலை நாம் அறிவோம். வேறெந்த மரத்திற்கும் இல்லாத சிறப்பு வாழைக்கே உண்டென்றாலது மிகையல்ல

மனித வாழ்வில் வாழைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மங்கள வைபவங்களிலும் அமங்கள வைபவங்களிலும் வாழையே முக்கிய இடம்பெறுகின்றது. இதற்குக் காரணம் அதன் பிரதிபலன் கருதாத கொடையே எனலாம். வாழையைப் பொறுத்தவரையில் அதன் பயன்கள் பற்பல. அதன் சகலபாகங்களும் மனிதனுக்கு உதவுகின்றன. மனிதனுக்காக அது தன்னையே தியாகம் செய்கின்றது. வாழையின் தியாகம் மகத்தானது. அது பிறருக்காக வாழ்கின்றது பிறருக்குப் பயன் கொடுத்து மடிகின்றது, வாழையானது தன்னைச் சமூகத்திற்காக அர்ப்பணிக்கின்றது. இந்த அர்ப்பணிப்பு மனப்பான்மை மனித வர்க்கமும் கைக்கொள்ள வேண்டும். மனிதன் வாழையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நல்ல பாடம் இதுவெனலாம். வாழையிடம் காணப்படும் மற்றொரு பண்பு தலைக்கனமில்லாதிருத்தலாகும், அத்தகைய பெரிய இலையை ஈன்றபோதிலும் அதைத் தனக்கெனக் கருதாது தன்னைப் பயிரிட்டவர்க்கே உரித்தாக்குகின்றது. இதையிட்டு அது தலைக்கனங் கொள்வதில்லை.

வாழை தன்னையே முழுமுதலாக மனிதனுக்கு அர்ப்பணித்த போதிலும் அதையிட்டு அது பெருமைப்படுவதில்லை, பிரதிபலன் கருதாது கொடை செய்யும் அதன் பண்பு மனிதனுக்கு என்றும் வேண்டும். தன்னலம் கருதிச் சுயபெருமை பேசும் மனிதகுலம் வாழையிடம் கற்க வேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்றாகும். வாழையானது மனிதனுக்கு என்றும் பயன் தருவதையே இலட்சியமாகக் கொண்டுள்ளது இதனால்தான் தான் அழியும்போது தன் பரம்பரையை உருவாக்குகிறது.

→ பா. கிருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோனாலேயே "வாழையடி வாழை" என்ற என்ற சொற்றொடரும் உருவாகியுள்ளது. வாழைமரம் படித்ததில்லை கனிகொடுக்க மறந்ததா? வான்முகிலும் கற்றதில்லை மழைபொழிய மறந்ததா? என்னும் கவிஞர் கண்ணதாசனின் பாடல்வரிகள் வாழையின் பயன்கருதாப் பண்பை, கொடைத்திறனை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தன்னையே முற்றுமுழுதாகப் பிறர்பயன்பெறும் வகையில் உதவும் வாழையை நாம் என்றும் மறப்பதில்லை. அதனைப் பெருமளவில் நாட்டுவதன் மூலம் பெரும் பயன் பெறமுடியும்.

வாழை உற்பத்தியின் மூலம் நமது பொருளாதார வளத்தினைப் பெருக்கிக் கொள்ள முடியும். வாழைச் செய்கையில் ஈடுபடுவோர் ஒரு போதும் நட்டமடைவதில்லை. அதன் சகலபாகங்களும் மக்களின் பயன்பாட்டுக்கு உரியனவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். வாழைக்குத் தான் ஈன்ற குலையே பாரமாக அமைகின்றது. எனினும் அது குறித்து அது கவலை கொள்வதில்லை தன்னையே தியாகம் செய்து மனிதகுலத்திற்கு வழிகாட்டுகிறது.

சுருக்கக் கூறின் "வாழை தியாகத்தின் சின்னம்" எனலாம். அதனிடமிருந்து மக்கள்பெறும் பயன்கள் பற்பல. அவை வாழையின் கொடைத்திறனுக்குச் சான்றாக அமைகின்றன. வாழையிடமிருந்து நல்லபல பண்புகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழையே நீ வாழ்க! என வாழ்த்துவோமாக!

" தியாக உணர்வு ஒருவனின் வாழ்வை
யதார்த்தம் உள்ளதாக மாற்றும் "

→ பா. வாகுசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாக வாழ 18 விடயங்கள்

01. மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் :- தாய், தந்தை

02. மிக மிக நல்ல நாள் :- இன்று

03. மிகப் பெரிய வெகுமதி :- மன்னிப்பு

04. மிகவும் வேண்டியது :- பணிவு

05. மிகவும் வேண்டாதது :- வெறுப்பு

06. மிகப் பெரிய தேவை :- நம்பிக்கை

07. மிகக் கொடிய நோய் :- பேராசை

08. மிகவும் சுலபமானது :- குற்றம் காணல்

09. கீழ்த்தரமான விடயம் :- பொறாமை

10. நம்பக்கூடாதது :- வதந்தி

11. ஆபத்தை விளைவிப்பது :- அதிகப் பேச்சு

12. செய்யக் கூடாதது :- நம்பிக்கை துரோகம்

13. செய்யக் கூடியது :- உதவி

14. விலக்க வேண்டியது :- சோம்பேறித்தனம்

15. உயர்வுக்கு வழி :- உழைப்பு

16. நழுவ விடக்கூடாதது :- வாய்ப்பு

17. பிரியக் கூடாதது :- நட்பு

18. மறக்கக் கூடாதது :- நன்றி

தி/உவர்மலை விவேகானந்தா
ம. நதாஷா 9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை அன்னை

இறைவனே எமக்களித்த
இணையில்லா கொடை இயற்கை!
இன்றதன் புனிதம் காக்க
எவருளார்! பூமி தன்னில்!

இயற்கையோ, சீற்றம் கொண்டால்!
இருக்குமா ? மனைக் குலங்கள்,
நிலமது நடுங்கத்தானே!
நித்தமும் அழுகிறார்கள்!

கடலது சீற்றம் கொண்டு,
கனதேசம் காவு கொண்டு,
பொன்னை அணிப்பது!
புண்ணாகும் நெஞ்சமெல்லாம்.

காற்றது சீற்றம் கொண்டால்.
கட்டாயம் அழிவு உண்டு
நெருப்பது சீற்றம் கொண்டால்,
நெருங்கவா முடியும் உன்னால்!

இயற்கையின் சீற்றம் கண்டும்,
இன்னமும் திருந்தா விட்டால்,
இனி உனைக் காப்பார் யாரோ
இன்றேனும் சிந்திப்பாயோ?

ஆக்கம் :-
ந. தனுஜாஷிகா
தரம் :- 8 'C'
தி/ உவர்மலை விவேகானந்தா
கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/ அல் மின்ஹா பாலிகா மவி



# குழந்தை மனம்



* சகிப்புடன் வளர்க்கப்படும் குழந்தை பொறுமையாக வளரும்.

* நட்போடு வளர்க்கப்படும் குழந்தை பிறரை மெச்சுகிறது.

* புகழப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது.



* அவமானப் படுத்தப் படும் குழந்தை குற்றவாளி ஆகிறது.

* அடக்கியே வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது

* குறை கூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்க கற்றுக் கொள் கிறது.

* கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்துடன் வாழ்கிறது.

* பாதுகாக்கப்படும் குழந்தை பிறரை மெச்சுகிறது.



MJF. சஹீனா , M.A. அக்கியா பானு
10/A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ | அலி ஊறம்றா ம:வி.

# சமாதானம்

பூமிக் கோளவகத்தினுள்
கழவாளமிடப் பட்டுள்ளன
பல
சமாதானக் குதிரைகள்!

அரபுத் தேசத்திலும்
ஆபிரிக்கப் பகுதிகளிலும்
பூமிப் பந்தின்
சந்து பொந்துகளிலும்
சமாதானம்
தலைமறைவாகி
சாத்தானின் வேதங்கள்
சங்கீதமாகி விட்டன...!

கூடப் பிறந்த
உரிமைகள் பறித்து
உழைக் களிக்கும்
இன்பங்கள் கவர்ந்து
ஒழித்திரியும்
பருவங்கள் அழித்து
பல
ஆயுத அரக்கர்கள்
அமர்ந்திருக்கின்றனர்.
சமாதான
நாற்காலி மீது...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
சமாதானம்
இரத்தத்தினால்
வரையப்பட்ட
மோனாலிசா ஓவியம்
என்றாயிற்று.
அழகு பார்ப்பார்கள்.
அதன்
இதழோர அழுகை பார்ப்பதில்லை!

என்றைக்காம்
ஏகாதிபத்தியங்கள்
எழுந்த போதும்
உரிமைக்காய் மக்கள்
ஒன்று திரண்ட போதும்
வக்கிரக் கழுகுகளின்
ஆக்கிரமிப்புக்கள்
அரங்கேற்றம் கொண்ட போதும்
சமாதானம்
புதைக்கப் பட்டுவிட்டன
சாக்கடைக்குள்...!

ஒரு வெண்புறாவின்
சிறகைக்காய்
ஒரு வாழைவள்ளியின்
அழகிற்காய்
ஓர் இலையின்
துளிர் வாழ்க்காய்
எத்தனையோ மழலைகள்
மலர்களுடன்
காத்துக் கொண்டிருக்கின்றன...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி, சமய பேதம் மறந்து
ஊர் ஒன்று சேர்ந்திடவே
ஏழை, செல்வர் என்ற பேதம் மறந்து
மனிதம் மலரவே
சண்டைகள் ஒழிந்தே
சமாதானம் உதித்திடவே
இதுவே தருணமே---!

யாவரும் ஒரு தாய்ப் பிள்ளைகள் போல
யாத்திரை செய்திடுவோம்!
அன்பு எனும் கயிற்றைக் கொண்டு
அரணாம் வாங்கிடுவோம்!
ஒற்றுமை என்னும் தீபமேற்றி
ஒளியைப் பெருக்கிடுவோம்!
நாளைய உலகம் நமதென்றெண்ணி
நாளும் உழைத்திடுவோம்!

மனிதர்களே
ஆயுதம் களைந்து
பூமிப் பந்தை
பூக்களாய் நேசிப்போம்--

உயிர்
உனக்கும் சரி
எனக்கும் சரி
ஒன்றென உறுதி கொள்வோம்
வாள்களை உடைத்து
பூக்களால்
ஒரு தேசம் செய்வோம்!

M.J.M. நிசாம்
க.பொ.த (2/த)
2011 - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமே பொழியும்

மழையை நம்பி விதைக்கின்றோம்
மழை இல்லாமல் பதைக்கின்றோம்.
பிழையை இறைவன் மேல் போட்டு - வெறும்
பேச்சால் மனதை சிதைக்கின்றோம்.



மனமும் குணமும் சரி இல்லை
மழையும் அதனால் வர இல்லை
பணமும் பொருளும் வேண்டும்
-தான் அது பாதை தவறத்
தூண்டும் தான்.
உலகை நமக்கு
படைத்திட்டான். அதில் உள்ள
-வை யாவும் நமக்குத்தான்.
விளைவை நிறுத்தி வேதனைகள்
அவன் வேண்டும் என்றே!
தருகின்றான்!
போக்கும் நாக்கும்
புரளுவதால் வெறும் பொய்யும்
புரட்டும் திரளுவதால் அக்கும் அழிக்கும் வன்மையுடனும் - தன்
ஆற்றலை நினைப்பு ஊட்டுகின்றான் · பாதை தவறிப் போகி
-ன்றோம் - நிதம் பாவத்தில் வேகின்றோம். நீதி மறந்து
நடக்கின்றோம் · பின் நிகழ்வைக் கண்டு துடிக்கின்றோம்!
துடிப்பை அறிவான் அவனே தான் - மனம் தூய்மை
கொண்டால் சுகமே தானே. நடிப்பை விட்டு வாழ்ந்திட்டால்
பெரும் நலமே மழையாய் பொழியும் தான்!

ஆக்கம்
கி. ராகேனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

ஒவ்வொரு விடியற்காலைப் பொழுதிலும்
விடிவெள்ளியாய் என் விழிகளுக்கு
அழகு அதிகமாய் விருந்தளிக்கின்றாய்.
பூக்கள் பூஞ்சோலை முத்தமிட
பூவிதழின் உச்சியில் குடியிருந்த
சிட்டுக் குருவி வெட்கத்தில்
சிறகு விரித்துப் பறக்கின்றது.
மொட்டுக்கள் மலர்களாய்
அவிழ்கின்ற வைகறைப் பொழுதில்
மலர்களை முத்தமிட்டு இரகசிய ஒப்பந்தம்
செய்து கொள்கின்றனவோ மந்திகள்?
தேன் சொரியும் மலர்களைச் சுற்றி
வண்டுகளின் ஆர்ப்பாட்டம்
மண் வாசனையோடு மலர் வாசனை
போட்டி போட பார்வையாளர்களின்
கைதட்டல்களாய் மரங்களின் சலசலப்பு
இவை இயற்கையின் எழில் படைப்பு
எரிக்கும் சூரியனின் மறுபதிப்பாய்
நிலாவின் இனிமைகள்
நிலாப் பெண்ணவளின் அட்சய பாத்திரத்தில்
அமுத சுரபிகளாய் மின்மினிகளின் பிரகாசிப்புக்கள்
இவை வான வீட்டின் எழில்மிகு தோரணங்கள்
மயில்களின் மேனியில்
பல நாள் பயின்ற நடனத்தை
மழை பொழிந்த வாரத்தில்
அரங்கேற்றம் நடத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவிகளின் அசைவுகள்
நதிகளின் பாதயாத்திரை
சீட்டாய் நாணல்களின் அணிவகுப்புகள்
இவை பூமிப் பெண்ணவளின் பரிசளிப்புகள்
இவை என் விழி வெண்படலத்தில் குடியேறிய
புதிய உறவுகளாய் இயற்கையின் பதிப்புகள்
என்னில் ஈரம் புகுந்த கருத்தரித்த இந்த
உணர்வுகள் உயிர்பெறுவதும் போது
அதுப் பிரசவமாய் கவிதைகளின் அணிவகுப்பு
இந்த இயற்கையின் இனிய பதிப்புக்கு
அரிய இதயத்தின் சிறிய பதிப்பு சமர்ப்பணம்
இயல்பான இந்த இயற்கையை மாசிடலை
உன் இயந்திரத்தின் மொழியேற நினைத்தாய்
இயற்கையின் இழவுகளாய் அழிவுகளின்
சிதறல்கள் உன்னோடு போர் தொடுக்கும்.

ஆக்கம்,
க. சிவசன்,
திரு/ அலங்கேணி விநாயகர் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையமெல்லாம் நீ நிறைந்தாய்......

கத்துக் கடலில், கதிரவன்
அத்தமிக்கும் போது, சங்கு
கத்தும் கானத்தில் நீ
சங்கீதக் கலைமகள்...
செந்தமிழ்த் தேன் முதல்
சுந்தரத் தெலுங்கு ஈறாய்
ஆயிரம் மொழிகளிலும்
ஆய கலைகளாய் அமர்ந்தவளோ....

ராகங்கள் ஈரெட்டும் உன்
தேகத்தின் சந்தன போர்வை
நீ சொல்லும் மொழியாவும்
தரணியில் இசைப் போர்வை.....
கார்த்திகை மாதம் போனால்
கூடும் மழை இல்லையே - என்றும்
கலைமகள் நீ இல்லையேல்
கவிதைகள் இல்லையே,
என்றெல்லாம்.....

பழம் நழுவிப் பாலில் விழப்
பால் நழுவியே வாயில்
விழுந்தது போல், உந்தன்
நாமம் பூலம் நான் ஏற்று
நாராங் கவி சொன்ன
காளமேகம் முதல்
கண்ணனின் சாறும்
கனி பசு பொழிந்த சாறும்
கவியாய் கலந்து "தமிழ்" என்று
சொல் சேர்த்துக் கவி சொன்ன
கம்பன் வரை உன் கீர்த்தி
பாடாத பாவலரையில்லை....
இருந்தாலும்,
பூவுக்குப் பூ வைப்பது போல்
கவிதைக்கு கவி சொல்ல
விரும்பவில்லை பாவ(லக)ன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்கொரு கனவிருக்கு
புரியவைக்கும் தேவை எனக்கு
வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஐயம் தீர சொல்கிறேன், ஓர் செய்தி.....

திருப்புகழ் பாடிய காலம் மாறி
வெறுப்புகழ் நிறைந்த மனித மனங்களிடை
உருப்படியாய் எதுவுமில்லை - அறிவுக்
கண்ணைத் திறக்கும் கல்வி இங்கே
பொய்யாய்ப் போயாற்று.....
காசு இருந்தால் கதவு திறக்கும்
வணிகம் ஆயிற்று....

குடிக்கும் தாய்ப்பாலுக்கு விலை கேட்பதில்லை
படிக்கும் படிப்பை விலை பேசி விற்கும் நிலை,
கல்வி மனித உரிமை காணலையா? - ஒரு
ஏழை வீட்டில் கல்வி என்ன பொய்யா?
இன்று மட்டும் புரிகிறது.
குட்டக் குட்டக் குனிபவனும்
மடையன், அது போல
குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்.

வரங்கள் என்பதைக்
கதைகளில் படித்ததுண்டு
இரண்டு வரங்களின் கொடுமையை
கம்பனும் சொன்னதுண்டு.
மரங்கள் மட்டுமே மனிதர்க்கு
வரமாய் இருக்கிறது.
இருப்பினும்
இருந்தும் கேட்கிறேன்.
ஒரு வரம் முடிந்தால் கொடு தாயே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் எதுவும் கேட்க முடியாது
உன்னிடம், காரணம்
சேர்ந்தே இருப்பது
புலமையும் வறுமையும்.
உந்தன் கைகளில் தவழும்
கலைப் பொருள் வீணையைத் தா.....
வீணை அதனை
மீட்டுவதற்கு அல்ல,
விற்றுக் கட்டணம் கட்ட
வேண்டி உள்ளது......???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதிலிகள்

போர் அரங்குகளின்
நெருக்குதல்களால்
புகலிடம் தேடி
ஊர் ஊராம் அலையும்
முகவரி இழந்த முகங்கள்

இருப்பிடங்களை விட்டும்
இழுத்தெறியப்பட்டு
இரத்தத்தில் குளிப்பாட்டப்பட்டவர்களாய்
இறுதி மூச்சையும் சுவாசிக்கும் அவாவால்
உருத்திம உடையுடனும்
இடைந்த உறுப்புக்களுடன்
இடைத்தங்கல் முகாம்கள் ....
நலன்புரி நிலையங்கள் .....
அகதி முகாம்கள் என்னும்
இருப்பிடச் சிறைகளில்
இனியும் இழப்பதற்கு எதுவுமின்றி
இருக்கும் இவர்கள்
யுத்தம் விட்டுச் சென்ற எச்சங்கள்



போர் மேகங்கள் சூழ்ந்த
பூமிப் பரப்பெங்கும் படர்ந்துள்ள
துயரங்கள்.... தொட்டில்களில்
குவிந்த கிடக்கும் இவர்கள்
எல்லோரும் போல இருப்பதற்கான
இயல்பு நினைத்தாம் ஏங்கும் ஏதிலிகள்

ஆக்கம் :- மா. பா. சஸ்னா
தரம் - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக் கல்வியின் அவசியம்

கழிந்த எக்காலத்தையும் விட, இன்றைக் காலத்திலேதான், ஆங்கிலக்கல்வியின் இன்றியமையாமை மிக மிக ஆழமாக உணரப்படுகின்றதென்றால் அது மிகையாகாது. அதனால், எல்லா நாடுகளின் பாடத்திட்டத்திலும் ஆங்கிலம் ஏற்புடையதாகு அமைப்பில் இடம் பெறுகிறது. சில நாடுகளில் ஆங்கிலம் போதனா மொழியாகவோ மூன்றாம் மொழியாகவோ அமைகிறது. அன்றியும் ஆங்கிலக் கல்வியை அலட்சியம் செய்வதை ஆழ்ந்த புலமையுள்ள எந்தக் கல்விமானும் ஏற்றுக்கொள்வதாகவும் தெரியவில்லை. பயன்பாட்டின் பரப்பினை அளவுகோலாகக் கொண்டே எந்த ஒரு பொருளின் சிறப்புந் தன்மையும் கணிக்கப்படுகிறது. இந்த நோக்கில் ஆங்கிலத்தின் சிறப்புக்குரிய காரணங்களைச் சிந்திப்பதும் சாலப் பொருத்தமுடையது.

ஆங்கிலம் இன்றைய நிலையில் உலகப் பொதுமொழி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. பல்வேறு நாட்டு மக்களுடனோ ஒரு நாட்டிலுள்ள பல மொழி பேசும் இனங்களுடனோ கருத்துப் பரிமாற்றத்துக்குரிய ஊடகமாக ஆங்கிலமே விளங்குகிறது. உதாரணமாக இந்தியத் துணைக்கண்டத்தை எடுத்துக்கொண்டால், அங்குள்ள மாநிலங்கள் எல்லாம் மொழிவழிப்படையில் அமைந்தவை. அவைகளை இணைக்கும் பொது மொழியாக இன்னும் இந்தி மொழி இடம்பெறவில்லை. ஆங்கிலமே இணைப்பு மொழியாக ஆட்சிபுரிகிறது. ஜப்பான், சீனா, ரூஷியா, நைஜீரியா, அரபுநாடுகள் முதலிய எந்நாட்டுக்குச் சென்றாலும் அந்தந்த நாட்டு மக்களோடு தொடர்பு கொள்வதற்கு ஆங்கில அறிவு அவசியமாகிறது. இவ்வாறு உலகப் பொதுமொழி என்ற தனித் தன்மையால் எந்நாட்டினர்க்கும் ஆங்கில அறிவு இன்றியமையாததாகும். இந்நிலையில் நாம் ஆங்கிலக் கல்வியை அலட்சியப்படுத்தல் தற்கொலைக்கொப்பானதாகும்.

பழந் தமிழரின் விழுமிய கொள்கைகளுள் ஒன்று 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது, உலகிலுள்ள எந்த ஊரும் எமது ஊரே; அவ்வூர்களில் வாழும் அனைவரும் எமது உறவினரே என்பது அக் கொள்கையின் சுருக்கமான விளக்கம். இந்தக் கொள்கை பழந்தமிழரின் விசாலமான மனப்பான்மையைப் புலப்படுத்துவதோடு, உலகை ஒரு குலமாகக் காண வேண்டும் என்றும் விழைவினையுங் காட்டுகிறது. இந்த விழைவு நிறைவேற வேண்டுமானால், கருத்துப் பரிமாற்றத்தில் புதுமையானதொரு பொதுமை நிகழ வேண்டும். அந்தப் பொதுமையை நிகழ்த்தியது, பழந்தமிழன் கண்ட சீரிய கொள்கையை நனவாக்கியது ஆங்கிலமேயென்றால் யாரும் அதிசயிக்க மாட்டார்கள். அன்றியும் 'திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு' என்பதும் பழந்தமிழர் தங்கொள்கை. இன்று இக்கொள்கை ஈழத்துத் தமிழினத்தைப் பொறுத்த வரை வேதவாக்காக மிளிர்கின்றது.

நமது நாட்டி வகுப்புவாத அடிப்படையில் அமைந்த அரசியல் கோட்பாடுகளாலும் காலத்துக் காலம் எரிமலையென எழும் இனக்கலவரங்களாலும் குழப்பங்களாலும் தமிழ் இளைஞர்கள் மாத்திரமன்றி, பொறியியலாளர், மருத்துவ நிபுணர், கணக்காளர் முதலிய உயர் பதவி வகிப்போருங் கூட, விரக்தி மனப்பான்மையுற்று எத்தனை எத்தனையோ நாடுகளுக்குச் சென்று புகலிடம் தேடுகின்றனர். அந்த நாடுகளில் அகதிகளாய் வாழ்வது தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் அவமானம். புகலிடந் தேடியோர், அந்தந்த நாட்டுத் தொழில் நிறுவனங்களுடனோ, ஆட்சியாளருடனோ தொடர்பு கொள்வது மிக இன்றியமையாதது. இத்தொடர்பு சித்திக்க வேண்டுமெனில், ஆங்கில அறிவு மிக அவசியமாகும். அப்போதுதான் வேற்று நாடுகளிலே தமிழன் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழல் இயலும்; திரவியந்தேடல் இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அறிவுத்துறை பல பல விழுதுகள் விட்டுப் படர்ந்து நிழல் பரப்பும் ஆலமரம் போலக் காணப்படுகிறது. விஞ்ஞானமும், கணிதமுமாகிய அறிவுத்துறை, உலகினை ஆட்டிப்படைப்பதோடு அமையாது, சந்திரனிலே தனது அடிச்சுவட்டைப் பதித்து, அப்பால் உள்ள கோள்களையும் ஆராயும் நிலைக்கு வளர்ந்துள்ளது. இந்த அறிவுத்துறை வளர்ச்சிகளைப் புறக்கணித்து, நாம் கிணற்றுத் தவளைகளாக வாழ்வது சாத்தியமற்றது. இந்த அறிவுத் துறைகளில் ஒன்றையேனும் ஒருவராவது கற்றுக் கொள்ளாவிட்டால் எமது வாழ்வு வளமடைய முடியாது. இந்த அறிவுத்துறை சார்ந்த நூல்களனைத்தும் ஆங்கில மொழியிலேயே உள்ளன. அன்றியும் நவநவமான ஆய்வுகள் எல்லாம், உடனுக்குடன் ஆங்கிலமொழிச் சஞ்சிகைகளிலே வெளிவருகின்றன. எனவே, பரந்துபட்ட அறிவுத் துறைகளெனும் சாகரத்தைக் கடப்பதற்கேற்ற நல்லதொரு புணையாக ஆங்கிலம் அமைகிறது, இந்தப் புணையைப் புறக்கணித்தால் நாம் இன்றைய உலகிலே வாழத் தகுதியற்றவர்களாவோம்.

எமது முன்னோரைப் போலன்றி இன்றைய தலைமுறையினரிற் பலர் மகாவிவேகிகள்! தணியாத அறிவுத்தாகம் கொண்டவர்கள், அவர்களின் பசிக்கு, தமிழ் மொழியறிவு யானைப் பசிக்குச் சோளன் பொரிபோல் அமைகிறது. அவர்கள் நிறையக் கற்று, புலமை பெற்று, நாட்டுக்கு நற்றொண்டாற்ற வேண்டியவர்கள். அவர்களைக் குறுகியதொரு வட்டத்துள் அடைத்துச் சிறைவைப்பது துரோகம். அவர்கள் அறிவுத்துறைகள் வெகுவாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சென்று, அறிவு செல்வமனைத்தையும் திரட்டல் வேண்டும்; அதன் மூலம் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் தாய்மொழிக்கும் நற்பணிபுரிதல் வேண்டும். இவ்வுயர்பேறு எமது மாணவச் செல்வங்களுக்குக் கிடைக்க வேண்டும். எனில் அவர்கள் ஆங்கிலத்திலே திறமை பெற்றிருத்தல் வேண்டும். அஃதின்றேல், அவர்கள் திறமை காட்டில் எறிந்த நிலாப்போல் பயனற்றதாகிவிடும்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் வாழும் சாதாரண மனிதன் ஒருவன் வாழ்வாங்கு வாழவேண்டுமானால் பரந்த பொதறிவு பெற்றிருத்தல் மிக இன்றியமையாதது. இந்த அம்சத்தை ஆராயும் போது தாய்மொழியில் வெளியாகும் பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ குறை தாழ்வாக எண்ணல் கூடாது. ஆனால் பொதறிவு சிறப்புற வளர ஆங்கிலப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பேருதவி புரியவல்லன. அதனால் சாதாரண மனிதன் கூட நல்வாழ்வு வாழ ஆங்கிலப் பயிற்சி அவசியமானதாகும்.

எந்தக் கோணத்தில் நோக்கினாலும் ஆங்கிலத்தை அலட்சியப்படுத்துவதால் பயனில்லை. தமிழ் மொழிப் பற்றை வெறியாக வளர்க்காமல், அதனையும் கற்று, உலகப் பொது மொழியான ஆங்கிலத்தையும் கற்றல் வேண்டும். ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது யானை தன் தலையில் தானே மண்போட்டுக் கொள்வதை ஒக்கும்.

ஆக்கம் :- R.F. ஸமீரா
தரம் :- 12
தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூ/முஸ்லிம் மகளிர் கல்லூரி.

# வெற்றி தோல்வி

தோல்வி என்றால்
நீ தோற்றதாக பொருளில்லை
நீ இன்னும் ஜெயிக்கவில்லை என்றே பொருள்

தோல்வி என்றால்
உன்னால் முடியாதென்பது பொருளல்ல
நீ இன்னும் முயல வேண்டும் என்றே பொருள்

தோல்வி என்றால்
அறிவு மட்டமாக பொருளல்ல
நீ தீரமாக வேண்டுமென்றே பொருள்

வெற்றியாளர் எல்லாம்
தோல்வியை காணவில்லை என்பது பொருளல்ல
தோல்வியை தாண்டி வந்தவர்கள் என்றே பொருள்

சாதனையாளர்களெல்லாம்
சாதிக்கப் பிறந்தவரென்று பொருளல்ல
தடைகளை தாண்டி வந்தவர்கள் என்றே பொருள்

வெற்றி என்றால்
மிக உயரத்தில் உள்ளதென்பது பொருளல்ல
அது (பனிமலை) சமீபத்தில் இல்லையென்றே பொருள்

கலைகளென்றால்
வெறுக்கென்பதுதான் என்பது பொருளல்ல
முயன்றால் உனக்கும் தான் என்பதே பொருள்

முடியாதென்றால்
என்றும் முடிவதில்லைதான்
முயன்று பார் முடிவதில்லை / எவராயினும்
உனை வெல்ல யார் .....

M.F. JASNA
GRADE - 12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில்நுட்பம்

நனோ என்றால் என்ன? என்பது பற்றி அறிய ஆவலாக உள்ளீர்களா? எமது வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய பொருட்களின் பருமனை அளப்பதற்கு நனோ மீற்றர் (nm) எனும் அலகு பயன்படுத்தப்படும். நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் பில்லியனின் ஒரு பங்காகும், என்றால் எவ்வளவு நுண்ணியது என எண்ணிப் பாருங்கள். இவ்வாறான மிகச்சிறிய நனோமீற்றர் பரிமாணத்தில் ஆரம்பித்து நடைபெறும் உற்பத்தி செயன்முறைகள் நனோ தொழில்நுட்பம் எனப்படுகிறது. 1nm - 100nm வரையிலான அளவுள்ள துணிக்கைகள் நனோ தொழில்நுட்பத்திற்கு பயன்படுகின்றன. நனோ தொழில்நுட்பத்தின் Role Model அதாவது இயற்கை நனோ தொகுதி ஒரு தாவரக்கலமாகும்.

நனோ தொழில்நுட்பம் கீழிருந்து மேல் (Bot-tom up) நோக்கிச் செல்லுதல் எனும் உற்பத்திச் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். வழமையான எமது உற்பத்திகளின்போது அணுக்களை தேவைக்கு ஏற்றவாறு சீராக்கி ஒழுங்கமைக்க முடிவதில்லை. இதனால், நீண்டநாள் பாவனையின்போது அணுக்களையும் பொருட்கள் தரமிழந்து விடுகின்றன. ஆனால், நனோ தொழில்நுட்பத்தின் போது அணுக்களையும் மூலக்கூறுகளையும் பிழையின்றி எமது விருப்பத்திற்கு இணங்க சீராக உரிய இடங்களில் வைக்க முடியும். இவ்வாறான உற்பத்திகளை மேற்கொள்வதற்காக காபனின் பிறதிருப்பங்கள் அதாவது காரியம், வைரம் என்பன பயன்படுத்தப்படுகின்றன. நனோதொழில்நுட்ப அளவிலான உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஒன்றுகூட்டும் மூலக்கூறு அளவுகள் கொண்டு தயாரிக்கப்படும் சாதனங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக மூலக்கூற்று சாதாரண மாதிரிகளாக காபன் பக்கி பந்து, காபன் நனோ குழாய், காபன் நனோ ஊதுகுழாய் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நீங்கள் நனோ தொழில்நுட்பம் என்றால் என்ன என்பது பற்றி விளங்கியிருப்பீர்கள். ஆனால் நனோ தொழில்நுட்பத்தினால் எமக்கு என்ன பிரயோசனம் என சிந்திக்கிறீர்களா? நனோ தொழில்நுட்பத்தின்மூலம் எமக்கு மிகப்பாரிய அளவு நன்மைகள் கிட்டுகின்றன. உதாரணமாக மருத்துவத் துறை, நுகர்வுப் பொருள் உற்பத்தி, எரிபொருள் உற்பத்தி போன்ற துறைகளில் நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவு சேவை-யினை நனோ தொழில்நுட்பம் புரிகின்றது.


மருத்துவத்துறையை எடுத்துக் கொண்டால் நோய்களை இனங்காண்பதற்காக உபகரணங்கள் அதாவது உடல் வெப்பநிலையை அளத்தல், இதயத்துடிப்பு, குருதியமுக்கம் போன்றவற்றை மேற்கொள்ளும் உபகரணங்கள் ஆக்கப் பட்டுள்ளன. நோய்த்தடுப்பின் போது டைட்டேனியம் ஒட்சைட், வெள்ளி நனோ துணிக்கைகள் என்பவற்றைக் கொண்டு நுண்ணுயிர் கொல்லிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குருதியின் உறிஞ்சும் தன்மையை கூட்டி, விரைவில் சுகமேற்படுத்தக்கூடிய நோ அகற்றிகள் ஆஸ்துமா என்பவற்றுக்கான மருந்துகள், நீரழிவு நோயை இல்லாமல் செய்யும் நனோ தொழில்நுட்பம், புற்று நோய்க் கலங்களை அழிக்கக்கூடிய நனோ ஒட்டு சிகிச்சை, செயற்கை என்புகளை உற்பத்தி செய்வதற்கும் நனோ தொழில்நுட்பம் பயன்படுகிறது.

பொதுவாக நாம் தற்போது பயன்படுத்தும் ஆடைகளெல்லாம் தூசு படியக் கூடியதாகவும் கறைபடியக் கூடியதாகவும் அடிக்கடி கழுவிப் பயன்படுத்தக் கூடியதாகவுமே ஆக்கப்பட்டுள்ளன. ஆனால், நனோ தொழில்நுட்பம் மூலம் ஆக்கப்பட்டுள்ள ஆடைகளில் PCM எனும் பதார்த்தம் காணப்படுவதனால் ஆடைகளில் அழுக்கு, தூசு படியாது. புவி வெப்பமாதல் தற்காலத்தில் பாரிய சூழல் பிரச்சனைகளாக உருவெடுத்துள்ளது. இதற்கு மிக முக்கிய காரணமாகக் குறிப்பிடுவது உயிர்ச்சுவட்டு எரிபொருள் தகனமே. இதற்கு மிகப் பெரிய தீர்வை நனோ தொழில்நுட்பம் மூலம் வழங்கி சாதனை படைக்கிறது. மீளாற்ற மின்கலங்கள், ஐதரசன் எரிபொருள் கலம் என நனோவின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே செல்ல முடியும்.

நனோ தொழில்நுட்பத்தின் மூலம் சாதகங்கள் பல இருப்பது போல ஒரு சில பாதகங்களும் அதற்கு இருக்கத்தான் செய்கின்றன. எந்தவொரு தொழில்நுட்பமாக இருந்தாலும், அதனால் ஏற்படும் சூழல் மாசடைதல் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஆனால், நனோ தொழில்நுட்பத்தில் அதற்கு தீர்வாக நனோ நுண்துளை வடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நனோ அளவிலான வாயுக்கள், மாசாக்கிகள் உறிஞ்சப்படுகின்றன.

நனோ தொழில்நுட்பம் மூலம் நனோ அளவிலான சிறிய ஆயுதங்கள், அபாயமான நச்சுக்கள் போன்றன உற்பத்தி செய்வது தவிர்க்க முடியாத பிரச்சனையாகவே உள்ளது. அத்துடன் நனோ அளவிலான இலத்திரனியல் சாதனங்களால் சமூக கலாசார சீரழிவுகளும் ஏற்படலாம்.

Center for Responsible NaNo Technology எனும் நிறுவனம் மூலம் நனோ தொழில்நுட்பத்தினால் ஏற்படும் விளைவுகள் எதிர்கொள்ளப்படுகின்றன.
நனோ தொழில்நுட்பம் சம்பந்தமான மேலதிக தகவல்கள் தேவைப்படுமானால் நீங்கள் WCTnano.org எனும் இணையத்தள முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.



A·ASHRA
தே/ முஸ்லிம் மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் இரகசியங்கள்

உலகில் எத்தனையோ பேர் தோன்றி மறைகிறார்கள். ஆனால் அதில் சிலர் மட்டுமே வெற்றி பெற்று சிறந்ததன் பெருமையை அடைகிறார்கள். நம்மில் பலருக்கு வெற்றியை அடைய வேண்டும் என்ற ஆசை கொள்கிறோம். ஆனால் ஏன் நம்மால் மட்டும் அடைய முடியவில்லை? பலமுறை முயன்றும் கூட! காரணம் நம்மிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை தாழ்த்துகிறோமோ? அப்போதுதான் நாம் வெற்றிவாகையைச் சூட முடியும்.

தன்னம்பிக்கை என்பது வெற்றி தோல்வி கருதாது தன் மீதும் தான் செய்து கொண்டிருக்கும் செயற்பாட்டின் மீதும் முழுமையாக நம்பிக்கை கொண்டு, தொடங்கிய காரியத்தை முழுமையாக நிறைவேற்றுவது ஆகும். தோல்வியைக் கண்டு அச்சம் கொள்ளாது தான் செய்த செயலைத் தொடர்ந்து செய்து தன்னம்பிக்கையின் மூலம் வெற்றி கண்டவர்களுள் ஒருவர் மாபெரும் தலைவரான ஆபிரகாம் லிங்கன்.

இவர் அடையாத தோல்விகளே இல்லை என்று கூறலாம் அந்த அளவிற்கு தோல்வி அடைந்தவர். ஆபிரகாம் லிங்கன் சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து சாதனையின் உச்சியை அடைந்தவர் ஆவார்.



1831 - வியாபாரத்தில் தோல்வி.
1832 - சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.
1833 - மறுபடியும் வியாபாரத்தில் தோல்வி.
1835 - காதலியின் மறைவு
1836 - நரம்பு கோளாறு காரணமாக உடல்நலம் பாதிப்பு
1838 - சட்டமன்றத் தலைவர் தேர்தலில் தோல்வி.
1840 - எலக்டர் தேர்தலில் தோல்வி.
1843 - காங்கிரஸ் தேர்தலில் தோல்வி.
1855 - செனட் தேர்தலில் தோல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1856 - துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் தோல்வி.
1858 - மறுபடியும் செனட் தேர்தலில் தோல்வி.

இத்தனை தோல்விகளையும் கண்டு அஞ்சாமல் அடுத்ததாக நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று 1860ம் ஆண்டு அவரின் தன்னம்பிக்கைக்குப் பரிசாக அமெரிக்க அதிபர் பதவி கிடைத்தது.

விடா முயற்சியுடன் கூடிய கடின உழைப்பு.

நாமெல்லாம் அறிந்த மிகப்பெரிய அறிவியல் அறிஞர் தோமஸ் அல்வா எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி இருக்கிறார். அவர் மின்விளக்கைக் கண்டுபிடிக்கும் போது பலமுறை முயன்றும் தோல்வியைத் தழுவினார். சுமார் ஆயிரம் முறை ஆயிரம் இழைகளைப் பொருத்தினார். ஆனால் அத்தனை முறையும் தோல்வியைத் தழுவி இறுதியாக சரியான டங்ஸ்டன் என்னும் இழையைப் பொருத்தி 40 மணிநேரம் எரியும் விளக்கை கண்டறிந்து சாதனை படைத்தார். அந்நேரம் பத்திரிகையாளர் அவரிடம் "நீங்கள் ஆயிரத்திற்கு மேற்பட்ட இழைகளைப் பொருத்தி தோல்வி அடைந்த பிறகே இறுதியாகத் தானே வெற்றி அடைந்தீர்கள்" என்றார்.

அதற்கு எடிசன் "அப்படியல்ல நண்பரே! நான் ஆயிரம் இழைகள் இதற்குப் பொருந்தாது என்று கண்டுபிடித்தேன்." என்று கூறித் தன் தோல்வியையும் தன்னுடைய விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பின் காரணத்தினால் வெற்றி கொண்டார்.

ஆகவே இவ்வாறாகத் தான் தன்னம்பிக்கை, விடா முயற்சியுடன், கூடிய உழைப்பு, கனவு காணும் திறன் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். சரி இந்தத் திறன்களை வளர்த்துக் கொண்டால் வெற்றியைப் பெற முடியுமா? என்று நீங்கள் கேட்டால்.... வளர்த்துப் பாருங்கள், தெரியும் உங்களுக்கு.

ஆக்கம் :- சை. தர்ஷினி
தி/ சாம்பல்தீவு தமிழ் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பாடும் தேனாடு

ஆசிய ஜோதி எனத் திகழும் நிலத்தின் முத்தான இலங்கைத் திருநாட்டின் கிழக்கு எல்லையாய் மட்டு நகர் எங்கள் பூர்வீக பூமி. ஏர் பிடித்து வயல் உழுது நெல் விதைக்கப் பொன் விளையும் நிலம் எங்கள் அன்னை என்றும் அலை முழங்க வரவேற்று மீன் வழங்கும் கடல் எங்கள் தந்தை என்றும் கூறும் வகையில் கடலும் வயலும் சூழ்ந்தும் காடும் மலையும் சேர்ந்தும் வளமும் அழகும் நிரம்பி வழியும் மட்டு நகரில் நாட்டின் தேசிய இனங்கள் நான்கும் பகைமை இன்றி ஒருங்கே வாழும் வியத்தகு சூழல் இத்தேசத்தின் சிறப்பாகும்.

மட்டுமா நகரமென்றும் மீன் பாடும் தேன் நாடு என்றும் அனைத்து மத தலங்களையும் பெற்றதனால் ஆன்மாவிற்கு அடையாக விளங்கும் புண்ணிய பூமி என்றும் எழில் மிகு தாய் நாட்டின் உலரா மண் என்றும் பல பெயர்களாலும் அழைக்கப்படும். இத் தேசத்திலே ஊருக்குப் பத்தாக பார்க்கும் இடம் எங்கிலும் நிறைந்திருக்கும் திருக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளி வாசல்களென இத் தேசத்தின் எழிலையும் பெருமைகளையும் பறை சாற்றுகின்றன.

அத்தோடு அவ்வப்போது மகாத்மாக்களும் அறிவுத்திறன் படைத்த சான்றோர்களும் கற்பனை ரசம் மிகுந்த கவிஞர்களும் இத் தேசத்தினை உலகறியச் செய்துள்ளனர். எடுத்துக் காட்டாக மட்டக்களப்பின் சொந்தமான காரைதீவில் அவதரித்த சுவாமி விபுலானந்தர் முத்தமிழ் வித்தகராகவும் பாரத தேச தமிழகத்தின் பிரபல்யமான அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக திகழ்ந்தார். இவர் போன்ற பலர் இத் தேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மாத்திரமின்றி மட்டக்களப்பின் வரலாறு கூறும் வகையில் மகா வித்துவான் FXC நடராசா (1962) எழுதிய மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலும் ஆசிரிய திலகம் எஸ் பிரான்சிஸ் எழுதிய (1994) நூறாண்டு மட்டு நகர் நினைவுகள் எனும் நூலும், யாழ்ப்பாணத்தின் குரும்பசிட்டி எனும் இடத்தைச் சேர்ந்த ஈழகேசரிப் பொன்னையா வெளியிட்ட "மட்டக்களப்பு தமிழகம்" எனும் நூலும் இம் மட்டக்களப்பு மண்ணின் தொன்மையையும் வரலாற்று நிகழ்வுகளையும் பிறர் அறியச் செய்தது. அத்தோடு இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் மகாகவி வான்மீகி எழுதிய இராமாயணத்தில் மட்டக்களப்பு அமிர்தகழியில் உள்ள மாமாங்க ஈஸ்வரமும் அதன் தீர்த்தமும் அனுமானால் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாறு இத்தேசம் பல வகைகளிலும் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது. இவ்வாறாக பல வழிகளிலும் சிறப்புற்று விளங்கும் எங்கள் தேசம் எங்கள் நாடு என்று கூறிக் கொள்வதில் பெருமை கொள்கிறேன். இயற்கை அழகும், இயற்கை வளமும் கொண்டு விளங்கும் நமது மண்ணின் பெருமையை உலகறியச் செய்ய ஒன்றிணைவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் அவசியம்

தாய்மைக்கு அன்பு அவசியம்
தனிமைக்கு பண்பு அவசியம்
நாட்டிற்கு தலைவர் அவசியம்
நட்பிற்கு நண்பன் அவசியம்

விழிகளுக்கு கூர்மை அவசியம்
விடுதலைக்கு போர் அவசியம்
வானுக்கு நிலா அவசியம்
வார்த்தைக்கு வாய்மை அவசியம்

மங்கைக்கு பணிவு அவசியம்
மலர்களுக்கு மணம் அவசியம்
கண்களுக்கு இமை அவசியம்
கிழவர்க்கு இரவு அவசியம்

மூச்சுக்கு உயிர் அவசியம்
முதுமைக்கு முடிவு அவசியம்
மனிதர்க்கு மானம் அவசியம்
மகிமைக்கு கீர்த்தி அவசியம்

மழலைக்கு தாய்மை அவசியம்
மண்ணுலகில் மனிதன் அவசியம்
வாழ்விற்கு உயிர் அவசியம்
வளம் பெற உடைமை அவசியம்.

ஆக்கம் :- க. குகன்
தரம் :- 12 கலை
மட்/கல்/ சந்திவெளி சித்தி விநாயகர் வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையே இலட்சியத்தின் இரகசியம்

(சிறுகதை)

அன்று இரவு வித்தியா அறைக்குள் இருந்து அழுது கொண்டிருந்தாள். அதனை ஒரு பெண் கவனித்துவிட்டாள். அவள் வித்தியாவின் அருகில் சென்று அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். யாரந்தப் பெண்? அவள் வித்தியாவின் தாயுமில்லை. வித்தியா இருப்பது அவள் வீடுமில்லை. அந்த நேரத்தில் வித்தியா தன் கடந்த காலத்தை புரட்டிப் பார்க்கிறாள்.

வித்தியா அழகான அன்பான குடும்பத்தில் தான் வாழ்ந்தாள். வீட்டிற்கு ஒரே செல்லப்பிள்ளை. அவளின் தந்தை கூலித்தொழிலாளி. தாய்க்கு வேலையில்லை. அவளின் தந்தை வழிப்பாட்டாளனார் ஒரு நாட்டு வைத்தியர். அவரைப் பார்த்த வித்தியாவிற்கு தானும் ஒரு வைத்தியராக வரவேண்டுமென்ற இலட்சியம் உதித்தது. அந்த பிஞ்சு மனதில் எழுந்த தன்னம்பிக்கையை உணவாக்க அவள் குடும்பத்தில் அனைவரும் பாடுபட்டனர். இவ்வாறு அமைதியாக போய்க்கொண்டிருந்த அவள் பயணத்தில் இடிபோல் ஒரு இடி விழுந்தது. வீதி விபத்தொன்றில் வித்தியாவின் தந்தையும் அகப்பட்டுக்கொண்டார். எவ்வளவு முயன்றும் அவரைக் காப்பாற்றும் முயற்சி தோற்றது. அன்றிலிருந்து அவளின் தாயே அனைத்துப் பொறுப்புகளையும் எடுத்துக்கொண்டார். வித்தியாவின் தந்தை பிரியும் போது அவள் தரம் ஐந்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தாள். அவள் மேலும் படிக்க வேண்டும் அவளைப்படிப்பிக்க வேண்டும் என்பதற்காக அவளின் தாய் வீட்டுக்கு வீடு சென்று கூலிவேலை செய்தார். வித்தியாவின் தந்தை பிரிந்ததும் அவளின் சொந்தங்கள் அவர்களை கண்டுகொள்ளவில்லை. தந்தையில்லாமல் தாயின் ஆதரவிலே படிக்கும் வித்தியாவை வசதி வாய்ப்புள்ள மாணவர்கள் அலட்சியமாகவே பார்த்தனர். அவளின் நண்பர்கள் அவளை விட்டு மெல்ல மெல்ல விலகிச் சென்றார்கள், சொந்தங்களே அவர்களை வெறுத்தொதுக்க சொந்தமே இல்லாத நண்பர்கள் ஒதுக்குவதையும், ஒதுங்குவதையும் அவளால் எப்படி தட்டிக்கேட்க முடியும்? ஆனாலும் அன்பான நண்பர்களை ஆபத்தில் அறியலாம் என்பார்கள். வித்தியாவிற்கு எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் அவளை விட்டு பிரியாமல் பிரியமான நண்பி ஒருத்தி இருந்தாள். அவள் தான் நித்தி.

காலங்கள் கரைபுரண்டோடின. வித்தியா தரம் 11 இல் ~~கல்வி~~ கல்விகற்றாள். சாதாரணதரப்பரீட்சைக்கு தோற்ற இருப்பதால் அவள் வகுப்பில் அனேக மாணவர்கள் தனியார் வகுப்புக்கெல்லாம் சென்றனர். வித்தியாவிற்கும் போக வேண்டும் போலிருந்தது. ஆனால் என்ன செய்வது. கால்வயிற்றுக் கஞ்சிக்கே கஷ்டப்படும் அவளுக்கு காசேது? வித்தியா முடிந்தவரை பாடசாலையில் சொல்லிக் கொடுத்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தாள். அவளுக்கு உறுதுணையாய் அவள் நண்பி நித்தி இருந்தாள். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பதை மனதிற் கொண்டு பரீட்சையை வெற்றிகரமாக எழுதி முடித்தாள். நாட்கள் பல கடந்தன. க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகள் வெளியாகின. வித்தியா சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலை மட்டத்தில் இரண்டாம் இடத்தில் திகழ்ந்தாள். அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். அவளின் தாய் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தாள்.

வித்தியா தன் இலட்சியத்தை நனவாக்க விஞ்ஞானப் பிரிவையே தெரிவு செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அவள் பாடசாலையில் அந்த வசதியில்லை. பக்கத்து ஊர்ப் பாடசாலைக்குத் தான் செல்லவேண்டும். ஆனால் அவளிடம் பாடசாலையில் சேர்வதற்கு கூட பணமில்லை. அவளின் தாய் அவர்களை ஒதுக்கிவைத்த சொந்தங்களிடமே கையேந்தி நின்றாள். ஆனால் அவளின் தாய்க்கு அவர்களிடமிருந்து கிடைத்தது "என்னத்தைப் படிக்கப் போறாய் தாயும் பிள்ளையுமாச் சேர்ந்து பிச்சையெடுக்க சொந்தக்கெண்டான வழி பிறக்கும்" என்ற நச்சு வார்த்தைகள் தான். பிள்ளைகளை வைத்து பிச்சையெடுக்கும் இந்தக்காலத்தில் பிள்ளையை பள்ளியில் சேர்ப்பதற்காக பிச்சையெடுக்கவும் அந்தத்தாய் தயங்கவில்லை. இதையெல்லாம் பார்த்த வித்தியாவுக்கு அவள் இலட்சியம் சிதைவது போலிருந்தது. இப்படியெல்லாம் நடந்தால் நான் எப்படி வைத்தியர் ஆவேன்? என்று பல கேள்விகள் அவள் மனதில் இருந்தது. இருப்பினும் வாழத்தானே பிறந்தோம் சாதித்து வாழ்வோமே என்று தன்னம்பிக்கையோடு தன் இலட்சியத்தில் உறுதியாயிருந்தாள். இதற்கிடையில் அவளின் நண்பி நித்தியின் உதவியுடனும், அவளுக்கு ஒரு நிறுவனம் கொடுத்த சிறு தொகைப்பணத்தையும் வைத்து புதிய பாடசாலையில் சேர்ந்தாள். வித்தியாவும், நித்தியும் ஒரே பாடசாலையில் ஒரே பிரிவிலே தங்களது உயர்தரத்தை தொடர்ந்தார்கள். வித்தியாவிற்கு பணக்கஷ்டம் அப்போதும் இருந்தது. ஆனால் வறுமையிலும் சுடர்விட்டுக் கொண்டிருந்தது அவள் கல்வி.

இவ்வாறாக புதிய பாடசாலையில் சேர்ந்து சில மாதங்கள் கடந்தன. காலங்கள் பல கடந்தாலும் உயர்தரத்தில் வித்தியா கல்வி கற்றாலும் அவள் தன் ஏழ்மையை மாற்றிக்கொள்ளவில்லை. அவளுக்கென்றிருந்தது அவள் இலட்சியமும், அவளுக்காக தாய் படும் கஷ்டமும் தான். வித்தியாவின் பாடசாலைக்கு புது ஆசிரியை ஒருவர் வந்தார். அவர் வந்து சில வாரங்களிலே வித்தியாவின் நிலையை அறிந்து அவளுக்கு உதவ முன்வந்தார். அந்த ஆசிரியை வித்தியாவின் வகுப்பிற்கு உயிரியல் பாடமே கற்பித்தார். அவர் வித்தியாவிற்கு உதவியது மட்டுமல்லாது அவளை படிப்பதற்கு மென்மேலும் தட்டிக்கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பாடசாலையில் கூட இன்னும் எத்தனையோ பேருக்கு அவளின் மேல் நம்பிக்கை வரவில்லை. என்ன இருந்தாலும் தாயின் முயற்சியும், ஆசிரியையின் தட்டிக்கொடுப்பும், நண்பியின் அரவணைப்பும் இருக்கும் வரை அவளை அவள் நம்பிக்கையில் இருந்து தள்ள யாராலும் முடியவில்லை. வருடங்கள் கடந்தன. வித்தியா தன் உயர்தர படிப்பினை இறக்கி வைக்க க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தயாரானாள். அவளைப் பொறுத்த வரையில் அது ஒரு சோதனைப் பரீட்சைதான். ஆனால் அவள் வாழ்வைப் பொறுத்தவரையில் அது ஒரு சாதனைப் பரீட்சை. நல்ல விதமாக பரீட்சை எழுதி முடித்தாள். அவள் தாய்க்கு இதுவரை நிம்மதி. ஆனால் வித்தியாவிற்கு ஒரு துயரமான சம்பவம் காத்துக் கொண்டிருந்தது. அவள் தாய் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருந்தார். எங்கே தன் மகளின் படிப்பு குழம்பிவிடுமோ என்ற பயத்தில் அந்த தாய் அதனை வெளிக்காட்டவில்லை. அதனை அறிந்த நித்திக்கு தூக்கிவாரிப் போட்டது. என்ன செய்வாள் வித்தியா? தன் தாயின் உயிரை எமனின் பாசக்கயிறு பறித்துக் கொண்டது. அன்றிலிருந்து அவள் தனக்கென்றிருந்த ஒரு உறவையும் இழந்து அநாதையானாள். உறவினர் எவருமில்லை. அப்போதும் கூட தோள் கொடுப்பார் தோழ் என்று நின்றது நித்தியும் அவள் பெற்றோரும் தான். நித்தி வீட்டிற்கு ஒரே பிள்ளை. அவள் வித்தியாவையும் தன்னுடனே அழைத்துச் சென்றாள் அதுவே அவர்களின் நட்பின் உச்சகட்டம்.

வித்தியாவின் தாயின் சடங்குகள் முடிந்து பல நாட்களின் பின்னே அவளின் பரீட்சை முடிவுகள் வெளியாகின. வித்தியாவும், நித்தியும் சிறந்த பெறுபேற்றை பெற்றிருந்தனர். வித்தியாவிற்கு அவள் நினைத்தபடியே மருத்துவத்துறைக்கு தெரிவானாள். இதையெல்லாம் நினைத்தே அவள் அழுது கொண்டிருந்தாள். அவளுக்கு ஆறுதல் சொன்னது வேறு யாருமல்ல. நித்தியின் தாய்தான்.

வித்தியாவை வைத்தியராக்க பாடுபட்ட அவள் தாய், தந்தை இறந்தாலும், அவளின் வைத்தியராக வேண்டுமென்ற இலட்சியம் இறக்கவில்லை. ஏனெனில் அவளுக்கு தன்னம்பிக்கை துணையிருந்தது. தன்னம்பிக்கை துணையிருந்ததால் அவள் கண்டது வெற்றி மட்டுமல்ல அவளுக்கென்றொரு வாழ்க்கையும் தான். இப்போது அவளைத் தேடி அவள் உறவுகள் வந்தாலும் அவர்களுக்காக அவளால் காத்திருக்க முடியாது. அவள் வருகைக்காக மருத்துவபீடம் காத்திருக்கிறது.

* வசதிகள் இருந்தும் வாழ்க்கை அமைத்துக்கொள்ள முடியா-தவர்களுக்கு தன்னம்பிக்கை கொண்டு கல்வியால் வாழ்க்கை அமைத்த வித்தியா சிறந்த முன்மாதிரி.

கல்வி எனும் பாதையில் கல்லுண்டு முள்ளுண்டு
கடந்து சென்றால் முன்னேற இடமுண்டு.

ஆக்கம்:- கி. கோசல்யா   தரம்:- 12M கலைப்பிரிவு   மட்/த.ந.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளின் பிடியில் ஓர் இரவு.

அன்று சனிக்கிழமை ஏற்கனவே திட்டமிட்டிருந்த படி 10 நண்பர்களும் சேர்ந்து 3 நாட்கள் கொண்ட சுற்றுலாவை ஆரம்பித்தோம். இதற்காக வேன் ஒன்றை தயார் செய்தோம்.

மாலை 3.00 மணி அது யால சரணாலயம் பார்க்கச் சென்ற நேரம் "தயவு செய்து மாலை 5.00 மணிக்கு முன்னர் நீங்கள் வெளியே வந்து விட வேண்டும். ஏனென்றால் இங்கு பயங்கர மிருகங்களெல்லாம் இரவில் தான் வெளிவரும்" என்று வாயிற்காவலாளி சொன்னதினால் 4.30 மணிக்கே சரணாலயத்திலிருந்து புறப்பட ஆரம்பித்தோம். எல்லோரும் வேனில் ஏறிக்கொண்டோம். சாரதி வேனை இயக்க ஆரம்பித்தார். ஆனால் வேன் இயங்கவில்லை. பல தடவைகள் முயற்சித்தும் முடியவில்லை. நாங்கள் எல்லோரும் இறங்கி வேனைத் தள்ளி இயக்க உதவி செய்தோம் முடியவில்லை.

5.30 மணியை தாண்டி இருட்டிக் கொண்டு வந்தது. ஒரு வகை பயங்கர அமைதி செய்வதறியாது திகைத்தோம். இரவு 9.00 மணியைக் கடந்தது. ஆனாலும் வெளியே நகர முடியவில்லை. கருத்த மேகங்கள் வானில் இடைவிடாது சென்று கொண்டிருந்தன. சந்திரன் மேகங்களுக்கிடையில் தோன்றி மறைந்தவாறு காணப்பட்டது. காற்றும் சீறி எம்மைப் பயமுறுத்தியது. கரடி, புலிகளின் உறுமல்கள் கேட்க ஆரம்பித்தன. நரிகளும் ஊளையிட்ட வண்ணமே இருந்தன. என்றுமில்லாதவாறு எமது மனங்களில் பயம் அதிகரித்தது. அப்போது.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பயங்கர சப்தம் கேட்க ஆரம்பித்தது. நாங்கள் இருந்த இடத்தை விட்டு சற்று அகன்று ஒரு பெரிய மரத்தின் பின் ஒழிந்து கொண்டோம். நாங்கள் பத்துப்பேர் சாரதி உட்பட 11 பேர் இருந்தோம். யானைகள் தங்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேறி அங்குமிங்குமாக உலாவ ஆரம்பித்து விட்டன.

எங்களது நாவுகள் வரண்டு உடல் நடுங்கிக்கொண்டிருந்தன. ஏன் வந்தோம் என்ற உணர்வு கூட எங்களது மனதில் எழுந்து விட்டது. செய்வதறியாது திகைத்து நின்றோம். அப்போது பெரிய 2 யானைகள் நாங்கள் வந்த 'வேனின்' பக்கம் வந்தன. மட்டுமன்றி 'வேனை' வட்டமிடவும் ஆரம்பித்தன. அது எங்களது வேனை நசுக்கிவிடுமோ என்ற பயத்தில் நாங்கள் அவற்றையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். அவ் வேனின் பின்புறத்தில் ஓர் ஓசை கேட்டது. கால்கள் நடுங்க பின்னால் திரும்பினோம். அப்போது அங்கே கண்ட காட்சி கண்களிலிருந்து கண்ணீரை வரவைத்தது. உயிருடன் வீடு திரும்ப முடியாது என்பதை உறுதிமாக்கியது.


அங்கே ஓரிரு நரிகள்... ஊளையிட்ட வண்ணம் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தன. வெருண்டோட எத்தனித்த போதும் கால்கள் இடம்தர மறுத்து விட்டன. நிலவின் ஒளியைத் தவிர வேறு ஒளி இருக்கவில்லை. நாங்கள் செல்வதற்கு வேறு வழியின்றி எவ்வித அசைவுமில்லாமல் மரங்கள் போல் நின்று கொண்டிருந்தோம். என்ன ஆச்சரியம் நரிகள் எங்களை மரம் என்று நினைத்தனவோ தெரியாது எங்களை விட்டு மெல்ல விலகிச் சென்றன. திடீரென்று வேன் பக்கத்திற்கு வர அத்திசையைப் பார்த்தோம் அங்கு முன்பைவிட அதிகமான யானைகள் சூழ்ந்து கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் மேலும் மேலும் கனமாகுவது போல் இருந்தது. நானும் நண்பர்களும் மரத்தில் சாய்ந்தவர்களாக அமைதியாக நிற்கும் போது, ஒரு கரடி எங்களைத் துரத்த ஆரம்பித்தது. கால்கள் எப்பக்கம் சென்றனவோ அப்பக்கம் ஓடினோம். நெடுந்தூரம் சென்ற பின் திரும்பிப்பார்த்த போது அங்கு கரடியைக் காணவில்லை. அப்போது தான் பார்த்தேன். இருள் காரணமாக ஒவ்வொருவரும் திக்குத் திசையன்றி தனித்து விட்டோம். பெருமூச்சோடு நிலத்தில் அமர்ந்தேன். ஒரு பயங்கரம் இதயத்துடிப்பு வேகம் ஆரம்பித்தது.

நான் செய்வதறியாது திகைத்து நின்று கொண்டிருக்கும் போது ஒரு பெரிய யானை என் பின்னால் வருவதைப் பார்த்துக் கத்தினேன். யானை என்னை நெருங்கி தும்பிக்கையால் என்னை சுழற்றியடித்தது. நான் காதில் கையை வைத்து பலமாக கத்தினேன். கத்தியவாறு திடீரென்று கண்விழித்தேன். நேரம் 4.30 கடந்திருந்தது. என் அருகில் அம்மா, அப்பா உட்பட வீட்டிலுள்ள அனைவரும் கூடியிருந்தார்கள். என் மனம் பதைபதைத்தது. உடம்பெல்லாம் வியர்த்தது. நான் இவ்வளவு நேரமும் கண்டது கனவென உணர்ந்தேன். அம்மா குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்து தந்தார். தண்ணீரை குடித்துவிட்டு மீண்டும் தூங்கினேன்.



M.F. சஹ்வானா
கமு/அஷ்ரப் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

கவலை என வெளுத்துச் சிரிக்காதே அது உன் முக அழகைப் பாழாக்கிவிடும்.

நீ எப்போதும் புன்னகையுடன் இரு அது உன் வாழ்நாள் இளமையை ஏற்படுத்தித் தரும்.

அழகிலும் அந்தஸ்திலும் உன்னைவிடக் கீழ்மட்டத்தில் உள்ளவனைப் பார் அது உன் உயர்வுக்கு வழிவகுக்கும்.

நீ வாழ்க்கையை நேசிப்பவனாக இருந்தால் காலத்தை வீணாக்காதே ஏனெனில் காலத்தால் உருவாக்கப்பட்டதே வாழ்க்கை.

சிரியுங்கள் உங்களுடன் சிரிக்க நிறையப் பேர் வருவர் அழுங்கள் உங்களோடு அழுவதற்கு எவரும் வரமாட்டார்கள்.

தேய்க்காமல் ரத்தினம் பளபளப்பு அடைவதில்லை.
சோதனைகள் இல்லாமல் மனிதன் பூரணமடைவதில்லை.

நடந்ததைப் பற்றி சிந்திக்காதே! நடக்கப் போவதைப் பற்றி சிந்தி.

தோல்வியைக் கண்டு மனம் வருந்துவதை விட சந்தோஷப்படு! ஏனெனில் உன் வெற்றிக்கான படிக்கல்லாக அது அமையு

புகழின் பின்னால் நீ போனால் அது பொய் மான்.
புகழ் உன் பின்னால் வந்தால் அது நிஜமான்.
அப்போதுதான் அதற்கு நீ எஜமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கல்லாதவைத் தேடிச் செல்லாத வரை கல்வி உன்னைத் தேடி வராது.

பணிவுடன் நடப்பவர்கள் எல்லாம் பயந்தவர்களல்ல.

நம்பு நல்லதை· பெறுவாய் கண்டவரை நம்பினால் சீரழிந்து போவாய்.

பெண் பெண்ணாக இருப்பது பெண்ணுக்கழகு.

முயற்சித்து என்றும் தோல்வியும் ஒரு முயற்சிகள் உன் வாழ்வின் உயர்ச்சித்து மகிமை.

நீங்கள் இன்று சிரிப்பது நாளை அழுவதற்குத்தான் என்றால், அதற்காக இன்று சிரிப்பதை நிறுத்தாதீர்கள் நாளை அழுவதைத் தடுப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டே சிரியுங்கள்.

அதிகம் பேசுபவர் குறைவாகக் கேட்கிறார் குறைவாகக் கேட்பவர் அதிகம் பேசுகிறார்.

நீ மற்றவர்களின் குறையைப் பேசித் திரிகிறாயா? நீ உன்னுடைய குறைகளை மறைக்க முனைகிறாய் என்பதே உண்மை.

அறிவின் துணையாவது தன்னை அறிவதே; இதனை அறியாதிருப்பவன் மடமானிலையால் வாழ்ந்தாலும் அவனது உள்ளம் அமைதி பெறாது.

ம.ம / அல் அமீன் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஒற்றுமையின் அவசியம்

பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் அங்கு காணப்படுகின்ற இனங்களுக்கிடையே ஒற்றுமை என்பது அவசியமான ஒன்றாகும். மக்கள் மொழி, மத, கலாசாரம், பண்பாடு என்ற அடிப்படையில் வேறுபட்டு இருந்தாலும் இவ் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையினைக் கண்டுகொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். இன, மொழி, மத ரீதியாக இனங்கள் பிரிந்திருக்கின்ற போது அங்கு ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்குப் பதிலாக அழிவுக்கு இட்டுச் செல்கின்ற சிந்தனைகளே உருவாகும். இதன் காரணமாக குறிப்பிட்ட நாட்டினது சமய, பொருளாதார, அரசியல் நிலைமைகள் சீரற்றதாகக் காணப்படும். எந்த ஒரு நாட்டின் இனங்களுக்கிடையில் பிளவுகள், அதனோடு தொடர்பான பிரச்சினைகள் காணப்படும் போது அங்கு வறுமை, புரட்சி, கொள்கை போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஒற்றுமைக்கு முதற் கட்டமாக அரசியல் யாப்பு ரீதியாக இனங்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு, அவற்றை நடைமுறை ரீதியாக சாத்தியமாக்கவும் வேண்டும். இந் நிலை தொடர்கின்ற போது ஒரு இனம் மற்றைய இனத்தை சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற பார்வை, ஒரு இனம் மற்றைய இனத்தை விட உயர்வானதாக எண்ணுகின்ற நிலை போன்றன இல்லாத ஒரு நிலை உருவாகி நாட்டு மக்கள் எல்லோரும் ஒரு தேசத்தின் செல்வர்கள் என்ற ஒரே ஒரு கோசத்தினை மாத்திரம் கூறியவர்களாக ஒற்றுமைப்பட்ட சமூகமாக வாழ்வார்கள்.

இன்று உலகில் காணப்படும் பெரும்பாலான நாடுகளில் இன உறவுகள் குலைக்கப்பட்டு இனப் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது. இந் நிலையானது அதிகளவு அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகள் மத்தியிலேயே காணப்படுகின்றது. உதாரணமாக, இலங்கை, இந்தியா, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் முரண்பாடு என்பன அதிகளவில் காணப்படுகின்றன. இந் நிலைமையானது ஒரு நாட்டினை இன்னொரு நாட்டில் தங்கி இருக்கும் நிலையை உருவாக்குகின்றது. அதுமட்டுமன்றி ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய இனப்பிரச்சினை அயல் நாடுகளையும் பாதிப்புக்கு உட்படுத்துகின்ற அளவு இன்றைய இன ஒற்றுமையானது பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

எமது நாடான இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கு பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு காணப்படாததன் காரணமாகவே இங்கு இன ஒற்றுமை காணப்படவில்லை எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். இதன் விளைவு எமது நாட்டின் பொருளாதார, அரசியல் போன்றவற்றில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறலாம்.

இவ் வேற்றுமை ஏற்படுவதற்கு சமூகத்தில் வாழும் இருவருக்கு மத்தியில் உள்ள மன வேற்றுமையே காரணமாகும். அதாவது, அவர்களுக்கிடையில் உள்ள சிந்தனைகள், மனநிலைகள், அதை அவர்கள் ஒவ்வொருவரும் கையாள எத்தனிக்கின்ற வித்தியாசமான வழிமுறைகள் என்பவற்றிற்கு இடையில் உள்ள பலதரப்பட்ட தன்மைகளைக் குறிப்பிடலாம். இதை அனைத்து மக்களும் கடைப்பிடிப்பதனால் இனப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதன் போது பல உயிர்கள் அழிக்கப்படுகின்றன. பலதரப்பட்ட தன்மைகளைக் குறிப்பிடலாம். இதை அனைத்து மக்களும் கடைப்பிடிப்பதனால் இம் மண்ணில் வாழ்ந்த மக்கள் அகதிகளாகவும் விதவைகளாகவும் ஊனமுற்றோர்களாகவும் ஆக்கப்பட்டிருப்பதுடன் இவர்கள் உண்ண உணவின்றி பட்டினியால் மடியக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதை நாம் இன்றைய உலகில் காணமுடிகின்றது.

மேலும், இவர்கள் தங்க இடமின்றி நோய்களுக்கு சிகிச்சை இன்றி வாழ்க்கைப் படகை ஓட்டிச் செல்ல எவ்வித பொருளாதார உதவியும் இன்றி கொட்டும் மழையில் நனைவதனாலும் கொடிய வெயிலில் காய்வதனாலும் மக்கள் கொடிய பஞ்சத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, இந் நிலைமையை ஒழித்து வேற்றுமை மறைத்து இன ஒற்றுமை ஏற்பட்டால் நாட்டில் அமைதி உண்டாகும்.

மேலும், அதிகார வெறி பிடித்த ஆட்சியாளர்களும் அறியாமை கொண்ட மனிதர்களும் இவ்வாறான பேரழிவுகளை நோக்கி இனத்தினை இட்டுச் செல்கின்றனர்.

மனித இனம் வெறுக்கும் பேய்த்தனமான எண்ணமும் பாவச் செயல்களும் வெவ்வேறு இனத்தவர்களினால்தான் தூண்டிவிடப்படுகின்றன. இதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். இன வெறி பிடித்த கொடிய பேய்களினால் இனக் கலவரம் ஏற்படுகின்றது. இதன் கொடூரச் செய்கையினால் நாட்டில் இரத்த வெள்ளம் பரவ நாட்டின் எழில் மிக்க இயற்கை வளங்கள் அழிந்து நாடே சுடுகாடாக மாறி விடுவதை நாம் காணலாம். இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதையும் நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இது மட்டுமன்றி இனத்தின் பெயரால் இந்தப் பாரிய மண்ணில் மக்கள் மரணித்துக்கொண்டிருக்கின்றனர். இன்னும் இலட்சக்கணக்கானோர் வீடுகளை, சொத்துக்களை, உடைமைகளை இழந்த நிலையில் பரிதாப நிலைக்குள்ளாகின்றனர். மக்களை ஒருவரையொருவர் புரிந்துகொள்ள இனங்கள் தவறிவிட்டதனால் சமூகத்தில் பல பிரச்சினைகளும் பிளவுகளும் ஏற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் தடுப்பதற்கு இன ஒற்றுமை அவசியமான ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. மேலும் சமூகத்திடம் பொருளாதார வசதி அதிகமா னதாகவும் மற்றொருவரிடம் அவ் வசதி குறைவாகவும் இருப்பதனால் பேதம் ஏற்பட்டு சகோதரத்துவம் சீர்குலைகின்றது. இவ் வேளையிலும் இனவொற் றுமை அவசியமானதொன்றாகும்.

நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த அரசி யலும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அரசாங்கமும் அரச தலைவர்க ளும் சமாதானத்தை வளர்ப்போம் என்றும் இன ஐக்கியத்தை காப்போம் என்றும் பேச்சு வழியில் மாத்திரம் காட்டாமல் செயன்முறையிலும் இன ஒற்றுமையை வளர்க்க தன்னால் முடிந்த அளவு பாடுபடுவதுடன் யுத்தத்தின் மூலம் ஒருபோதும் இன ஒற்றுமையை வளர்க்க முடியாது என்பதனை உணர்ப் பெற்று பேச்சுவார்த்தை மூலமாக இன ஒற்றுமையைக் காக்க முன்வர வேண்டும்.

எனவே, இன ஒற்றுமையினால் ஏற்படும் பாரிய சிறந்த விளைவுகளையும் இன ஒற்றுமை இல்லாததனால் ஏற்படும் தீய விளை வுகளுக்கும் எமது பிற்கால சந்ததியினர் முகங்கொடுக்க நேரிடுவர். ஆகவே, இன ஒற்றுமையின்மையால் ஏற்படும் பாரிய விளைவுகளிலிருந்து எமது பிற்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டுமானால் நாம் அனைவ ரும் சகோதரர்கள் என்ற எண்ணம் உருவாகி ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் இன ஒற்றுமையை நிலைநாட்டலாம்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படும் போதுதான் ஒரு நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரங்களில் அமைதி நிலையும் அபிவிருத்தி நிலையும் ஏற்படும். மக்களின் நிம்மதியான வாழ்வுக்கும் இன ஒற்றுமையே அவசியமானதாகும். இன, மத, மொழி, பிரதேசம், கலா சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றில் இனங்கள் வேறுபட்டி ருந்தாலும் அனைத்து இனத்தவர்களும் மனிதர்கள் என்ற வகையில் செயற் பட்டால் இன ஒற்றுமை ஏற்படும்.

மேலும், ஒவ்வொருவரும் முரண்பாடுகளைக் களைந்து அந்நிய மத கலாச்சாரங்களை மதிக்க வேண்டும். அந்நிய மொழி கொண்டவர்க ளிடையே காணப்படும் தப்பபிப்பிராயங்களை மாற்ற வேண்டும். இவை பேணப்படும் போது ஒற்றுமையை பேண முடியும். எனவேதான் இன்றைய காலத்தில் இன ஒற்றுமையின் அவசியம் என்பது மிக இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

**கே. எம். சர்பான்**
**12 (விஞ்ஞானப் பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் சிறப்பு

ஈரைந்து மாதங்களாய்
இதயக் கருவறையில் சுமந்த
என் அன்பான உறவே!
நான் தந்த சுமையும் தாங்கி
எனக்கு பசிக்கும் என்று
நீ உணவு உண்டு
என்னை தாக்கும் என்று
ஓர் ஓரமாய் தாங்கி
இருந்தவளும் நீதானடி!

எனக்கு வலி தராமல்
நான் தந்த வலியைத் தாங்கி
பத்து மாதம் இருந்தாயே!
ஒரு பொழுதேனும் என்னை - நீ
வெறுக்கவில்லை.
என் மீது வைத்த
பாசத்தையும் மறுக்கவில்லை.

பிரசவம் வந்ததடி!
உயிரும் துடிக்குதடி!
உன் இதயமும் பதறுதடி!
உன் உயிர் போனாலும்
என் உயிரைக் காத்து
நீ துடிக்க என்னை
பெற்றெடுத்தாயடி!

உன் வலி அறியாமல்
என்னை உன் நுனி விரலால்
இதமாக தடவிய போது
உன் முகத்தில் வந்த இன்பம்,
எத்தனை கோடி கொடுத்தாலும்
அதற்கீடாகாது!

எத்தனை சிரமங்கள்!
எத்தனை கவலைகள்!
அத்தனையும் ஒழித்து விட்டு
என்னை தொட்டுத் தூக்கி
அணுவணுவாக இரசித்து
இன்பம் கொண்டு
வளர்த்தெடுத்தாய்!

உன் தாய்மைக்கு பரிசான
எனை வளர்ப்பதில்
உனக்கு பேரானந்தமடி!
நீ தான் என் உயிர்!
நான் தான் உன் உடல்!

சில மாதங்கள் சென்றன.
நடையும் உடையுமாக
நான் வரும் காட்சி!
அது தான் உன் மனதின் சாட்சி!
என் ஒவ்வொரு அடிகளும்
உன்னுடைய உள்ளமடி!
உன் தாய்மையின் சிறப்புக்கு
என் கற்பனையில் ஈடில்லையடி!

**டபிள்யூ. ஜாமியத்**
**13 A (கலைப் பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வளர்ச்சியில் இணையத்தின் பங்களிப்பு

ஆரம்ப காலங்களிலிருந்து இன்றைய நவீன யுகம் வரை எல்லா சமூக மட்டங்களிலும் ஏதோ ஒரு வகையிலான தொடர்பு முறைகள் இருந்து வருகின்றன. இன்று பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் என எத்தனையோ தொடர்புசாதனங்கள் வளர்ச்சிபெற்றுள்ளன.

இருபத்தியோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைத்துள்ள இக் காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. கைத்தொழில் புரட்சிக்கு அடுத்ததாக குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய புரட்சி தகவல் புரட்சியேயாகும் எனக் கூறப்படுகின்றது. இவ்வுலகத்தின் பிரதான சாதனம் இணையம் என்றால் அது மிகையாகாது.

இணையமானது ஒரு வல்லரசின் இராணுவத் தேவைக்காகப் பிறந்தது. இது உலகமயமாகும் சந்தையைத் தொடர்ந்து உலகத்தில் பரவியது எனலாம். இது தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு என்கின்ற தொழில்துறைகளும் கைகோர்த்துக் கொண்டதால் உருவானது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இணையத்திலிருந்து பல வகையான சேவைகளைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது. இணையம் என்பது ஒரு உலக மக்களின் சொத்து என்பதால் புதிது புதிதாக சேவைகளை ஆராய்ச்சியாளர்கள் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்திக்கொண்டேயிருப்பார்கள் என்று நம்பப்பட்டு வருகின்றது.

இணையத்தின் இன்றைய வளர்ச்சியானது ஐந்து ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தோரினால் எதிர்பார்க்கப்படவில்லை. கணிப்பொறித் துறையிலும் தொலைத் தொடர்புத் துறையிலும் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உலகின் பல பாகங்களிலுமிருந்து பல முன்னேற்றங்கள், பல நூதன சேவைகள் உருவாகி வருகின்றன. கல்வி, வணிகம், செய்திப் பரிமாற்றம், சுற்றுலா, தொலைத் தொடர்பு, நூலகம், அருங்காட்சியகம், விளையாட்டுக்கள், விவாதங்கள் என பல்வேறு பணிகளும் பொழுதுபோக்குகளும் இணையத்தில் இன்றைய நவீன உலகில் இன்றியமையாததாக வளர்ந்து வருகின்றது எனலாம். இதன் வளர்ச்சி இன்னும் அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின் எவ்வாறான நிலையை எய்தும் என அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தவரை அல்லது ஒரு குறிப்பிட்ட விடயங்களில் ஒற்றுமை உள்ளவர்களை இணைக்க வல்லமையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தைப் போல் ஒரு ஊடகம் இதுவரை இன்னும் வாய்த்ததில்லை. நூல்கள் ஒரே சமயத்தில் பல மொழிகளைப் பேசுவது இல்லை. அவ்வாறே ஒரு குறிப்பிட்ட அலைவரிசை ஒரே நேரத்தில் பல மொழிகளில் பேசுவதில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட வலையமைப்பானது ஒரே சந்தர்ப்பத்தில் பல மொழிகளைப் பேச இயலுமானதாகவுள்ளது. இதனால்தான் மனித இனத்தின் முதல் பன்மொழிக்கான ஊடகம் என்றும் இணையம் அழைக்கப்படுவதோடு ஓர் வித்தியாசமுள்ள ஊடகமாகவும் சிறந்ததோர் ஊடகமாகவும் இணையம் திகழ்கின்றது.

உலகில் இன்று இனத்தைச் சார்ந்ததாக மட்டும் பேசப்படும் ஆயிரக் கணக்கான மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். இம் மொழியானது பல நாடுகளில் வேறு இனத்தவர்களாலும் பேசப்படுகின்றது. இருந்தாலும் தமிழ் தமிழர்களால் பேசப்படும் மொழியாகும். இது ஆங்கிலம், ஸ்பானிய மொழிகள் போல் பன்னாட்டுத் தகவல் ஊடகம் அல்ல. எனவே, தமிழை ஒத்த மொழிகள் விரைவில் பட்டுப்போய் விடும் என்றும் தமிழ் இனி சாகும் என்றும் அவநம்பிக்கை செய்திகள் பரவலாயின. இப்போதெல்லாம் தமிழால் இனி உயர்ப்புடன் இயங்க முடியும் என சொல்லக் கூட தமிழ்மொழியினரே தயங்குவதில்லை. ஏனெனில், இணையமானது அந்த அவநம்பிக்கைச் செய்திகளுக்கு மாற்றமாக பதில் கூற ஆரம்பித்திருக்கின்றது.

இணையமானது மூன்று வகையான தொடர்புகளை கொண்டுள்ளது. முதலாவது, தனிநபர்களுக்கிடையேயானது. இரண்டாவது, குழுக்களுக்கிடையில் உள்ள தொடர்புகள். மூன்றாவது, நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புகள். இவ்வடிப்படைத் தகவல் தொடர்பில் வளமாக கையாளப்படுகின்ற மொழி நிகழ் கால மொழியாகும். தமிழ் இன்று நிகழ்கால மொழியாகத் திகழக் காரணம் இவ் அடிப்படைத் தகவல் தொடர்புகளாகும். மொழியின் வளர்ச்சியும் இருப்பும் கூட தொழிநுட்பத்தின் கரங்களில் சிக்கிக்கொண்டுள்ளது. தகவல் தொழிநுட்பத்தின் தேவையை நாம் மொழிக்காக நிறைவேற்ற முடியுமா? என்ற வினாவிற்கு வரலாற்றைப் பார்த்தால் முடிந்திருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியை எட்டிப் பார்க்கும் ஓர் ஆராய்ச்சியாளன் அதன் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட திடீர்த் திருப்பமான தமிழும் கணிப் பொறியும் கைகோர்த்துக் கொண்ட அற்புத நிகழ்வைத் திரும்பிப் பார்க்காமல் போகமாட்டான். மொழியானது ஊடகங்களின் மூலமாக நிலைத்து நிற்கின்றது. பேச்சும் மொழியும் அவற்றுக்கே உரித்தான கல்வெட்டு, ஓலைகள் போன்ற ஊடகங்களில் பயணித்து வந்தன. தமிழை அச்சுக்குக் கொண்டு வர அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டது. இவ் அற்புதக் கண்டுபிடிப்போடு நிற்காது மொழியின் வரலாற்றில் மொழித் தொழிநுட்பத்தைக் கொண்டு வந்ததில் கணினி முக்கியமானது. இன்றைய தகவல் தொழிநுட்பத்தில் புதிய மொழிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனம் உருவாகும் போது மொழி வளர்ச்சி முடியும் என்னும் நிலை காணப்படுகிறது இன்று வீட்டிற்கு வீடும் இணையம் வந்துவிட்டது. எனவே, இந்த வேகத்தில் மொழி வளர வேண்டுமாயின் தமிழானது கணினிமயப்படுத்தப்படல் அவசியமானதாகும். எனவே, கணினியில் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய விதமான கணினித் தமிழ் உருவாவது அவசியமாகும்.

தற்பொழுது உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தைப் போன்று தமிழ் மொழியையும் கணினிப் பொறியில் பயன்படுத்த குறியீட்டையும் விசைப் பலகையையும் தமிழை இணையத்தில் பயன்படுத்துவதிலிருந்த தடையை நீக்கும் சாதனமாக பயன்படுத்தினர் தமிழ் ஆர்வலர்கள். இன்று உலகம் முழுதும் தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர்கள் இருக்கின்றனர். தரச்சான்றிதழ் குழுவில் அங்கம் வகிக்கும் கணித, தமிழ்ச் சங்கம் உலகம் முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டும் என்றே உருவாக்கப்பட்டது. இதில் அங்கம் வகிப்பவர்கள் தமிழ் மென்பொருட்களை பயன்படுத்துவது ஒரேயொரு முறையில் இருக்க வேண்டும் என்பது குறிக்கோளாகும். இவ்வாறான குறிக்கோள்கள் தமிழ்மொழி வளர்ச்சியின் ஒரு படிக்கல்லாகவே கொள்ளப்படுகின்றது.

வளர்ந்து வருகின்ற சமூகச் சூழலுக்கேற்ப தமிழர்களும் கணிப் பொறிப் படிப்பைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான புத்தகங்கள் விலை அதிகமாகவுள்ளதால் கணித, தமிழ்ச் சங்கத்தினர் நூலகம் அமைக்க இருக்கின்றனர்.

மற்றும் அறிவியல், மருத்துவத் துறையில் தமிழ்ச் சொற்கள் இல்லாது ஒழிந்து விட்டன. தொழிநுட்பம் அறிமுகமாகும் போது புதிய கலைச் சொற்கள் அறிமுகப்படுத்தப்படாமையே இதற்கு காரணமாகும். இதில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளுக்கும் கருவிகளுக்கும் தமிழ்ச் சொற்களை உருவாக்கி கணித, தமிழ்ச் சங்க இணையத்தில் வெளியிட இருக்கின்றனர். அதே போல் தமிழ் மொழி வளர்ச்சியின் ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சியாக இன்று தெற்கில் உள்ள கணிப் பொறி விருத்திக்கான நிலையம் அலுவலக பயன்பாட்டிற்கான தமிழ் மென்பொருள் தொகுதியை வெளியிட்டுள்ளது. 'தமிழ் நெட் 99' வகுத்த நியமங்களுக்கேற்ப இம் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'லீப் ஒபிஸ்' என பெயரிடப்பட்டுள்ளது. இதில் பல உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன. இது தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிக் கட்டளைகளையும் ஒரே சமயம் ஏற்றுக்கொள்ளும்.

தமிழில் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த ஊடகம் இணையம் என்றால் அது மிகையாகாது. பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் போன்ற பலர் இணையம் பற்றி ஆராய்ச்சிபூர்வமாக சிந்திப்பது வரவேற்கத்தக்கது. டிஜிட்டல் யுகத்திற்கு தயாராகி விட்டது எங்கள் தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கு மங்கினாலும் இங்கு மங்காது பொங்கி ஒலிக்கும் தமிழ்" என்ற நம்பிக்கை பகரும் வாக்கியத்துடன் வெளியாகியுள்ளது கொழும்பு பல்கலைக்கழக மாணவர் குழாம் இணைந்து உருவாக்கிய இணையத்தளம். இதில் நாளைய சந்ததியின் தேவைகளுக்காக தேசத்தின் செய்திகளுடன் இன்னும் பல விடயங்களோடு வெளியாகியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பான செய்திகளை இன்று தினசரி வெளியிடும் இணையத்தளமாக 'தமிழ் நெட்' உள்ளது. கடந்த சில ஆண்டில் தமிழில் வெளியாகிய செய்திகள் இப்போது தமிழ்மொழி மூலமான சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இத் தளத்தை பார்வையிடலாம். செய்திச் சேவைகளைப் பொறுத்த வரை 'தமிழ் நெட்' ஒரு முக்கிய வரவு என்பதில் ஐயமில்லை.

அன்று ஓலைச்சுவடிகளிலிருந்து வளர்ந்த தமிழ் இன்று தகவல் தொழிநுட்ப வளர்ச்சியின் உச்சகட்டமாகவுள்ள இணையத்தில் வளரத் தொடங்கியுள்ளது. இணையத்தில் தமிழ் பேசும் மக்களின் செயற்பாடானது ஆசியாவிலுள்ள ஏனைய மொழிகளுடனும் போட்டி போடக்கூடிய அளவிற்கு முன்னேறியுள்ளது வரவேற்கத்தக்க விடயமாகும். இதற்காக அதிகமான பங்களிப்பை இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள், புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பும் வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ் சம்பந்தமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்திதாள், சினிமா, இலக்கிய ஆய்வுகள், ஆவணப்படுத்தல், அரசியல் ஆய்வுகள், மென்பொருட்கள் என்பன இணையத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன.

இவை இரண்டு வகையாகவுள்ளன. முதலாவது, வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இணையத்தில் வெளியிடுவது. இந்த வகையில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வெளியாகும் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் இப்போது இணையத்திலும் வெளியிடப்படுகின்றன. இரண்டாவது, தமிழ் இலக்கியப் பரப்பில் திருப்பத்தை ஏற்படுத்திய மின் சஞ்சிகைகள் ஆகும். இன்னும் இணையத்தில் தமிழ் கலைச் சொற்றொகுதிகள், அகராதிகள், சுருக்கச் சொற்கள், நிகண்டுகள் என்பனவும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

நாம் ஒரு பன்னாட்டுத் தமிழ் உறவை வேறு ஊடகங்கள் மூலம் சாத்தியப்படுத்த முடியவில்லை. ஆனால், மகத்தான வியூகங்களை அமைக்காமல் அதை இணையம் சாதிக்கின்றது. அந்த வரிசையில் மேற்கூறிய விடயங்கள் யாவும் இணையத்தின் மூலம் தமிழ்மொழியில் ஏற்பட்ட வளர்ச்சியும் பங்களிப்பும் என்பனவுமே ஆகும்.

**எம். ஜுஸான்**
**13D (வர்த்தகப் பிரிவு)**

தமிழ் / அல் அஸ்ஹர் தே.பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவிடு மனிதா!

ஒரு வீட்டின் கூரை பிடுங்கி
மறு வீட்டில் அடுப்பெரித்து
அவன் எரித்த நெருப்பில்
ஆனந்தமாய் குளிர்காயும்
குருவிச்சை மனிதனிவன்!

படைத்தவனை பாகுபடுத்தி
அவன் பெயரை சீர்கெடுத்து
ஆண்டவனுக்கு இழி சேர்த்து
போலியாய் வாழும்
புன்னகை மனிதனிவன்!

உலகத்தை உருட்டி
உண்மையை பொய்மைக்குள்
உருத் தெரியாமல் மறைத்து
உத்தமனாய் பகட்டை காட்டி
மனிதமற்று வாழ்வதேன்?

ஏழை வீட்டில்
ஏதுமில்லா நேரத்திலும்
காரணமே இல்லாமல்
கண்டதெல்லாம் வாங்கி
பணத்தை படுக்கையாக்கி
பாசாங்காய் வாழுகிறான்!

எத்தனையோ விதமாக
எம் மக்கள் துயரப்பட - எதுவுமே தெரியாமல்
நீ வாழ்தல் நியாயமோ...?

மீளாத கனவுகளோடு
வறுமைப் பேய் வாட்டியெடுக்க
சதா போராடும் மனிதரை
நீ கண்டதுண்டா...?

மனிதா! மனிதா!
உன் முன்னே வாழும்
மனிதர்களை திரும்பிப் பார்!

அடுத்தவனுக்கும் கொடுத்து
அகமகிழ்ந்து சிரிக்க வைத்து
அழகு பார்க்கும் குணம்
என்றுனக்கு வருகிறதோ,
அன்று நீ மனிதன்!

**எம். இன்பாஸா**
**12A (கலைப் பிரிவு)**

கழி| அலி அஸ்றாக் தே.பா

# உலகம் எமது கையில்

மனிதராகப் பிறந்த அனைவருக்குமே உலகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று வர ஆவல் இருப்பது நிச்சயம். ஆனால், குடும்பச் சூழலில் சிக்கித் தவிக்கும் பெரும்பாலானோருக்கு இந்த வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகமே.

பணம் படைத்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று ஆனந்தம் அடையும் வாய்ப்புக்கள் அதிகம். ஏழை மனிதனோ தன் கிராமச் சுற்றுப் புறத்தை விட்டு அதிக தூரம் செல்லாமலேயே வாழ வேண்டிய நிலையில் உள்ளான்.

நடுத்தர மக்கள் இரண்டுக்குமிடையில் சிக்கித் தவிப்பவர்களாக உள்ளனர். சம்பாதிக்கும் பணம் அன்றாட வாழ்வின் தேவைகளுக்கே செலவாகிவிடும். இந் நிலையில் இவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

நடுத்தர மக்கள் அதிகம் வாழும் நாடுகளுள் இலங்கையும் ஒன்று. இந் நடுத்தர மக்களினதும் ஏழை மற்றும் பணக்கார மக்களினதும் அறிவு மற்றும் சுதந்திர தாகங்களைத் தீர்க்க வந்திருப்பதே இணையம் என்று சொன்னால் மிகையாகாது.

உலகம் முழுவதிலும் கணினிகளை ஒரு திரையின் பின்னால் இணைத்து அவற்றுக்குள் கணக்கிட முடியாத அளவுக்கு இடம் வைத்து கோடிக் கணக்கான செய்திகளை பார்ப்பதற்கு வசதி செய்துள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத வலைப் பின்னலே இணையம். இணையம் செயற்படுவதை சிறிது விளக்கமாகப் பார்க்கப் போனால்,

நீங்கள் ஒரு கணினி முன் உட்கார்ந்திருக்கிறீர்கள். அதில் ஒரு திரை இருக்கின்றது. உங்கள் கணினியில் இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி மூலம் இணையம் இணைப்பு வழங்குபவரைத் தொடர்புகொள்கிறீர்கள். அந்தத் திரைக்குள் அந்தரத்தில் கண்ணுக்குத் தெரியாத நிலையில் கணக்கிலடங்கா இடங்கள், இலட்சக் கணக்கான தகவல் பக்கங்கள் மற்றும் கோடானகோடி செய்திக் குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. குழந்தைகளிடம் அன்பாக இருப்பது எப்படி என்பதில் ஆரம்பித்து, அணுகுண்டு தயாரிப்பது எப்படி என்பது வரை எழுத்துக்களாகவும் படங்களாகவும் இத் தகவல்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், வற்றாத தகவல் சுரங்கங்களின் தொகுப்பாடமே இணையமாகும்.

ஆயிரமாயிரம் நூலகங்களைச் சேர்த்தாலும் இந்த நிழல்வெளி அற்புத மாயாஜாலத்திற்கு இணையாகாது. பல இலட்சக் கணக்கான இணைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

இரசிகர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை ஏதாவது ஒரு பகுதியில் அனுதினமும் இணைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பல்லாயிரக் கணக்கான புதிய செய்திகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றி தெரிய வேண்டுமானால் கணினி மூலமே தொடர்புகொள்ள முடியும். உங்கள் கணினி திரைக்குப் பின்னால் ஒரு பிரமாண்டமான உலகமே இருக்கிறது. அதில் இல்லாத செய்திகளே இல்லை.

இது போதாதென்று உலகம் முழுவதும் உங்களுக்கென்று நண்பன், நண்பிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அமெரிக்காவில் இருக்கும் நண்பருக்கு இன்று கடிதம் எழுதி அனுப்பினால் ஒரு வாரத்திற்குப் பின்தான் போய்ச் சேரும். அதே நபர் பசுபிக் பெருங்கடலின் நடுவில் ஹவாய் தீவுகளில் இருந்தால் குறைந்தது இரு வாரங்களாகும். உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் இணைய இணைப்பிருந்தால் போதும் மூன்று நிமிடங்களுக்குள் நீங்கள் எழுதும் கடிதம் அவருக்குப் போய்ச் சேரும். உங்கள் கடிதத்துடன் உங்களது புகைப்படம் என்பவற்றை இணைத்து அனுப்பவும் இயலும். நீங்கள் விரும்பினால் இவை அனைத்தும் கட்டணம் இல்லாமலேயே இன்டர்நெட் வசதி இருந்தால் அனுப்ப முடியும்.

தகவல்களைத் தேடி அறிந்து கொள்ள உதவுபவை தகவல் தேடும் இயந்திரங்கள். நமக்கு கிரிக்கட் பற்றித் தெரிய வேண்டுமானால் இந்த இயந்திரத்தின் பக்கத்தை எடுத்து 'தேடும் வார்த்தை' என்ற இடத்தில் நமக்குத் தகவல் தெரிய வேண்டியதை டைப் செய்ய வேண்டும். பின்னர் அதற்குப் பக்கத்திலுள்ள தேடு ( SEARCH ) என்ற பட்டினை தட்டினால் போதும் கிரிக்கட் என்ற வார்த்தையுடன் இணையத்தில் இருக்கும் அனைத்துப் பக்கங்களின் முகவரிகளையும் ( URL ) வரிசையாகக் காண்பிக்கும்.

ஒரு கணினி வாங்கி அதற்குத் தொலைபேசி இணைப்புக் கொடுத்து அதை உபயோகப்படுத்துவதென்பது சிரமம்தான். ஆனால், வாரம் ஒரு சினிமா பார்ப்பதற்கு செலவழிக்கும் பணத்தை இணைய இணைப்புக்கள் வழங்கும் இடத்திற்குச் சென்று செலவழித்தால் நமக்குத் தேவையான செய்திகளைப் பெறுவது மட்டுமல்லாமல் நமக்கு வேண்டியவற்றையும் இனங்கண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

'ஈ-கொமர்ஸ்' ( ELECTRONIC COMMERCE ) என்றால் நாம் கடைகளில் பணம் கொடுத்துப் பொருள் வாங்குவது போல் இணையம் மூலமாக பொருட்கள் வாங்குவதே. இந்த முறையில் பொருள் வாங்க வேண்டுமானால் அதற்கு கடன் அட்டைகள் இருப்பது அவசியம். நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களைத் தேர்வு செய்த பின்னர் உங்களுடைய கடன் அட்டை இலக்கம் மற்றும் அதன் விபரங்களை பொருளை விற்பனை செய்பவருக்குக் கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அது சரியாக இருந்தால் பொருள் உங்கள் வீடு தேடி வரும். உதாரணமாக 'Amazon.com, Rediff.com' என்ற முகவரியில் புத்தகங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். சிறப்புச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. மேல்நாடுகளில் தமக்குத் தேவையான பெரும்பாலான பொருட்களை இணையம் மூலம் வாங்கும் பழக்கம் பெருகி வருகிறது.

சில நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளை தொலைக்காட்சியில் பார்ப்பது போல் கிரிக்கட் போட்டிகள், அழகிப் போட்டிகள், ஆஸ்கர் விருதுகள் நோபல் விருதுகள் வழங்கும் விழா என்று உலக நேயர்களைக் கவரும் அனைத்து நிகழ்ச்சிகளையும் நேரடியாக இணையத்தில் ஒளிபரப்புகின்றனர்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கி விட்டது. இந் நிலையில் இணையம் மூலம் உலக மக்கள் அனைவருடனும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு கிட்டியுள்ளது. இவ்வாறாக உலகம் இப்பொழுது எமது கையில் அடங்கியுள்ளது. ஆனால், இதனை சிலர் தீய வழிகளிலும் உபயோகிக்கின்றனர். நல்ல வழிகளில் உபயோகித்தால் நன்மை எமக்கே உண்டு.

**எம்.ஐ.எம். அரபாத்**
**12B (வர்த்தகப் பிரிவு)**

# உங்களுக்குத் தெரியுமா?

01. உலக சுகாதார தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
 * ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி

02. மனித உரிமை கல்விக்கான தசாப்த காலமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள காலப்பகுதி எது?
 * 1995 - 2005

03. ஜோர்தானின் தலைநகரம் எது?
 * அம்மான்

04. மின்குமிழ்களில் பொதுவாகப் பாவிக்கப்படும் வாயுவின் பெயர் என்ன?
 * நியோன்

05. உலகில் முதன்முதலில் முத்திரை வெளியிட்ட நாடு எது?
 * இங்கிலாந்து.

06. முதன்முதலில் சந்திரனில் காலடி வைத்தவர் யார்?
 * நீல்ஆம்ஸ்ட்ரோங்

**எம்.சி. ரம்ஸானியா பேகம்**
**12A (கலைப் பிரிவு)**

தமி/அல் அஷ்ரக் தே.பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில் பிறமொழிச் செல்வாக்கு

இலக்கண சிந்தனை எனும் நூலில் தமிழில் பிற மொழிச் செல்வாக்கைப் பற்றிக் கூறும் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமிழோடு நெருங்கிய தொடர்பு உடைய வட மொழியினைப் பற்றியும் கூறுகின்றார். இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய்மொழி போல் விளங்கியது வடமொழி. எனினும் தமிழ் மொழிக்கு மட்டும் அது செவிலித் தாய் போன்றது. பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் தமிழிலுள்ள சொற்களில் ஒரு தொகுதி வடமொழிச் சொற்கள் ஆகும்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளின் ஒலி அமைப்பு, வரிவடிவ அமைப்பு, சொல் அமைப்பு, இலக்கண அமைப்பு முதலான வடமொழியின் பாதிப்பிற்கு உட்பட்டன. பழந்தமிழ் மொழியிலும் காலத்திற்குக் காலம் பிறமொழியின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிறமொழிகள் ஒலிமாற்றம், சொல் உருப்பு மாற்றம், சொற்றொடர் மாற்றம், அமைப்பு மாற்றம், பொருள் மாற்றம், சொற்கோவை மாற்றம் என்ற வகையில் தமிழ் மொழியில் செல்வாக்குச் செலுத்தின. பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்திலிருந்து பார்க்கும் போது வட மொழியிலே தமிழில் முதன் முதல் செல்வாக்குச் செலுத்திய பிறமொழியாகும்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழில் "பகரம்" முன் அண்ண ஒலியாகவும் "ரகரம்" நாவடி ஒலியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. வடமொழிச் செல்வாக்கினால் "டகரம்" நாவடி ஒலியாகவும், நாவடியைக் கொண்டிருந்த "ஞகரம்" அதிர்வு ஒலியாகவும் மாற்றம் பெற்றன. வட சொற்கள் தமிழில் வந்து கலந்தமைந்தித் காரணம் புதிய சொற்களைப் பயன்படுத்திய போது அவற்றின் பிறமொழியில் பெயர்களைக் கடன் வாங்கியமை ஆகும்.

தமிழர்கள் உயர்வு, தாழ்வு வேறுபாடு காணப்பட்டமை ஒரு காரணமாகும். மக்கள் சமண, பௌத்த மதங்களைத் தழுவியமை இன்னுமோர் காரணமாகும். காலம் தோறும் வடமொழிக் கலப்பு தமிழில் ஏற்பட்ட போதும் சங்க காலப்பகுதியில் இது மிகவும் குறைவாகவே இருந்தது. காமம், நிலம், மாணியம், தெய்வம், வர்சம், மாயம் போன்ற சில சொற்கள் கலந்துள்ளமையால் புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல்களில் காணலாம்.

சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் வடமொழிக்கலப்பைக் காணலாம். இக்காலத்தில் இரங்குமம் போன்ற பல வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்து கொண்டன. பல்லவர் காலப்பகுதியில் ஃ, ங் என்ற மெய்யெழுத்துக்களும் இல்லாமல் போயின. வடமொழியிலேயே பேச்சிலும் எழுத்திலும் இருந்ததால் தமிழில் வடமொழிச்சொற்கள் நேராகவும், பிராகிருத வழியாகவும் மாற்றம் பெற்றன. வடமொழி ஈற்று வல்லெழுத்து தமிழில் மறைந்தது. அது இந்துவித் சடங்கு என ஆயிற்று. பிராகிருதம் வித்யா-வித்தை ஆகியது.

பல்லவ காலத்தில் தமிழும் சமஸ்கிருதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிசமமாகக் கலந்து மணிப்பிரவாள நடை என்ற புது நடை உருவாகியது. சோழர் காலத்தில் மன்னர்கள் தம் பெயரை வடமொழியில் மாற்றிக் கொண்டனர். நாயக்கர் காலத்தில் பல தத்துவ நூல்கள் எழுந்தமையால் பல வட மொழிச் சொற்கள் தமிழில் புகுந்தன. ஐரோப்பியர் காலப்பகுதியிலும் அதற்குப் பின் வந்த காலப் பகுதியிலும் கலைச் சொல்லாக்கத்திற்கு வடமொழி பெரிதும் ஆதிக்கம் செலுத்தியது எனலாம்.

தமிழில் செல்வாக்குச் செலுத்தும் வடமொழியினை மூவகைப்படுத்தலாம்.

1. ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவானது. இது தற்சமம் எனப்படும். அமலம், கமலம் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம்
2. ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துக்களானவை திரிதல் முதலான விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குவன. இது 'தற்பவம்' எனப்படும். சுகி, போகி என்பன எடுத்துக்காட்டு.
3. ஆரியத்திற்குச் சிறப்பாகவுள்ள எழுத்தாலும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்தாலும் ஆக்கப்பட்ட சொற்கள் ஏற்ற விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குவன. அரன், தெய்வம், கோணம் என்பன எடுத்துக்காட்டு.

வடமொழி அளவிற்கு அதிகமாகக் கலந்தால் அக்கலப்பு மொழியை எழுதவென்றே கிரந்தம் என்ற புதிய எழுத்து வகை தோன்றியது. அது கிரந்த

தமிழ் எனப்பட்டது. வட மொழியினைத் தவிர பாளி, தெலுங்கு, சிங்களம், ஆங்கிலம், டச்சு, மலையாளம், ஹிந்தி, மராட்டி, போர்த்துக்கேயம் எனப் பல்வேறு மொழிகளும் தமிழ் மொழியில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. எடுத்துக் காட்டாக புன்னல், சிறாந்தை, அலுமாரி, கல்யாணம் என்பனவாகும்.

* Look around

and

serve god *

K. Sujeeka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்

உலகில் உள்ள ஜீவராசிகளுடைய அதன் உருவத்தோடு ஒப்பிடும் மிகப் பெரிய மூளை எறும்புக்குத் தான் உள்ளது.

வெட்டுக் கிளியின் இரத்தம் வெள்ளை ஆகும்.

ஒரு கோழிக் குஞ்சுகளுக்கு 200க்கும் மேலான இறகுகள் முளைக்கின்றன.

இனிப்பின் சுவையை அறிய முடியாத விலங்கு பூனை ஆகும்.

மனித மூளையின் 8% மட்டுமே நாம் பயன் படுத்துகின்றோம் ஏனைய பகுதிகள் பயன் அற்று போகிறது

மனிதனின் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 207 ஆகும்.

மனித உடலின் தசைகளின் எண்ணிக்கை 639 ஆகும்.

T. அனோஜிகா

௧0 Page



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழி

அழகான பூக்கள் எல்லாம் - உன்னை
அழகுபடுத்துகின்றன தோழியே
உன் அழகிய இரு சிவந்த கன்னங்களையும்
பூக்கள் இன்னும் அழகுபடுத்துகின்றன.

கண்ணத்தில் பல கவலைகளுடன்
காலத்தைக் கடத்திய நான்
உன் சின்னதொரு புன்னகையால்
எவ்வளவோ சாதித்துள்ளேன் தோழியே

N. கிமோஜா

Love all save all



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்ததி

# இலக்கை நோக்கிய பயணத்திற்கு இனி வழி நூல்களே

"சந்திரனைப் போல் இரவில் ஒளிபரப்பி வாழாது சூரியனைப் போல கூட ஒளியில் வாழக் கற்றுக் கொள்" என்பதற்கு இணங்க மாணவர்களாகிய நாங்கள் எமது இலக்கை வெற்றி அடைய செய்வதற்காக பல்வேறுபட்ட நூல்களைத் தேடி கற்றுக் கொள்ள வேண்டும். இதனால் தான் "தேடல் என்பது உள்ளவரை வாழ்தல் இனிக்கும்" என்கின்றார்கள். நாம் நூல்கள் என்றால் என்ன எனக் கற்கத் தேவை வேண்டும். அந்தவகையில் நூல்கள் என்றால் காலத்தால் முந்திய மனிதன் தங்கள் அறிவை உணர்த்தி காரணமாக வெளிப்படுத்த வேண்டிய விடயங்களை கல்வெட்டுக்களிலும் ஏட்டுக்களிலும் பொறித்து பொக்கிஷமாக்கினர்.

அந்தவகையில் அவை சற்று பரிணாம வளர்ச்சி அடைந்து ஐரோப்பிய காலத்தில் அச்சுப்பதிப்பு இயந்திரத்தின் உதவியின் ஊடாக நூல்கள் வெளிவந்தன. இவ்வாறு நூல்கள் தோற்றம் பெறுவதற்கு ஐரோப்பியரின் பங்களிப்பும் மிகையாகாது எனலாம். இவ்வாறு நூல்களை ஒன்று திரட்டி, நூலகசாலைகளை நிறுவி வாசகர் மனதில் நன்மதிப்பைப் பெற்ற நூலக சிற்பி ரங்கநாதன் மனித நெஞ்சு மகத்துவமான அறிவைப் பெற உன்னதமான நூல்களை சேகரித்தார். இந்நூல்கள் கல்வி கலாசாரம், கலை, மொழி ரீதியாக பரிமாற்றப்பட்டு வாசகர் மனதை கொள்ளை கொள்ளும் வண்ணப் பூங்காவாக திகழ்கின்றது.

இந்நூல்களின் உதவி கொண்டு காலத்தால் முந்திய விடயங்களையும் கண்டுபிடிக்க காணும் வாய்ப்பை நூல்களில் பிரதிபலிக்கின்றது. அதுமட்டுமல்லாது "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்ற பண்டைக் காலப் பழமொழியையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறான பொது விடயங்களையும்

இவ்வழியில் அடைந்து கொள்ள நூல்கள் வழிவகுக்கின்றன. மனிதனின் சிந்தனை, செயல், வார்த்தைப்பிரயோகம் என்பவற்றை மாற்றி அமைத்து நல்வழிப்படுத்தும் நல்ல நண்பன் நூலாகும்.

அந்தவகையில் வைடிபனக்காரன் என்ற பேரா பேதங்களைக் கடந்து நூல்களை கற்பதில் அனைவரும் சமத்துவ - மாணவர்கள் என்கின்றார்கள் அறிஞர்கள். எம் எண்ணங்கள் சுத்திகரமாகி சொல்லுகையில் நூல்கள் எம் நடத்தையை மாற்றி நம்மெண்ணங்களை ஒருநிலைப்படுத்துவது மட்டுமல்லாது எம் எதிர்கால நோக்கிய பயணத்திற்கு இவ்வழியாய் இருக்கின்றன. நூல்கள் இவ்வாறான வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான் என்கின்றார்கள்.

இவ்வகையான நூல்கள் மனிதனுக்கும் உலகிற்கும் இடையில் ஓர் உறவுப் பாலமாக மிளிர்கின்றது. மக்களின் மனவெழுச்சியையும் மனப்பாங்கையும் மாற்றி அமைக்கும் வல்லமைப் படைப்பாக விளங்குகின்றது. இவ்வகையான நூல்கள் பாடசாலைகளிலும் ஏனைய பொது இடங்களிலும் நாம் இலகுவில் பெற்றுக் கொள்வதற்காக நூலகத்தை அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் நிறுவி வருகின்றனர். இவர்களின் நோக்கம் மாணவர் மட்டுமன்றி யாவரும் நல்நூல்களைக் கற்றுத் தேறவேண்டும் என்பதேயாகும்.

இவ்வகையான நூல்கள் என்றும் பாதுகாக்கப்பட வேண்டும். இவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் நாம் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு நூல்களைத் தேடிக்கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு நல்லநூல்களை பாதுகாக்காவிட்டாலும் நூல்களை பாதுகாக்கும் நூலகத்தையாவது பேணிப்பாதுகாக்கப்படுவதன் மூலம் நூல்களை பாதுகாக்கலாம். மனிதனை வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாகவும் இந்த இலக்கு நோக்கிய பயணம் எதுவாக அமைகின்றது.

ஆக்கம்:- சு. கஜேந்திரன்
35 மட்/ அம்பிளாந்துறை கலைமகள் மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் உங்களில் ஒருவனடா!

மலரும் மதி கொஞ்சம் தினமொன்று - உன
மகிழ்வுடன் மார்தர் மனமொன்றி
புலரும் நன்னாள் வாழ்வை பார்க்கின்றார்....
ஒரு நாள் மலரும் சமாதானமாய் - தமிழ்
உரிமை சீராய் பெறுவதற்காய்
பெருநாள் காணும் உலகமதாய் - நம்
இன்னல் விலகிடும் பனி மூட்டமாய்!....

உரிமை இழந்த நிலையினிலே தினம்
ஏழ்மையில் வாடினோம் தமிழினமாய்
வாழும் காலம் வதைப்பட்டோம் - கொடும்
வலியவர் காலால் உதைபட்டோம்
நாளும் நலிந்திடும் பருவமடா - இனி
நானும் உங்களில் ஒருவனடா!....

அன்னை தந்தை நோக்கில்லை - கீழ்
அடிமை நமக்கு போக்கில்லை
சுமந்து பெற்றவள் சாக்கடையில்
தோள் சுமந்தவனோ அன்று பிணவறையில்
பெரிதும் இளைந்தோம் இப்ப சூழ்நிலையில்
இனிப் போனோம் ஏழ்மையிலே!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த விருப்பு ஏதுமில்லை - நாம்
சுகம் பெற தொழிலில் தோதுமில்லை
பந்த பாசப் பிணைப்பின்றி - தினம்
பரிதவிக்கிறோம் அணைப்பின்றி!....

கல்வி வாய்ப்பு மறுக்கடிப்பு - நம்
கருத்தியல் யாவும் புறக்கணிப்பு
செல்வது எங்கே தெரியவில்லை
நம் சீவிய(காலம்)நிலையும் புரியவில்லை....

உழைத்து நொந்தால் முடியவில்லை - நம்
உறுதியும் தளர்ந்தால் விடிவில்லை
நாளை மலரும் புது தேசமடா - இனி
நாமும் உங்களில் ஒருவனடா?....

ஆக்கம் : தே. விமலேஸ்வரி
தரம் :- 12
மட் / அம்பிளாந்துறை கலைமகள் மவி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⇐ உரிமைக்குரல் ⇒

சமூகக் கிளைகளில்
மலர்ந்த பூக்கள்
நாங்கள் சிறுவர்கள்

எங்கள்
மூத்தோரிடம்
சொல்லுங்கள்
பூவைப்போன்றவர்கள்
சிறுவர்கள் என்று,

அப்பூக்களை
கசக்கி முகரும் உணர்வை
தவிர்க்கும் படி
அவர்களிடம் கூறுங்கள்.

சிறுவர்கள்
நாங்கள்
கோஷ பாஷை
அறியாதோர்.

எங்கள் உரிமைக்
குரல் கொடுக்க
பாஷை
தெரிந்தவர்களும்
இல்லை நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை
பாடசாலைக்கு போனால்
ஏன்
பயிற்சி செய்ய வில்லை?
என்று
ஆசிரியர் கேட்பார்.

அதற்கு
வீட்டு வேலை செய்தேன்,
நேரம் கிடைக்கவில்லை
பயிற்சி செய்வதற்கு,
என்று
எங்கள் நாவுகளுக்கு
அழகைப்பாஷை பேச
பழக்காதீர்கள்

எங்கள்
பாதுகாவலர்களே!
செல்வத்தைத் தேடி
வீதி வீதியாக
அலையாதீர்கள்

உங்களுக்குரிய செல்வம்
நாங்கள்
வீட்டிலேதான்
இருக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
எங்களுக்காக
செல்வம் தேட விரும்பினால்
எங்கள்
உரிமைகளை
எங்களுக்காக தேடித்தாருங்கள்
அதுவே பெரிய செல்வம்

தேர்தலில் எங்கள் வீட்டில் உள்ளோர்
அறியுங்கள்
எங்கள் உரிமைகளை.
தானாகவே நாட்டிலுள்ளோர்
அறிவர்.....

எஸ்.எம்.எப். றிஸ்னா.
மட்/குட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம்
க.பொ.த உயர்தரம் 2014 com.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரம்

மேடையிலொருவன்
பொய் உரைப்பான்
நாவி மேடையேறித்
தலையிற் குட்ட முடியவில்லை

சூரிய நிலாக்களாய்க்
கண்ணுக்கழகிய பெண்கள்
கடந்தேகும் போதெல்லாம்
அழகி நீங்களென
வாயாரச் சொல்ல
வலிமையில்லை

தண்ணீரே எண்ணெயாய்த்
தாமரைகள் விளக்கெரிக்கும்
குளம் கண்டால்
ஒரு டையும் களையாமல் ஓடிக் குதித்து
நீர் குடைந்தாட நேரமில்லை

நீண்டு கிடக்கும் நெடுஞ்சாலையில்
வேப்ப மரம் விரித்த நிழற்பாயில்
துண்டு தலைக்கு வைத்துத்
துயில் கொள்ள இயலவில்லை
நீர் வழிப்படூஉம் புணைபோல நானும்
நதி வழிப்பாட்டுக் கடலடையக் கூடவில்லை

ரயிலில் வரும் சில வியாபாரிகள்
எட்டுக் கட்டையில் இலக்கியம் பேசுகையில்
அபாயச் சங்கிலி பிடித்திழுக்கும்
ஆண்மையினும் கூடவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் கேட்கப் போன வீட்டில்
உப்புக்கரிக்கும் உணவைத்
துப்பத் தொலைக்கத் துணிவில்லை

சிலரது மரணத்தை
தேசிய லாபமென்று
அறிக்கையிடத் திராணியில்லை

முதலமைச்சர் வேலைகோரி
முதலமைச்சருக்கே சொல்லச் சொல்லும்
மூடப் பரிந்துரை மூட்டைகளை
முகத்தில் விசிறியடிக்க முடியவில்லை

தேசிய கீதம் இசைக்கும் நேரம்
பிளிறும் - கனைக்கும் - பேசும் - நகரும் பிராணிகளை
சிறைக்கு அனுப்ப வசதியில்லை

இனிப்பு - ஊறுகாய் - நெய்யெல்லாம்
மூக்கோடு முடிகின்றன
நாற்பது வயதானால் நாவுக்கு உரிமையில்லை

எண்ணெய்க் குளியலின் பிற்பகல் தூக்கத்தை
வைத்தியர் சட்டம் வழங்கவில்லை

எழுத மை வேண்டும்
வானத்தின் நீலத்தில்
சில குடங்கள் கேட்டேன்
மசியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் நிறைய வேண்டும்
சிட்டுக் குருவிகளின் சிறகுகளைக்
கடன் கேட்டேன்

தரமாட்டான் மனிதனென்று தரவில்லை

கற்றை மேகமாய்க் காரு கடக்க
ஒற்றைத் தேன் துளியாய் பூவுள் உருள
நீண்ட கனவு..... நிறைவேறவில்லை

குறைந்த பட்சம்
ஞாயிறு மட்டுமேனும்
எட்டு மணித் தூக்கம் இயலவில்லை

பழைய பெரியவரை
பாலகங்காதர திலக்
சுதந்திரம் எனது பிறப்புரிமையென்பது
சும்மா.

AHF. Nifra
13. COM
Fathima Balika.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

இளைஞனே...
தன்னைத் தானே
அழிப்பதற்கு ஏன் இத்தனை அவசரம்?
இன்பம் என்று சாட்டு சொல்கிறாய்
மாறா கண்டிராத இன்பத்தையா நீ
புதிதாய் கண்டு விட்டாய்?

வாழ்க்கை உண்டு வாழ்வதற்கு
இளமை உண்டு நன்மை தேட
உன் உள்ளம் உண்டு ஆறுதல் கூற
சத்திய மார்க்கம் உண்டு
நேர்வழி நடந்த
இத்தனை அன்பர்கள்
இருந்துமா
வேண்டாம் வேண்டாம் என்பதையே
வேண்டி வேண்டி குடிக்கிறாய்?

நீ ஆசையோடு குடிக்கும் அது
உன்னை அணு அணுவாய் குடித்து விடும்
உன் உயிரை நீயே ஏன்
தீயிட்டுக் கொளுத்துகிறாய்?



F.F. றிபாஸா
மட்/ பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம்.
ஓட்டமாவடி.
12 com. (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

சிறுமையில் சில சித்திரங்கள்

விடுதி முன்றலில்
வீதி பார்த்தபடி
நின்றிருந்தாள் பள்ளிச் சிறுமி!

அழகாய்த்தானிருந்தாள்!
சாயலில் ஒரு
மோனாலிசாவாய்,
மொத்தத்தில் மற்றுமொரு கிளியோபெட்ராவாய்!
அழகாய்த்தானிருந்தாள்

இருந்தும் அவள் முகத்தில்
வெறுத்துப் போன
வாழ்க்கையின் வெளிறிப்போன
ரேகைகள்!

அவள் பார்வையில்
இழப்புகளால் புறப்படுத்தப்பட்ட
பருவப்பால் பாஷைகள்

அந்த நேரத்தில் அருகின்ற
அந்திப் பூச்சியாய்
அச்சத்தின் அடையாளங்கள்


வினாக் குறியோடு
சம்பந்தப்பட்ட எனக்கு
விடுதிக் காவலாளி
விளக்கம் சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அந்தில்
இங்கு வந்தவள்
இப்பொழுதோ புதைகின்றது
தேடி யாரும் வருவதில்லை

எப்படி வரமுடியும்
ஒற்றைச் சுடரைக்கூட
அவர்களை
சுமந்த கட்டியபான்
எப்படி வரமுடியும்?



ஆக்கம்
செல்வன். ம. அசோக் யோகராஜ்
திகோ/மெதடிஸ்த மிஷன் தமிழ் ம.வி

Page 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு ஜென்மம் எடுப்பாயா கம்பனே?

கவி மழை பொழியும் கார் மேகம்
தங்கு தடையில்லா ஆற்று வெள்ளம்
காட்டாறு போல் பாயும் நீரோடை
வானில் ஒலிக்கும் இடிமுழக்கம்
நீ மாத்திரம் இறைவனிடம்
எப்படிப் பெற்றாய் எழுத்தென்ற வரத்தினை
காவியம் படைத்த கம்பனே.

கருவிலே வந்ததா உனக்கு ஞானம்
கடவுள் தந்தானா? இந்த திறமையை
உலகத்துக்கு பாடினாய் ஏரெழுபது
குலோத்துங்கனுக்கு பாடினாய்
கம்பராமாயணத்தை
காவியம் படைத்த கவிப்பெருங்கடலே

மாண்டு சென்றாலும்
மீண்டும் பிறப்பாய் என
நம்பும் தமிழன் நான்
மறு ஜென்மம் எடுப்பாயா? கம்பனே
மறுபடி காவியம் பாடுவாயாக கம்பனே?

ஆக்கம்
ம. சங்கவி.

தி8கா | [illegible] தமிழ் 10.21.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

## ஆழிப்பேரலையும் அழியாத வடுக்களும்

காலமெலாம் களிப்பூட்டி - கணப்
பொழுதினில் ஏழையழித்து
மாறாத சுமை தந்து, எம் நெஞ்சத்தை - கூரான
வேலாகத் தாக்கிட்ட பேரலையே
நாளாக உனை நினைத்து நாம் படும் - மாளாத
துயரத்தினை மறப்போமா? இல்லையே. இன்றும்
தீராத வேதனையில் துடிக்கின்றோம் - நீ
தந்து சென்ற துயரங்களை.

சிப்பி தந்து முத்து தந்து தீராத உப்புத்தந்து - நாம்
திளைத்த மழை தந்து நில்லாது மீன் தந்து - எமக்குத்
தப்பு செய்து மறைந்து தீராத துயர் தந்து - நீங்காத
நினைவுகளை நெஞ்சத்தில் விதைத்தாயே
கூப்பிய கரத்தினையும் கூறாகப் பிரித்து உன்
குணத்தினைக் காட்டினாயே பேரலையே
ஆர்ப்பரிக்கும் ஆசைகளை அழித்தாயே - எமக்கு
அழியாத வடுக்களை நீ அளித்தாயே.

பொருளிழந்தோம், புகழிழந்தோம் - பூரிப்பான
வாழ்விழந்தோம் உன் வினையாலே
கருவினில் வளர்ந்திட்ட சேயிழந்தோம் - செழிப்பான
வளமிழந்தோம், சீர்கெட்ட வாழ்வடைந்தோம்
இருள் கொண்ட மனமடைந்தோம் - இனியென்ன
செய்வதென்று நிலையடைந்தோம்
கெருவினில் ஏழையழைத்து தீராத நோயளித்து - நெஞ்சு
மாறாத வடுக்களை அளித்தாயே பேரலையே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பலதானோடி மறைந்தாலும் - உன்
ஆவேச முகமெம் நெஞ்சைவிட்டு மறையாது
மீண்டும் மீண்டும் உன் கோரமுகம் - எம் நெஞ்சறையைப்
பிளந்து நிதம் சோகம் தரும்
மாண்டு போன உறவுகள் மீண்டு வந்தாலும் - உன்
மன்னிப்பையேற்காது பேரலையே
மீண்டுமொரு பேரலையாய் நீ வராதிருப்பது - எம்
மாண்ட உறவுகளுக்கு நீ செய்யும் உதவியாம்.

[illegible]

ஆக்கம்:-
பா. சுபேஷிதா
தரம் - 12
கலைப்பிரிவு



Page 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை! இல்லை! இல்லை!

** சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை. **..

** ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை. **..

** ஆபிரிக்காவில் புலிகள் இல்லை. **..

** சந்திரனில் வாயு மண்டலம் இல்லை. **..

** வட துருவத்தில் நிலப்பரப்பு இல்லை. **..

** வண்ணாத்துப் பூச்சிகளுக்கு வாய் இல்லை. **..

** முதலைக்கு நாக்கு இல்லை. **..

** பாம்புக்கு செவி இல்லை **..

** ஈசலுக்கு வயிறு இல்லை. **..

** தவளைக்கு கழுத்து இல்லை. **..

** யானையின் தும்பிக்கையில் எலும்பு இல்லை **

** சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை. **..

** பாம்பின் கண்களில் இமை இல்லை. **..

** ஈசலுக்குப் பற்கள் இல்லை. **..

** யமுனை நதி கடலில் கலப்பது இல்லை. **..

ப. சசிகுமார்

தரம் 10 இல்

நிகேசா | நீண்டபுவட விக்னேஸ்வரா ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய புத்தகத்தின் சுயசரிதை




பிறந்ததோ சென்னையில்
பிரிந்ததோ சகோதரர்களை

பறந்ததோ உயிரற்ற பறவையினுள்
படுத்ததோ மூச்செடுக்க முடியா காட்போட் பெட்டியினுள்

சேர்ந்ததோ இலங்கையில்
உரியவனானதோ பாமாவின் கையில்

புகழ்ச்சி கிடைத்ததோ பாமாவின் நண்பனால்
பூரித்துப் போனதோ பாமா கிட்ட சட்டையினால்

வேதனை தந்ததோ ஆதரவற்றுக் கிடந்தேன்
மழையில் - என்னை
வெட்டிக் கிழித்ததோ அலியின் சின்னக் கையால்

ஊனமாய்ப் போனதோ எலிகளின் ஆயுத பல்லால் - என்
உடம்பு அழிந்து போனதோ மண்வாழ் கறையானால்

ஆக்கம்
ச. தனுஸ்காந்
Arts
12
Bech
2014
கபொ | இராமகிருஷ்ண ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பே மனிதனின் சுவாசிப்பு




"கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்பது பழமொழி. அதாவது நல்ல நூல்கள் கிடைத்த இடத்தில் எல்லாம் விடாது படிக்கப் பழகிக் கொண்டால் ஒரு பெரும் புலவரைப் போல அறிவு வளரும் என்பதே இதன் கருத்தாகும். இதனை எமக்குப் பெற்றுத் தருவது நூல்களாகும். ஒரு மனிதனை உயர்த்துவது பணமோ, பதவியோ, உயரமோ அல்ல அறிவு ஒன்றுதான். அதனை எமக்குத் தருவன நூல்களே. அதனால்தான் அறிவு ஒளி தருவன நூல்கள் என்கின்றார்கள்.

வாசிப்பது ஓர் அற்புத அனுபவம். அது புதியதொரு உலகைத் திறந்து காட்டும். பல புதிய அரிய தகவல்களை அள்ளித் தரும் நாடுகளின் எல்லைகளையும், வரலாற்றையும் மாற்றியமைக்கும் மகா பலம் பொருந்தியது நூல்கள். பல புத்தகங்கள் உலகையே உலுக்கி இருந்துள்ளன. வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி நினைவுத் திறனை அதிகரிக்கிறது. படிப்பவர்களின் கற்பனையையும் அறிவையும் புத்தகம் வளர்க்கிறது. காட்சி ஊடகங்களைப் போல புத்தகங்களில் உள்ளவை ஒருமுறையுடன் மறைந்து விடுவதில்லை. அது காலம் காலமாக புதிய புதிய அர்த்தங்களைத் தந்து கொண்டே இருக்கும்.

வாசிப்புத் திறன், செய்யும் தொழிலில் ஆழ்ந்து கவனம் செலுத்தும் திறனை வளர்க்கும். வாசிப்பதால் கிடைக்கும் அனுபவங்களும், எண்ணங்களும் இதுவரை அறிந்தவற்றின் எல்லைகளை விரிவாக்கி மேலும் சிந்திக்க வைக்கும். புதிய தகவல்களை வகைப்படுத்தி தேவையானவற்றைத் தேர்ந்து எடுக்கவும் துணை புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநூல்களைப் படிப்பது பெரும்பாலும் அதிக புள்ளிகளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் பொது நூல்கள் வாழ்க்கை முறை மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் சிறந்த பல அறிஞர்களின் கருத்துக்களை வழங்குகின்றது. ஒருவனது வாழ்வு நல்வாழ்வாக அமைய அடித்தளம் அமைப்பது அவனது நற்குணங்களே. அந்த நற்குணங்களைத் தோற்றுவிப்பதில் பெரும் பங்கு வகிப்பது நூல்களே.

நூலகம் என்பது அறிவுச் செல்வத்தின் சேமிப்புக்கிடங்கு. கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இணைத்து வைக்கும் சிறந்த பாலம். எதிர்காலத்தைக் கணித்துச் சொல்ல உதவும் அறிவார்ந்த சோதிடர். ஏதோ ஒரு நாட்டில் ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த அறிஞரும் நூல்களின் வாயிலாக நம் நெஞ்சருகே வந்து உரையாடுவார். நம் நெஞ்சத்தை உழுது பண்படுத்துவார்.

பாடசாலையில் படிக்கும் நூல்களால் மட்டும் மாணவர் சிறந்த அறிவைப் பெற்றுவிட முடியாது. நூலகத்திலுள்ள இலக்கியம், வரலாறு, அறிவியல் முதலான பலதுறை நூல்களை எடுத்துப் படித்து மாணவர் தம் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். நாவல், சிறுகதை இவற்றை மட்டும் படிக்காமல் சான்றோர் வரலாறு, தன்வரலாறு, அறிவியல், சமூகவியல் முதலான பல்வேறு நூல்களைப் படிக்க வேண்டும்.

ஒரு மாணவன் நூலகம் சென்று பாடநூல்களோடு பிற நூல்கள், மாத இதழ்கள், நாள் இதழ்கள் ஆகியவற்றைக் கற்று வந்தால் நிச்சயம் அவன் பல்துறை அறிவுடைய சிறந்த மாணவனாக உருவாவான். வளர்ச்சி என்பது படிப்படியாக நிகழக் கூடிய ஒன்று. ஒரு பயிர் முறையாகப் பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அது நல்ல முறையில் வளர்ந்து பலன் கொடுக்கும். அதுபோல மாணவர்களின் வளர்ச்சியும் சீராக அமைந்து உரிய பலன் கிடைக்க நூல்களைப் படிப்பதை அன்றாடப் பணியாகக் கருத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தை திறக்கும் போது நல்ல அம்சங்களை அதனுடைய ஒவ்வொரு பக்கத்திலும் காணமுடிகிறது. நல்ல ஆலோசனை அருமையான போதனை வாழ்க்கையின் உண்மைகள் ஆகிய அனைத்தும் நமக்கிடைக்கின்றன. புத்தகங்களைப் படிக்க படிக்க உங்களையே அறியாமல் அந்த நூல்களிலிருந்து பெற்ற நல்ல செய்திகளை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வீர்கள். அது உங்கள் மீதுள்ள எண்ணத்தையும், மதிப்பையும் உயர்த்தும்

மருத்துவரீதியாகவும் நூல்களைப் படித்தால் மனதை மென்மையாக்கும். இரத்த அழுத்தம் உள்ளவரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னால் சிறிது நேரத்தில் இரத்த அழுத்தம் குறைந்திருக்கும். இதனை அறிவியலும் நிரூபித்திருக்கிறது. நூல்களை நல்ல ஆலோசகராக வைத்துக் கொள்ள வேண்டும் அன்றி எஜமானாகக் கொள்ளக் கூடாது.

நூல்களைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். நூலகப்புத்தகங்களில் குறிப்புக்கள் எழுதுவதோ, தாள்களை மடிப்பதோ, கிழிப்பதோ, எச்சில் தொட்டு புரட்டுவதோ கூடாது. ஒரு மலரைக் கையாள்வது போல் மென்மையாகக் கையாள வேண்டும்.

மனிதனுக்கு மூளை இயல்பாகவே வளரும். ஆனால் அறிவு வளர வேண்டும் எனில் வாசிப்பு அவசியம். காவியங்கள் ஒருவனை உற்சாகமுள்ளவனாக்குகின்றன. நீதி நூல்கள் கண்டிப்பானவனாக்குகின்றன. பகுத்தறிவுக்கு விருந்தளிக்கும் இடம் நூலகங்கள். நூல்களைக் கற்றுத் தெளியும் போது மனிதன் மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழித்து சுய மரியாதையாக வாழ முன்வருகிறான். நூலகங்கள் தெய்வீக ஆலயங்களாகத் திகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்க நாட்டு சிந்தனையாளன் 'சாக்கிரட்டீசுக்கு' மரணதண்டனை விதிக்கப்பட்டு விஷம் தனக்கு கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டிருந்தார். லிபியா நாட்டு 'உமர்முக்தார்' என்ற புரட்சியாளருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றை அவரது கழுத்தில் மாட்டும் வரை படித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொருவரும் ஆண்டில் சராசரியாக இரண்டாயிரம் பக்கங்கள் படிக்க வேண்டும். என்று பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் பரிந்துரை செய்கிறது. ஆனால் நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு பக்கங்கள் மட்டுமே படிக்கிறார்கள் என "யுனெஸ்கோ" புள்ளி விபரம் கூறுகிறது.

புத்தகத்திற்கு அற்புதமான செந்தமிழ்ச் சொல் 'நூல்' என்பதாகும். திருவள்ளுவர் 'பயில்தோறும் நூல் நயம் போலும்', (783) 'நிரம்பிய நூலின்றிக் கோட்டிக் கொளல்' (401), 'நுண்ணிய நூல் பல கற்பினும்' (373) 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (322) என படித்தறியும் நூல்கள் அடங்கிய இடத்தை, அதாவது நூல் அத்தனை, அவற்றின் பயனை, மாட்சிமையை அழகுற எடுத்துரைக்கிறார். மனிதனின் மானத்தை மறைக்க ஆடை வழங்குவது நூல். அவனை சமுதாயத்தில் மானத்தைக் காத்து வாழ்ந்திட நெறிப்படுத்துவது நீதி நூல்கள் தன்னிலையில் தாழாமையும், தாழ்ந்த பின் வாழாமையும் மானம் எனப்படும். எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையன்று, இப்படித்தான் வாழ வேண்டும். என்கிற வாழ்க்கை அத்தனை ஒழுக்க நெறிகளை வழங்குவது நூல்கள்.

" உயிரின் சுவாசமல்லவா புத்தகம்?"

" உனக்குள் ஒரு சூரியனல்லவா புத்தகம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது பத்து சிறைச்சாலைகள் மூடப்படுகிறது" என்றார் மகாத்மா, "நூல் பல கல்" என்றார் ஔவை மூதாட்டி; "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றார் வள்ளுவர். குறள் வழி நின்று நாம் வேண்டிய நூல்களை கசடறக்கற்று கற்ற நூல்களின் பொருளறிந்து அதன்படி வாழ்வதே சிறந்த வாழ்வு. காலம் என்னும் ஆழ்கடலில் நீந்துபவர்களுக்கு அறிவு என்னும் துறைமுகத்தை அடையக் கலங்கரை விளக்காக அமைந்துள்ளவை சிறந்த நூல்களே என்றார் கவிஞர். நூல்களுடன் ஒருவன் வாழாவிட்டால் அது அவனுக்கே பேரிழப்பாகும் என்றார் ஆபிரகாம் லிங்கன்.

பட்டத்திற்காக, பதவிக்காக மட்டும் என்று இல்லாமல் ஒன்றை நம்பி ஏற்றுக் கொள்ள, ஒதுக்கித்தள்ள, மறுத்துக் கூற, விவாதித்துப் பேச போன்றவற்றிற்காகவும் நாம் வாசிக்க வேண்டும். ஏராளமான புத்தகங்கள் எம் வாசிப்பிற்காக காத்துக்கிடக்கின்றன. மேன்மை மிக்க சமுதாயத்தை உருவாக்க இன்றே, இப்போதே நீங்கள் வாசிக்கத் தொடங்குங்கள். உங்களை சேர்ந்தவர்களை நல்ல நூல்களை வாசிக்க சொல்லுங்கள் சிறந்த மனிதனாக வாழலாம்.

கட்டுரை ஆக்கம்
கி. கிசோகாந்
தரம் - 13
மட் / பேத்தாழை விபுலானந்தா வித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோறளைப் பற்றுப் பிரதேச பழமொழிகள்

நாட்டாரியல் கூறுகளில் மற்றுமொரு விடயம் பழமொழிகள் ஆகும். இப்பிரதேச மக்கள் தம் வாழ்வியலிலே பலவகையான பழமொழிகளையும் பயன்படுத்தியுள்ளனர் அவ்வகையில் பயன்படுத்தி சில பழமொழிகளை இங்கு கூறலாம் என நினைக்கிறேன்.

"வேலைப் பருத்தியும் வேளைக்கு உதவும்
காஞ்சிரங் கொட்டையும் கண்ணுக்கு உதவும்"

என்பது மருத்துவச் சிந்தனையுடன் கூடிய ஒரு பழமொழி. கண் மருத்துவதற்கு உதவிய தாவரம் பற்றிய தகவல் அறிய முடியும்

"சேனையும் முடிய புட்டுப்பானை இறக்கிய கதை"

இது சேனை செய்து முடிந்தால் எதுவுமே இல்லாமல் போகும் என்ற கருத்தில் பயன்பட்டது

எதினையும் கூட்டுச் சேர்த்துச் செய்வது பயனற்றது என்ற ரீதியில் பயன்படுத்தப்பட்ட பழமொழி

"கூட்டுப் புக்கை உதட்டுக்குச் சேதம்"

ஒருவரைக் கண்டால் மறைமுகமாக புகழ்வது போல இகழ்வது

"கண்டா பட்டங்கட்டி
காணாட்டி கள்ள வேடன்"

ஒருவர் கொஞ்ச உழைப்பில் கூடுதலாக அகங்காரம் காட்டுவதனை

"நாலு பணத்து உழைப்பு
நாப்பத்தெட்டு நடப்பு"

என்ற பழமொழியினூடாய் எடுத்துக் கூறியிருந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெற்றோருக்கு தத்தமது பிள்ளைகளே முக்கியம் என்பதனை வலியுறுத்துவதாக பின்வரும் பழமொழி கையாளப்பட்டது.

"ஊரான் பிள்ளைச் சோட்ட
பாயக் கிளப்பினாமூட்ட"

உறவுகளுக்கிடையே வழங்கும் பழமொழிகளாக

"வழுவழுத்த உறவிலும் பார்க்க
வயிரம் பற்றிய பகை நன்று"

"சண்டைக் காரன் காலில் விழுந்தாலும்
சாட்சிக்காரன் காலில் விழக்கூடாது"

"கொம்மைக்கு புருஷன் வேணுமின்னா
திடையில வைச்சிசும"

இப்பழமொழி நளாயினியின் வரலாற்றை ஞாபகம் மூட்டுவதாய் அமைகிறது

"பட்டால் அறிவான் சண்டாளன்
பெருமழை பெய்தால் அறிவான்
ஏழை வெள்ளாளன்"

இப்பழமொழிகள் பொதுவாக பார்க்கும் போது மொழிநடையிலே எதுகை மோனை அணிகள் கையாளப்பட்டிருப்பதுடன் உவமைகள் ஓசை நயம் கொண்ட சொற்களாக அமைந்திருத்தல் அறிவுரைகள் மருத்துவச் சிந்தனைகள் என்று உள்ளடக்கியதான ஒரு பொருள் மரபினை சுட்டி நிற்கின்றது

மேற்கூறப்பட்ட விடயங்கள் கோறளைப் பற்று பிரதேசத்தில் பண்டைய காலத்திலிருந்து வழக்கிலிருந்து வந்தாலும் இவற்றில் பெரும்பாலானவை வழக்கொழிந்து போக சிற்சில விடயங்கள் இன்றும் பின்பற்றப்படுகிறது.

த.நிந்தினி
தரம் :- 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்குட்டை தோன்றிய
# சுவாரஸ்ய வரலாறு

இங்கிலாந்து அரசனாக இருந்த இரண்டாவது ரிச்சர்டுக்கு அடிக்கடி தடிமன் பிடித்துக் கொண்டு பாடாய்ப் படுத்தியது. இதனால் ஒழுகிக் கொண்டிருக்கும் மூக்கைத் துடைத்து விட வேலைக்காரர்கள் கூடவே இருந்தார்கள். அவர்கள் மூக்கைத் துடைத்து விடுவதற்கு மிகப் பெரிய அங்கியை பயன்படுத்தினார்கள். இது அரசருக்கு மட்டுமல்லாமல் பணியாளர்களுக்கும் பெரிய தொல்லையாக இருந்தது. மன்னருக்கு எப்போது மூக்கு வடியும் என்று பார்த்து துடைத்து விட வேண்டியிருந்தது. அப்படி பார்த்து கவனிக்காத பட்சத்தில் மூக்கு வழிந்து மன்னருக்கு தர்மசங்கடத்தை விடுகிறது. இதனால் கோபமடைந்த மன்னர் சில பணியாளர்களுக்கு தண்டனையும் விதித்தார். அரசவை போன்ற பொது இடங்களிலும் இவ்வாறு பணியாளர்கள் மூக்கை துடைத்து விடுவது அநாகரிகமாக, மன்னரின் பாரம்பரிய பெருமைக்கு சிறுமை தேடுவதாக பலரும் நினைத்தனர்.

ஆகவே இனிமேல் தன் மூக்கைத் தானே துடைத்துக் கொள்வது என்று முடிவு செய்தார் அரசர். ஆனால் அதற்காக பெருநீளத் துணியை சுமந்து வர ஒரு பணியாளர் தேவைப்பட்டார். இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் தான் கையே தனக்குதவி என்று தீர்மானித்த அவர், அந்த நீளத் துணியைத் துண்டு துண்டாகக் கிழிக்கச் சொன்னார். ஒவ்வொரு துண்டாக, கைக்கு அடக்கமாக மடித்து வைத்துக் கொண்டார். மூக்குக்கும் நிம்மதி, பணியாளர்களுக்கும் நிம்மதி. 14ம் நூற்றாண்டின் இறுதியில் அவர் அவ்வாறு உபயோகப்படுத்திய துணித்துண்டு தான் பிற்காலத்தில் கைக்குட்டையானது. அக்காலத்தில் பிரமுகர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் கைக்குட்டையை பயன்படுத்தினர்.

ஆக்கம்:- ஸி. ஷம்ரா
2014 கலைப்பிரிவு
தி/ மெதடிஸ்த மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சின்னங்கள்

ஏழையின் சின்னம் வறுமை
கடவுளின் சின்னம் பெருந்தகை
பறவையின் சின்னம் வானம்.
பாவியின் சின்னம் ஊனம்.

பெண்மையின் சின்னம் நாணம்
உறவுக்குச் சின்னம் அன்பு
மலருக்குச் சின்னம் மணம்
மலர்ச்சியின் சின்னம் செழுமை.

வசந்தத்தின் சின்னம் இளமை
தளர்ச்சியின் சின்னம் மரணம்
தனிமையின் சின்னம் கவிதை
கல்வியின் சின்னம் உயர்வு.

எதிரியின் சின்னம் பகைமை
ஒழுக்கத்தின் சின்னம் நேர்மை
கருணையின் சின்னம் ஈகை
நட்பின் சின்னம் ஒற்றுமை.



நம்பியா விஜயநாதன்.
(2014) கலைப்பிரிவு.
தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு

அன்பின் மதிப்பு என்ன என்று
தாயைப் பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்
பாசத்தின் மதிப்பு என்ன என்று
தந்தையைப் பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்

ஒற்றுமையின் மதிப்பு என்ன என்று
சகோதரர்களைப் பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்
நட்பின் மதிப்பு என்ன என்று
நண்பரை பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்

உறவின் மதிப்பு என்ன என்று
உறவினரைப் பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்
பணிவின் மதிப்பு என்ன என்று
ஆசிரியரைப் பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்

பாடங்களின் மதிப்பு என்ன என்று
பாடசாலையை பிரிந்த ஒருவரிடம் கேளுங்கள்
கல்வியின் மதிப்பு என்ன என்று
கல்வி கற்கத் தவறிய ஒருவரிடம் கேளுங்கள்.

உழைப்பின் மதிப்பு என்ன என்று
ஒரு தொழிலாளியிடம் கேளுங்கள்
வாழ்க்கையின் மதிப்பு என்ன என்று
வாழ்க்கையை இழந்தவரிடம் கேளுங்கள்.


ஆக்கம்:
சாமடக்ஷியா. கருணாலிங்கம்
2014 கலைப்பிரிவு
தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூாி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் சுவைத்தது.

அப்படை இப்படை முப்படையென்பர்
ஒப்படையை யறியாதார்.

ஒப்படைக்கு அஞ்சாத மாணவனையுலகில்
எப்படையுமின்சலநிது.

செப்படி வித்தை காட்டும் மாணவனையடக்க
ஒப்படையை ஆயுதமாகக் கொள்.

ஒப்படையைக் காலத்தில் ஒப்படையாப்பிள்ளை
இப்புவியில் கற்றலரிது.

ஒப்படைக்கு உவமையுலகில் கூறுங்கால்
முப்படையும் ஒப்பாகாதென்பதறி

குப்பையிலே பொறுக்கினும் படங்களை நீ
ஒப்படையிலே ஒட்டிக்கொடு

ஒப்படையில்லாத கல்வியென்பதிங்கு
உப்பில்லாப் பண்டத்துக்கு நேர்

ஒப்படைத்துக் கற்பாரே கற்பார் மற்றெல்லாம்
தப்படைத்துப் பின்செல்வர்.

அப்பனுக்கும் அம்மைக்கும் அடுத்த தாய்ப்பிள்ளை
ஒப்படையைக் கொள்ளல் நன்று.

ஒப்படையை ஒப்படைக்க ஒப்படைத்த ஒப்படையை
ஒப்படைத்த அன்றே மற.

ர. திலக்ஷன் (Art)
12
2019

கமு / இராமகிருஷ்ண ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களே எதிர்கால தலைவர்கள்

குடும்பங்களின் சொத்தான சிறுவர்களைப் பெற்றோரும், மற்றோரும் அன்பாகவும், பண்பாகவும் நடத்தல் அவசியம். எல்லோரதும் மனதைக் கவருபவர்கள் சிறுவர்கள். சிறுவர் சமுதாயம் சிறப்பானதாகும். சிறுவர் சமுதாயம் சிறப்பானதாக அமையின் நமது எதிர்காலச் சமூகம் சிறப்புறும்.

இன்று நமது சிறார் பலவித பிரச்சினைகளுக்கு ஆளாகி வருவதால் தான் சிறுவர் தினம் என்று ஒரு நாளில் அவர்களின் நலத்தைப் பேண மக்கள் அனைவரையும் விழித்தெழச் செய்கின்றனர். இன்றைய சிறுவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெற்றோர் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். பாடசாலைகளும், சேவை நிறுவனங்களும், அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் வேறு பல வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர் நலனுக்காகத் துரிதமாக செயற்பட்டனர்.

அண்மையில் இலங்கையில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறுவர்களுக்கான தேசிய திட்டத்தில் சிறுவரின் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, குடும்ப சூழல் போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டு அதற்கான வேலை திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நாடளாவிய ரீதியில் சிறாரின் முன்னேற்றத்திற்கு உதவுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் சாதாரணமாக மக்கள் தத்தம் சிறார்களில் கண்ணும் கருத்துமாகவே இருக்கின்றனர். பெற்றோர் வீடுகளில் சிறாரை நல்வழிப்படுத்துவதில் கூடிய அக்கறை காட்டுகின்றனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்குகள், இறை சிந்தனை என்பவற்றில் பிள்ளைகளுடன் தாமும் இணைந்தே ஈடுபடுவதைக் காணமுடிகிறது. மேலதிக வகுப்புகள், கலைப் பயிற்சிகள் என சிறார்களுடனேயே அலைந்து திரிகின்றனர். இது சிறுவர் மேல் கொண்ட அதிக அக்கறையையும், வழிநடாத்தலையும் உணர்த்துகிறது.

வீடுகளில் நடைபெறும் பண்டிகைகள் சமய விழாக்களின் போது பெற்றோர்களுக்கும் சகோதரருக்கும் அலங்கார வேலைகள் சிற்றுண்டி தயாரிப்பில் பங்கு கொள்ளும் பண்பை பெற்றோர் வளர்க்கின்றனர். அயலவருடன் சிற்றுண்டிகள் பரிமாறிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றனர். வேற்றுச் சமூகங்களுடன் பழகுவதால் சமூக விழுமியங்கள், புரிந்துணர்வு, உதவும் மனப்பாங்கு என்பன வளர்கின்றன.

இவ்வாறே பாடசாலைகளிலும் ஆசிரியர் சிறார்களுக்கு நற்பழக்க வழக்கங்களை மேம்படுத்துகின்றனர். தலைமைத்துவப் பண்பையும், சமூக விழுமியங்களையும் மன்றங்களினூடாகவும் விழாக்களினூடாகவும் வளர்க்கின்றனர். இவ்வாறாக இன்றைய சிறார்களின் நலனில் அக்கறை கொண்ட பெற்றோர்களும், பாடசாலைகளும் சமய நிறுவனங்களும் நற்பழக்கவழக்கங்களைப் புகட்டுவதுடன் சமூக விழுமியப் பண்புகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்து எதிர்காலச் சமுதாயம் சிறப்புற வழிவகுக்கின்றனர்.

D. ஹரோணி.
2014 Batch
Arts.

கமு / இராமகிருஷ்ண ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஸ்தாபனங்கள்

UNO ஐக்கிய நாடுகள் சபை.
UNICEF ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம்.
UNHCR ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தாபனம்.
UNESCO ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம்.
UNFPA ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம்.
UBIDO ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி மையம்.
UNEF ஐக்கிய நாடுகளின் அவசரகாலப்படை.
NHCR ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தாபனம்.
EEC ஐக்கிய பொருளாதார சமூகம்.
SAARC தெற்காசிய நாடுகள்.
OPEC மத்திய கிழக்கு நாடுகள்.
ACEAN தென் கிழக்காசிய நாடுகளின் நிறுவனம்.
IMF சர்வதேச நாணய நிதியம்.
ADB ஆசிய அபிவிருத்தி வங்கி.
IBRD புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேசவங்கி.
ITO சர்வதேச வர்த்தக ஸ்தாபனம்.
ICC சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம்.
ILO சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்.
WHO உலக சுகாதார ஸ்தாபனம்.
FAO உலக உணவு விவசாய ஸ்தாபனம்.
UPU உலக தபால் சங்கம்.
IMBA சர்வதேச அணுசக்தி ஏஜென்சி.
BBC பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

M. யாழினி 2014 Batch.
கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவை செய்திகள்

மனிதனைப் போலவே பூனையும் தூங்கும் போது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை அழகழகு கனவு காண்கிறதாம். கனவின் போது மீசையும் துடிக்கிறதாம்.

நாம் தூங்கும் போது எல்லா உறுப்புக்களும் ஒரே நேரத்தில் ஓய்வெடுப்பது இல்லை. முதலில் கண்கள், பின் காது, தோல் இவ்வரிசையில் உறுப்புகள் ஓய்வெடுக்கத் துவங்குகின்றன.

வானவெளியில் தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளாமல் நிலையாக ஒரே இடத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் பாக்ஸ் டார்ஸ் எனப்படும்.

70 வயதான மனிதன் தன் வாழ்நாளில் 70,000 மைல்கள் நடந்திருப்பான். இது பூமியை இரண்டரை முறை சுற்றியதற்குச் சமம் ஆகும்.

கறையானின் தாய்ப்பூச்சி வினாடிக்கு ஒரு முட்டையிடும் அதாவது ஒரு நாள் 86,000 முட்டைகள். வேறெந்த உயிரினமும் இவ்வளவு வேகமாகத் தன் சந்ததியைப் பெருக்குவதில்லை.

தேனீக்கள் ரீங்காரம் அதன் குரல் ஒலி அல்ல. தன் இறகுகளை வினாடிக்கு 400 தடவைக்கு மேல் அடிப்பதால் ஏற்படும் ஒலியே ஆகும்.

உலகில் உள்ள முக்கிய மொழிகள் அனைத்திலும் அதிக சொற்களை உடைய மொழி ஆங்கிலம் தான். இதில் கிட்டத்தட்ட 8 லட்சம் வார்த்தைகள் உள்ளன.

அணுகுண்டு வெடிக்கும் போது சத்தமே இருக்காது. பிரகாசமான வெளிச்சம் தான் தெரியும். இதைப் பார்த்தால் கண் குருடாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3873

வெள்ளை நிறப்புத்தகம் ஜெர்மனி, போர்ச்சுகல் மற்றும் சீன அரசுகளின் அலுவலக வெளியீடாகும்.

மஞ்சள் நிறப்புத்தகம் பிரான்ஸ் நாட்டின் அலுவலக வெளியீடாகும்.

சாம்பல் நிறப்புத்தகம் ஜப்பான், பெல்ஜியம் அரசுகளின் அலுவலக வெளியீடு ஆகும்.

நீல நிறப்புத்தகம் பிரிட்டிஷ் அரசின் வெளியீடு ஆகும்.

வார, மாத இதழ்களைக் குறிப்பிடும் மாகஸின் என்ற சொல் பிரெஞ்சு மொழியிலிருந்து வந்தது. இந்த வார்த்தைக்குச் "சரக்கு கருவூலம்" என்று பொருள்.

1920 ஆம் ஆண்டு ஆண்ட்வெர்ப் ஒலிம்பிக் போட்டியிலிருந்து வீர வீராங்கனைகளை உறுதி மொழி எடுக்கும் பழக்கம் அறிமுகமானது. முதலில் உறுதி மொழி எடுத்தவர் கத்திச் சண்டை வீரர் விக்டர் போயின் என்பவராவார்.

புத்தர் 45 ஆண்டுகளுக்கு ஆன்மீகத்தைப் பரப்பி 80 வது வயதில் காசி நகரில் கி.மு. 483 இல் மறைந்தார்.

கோடைக்கால ஒலிம்பிக் போட்டி எவ்வளவு பிரசித்தி பெற்றதோ, அதற்கு இணையாகப் புகழ் பெற்றது குளிர்கால ஒலிம்பிக். 4 வருடத்திற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன.

ரத்த அழுத்தம் போலக் கண்களிலும் அழுத்தம் உள்ளது. அது சரியான அளவு இருக்கும் வரையில் தொல்லையில்லை. அது அதிகமாகும் போது கண் நரம்புகளை அழுத்தி அதனால் கண்கள் பலவீனமாகிறது.

யானையின் காலடித் தடத்தின் சுற்றளவைக் கணக்கிட்டு அதை 6-ஆல் பெருக்கினால் அதன் உயரம் தெரிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Evergreen Batticaloa. 065 2222607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org